# மணல் வீடுகள்



இந்துமதி

## இந்த நாவல் ...

இது ஒரு வித்தியசாமான கதை.
முரண்பாடான வாழ்க்கை.
இந்த முரண்பாட்டை ஏற்றுக் கொள்ளாமல்
நிறையபேர் இருக்கலாம்.
இதோடு ஒத்துப் போகாமலும் இருக்கலாம்.
ஆனாலும் முரண்பாடுகள் தவிர்க்க
முடியாதவைகளோடு கைகுலுக்குவதைத்
தவிர வேறு வழியில்லை.
இதைப் புரிந்து கொண்டு தன் உதட்டின்
சிரிப்பு மாறாமல் கைகுலுக்கின ஒரு
பெண்தான் சஸி. சஸி என்கிற இந்தப் பெயர்
நிஜமில்லை. ஆனால், அவள் மட்டும் நிஜம்.
இந்த நிஜம், எழுதுகிற வசதிக்காக சில சின்ன
மாற்றங்களோடு இங்கே கதையாகிறது. இனி
படியுங்களேன். படித்து விட்டுச்
சொல்லுங்களேன்...

—இந்துமதி

36 30403
சென்னை-99.



# 1

பஸ்ஸை விட்டு இறங்கினதும் வெயில் பளீரென்று முகத்தைத் தாக்கியது. ஒரு வினாடிக்கெல்லாம் அளவாக உடம்பில் இறங்கிற்று. மெதுவாக நடக்க ஆரம்பித்த போது சின்னக் குடையாக ஒன்று வாங்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள் சஸி.

இதையே அவள் நிறைய தரம் நினைத்துக் கொண்டிருக்கிறாள். இப்படி வேலைக்காக வெயிலில் அலைகிற போதெல்லாம் குடையின் நினைவு வரும். இந்தத் தீட்சண்யத்திலிருந்து தலையையும், முகத்தையும் மட்டும் பாது காத்துக் கொண்டால் போதும் என்று தோன்றும்.

ஆனாலும் அவளால் குடை வாங்க முடியவில்லை. குடை இல்லாமல் தினமும் வெயிலில் அலைந்து நன்றாகக் கறுத்துப் போய் விட்டதாக நினைத்துக் கொண்டாள்.

ஆறு மாதத்திற்கு முன்னால் அந்த மலையான மண்ணிலிருந்து இந்தத் தமிழ் மண்ணிற்கு வந்தபோது நல்ல நிறமாகத்தான் இருந்தாள். மஞ்சள் பூசின மாதிரி ஒரு நிறம். அந்த மண்ணிற்கும், குளிர்ச்சிக்கும் சொந்தமான நிறம்.

நிகுநிகுவென்று முகமும், கைகளும் பளபளக்கும். வெறும் தண்ணீர் போட்டு அலம்பினாலே பளிச்சிடும். எப்போதாவது, ஏதாவது இண்டர்வ்யூவிற்குப் போகும் போது சிறிது பவுடர் கேட்டு சாந்தியிடம் போய் நின்றால் அவள் சிரிப்பாள்.

"உனக்கு எதற்குப் பவுடரும், மையும்? தேய்த்து துடைச்சு வச்ச வெண்கலக் குத்து விளக்கு மாதிரி எப்ப இருக்கே! இந்த மூஞ்சிக்கு எதுக்குப் பவுடர் சன அதெல்லாம் என்னை மாதிரி கரிக் கட்டைகளுக்கென் ஏற்பட்ட விஷயம்..." என்று சொல்லிச் சிரிப்பாள்.

அந்தக் குரலில் ஒரு ஆதங்கம் இருக்குமே தவி பொறாமை, கோபம், சின்னத்தனம் எதுவுமே தெரியாது எப்போதும் சிரிக்கத் தெரியும். சிரித்துச் சிரித்தே தன் கஷ்டங்களோடு மற்றவர் கஷ்டங்களையும் மாற்றத் தெரியும்

அவளிடமிருந்துதான் சிரிக்கக் கற்றுக் கொண்டாள் சஸி. சிரிப்பு மட்டுமில்லை; வாழ்க்கையை எப்படி அதன் போக்கில் அனுசரிக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டாள்.

சாந்தி மட்டும் இல்லாமல் இருந்தால் தன்னால் அந்த வீட்டில் இருந்திருக்கவே முடியாது என்றும் நினைத்துக் கொண்டாள்.

சாந்திக்கும், பெரியம்மாவிற்கும் நடுவில் எத்தனைப் பெரிய பள்ளம்! அம்மா, பெண்ணிற்கு இடையில் எவ்வளவு பெரிய இடைவெளி! பெரியம்மா சிரித்து, சஸி பார்த்ததே இல்லை. சிரிப்பே தெரியாத முகம் அது. கோபமும், சிடு சிடுப்பும் நிறைந்த முகம்.

முகம் மட்டுமில்லை. பேச்சுக்கூட அதே மாதிரிதான் வரும். நெருப்புத் துண்டுகளாக மனசைச் சுடும். அந்த நெருப்பில் சஸி நிறைய தரம் சூடு பட்டிருக்கிறாள். ஒரு நாளைக்கு ஒரு தரமாவது பெரியம்மா அவளைச் சுடாமல் இருந்ததில்லை.

"இந்தக் குட்டிக்கு என்ன நிறம் பார்த்தியா? உன்னை மாதிரி ஏழைப் பெண்ணிற்கு எதுக்கு இந்த அழகும், நிறமும். இதுதான் உனக்குப் பகையாக இருக்கப் போறது. உன் வாழ்க்கையைக் கெடுக்கப் போறது. வேணும்னால் பார்த் துண்டே இரேன்" என்று ஒரு நாள்.



"இதோ பாரு சஸி, உன்னோட அழகிலே மயங்கிக் கூடவா உனக்கு எவனும் வேலை கொடுக்கலை? இல்லை, தன் மயக்கத்தை மட்டும் தீர்த்துண்டு ரொம்ப சாமர்த்திய மாக உனக்கு வேலை தராமல் விட்டு விட்டானா?" என்று மறு நாள்.

இப்படிக் கேட்டுக் கேட்டு மனசிற்குள் தழும்பு தழும் பாக் விழுந்து மரத்துக் கூடப் போய் விட்டது.

காலையில் கிளம்பும்போது கூடப் பெரியம்மா சொல்லித்தான் அனுப்பினாள்.

"இந்த இண்டர்வ்யூதான் நீ கடைசியாகப் போகிற இண்டர்வ்யூன்னு நினைச்சுக்கோ. இந்த வேலையும் கிடைக்கலேன்னால் ஊருக்குப் போகிற வழியைப் பாரு. நானே பொன்னம்மாவிற்கு லெட்டர் எழுதிப் போட்டு ரயிலேத்தி விட்டுடறேன். நான் என்ன சொந்தமா? உங்கம்மா கூடப் பிறந்தவளா? ஏதோ தெரிஞ்ச குடும்ப மாச்சேன்னு பார்த்தால், பெரியம்மா, பெரியம்மான்னு இப்படியா ஒட்டிக்கறது? உட்கார்ந்து சாப்பிட ஒரு இடம் கிடைச்சதுன்னு நிம்மதியாக இருந்திட முடியுமா?..."

முகத்தில் அடித்த வெயிலை விட மனசில் பெரியம்மா வின் குரல் தீட்சண்யமாக அடித்தது. தனக்காக இல்லா விட்டாலும் பெரியம்மாவிற்காகவாவது இந்த வேலை கிடைக்க வேண்டும் என்று நினைத்தாள்.

அவளால் அப்படிச் சுலபமாக ஊருக்குப் போய்விட முடியாது. போய் 'வேலை கிடைக்கவில்லை' என்று அம்மா வின் எதிரில் நிற்க முடியாது. தம்பி, தங்கைகளைப் பார்க்க முடியாது. அவர்கள் எல்லோரும் அவளை நம்பி இருப் பவர்கள். அடுத்த வேளை சாப்பாட்டிற்குக் கூட அவள் பணத்தை எதிர்பார்ப்பவர்கள்.

அவளும் இந்த ஆறு மாசமாக நூறு, நூற்றைம்பது என்று பணம் அனுப்பி வேலை கிடைத்துவிட்ட பாவனையை ஏற்படுத்தி இருந்தாள். அப்படி அனுப்ப இது வரை காதில் போட்டிருந்த சின்ன தங்க வளையமும்,

கழுத்தில் கிடந்த மெலிசான சங்கிலியும் உதவி செய்தது. இனி மேல் உதவி செய்ய நகை எதுவும் கிடையாது.

அம்மாவும் அவள் வேலை கிடைத்து பணம் அனுப்புவதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள். அந்த நினைப்பை அவளால் பொய்யாக்க முடியாது. ஏமாற்ற முடியாது. அம்மாவை ஏமாற்றுகிற சக்தி அவளிடம் இல்லை.

அம்மாதான் அவர்களை வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாள்! ஐந்து குழந்தைகளை வைத்துக் கொண்டு - அப்பா அவர்களை விட்டு வேறு ஒரு நம்பூதிரிப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு போனபின் - இருந்த வீடு, நிலம் எல்லாவற்றையும் அவள் பெயருக்கு எழுதி வைத்த பின்பு - அம்மா உடைந்து போய் விடவில்லை. பெரிதாகக் கத்தி சண்டை போடவில்லை. கோர்ட்டு, கேஸ் என்று அமர்க்களப்படுத்தவில்லை.

எப்போதோ அப்பா பத்துப் பதினைந்து தேங்காய்களோடும், ஒரு அரை மூட்டை நெல்லோடும் திருட்டுத்தனமாக வண்டியைக் கட்டிக்கொண்டு வந்து கூடத்தில் இறக்கி வைத்து, "பொன்னு!" என்று குழைந்து,

"குழந்தைகளைப் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்..." என்று அசட்டுச் சிரிப்பாகச் சிரித்துக் கொண்டு நின்றபோது,

"பார்த்தாச்சு இல்லையோ... கிளம்பலாம்" என்று நிர்த்தாட்சண்யமாகச் சொல்லி அனுப்பி விட்டாள் அம்மா.

அப்படி இரண்டு மூன்று தரம் கேட்டுக் கொண்ட பின் அப்பா வருவதில்லை. அம்மாவும் அதற்காகக் கவலைப்படவில்லை. தன் வருத்தங்கள் எல்லாவற்றையும் வேலையில் மறக்க முயற்சி பண்ணியிருக்க வேண்டும்.

அம்மா வேலை செய்யாத நேரமே இருக்காது. வெறும் சமையல் வேலை, எடுபிடி வேலைகள்தான். காலையில் நான்கு மணிக்கு எழுந்து கணேசய்யர் வீட்டிற்குப்



போய் காப்பி, டிபன், சமையலை முடித்து விட்டுப் பகல் ஒரு மணிக்கு வந்தால்,

"நீ சாப்பிட்டதும் ஸ்கூலுக்குப் போய்க்கோ சசி. நான் கிருஷ்ணன் குட்டி வீட்டிற்குப் போய் முறுக்கு சுற்றிக் கொடுத்து விட்டு வரேன்" என்று கிளம்புவாள்.

அங்கிருந்து மாதவன் தம்பி வீடு, நம்பியார் வீடு என்று வேலைகளை முடித்துவிட்டு வரும்போது இரவு மணி பதினொன்று அடிக்கும்.

சசி மட்டும் தான் அதுவரை விழித்துக் கொண்டிருப்பாள். தம்பி தங்கைகள் எல்லோரும் தூங்கிப் போய் விடுவார்கள். தூங்குகிற குழந்தைகளை ஒரு தரம் பார்த்து விட்டு அம்மா தான் கொண்டு வந்த சாதம், கூட்டு, குழம்பு எல்லாவற்றையும் வேறு பாத்திரங்களுக்கு மாற்றி மூடி வைப்பாள்.

பின்

"நீ சாப்பிட்டாச்சோ?" என்று சசியைப் பார்த்துக் கேட்பாள். அவள் தலையாட்டினதும் "குழந்தைகள்?" என்ற அடுத்த கேள்வி வரும். அதன் பின்பு "ராஜாராமன் தலைக்கு விட்டுண்டானோ? ராதை ஸ்கூலுக்குப் போனாளோ?" என்று ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கடைசியில் "நாளை காலமைக்கு மொளகூட்டானும், எரிசேரியும் மூடி வச்சிருக்கேன். கொஞ்சம் சாதம் மட்டும் வடிச்சுக்கோ... என்ன..?" என்பாள்.

அதற்கும் வெறும் தலையாட்டல் மட்டும் பதிலாகக் கிடைத்ததும், பாயை உதறி குழந்தைகளின் பக்கத்தில் போட்டுக் கொள்வாள். 'குருவாயூரப்பா...' என்று முனகிக் கொண்டே படுப்பாள். ஒரு நிமிஷத்திற்கெல்லாம் கூப்பிட்டுப் பார்த்தால் பதில் வராது. மார்பு மட்டும் சீராக ஏறி இறங்குவது தெரியும். அடித்துப் போட்ட மாதிரித் தூங்கிப் போயிருப்பாள்.

அம்மாவின் இந்த இயந்திர வாழ்க்கைக்கு எதுவும் அர்த்தம் இருக்கிறதா என்று சசி யோசித்துப் பார்த்திருக்

கிறாள். அவர்களை வளர்த்து, ஆளாக்கி, படிக்க வைப்பதைத் தவிர வேறு எந்த அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

அவள் ஒன்பதாவது படிக்கும்போது ஆரம்பித்த உழைப்பு பி.ஏ. முடித்து வேலை தேடிச் சென்னைக்கு வந்த பின்பும் நிற்கவில்லை. அதற்காக அம்மா இதுவரை சலித்துக் கொண்டதில்லை. போன கடிதத்தில் மட்டும் லேசாகக் கொஞ்சம் கோடி காட்டி இருந்தாள்.

'உனக்கு இந்த வேலை பர்மனெண்ட் ஆனதும் நான் என்னுடைய வேலைகளையெல்லாம் விட்டு விட்டுக் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு பார்க்கறேன். முன்பு மாதிரி வேலை செய்ய முடியலை, கொஞ்சம் தள்ளாமையாக இருக்கு. பழைய தெம்பு இல்லை...'

அம்மாவிற்காகவாவது ஒரு வேலை கிடைக்கக் கூடாதா என்று அவள் வருத்தப்பட்டிருக்கிறாள். இந்த வேலையாவது கிடைக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். இது என்ன வேலை என்பது தெரியவில்லை. என்ன ஆபீஸ் என்றும் புரியவில்லை. பத்து நாட்களுக்கு முன் 'ஹிந்து' வில் வாண்டட் பகுதியில் வந்திருந்த விளம்பரத்திலும் விவரம் எதுவும் இல்லை.

Wanted an young unmarried girl-tall, fair and beautiful. Preferably a graduate, from a decent family for a job. Apply with cabinet size photograph. Post Box No.2122 C/o. The Hindu, Madras-600 002.

அந்த விளம்பரத்தைக் கூட சாந்திதான் கொண்டு வந்து காட்டினாள். படித்துப் பார்த்த சஸி மெதுவாகச் சிரித்தாள்.

"என்ன சிரிக்கறே?" என்று அந்தச் சிரிப்பைப் பார்த்து சாந்தி கேட்டதும்,

"இல்லே, இது என்னவோ மேட்ரிமோனியல் காலம்ல வர்ற விளம்பரம் தவறிப் போய் வாண்டட் காலம்ல வந்திருக்கிற மாதிரி தோணித்து..."



அதைக் கேட்டதும் சாந்தியும் சிரித்தாள், பின், "ஏதாவது ரிஸப்ஷனிஸ்ட், பர்ஸனல் ஸெகரெட்டரின்னு தேவையாக இருக்கும். நீ அப்ளை பண்ணேன். நிச்சயமாகக் கிடைக்கும்..." என்றாள்.

"அப்ளை பண்ணலாம். ஆனால், என்கிட்டே ஏது காபினெட் சைஸ் போட்டோ...?"

"அவ்வளவுதானே...? நான் இப்போ காலேஜுக்குக் கிளம்பும் போது கூடக் கிளம்பு. அம்மா கேட்டால் ஏதோ இண்டர்வ்யூன்னு பதில் சொல்லிடு. புரியறதா...?"

அவள்தான் ஜி.கே. வேல் கம்பெனிக்கு அழைத்துப் போய் ஃபோட்டோ எடுத்தாள். நாலைந்து நாளில் ப்ரூஃப் பார்த்து ஃபோட்டோக்களை வாங்கிக் கொண்டு வந்தாள்.

"மை குட்னெஸ்! நீ நேராகத்தான் அழகாக இருக்கேன்னு பார்த்தால் போட்டாவிலுமா இவ்வளவு அழகாக விழணும்" என்று சிரித்துக் கொண்டே எடுத்துக் காண்பித்தாள்.

மிகவும் நம்பிக்கையாய் உட்கார்ந்து அப்ளிகேஷன் எழுத வைத்தாள். தானே கொண்டு போய் போஸ்ட் பண்ணிவிட்டு வந்தாள்.

மூன்றாம் நாள் அந்த இடத்திலிருந்து நேரில் வரச் சொல்லி விலாசமும் தேதியும் நேரமும் குறிப்பிட்டுக் கடிதம் வந்ததும் சாந்தி சந்தோஷமாகச் சிரித்தாள்.

"யு ஆர் கெட்டிங் திஸ் ஜாப். விஷ் யு குட்லக்..." என்றாள்.

"அது சரி. வேலை என்னன்னு தெரியலையே..." என்று சஸி கேட்டதும்,

"போய் நேரில் பார் தெரியும். எல்லாம் நல்ல வேலையாகத்தான் இருக்கும். அது ரொம்ப 'பாஷ் ஏரியா'. பெரிய மனிதர்கள் இருக்கிற இடம். கொஞ்சம் நன்றாக டிரஸ் பண்ணிண்டு போ" என்றும் சொன்னாள்.

அதே மாதிரி சஸியும் தன்னிடமிருந்த வாயில் புடவைகளில் இண்டர்வ்யூவிற்குக் கட்டுவதற்கென்றே தனியாக வைத்திருந்த கருநீலப் புடவையைக் கஞ்சி போட்டு, இஸ்திரிக்குக் கொடுத்துக் கட்டிக் கொண்டாள்.

தலைக்குக் குளித்திருந்ததால் பின்னாமல் வெறும் ரப்பர் வளையத்தைப் போட்டுக் கொண்டிருந்தாள். முகத்தைத் துடைத்துச் சின்னதாகக் கறுப்புப் பொட்டு வைத்துக் கொண்டு கிளம்பினாள்.

பெரியம்மாவிடம் சொல்லிவிட்டுப் படியிறங்கின போது அந்த வெயிலில் பஸ் பிடித்துப் போகாமல் ஓர் ஆட்டோ பிடித்துப் போய் விடலாமா என்று நினைத்தாள்.

பர்ஸைத் திறந்து பார்த்தபோது ஒரு ரூபாய் நோட்டும் இரண்டு பத்துக் காசுகளுமே இருந்தன. அதற்கு ஆட்டோ பிடிக்க முடியாது. பஸ்ஸில் போவதைத் தவிர வேறு வழி இல்லை.

தெருக்கோடிக்கு வந்து சிறிது நேரம் காத்திருந்து பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த போது மீண்டும் 'இந்த வேலையாவது கிடைக்க வேண்டும்' என்று தோன்றிற்று.



## 2

அந்தக் கட்டிடத்தின் முன் கொஞ்சம் தயங்கி நின்றாள் சஸி. அது ஒரு ஆபீஸ் கட்டிடமாகத் தெரியவில்லை. கட்டிடம் மட்டுமில்லை. தெரு கூட ஆபீஸ் இருக்கிற தெருவாக இல்லை. அந்த அமைதியும், நிசப்தமும் கூடாரமாக விரிந்த மர நிழல்களும், இலையிடுக்குகளின் வழியாகத் தரையில் இறைபடும் வெள்ளிக் காசுகளும், கீச்சிடும் அணில்களும், கரைகிற காகங்களும், வாசல் கூர்க்காவும், வெளி நாட்டுக் கார்களும்...



இல்லை. நிச்சயமாய் இது ஆபீஸ் இருக்கிற இடமில்லை. சஸி நிறைய ஆபீஸ்களைப் பார்த்திருக்கிறாள். வேலை தேடி ஒவ்வொரு இடமாக ஏறி இறங்கியிருக்கிறாள். 'இப்போ வேலை எதுவும் காலி இல்லை. இப்படி நேராக வந்து நின்றால் எப்படி? வேகன்ஸி இருந்தால் அட்வர்டைஸ் பண்ணுவோம், அப்போது அப்ளிகேஷன் போடுங்க... போங்க...' என்று சிடுசிடுத்த முகங்களையும் குரல்களையும் கேட்டிருக்கிறாள். சில இடங்களில் ஒரு வாரம், பத்து நாள் என்று தற்காலிக வேலையில் கூட இருந்திருக்கிறாள்.

ஒரு வாசனைத் தைலக் கம்பெனி, ஒரு மிட்டாய்க் கம்பெனி, ஒரு துணிக்கடை, ஒரே ஒரு ஆபீஸில் மட்டும் படித்த படிப்புக்கு ஏற்றதாய் ஒரு நாள் அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்டில் வேலை பார்த்திருக்கிறாள். அந்த ஒரு நாள் சம்பளமாகப் பத்து ரூபாய் வாங்கியிருக்கிறாள். இப்படி மவுண்ட் ரோட், தம்பு செட்டித் தெரு, பாரீஸ் கார்னரின் கோடி என்று, நிறைய ஆபீஸ்களைப் பார்த்தாகி விட்டது.

அதெல்லாம் சாதாரண மனிதர்களால் சுலபமாக நெருங்க முடிந்த இடங்கள்; பஸ்ஸில் ஏறி இறங்க முடிந்த இடங்கள். காரும், சைக்கிளும், ஸ்கூட்டரும், ஆட்டோவும், கால் நடையுமாக அமர்க்களப்படுகிற இடங்கள், எப்போதும் நடமாட்டமும், சந்தடியுமாக மனிதத் தலைகள், முகங்கள், உருவங்கள்... அங்கே. அவளுக்குத் தனி முகமில்லை; தனியான உருவமில்லை. கூட்டங்களில் யாருக்கும் தனியான உருவம் இருக்கவும் முடியாது...

ஆனால், இங்கே அப்படி இல்லை. இங்கு அவள் மட்டும் தனியாய், தனி முகமாய், தனியான உருவமாகத் தெரிந்தாள். இப்படி யாரும் இல்லாதது, எதிரில் வருபவர்கள் மீது இடிபடாமல் நடப்பதே ஒரு அனுபவமாக இருந்தது. காலை வீசிப் போட்டு சந்தடி இல்லாமல், பிளாட்பாரக் கடைக் காரர்களின் கத்தல் இல்லாமல், எது எடுத்தாலும் ஒரு ரூபாய் கோஷம் கேட்காமல், பக்கத்தில்

யாருமில்லாமல்... மெலிசான குரலில் பாட்டுப் பாடிக் கொண்டே கூடப்போகலாம். அவள் கள்ளக் குரலில் ராகம் இழுக்கிற மாதிரி ஒரு மலையாளப் பாடலின் முதல் இரண்டு அடிகளை முணுமுணுக்க ஆரம்பித்து சட்டென நிறுத்திக் கொண்டாள்.

'என்ன இது...?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். சின்னக் குழந்தை மாதிரி இது என்ன ஆசை...? பெரியம்மாவின் வீட்டுத் தெருவில் ராத்திரி பதினொரு மணிக்கு மேல் தினமும் ஒருவன் விஸிலடித்துக் கொண்டு போவான். தூக்கம் வராத ராத்திரிகளில் மெதுவாக எழுந்து போய் வாசல் நடையின் கம்பிக் கதவைப் பிடித்துக் கொண்டு வானத்தை வெறித்துக் கொண்டு நிற்கிற போது அந்த விஸில் சத்தம் காதில் விழும். ஏதோ சினிமாப் பாட்டின் ராகமாகக் கேட்கும்.

அந்த ராத்திரி வேளையில், எப்போதோ குரைக்கிற தெரு நாய்களின் சத்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லாத நிசப்தத்தில் அவன் அப்படி விஸிலடித்துக் கொண்டு போவது அழகாகத் தெரியும். மிகவும் வித்தியாசமாகக் கேட்கும். அந்தத் திருவல்லிக்கேணியின் சந்துத் தெருவிற்குப் பொருத்தமில்லாததாகக் கூடத் தோன்றும். ஆனாலும் அவன் தினமும் அந்தப் பதினொரு மணிக்குப் போகத் தவறினதில்லை. அவளும் கேட்கத் தவறினதில்லை.

தனி மனிதனாகத் தெருவில் போகிற தைரியத்தில்தான் அவன் அப்படி விஸிலடித்துக் கொண்டு போக வேண்டும் என்று நினைத்துக் கொள்வாள், சஸி. அதே மாதிரி தனியாகப் போகிற காரணத்தினாலேயே தானும் பாட ஆரம்பித்ததை நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

சட்டென்று இதெல்லாம் என்ன நினைப்பு என்று தோன்றிற்று. தேவையில்லாமல் என்ன நினைப்பு. வேலை தேடி வந்துவிட்டு சம்பந்தமில்லாமல் என்னவெல்லாம் வருகிறது இந்த மனசில்...?

அவள் கைப் பையைத் திறந்து அட்ரஸை எடுத்துப் பார்த்தாள், சந்தேகமில்லாமல் இந்த இடம்தான். இது



நிச்சயமாக ஆபீஸாக இருக்க முடியாது; வீடுதான். இந்த வீட்டிற்குத்தான் அவள் இண்டர்வ்யூவிற்கு வந்திருக்கிறாள். இந்த வீட்டில் தனக்கு என்ன வேலை இருக்க முடியும் என்று யோசித்துப் பார்த்தாள்.

விளம்பரத்தில் கேட்டிருந்த மாதிரி அழகாக, கல்யாணமாகாத, படித்தவளாக, வெள்ளையாக, உயரமாக, நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவளாக... இத்தனை தகுதிக்கு இந்த வீட்டில் வேலை இருக்க முடியுமா? மணமகள் தேவை என்று விளம்பரப் படுத்துகிற மாதிரி எத்தனை தகுதிகள்! இதற்கெல்லாம் வீட்டு வேலையா? அப்படி என்ன வேலை? படித்த ஒரு பெண்ணிற்கு இந்த மாதிரி பெரிய வீடுகளில் கிடைக்கக் கூடிய வேலைகளை யெல்லாம் அவள் யோசித்துப் பார்த்தாள்.

நிறையக் குழந்தைகள் இருந்து, அவர்களைக் கவனிக்கிற கவர்னஸ் வேலை...? படுத்த படுக்கையில் இருக்கிற யாருக்காவது உதவி செய்கிற வேலை? கை கால் சரியில்லாத யாரையேனும் சக்கர வண்டியில் வைத்துத் தள்ளுகிற வேலை? இல்லை, யாருக்காவது பாடம் சொல்லிக் கொடுக்க...? இது எதுவும் இல்லா விட்டால் சாந்தி சொன்ன மாதிரி பர்ஸனல் ஸெக்ரட்டரி வேலை...?

எதுவானாலும் அவள் சரி சொல்லத் தயாராக இருந்தாள். எந்த வேலையாக இருந்தாலும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். இதுவும் இல்லாது போனால் இனி மேல் பெரியம்மாவின் வீட்டில் தங்க முடியாது. தங்குவதற்கு வேறு இடம் கிடையாது! அடுத்த வேளைச் சாப்பாட்டிற்குக் கூடக் கையில் பணமில்லை! 'வாண்டட்' காலம் பார்த்து அப்ளிகேஷன் போட, கவர் வாங்கி ஸ்டாம்ப் ஒட்ட, ரிப்ளை கவர் வைத்து அனுப்ப, போஸ்டல் ஆர்டர் வாங்க, ஆபீஸ் ஆபீஸாக ஏறி இறங்க...

எதுவும் முடியாது கையில் பணமில்லாதது மட்டுமில்லை. மனசாலும் முடியத்தான் இல்லை. உடம்பு கூட ஓய்ந்து போய் விட்டது. அலைந்து அலைந்து சலித்துப் போய்விட்டது. இனிமேல் அலைவதற்குக் கூடத் தெம்

பில்லாத மாதிரி தோன்றியது. அதனால், இது எப்படிப் பட்ட வேலையாக இருந்தாலும் தனக்குக் கிடைக்கக் கூடிய பட்சத்தில் ஏற்றுக் கொண்டு விட வேண்டும் என்று முடிவு செய்தாள். வேறு வழி இல்லை...

"யார் வேணும்...?"

அந்தக் கேள்வியில் சட்டென்று கலைந்து நிமிர்ந்து பார்த்தாள். இளைஞனாய் வெள்ளை வெளேரென்று நின்றிருந்த அந்த நேபாளத்து கூர்க்கா சுத்தமான தமிழில் கேட்டான். அவனும் தன்னை மாதிரியே தன் மனிதர்களை விட்டு, தேசத்தை விட்டு இங்கு வந்திருப்பவன். தமிழ் பேசக் கற்றுக் கொண்டிருப்பவன். இங்கு ஒரு வேலை தேடிக் கொண்டு, அந்தச் சம்பளத்தை ஊருக்கு அனுப்புபவன். இவனுக்கும் அங்கே ஓர் அம்மா இருக்கலாம். உபயோக மில்லாத அப்பா இருக்க்லாம். தம்பி, தங்கைகள் இருக்கலாம். எல்லோரும் இவன் பணத்தை மட்டுமே நம்பி யிருப்பவர்களாக, அதில் சாப்பிட்டு, உடுத்தி, படித்துக் கொண்டிருப்பவர்களாக இருக்கலாம். அந்த மலையாளத்து மண்ணைவிட நேபாளத்து மண் இன்னும் தொலைவில் இருப்பதைத் தவிர வேறு வித்தியாசமில்லை. அந்த வித்தியாசமில்லாத தன்மையே அவனிடம் அவளுக்கு ஒரு தோழமையை ஏற்படுத்தியது. அந்தத் தோழமையோடு அவனைப் பார்த்துப் புன்சிரிப்பாகச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் சந்தோஷப்பட்டவனாக, "யார் வேண்டும்?" என்பதை மறுபடியும் கேட்டான்.

அவள் இண்டர்வ்யூவிற்கு வந்திருப்பதைத் தெரியப் படுத்தினாள்.

"இண்டர்வ்யூவா...!" என்று ஆச்சரியமாகப் பார்த்தான் அவன். அவள் தனக்கு வந்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்துக் காண்பித்தாள். அவன் பிரித்துப் பார்த்து விட்டுத் திருப்பிக் கொடுத்தான். இந்த வீடுதான் என்று தலை யாட்டினான். பின் கேட்டின் அருகில் இருந்த தன்னுடைய சின்ன அறையின் நாற்காலியில் உட்காரச் சொன்னான். உள்ளே போய்க் கேட்டுக்கொண்டு வருவதாகப் போனான்.



அவள் உட்காராமல் அவன் போகும் பாதையையே பார்த்துக் கொண்டு நின்றாள். இது யாருடைய வீடு என்ற கேள்வி மனசுக்குள் எழுந்தது. வீடே தெரியாதபடி வளர்ந்திருந்த மரங்களையும், தோட்டத்தையும், கத்தரித்து விடப் பட்ட செடிகளையும், வாசலில் அரை வட்டமாய் விரிக்கப்பட்டிருந்த புல்வெளியையும் மாறி மாறிப் பார்த்த போது இலேசாக ஒரு பயம் ஏற்பட்டது.

இந்த வீட்டிற்கு எதற்காக வந்திருக்கிறோம்? இங்கு என்ன வேலை? யாரிடம் வேலை? ஒரு ஆபீஸ் வேலையாக இருந்தால் பத்து மனிதர்களுக்கிடையில் செய்யற வேலையாக இருக்கும். பாதுகாப்புக் கிடைக்கும். இங்கு அந்தப் பாதுகாப்பு இருக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது.

மனிதர்கள் நல்லவர்களாக இருப்பார்கள் என்ற நம்பிக்கை கிடையாது. அவளைத் தவிர வேறு யாரும் வேலைக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை. அப்படி வந் திருந்தால் அந்த நேபாளி, 'இண்டர்வ்யூவா!' என்று ஆச்சரியமாகக் கேட்டிருக்கமாட்டான், தன் புருவங்களை சுருக்கிப் பார்த்திருக்க மாட்டான். சந்தேகத்தோடு கேட்டுக் கொண்டு வருவதாக உள்ளே போயிருக்க மாட்டான்.

இந்த வீடு இல்லை... என்று அவன் திரும்பி வந்தால் தேவலாம் போலிருந்தது. இந்த இறுக்கம் குறைந்து கொஞ்சம் நிம்மதியாகக் கூட இருக்கும் என்று தோன்றிற்று.

ஆனால், அவன் இந்த வீடுதான் என்று சொல்லிக் கொண்டு வந்தான். "சலியே, அந்தர் சலியே" என்றான்.

அவனைப் போலவே தானும் சில சமயங்களில் மலையாளத்தில் பேசி விடுவதை நினைத்துக் கொண்டாள் அவள். ஒரு நல்ல கம்பெனியின் இண்டர்வ்யூவில் "வாட் இஸ் யுவர் ஃபாதர்?" என்று கேட்டபோது ஏதோ ஞாபகத்தில், "அச்சன் ஒரு ஜோலியிலும் இல்லா..." என்று அதில் சொன்னதை நினைத்துக் கொண்டாள். நிறைய சமயங் களில் அப்படித்தான் பேசி விடுகிறாள். இங்கு அந்த மாதிரி

எதுவும் உளறி விடக்கூடாது என்று நினைத்தபடி அந்த சிமெண்டுப் பாதையில் நடக்க ஆரம்பித்தான்.

அத்தனைக் கவலைகளுக்கிடையிலும் கண் ஒவ்வொன்றிலும் பதிந்தது. மனசு எல்லாவற்றிலும் லயித்தது. நடைபாதையின் இரண்டு பக்கங்களிலும் பூத்திருந்த கல்வாழையில், சற்றுத் தள்ளின ரோஜாவில், சாமந்தியில், அதற்கும் அடுத்த சூரியகாந்தியில், காற்றில் அசைந்து கொடுத்த செம்பருத்தியில், எங்கிருந்தோ வந்த மகிழம்பூ வாசனையில், புல்வெளியின் நடுவில் வாழை விரிந்திருந்த விசிறியில்...

எத்தனை அழகான தோட்டம்! எவ்வளவு குளுமை! இந்தப் பசுமையும் குளிர்ச்சியும் தன் ஊரான இருஞாலக் குடைக்குத்தான் உண்டு. அந்த மண்ணிற்கே குளிர்ச்சி அதிகம். மழை அதிகம். மரங்களும் அதிகம். இங்கு வந்து அவன் அந்தப் பசுமையைப் பார்க்கவே இல்லை. வெயிலும் வாகனங்களும், வியர்வையும், புழுதியுமாகத்தான் பார்த்திருக்கிறான். காற்றுக் கூடக் கோபித்துக்கொண்ட மாதிரி அனலாக அடிப்பதாகத்தான் உணர்ந்திருக்கிறான்.

முதல் தடவையாக இப்படிப் பசுமையும் குளிர்ச்சியுமாகப் பார்த்தபோது மனசு சந்தோஷப்பட்டுப் போயிற்று. வீட்டிற்குள் இருப்பவர்களின் மனசின் பசுமை அதில் தெரிந்தது. தோட்டக்காரனின் கை தேர்ந்த திறமை தெரிந்தது. அதை அவன் வெறும் ஊதியத்திற்காக மட்டும் செய்யவில்லை என்பது புரிந்தது.

ஆனாலும் அந்தப் பசுமையில் நெருடலாக ஒரு செயற்கைத் தன்மை இருப்பதை உணர்ந்தான் அவன். அந்தத் தோட்டமும் செடிகளும் கூடச் செயற்கையாகத்தான் பட்டது. ஒழுங்கும் வரிசையுமாகக் கத்தரித்து விடப்பட்ட இலைகளும், கிளைகளுமாக... தரையில் வாடின பூக்களின் உதிரல்கள் இல்லாமல், செடிகளுக்கிடையில் ஒரு புல்லோ பூண்டோ பார்க்க முடியாமல், கான்வெண்ட் சிறுமிகளைப் போல் ஒரே மாதிரி சீராய் ஒழுங்காய்...



இந்த மாதிரி ஒரு ஒழுங்கு அவனுக்குப் பிடிப்பதில்லை. இதில் நிறையக் கட்டுப்பாடு இருக்கிற மாதிரி தோன்றியது. செடிகளுக்குக் கூடச் சுதந்திரமில்லை என்று நினைத்தபோது கஷ்டமாக இருந்தது. அவனுடைய ஊரில் அப்படி இல்லை. அங்கே செடிகளை வெட்டுபவர் இல்லை. ஒழுங்காகக் கத்தரிக்க யாருமில்லை. பக்கத்தில் சின்னச் சின்ன செடிகளாக எருக்கு, தும்பை, காசித்தும்பை, காட்டாமணக்கு, கரிசலாங்கண்ணி, கீழாநெல்லி என்று வளர்ந்து கிடக்கும். மூலிகைச் செடிகளாக சிலது படர்ந்து கிடக்கும்! நேற்றைய உதிர்ந்த பூக்களின் பெட்ஷீட் சின்னதும் பெரிசுமாய் அப்படியே விரிந்து கிடக்கும். அதைச் சுருட்டிக் கொண்டு போக ஆளில்லை.

அதே மாதிரி குளியல் கூட இங்கு குளிப்பது போல் நான்கு சுவர்களின் மறைவில் இல்லை. குளத்தில், ஓடையில் போய் துண்டைக் கட்டிக் கொண்டு, தலையை விரித்துக் கொண்டு, நீரில் கறுப்புப் பாம்புகளாக அலை அலையாக, நீளநீளமாய்க் கூந்தல் மிதக்க, முகம் பளிச்சிட முழுகி, நீச்சலடித்து, மணிக்கணக்கில் மிதந்து...

இங்கே அதெல்லாம் சாத்தியமில்லை. பெரியம்மா வீட்டில் 'லொட் லொட்' என்று அடிக்கிற கைப் பம்புதான். அரை மணி அடித்தால் அரை வாளித் தண்ணீர் நிரம்பும். அதற்குள் கீழ் வீட்டுக் குடித்தனக்காரர்கள் சண்டைக்கு வருவார்கள்.

"இப்படி எப்போ பார்த்தாலும் மண்டையில் அடிக்கிற மாதிரி பம்ப்பை அடிச்சால் நாங்க என்ன பண்ணறது...?" என்று சிடுசிடுப்பார்கள். அதற்குப் பயந்தே அவள் அரை வாளித் தண்ணீரில் குளித்து விட்டு வருவாள். அதையெல்லாம் நினைத்துக்கொண்டே போர்டிகோவை நெருங்கினபோது

"எஸ் ப்ளீஸ்...?" என்ற குரல் கம்பீரமாகக் கேட்டதும் அவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

ஆறடி உயரத்தில், வெள்ளை வெளேரென்று, லேசாய் முன் நெற்றியில் விழுந்த முடிக் கற்றையும், பளிச்சென்ற புன்சிரிப்புமாய் நின்று கொண்டிருந்தான் அவன்.

அந்தக் கம்பீரத்தையும் பளிச்சிட்ட பார்வையையும் புன்சிரிப்பையும் பார்த்து எதுவும் பேச்சு வராமல் தயங்கினாள் அவள். அந்தத் தயக்கத்தைப் புரிந்து கொண்டவனாக இன்னும் நிதானமாக-இன்னும் மலர்ந்த முகமாக-

"யார் வேணும் உங்களுக்கு...?" என்று கேட்டான் அவன்.

அந்தக் குரலில் இருந்த ஏதோ ஒன்று மனசைத் தொட மெதுவாக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே இன்டர்வ்யூவிற்கு வந்திருப்பதைத் தெரியப்படுத்தினாள். தனக்கு வந்திருந்த கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

அதை வாங்கிக் கொண்டபோது அவன் அவளையே ஒரு தரம் தீர்க்கமாகப் பார்த்தான். அந்தப் பார்வை மனசில் பதிய மெதுவாகத் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.



## 3

அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் சசி. அவன் கடிதத்தை வாங்கிக் கொண்டானே தவிர பிரிக்கவில்லை. படிக்கவில்லை. அப்படியே தன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். ஏதோ யோசிக்கிற மாதிரி ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தான். பின் அவள் முகத்தை நிதானமாகப் பார்த்தான்.



என்ன பார்வை அது! அதில் தெரிந்த குளிர்ச்சியில் சட்டென்று சின்ன சிலிர்ப்பாக ஓட மெதுவாகத் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்.

இதற்கு முன்பும் வேலை தேடிப்போன இடங்களில் நிறையப் பார்வைகளைச் சந்தித்திருக்கிறாள். அவைகளின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டிருக்கிறாள். புடவைக்குள் பார்க்கிற அந்தப் பார்வைகளின் தீட்சண்யத்தில் தன்னுக்குள்ளேயே சுருண்டு போயிருக்கிறாள்.

அந்தச் சுருளலை வெளிக் காட்டாமல் 'எஸ் சார் ஓ.கே. ஸார்' என்று வார்த்தை பதிலில் தன் வேலையைத் தொடர்ந்திருக்கிறாள். வேலை அவளுக்கு மிகவும் அவசியம். இந்தப் பார்வைகளுக்காக அதை விட்டுவிட முடியாது. முதல் தேதியன்று கிடைக்கப் போகிற சம்பளத்திற்காக இவைகளைச் சகித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியிருந்ததில்லை.

ஆனால், அப்படிச் சகித்துக் கொள்ள முடியாமல் - வெறும் பார்வையோடு நிற்காமல் - மெதுவாக ஸ்பரிசத்தில் ஆரம்பிக்கிறபோதுதான் அவள் தன் வேலையையே உதறியிருக்கிறாள். அப்படி எத்தனை வேலைகள் - எவ்வளவு இடங்கள்...மனசை மருட்டுகிற முகங்கள் - நெஞ்சைக் கரிக்கிற அனுபவங்கள்...

ஆனால், இது அப்படிப்பட்ட அனுபவமாக இருக்கும் என்று தோன்றவில்லை. அவனுடைய பார்வையும் உடம்பைச் சுடுகிற பார்வையாக இல்லை. நிமிஷமாய் நெஞ்சை எரிக்கிற பார்வை இல்லை. இவன் எதிரில் நிற்கிற போது மர நிழலில் ஒதுங்கின மாதிரி இதமாகத்தான் இருந்தது.

சில்லென்ற காற்று உடம்பை வருடிக்கொண்டு போகிறாற் போல் குளிர்ச்சியாகத்தான் தோன்றியது. இதே குளிர்ச்சியை அவள் சாந்தியிடம் அனுபவித்திருக்கிறாள். சாந்தியின் பார்வைகூட இப்படித்தான். மனசைக் கட்டி அணைத்துக் கொண்டு 'என்கிட்டே எல்லாவற்றையும் சொல்லேன்...' என்று கேட்கிற மாதிரி இருக்கும்.

ஒரே வினாடியில் நெஞ்சைத் தொடும். நெருங்கி வந்து ஙஷ்டங்களை யெல்லாம் பகிர்ந்து கொள்ளும். ஒருவேளை இப்படி அகலமான பெரிய கண்களும், நீண்ட நீண்ட இமைகளுமாக இருந்தாலே இப்படித்தான் தோன்றும் போலிருக்கிறது...

கல்மிஷம், கபடம் எதுவுமில்லாமல் குழந்தைச் சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே... ஆனால் இவனுடையது குழந்தைச் சிரிப்பும் இல்லை. நல்ல கம்பீரமான சிரிப்பு. தெளிவாய்-இதமாய்-இவனைப் போலவே அழகாய் இருக்கிற சிரிப்பு...

சட்டென்று திடுக்கிட்ட மாதிரி நிமிர்ந்தாள் அவள். 'என்ன இது...? எதற்காக இப்படியெல்லாம் நினைக்க வேண்டும்? இந்தப் பார்வையும் உருவமும் ஏன் இப்படி மனசைத் தொட வேண்டும்? இது என்ன பைத்தியக்காரத் தனம்?' மெல்லத் தன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

"மை நேம் ஈஸ் சனி..." என்றாள் மெதுவான குரலில்.

"தெரியும்!" என்று லேசாகப் புன்னகை செய்தான் அவன். "பெயரும், போட்டோவில் பார்த்த முகமும் மறக்கவில்லை..."

அவள் அதற்குப் பதில் சொல்லாமல் நின்றாள்.

அவன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஐ யம் க்ருபாகர்-க்ருபா."

அவள் அதற்கும் பேசாமல் இருந்தாள்.

"உள்ளே வருகிறீர்களா...? இப்படி வராந்தாவில் நின்று எத்தனை நேரம் பேச முடியும்?"- மறுபடியும் அவன் மென்மையாகச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பைப் பார்த்துக் கொண்டே அவனோடு உள்ளே போனாள். அவன் காட்டின சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். அவனும் எதிரில் உட்கார்ந்தான்.



அந்தப் பார்வையைத் தவிர்க்க மெதுவாக அறையைப் பார்க்க ஆரம்பித்தாள். அந்த வரவேற்பறையும்-அதன் பொருட்களும்- சுவரின் பளபளப்பும்-அதில் மாட்டியிருந்த பெரிய பெரிய சித்திரங்களும் அவளுக்குப் புதிதானவை. அந்நியமானவை.

அவனும் அந்நியமானவன்தான். புதியவன்தான். யார் என்றே தெரியாதவன்தான். ஆனாலும் அப்படி நினைக்க முடியாதபடி, அந்நியமாகத் தோன்றாதபடி, ஒரே நிமிஷமாக மனசை நெருங்கி விட்டவன். இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று நினைத்தபோது பிரமிப்பாக இருந்தது.

'யார் இந்த க்ருபா...?'

இவனுக்கும் தனக்கும் என்ன சம்பந்தம்? இவன் தனக்கு வேலை கொடுக்கப் போகிறவன். தான் இவனிடம் வேலை செய்யப் போகிறவள்.

அதைக் கூட நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. வேலை இல்லை என்று இவன் மறுக்கிற பட்சத்தில் திரும்பிப் போக வேண்டியவள்தான். அப்படி இருக்கிறபோது இதெல்லாம் என்ன நினைப்பு? விவேகமே இல்லாத நினைப்பு.

"என்ன சாப்பிடுகிறீர்கள்...?"

அவள் சட்டென்று கலைந்து நிமிர்ந்தாள்.

"ம்...?"

"நல்ல வெய்யிலில் வந்திருக்கிறீர்களே. என்ன சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டேன்..."

அதற்குப் பதில் சொல்லாமல் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு மெதுவாகச் சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறீர்கள்...?"

"இல்லை. இண்டர்வ்யூவிற்கு வந்தவர்களை இது வரை யாரும் இப்படி உபசரித்து நான் பார்த்ததில்லை. நிறைய இடங்களில் அரை மணி நேரக் கேள்விகளுக்குக்கூட நான் நின்று கொண்டே பதில் சொல்லியிருக்கிறேன்..."

அதைக் கேட்டு அவன், "ஐ யம் ஸாரி!" என்று அவளைப் பார்த்தான். முகம் சட்டென்று மாறியது. ஏதோ யோசித்துக் கொஞ்சம் தயங்கிப் பின் பேச ஆரம்பித்தபோது குரல் தழைந்து வந்தது.

"... வெல்... இது ஒரு ஃபார்மல் இண்டர்வ்யூ இல்லை, மிஸ் சஸி. இன் ஃபாக்ட் இது இண்டர்வ்யூவே இல்லை என்று கூடச் சொல்லலாம்."

சஸி கொஞ்சம் அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தாள். இந்த வேலையும் கிடைக்கப் போவதில்லை என்ற ஏமாற்றத்தில் ஒரு சோகம் கவிந்தது.

"இண்டர்வ்யூவே இல்லையா...? என்ன சொல்கிறீர்கள்? வேறு யாரையாவது அந்த வேலைக்குத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா...?"

அவளுடைய குரலின் தடுமாற்றத்தையும், பார்வையில் தெரிந்த ஏமாற்றத்தையும், முகத்தின் சோகத்தையும் புரிந்து கொண்டான் அவன். அவள் வெகு நாட்களாக வேலைக்கு முயற்சி செய்பவளாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். வேலை என்பது அவளுக்கு மிகவும் அவசியமான ஒன்று என்பதும் தெரிந்தது. அந்த அவசியத்தைத்தான் உபயோகித்துக் கொள்ளப் போகிறோமோ என்ற நினைப்பில் ஏற்பட்ட நடுக்கத்தில் அவளைப் பார்ப்பதைத் தவிர்த்தான்.

வாசல் வழியாகத் தெரிந்த விசிறி வாழை, போகன் வில்லா, ஒற்றையாய்ப் பெரிதாய்ப் பூத்திருந்த அடுக்குச் செம்பருத்தி என்று பார்வை மாறி மாறி அலைந்தது. புல் வெளியில் வந்து உட்கார்ந்த இரண்டு மைனாவிடம் சிறிது நேரம் நிலைத்தது. அவை விருட்டென்று பறந்து போனபின் மெதுவாக அவளிடம் திரும்பியது.

"நோ மிஸ் சஸி. அவ்வளவு சுலபமாக யாரையும் தேர்ந்தெடுத்து விடக்கூடிய வேலை இல்லை இது. இதற்கு யாரும் அவ்வளவு சுலபமாக ஒப்புக் கொண்டு விடவும் மாட்டார்கள். உண்மையாகச் சொல்லப் போனால் உங்களைத் தவிர நான் வேறு யாரையும் தேர்ந்தெடுக்க



வில்லை. யாருக்கும் கடிதம் போடவில்லை. யாரையும் வரச் சொல்லவில்லை. நான் வரச் சொன்ன முதல் நபரே நீங்கள் தான். நீங்களே கடைசி நபராகவும் இருப்பீர்கள் என்று நினைக்கிறேன்."

அவள் மறுபடியும் பிரகாசமான கண்களோடு அவனைப் பார்த்தாள்.

"ஆமாம் மிஸ் சஸி! உங்கள் போட்டோவைப் பார்த்ததிலிருந்து-உங்கள் முகத்தில், அந்தக் கண்களில் தெரிந்த ஏதோ ஒன்று-என்ன என்று என்னால் சொல்ல முடியாத ஒன்று-உங்களை நம்பலாம், நம்பி எல்லாவற்றையும் சொல்லலாம் என்று நினைக்க வைத்தது. அதனால்தான் உங்களுக்கு மட்டும் கடிதம் போட்டேன். இப்போது நேரில் பார்த்த பின்னாலும் அந்த நினைப்பு உறுதியாகிறதே தவிர குறையவில்லை..."

அவள் நெகிழ்ந்து போன மாதிரி அவனைப் பார்த்தாள். பதிலுக்குத் தானும் அந்த மாதிரி ஏதாவது சொல்ல நினைத்து ஒன்றும் தோன்றாமல் 'தாங்க்யூ' மட்டும் சொன்னாள்.

அதைக் கேட்டு அவன் தயங்கினாற் போல் புன்னகை செய்தான்.

"இவ்வளவு சீக்கிரமாக நன்றி சொல்லிவிடாதீர்கள், சஸி! There are many slips between the cup and the lip. இந்த Slip எனக்காக - என்னுடையதாகக் கூட இருக்கலாம். கடைசியில் நன்றி சொல்ல வேண்டியவன் நானாகவும் இருக்கலாம். அதனால் நீங்கள் அவசரப்பட்டு எதையும் உறுதிப்படுத்திக் கொண்டு விடாதீர்கள்."

சஸி ஒன்றும் புரியாமல், 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்...?' என்று கேட்கிற பாவனையில் அவனைப் பார்த்தாள்...

"இல்லை... நான் சொல்லப் போகிற விஷயங்களை நீங்கள் பொறுமையாகக் கேட்க வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். நிதானமாக- கோபப்படாமல் - ஒரு

அனுதாபத்தோடு-ஏன், கொஞ்சம் பரந்தமனசோடு கூடவும் கேட்டுக் கொள்ள வேண்டும். அதன் பின்பு முடிவு செய்ய வேண்டும். இனிமேல் முடிவு செய்ய வேண்டியது நீங்கள் தானே தவிர நானில்லை. அதனால் - நாம் நிறையப் பேச வேண்டி இருப்பதால் - அதற்கு முன்பு-வெய்யிலில் வந்த களைப்பிற்காக ஏதாவது சாப்பிடுங்களேன், ப்ளீஸ்..."

அந்த 'ப்ளீஸ்' அவளை நிஜமாகவே சங்கடப் படுத்தவே, "சரி, ஏதாவது கொடுங்கள்" என்றாள்.

அவன் "ஆயா!" என்று குரல் கொடுத்தான். இரண்டு டம்ளர் சாத்துக்குடி ஜூஸ் கொண்டு வரச் சொன்னான். அதைக் குடித்து முடிக்கிறவரை பேசாமல் இருந்தான். பின்-

"இது என்ன வேலை என்று உங்களுக்குச் சொல்லு முன்..." என்று ஆரம்பித்துச் சிறிது தயங்கி மறுபடியும் தொடர்ந்தபோது குரல் கரகரவென்று வந்தது.

"வேலை என்று கூடச் சொல்ல முடியாது, மிஸ் சஸி. இது வேலை இல்லை. இட் ஈஸ் அன் ஆப்ளிகேஷன். ஆப்ளிகேஷன் என்பது கூட இதற்குச் சரியான வார்த்தை இல்லை தான். சரியானதாக - பொருத்தமானதாக எதைச் சொல்ல முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை இதற்குச் சரியான வார்த்தையே கிடையாதோ என்று கூடத் தோன்றுகிறது. வெறும் வார்த்தைகளால் இதைப் புரிய வைக்க முடியாது என்று நினைக்கிறேன். ஆனாலும் உங்களுக்குப் புரிய வைக்க வேண்டும். வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும்..."

சஸி சட்டென்று அவனைக் கூர்மையாகப் பார்த்தாள்

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள், அல்லது சொல்ல வருகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. புரியாத போது கொஞ்சம் பயமாகக் கூட இருக்கிறது."

"பயமா...?" என்று கொஞ்சம் அவசரமாகக் குறுக்கிட்டான் அவன். "நோ, மிஸ் சஸி. உங்களைப் பயமுறுத்தும்



படி நான் எதுவும் பேசவில்லை என்று நினைக்கிறேன். டு பீ வெரி ஃப்ராங்க் வித் யு-சொல்ல வந்த விஷயத்தை எப்படிச் சொல்வது என்று நான்தான் உங்களிடம் பயப்படுகிறேன். அந்தப் பயத்தைப் போக்கிக் கொள்ளத்தான் இப்படி நிறையப் பேசுகிறேன். என்னைப் புரிய வைக்க முடியுமா என்று பார்க்கிறேன். எனக்குள் ஏற்படுகிற தயக்கங்களை உதறித் தள்ளி விட்டு மனசின் மென்மையைக் கொஞ்சம் மரத்துப் போகச் செய்ய முடியுமா என்று யோசிக்கிறேன். இதற்கெல்லாம் எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப் படுகிறது. தகுந்த வார்த்தைகள் தேவைப்படுகிறது. எப்படி ஆரம்பிப்பது என்று புரியாமற்போகிறது." என்று அரை விநாடி நிறுத்தி, அறைக்குள் வந்து கிரீச்சிட்ட இரண்டு சிட்டுக் குருவிகளைப் பார்த்தான்.

அவை ஒன்றை ஒன்று துரத்திப் பறந்து போன வேகத்தில் சட்டென்று எழுந்து சுற்றிக் கொண்டிருந்த மின்சார விசிறியை நிறுத்தினான்.

பின் அவளிடம் ஸாரி சொன்னான். அவள், "பரவா யில்லை," என்றதும், "அவை பறந்து வெளியில் போகட்டும். மறுபடியும் ஃபேனைப் போடுகிறேன்!" என்றான்.

பத்து நாட்களுக்கு முன் சுற்றிக் கொண்டிருந்த ஃபேனில் அடிபட்டு அறை மூலையில் சுருண்டு விழுந்த அந்தக் குருவியின் ஞாபகம் வந்தது. அறையின் பச்சை கார்ப்பெட்டின் ஓரம் கையகலச் சிவப்பாய் மாறினது - புத்தகம் படித்துக் கொண்டிருந்த இவன் எழுந்து ஓடினது - ஒரு நிமிஷம் அடிபட்ட குருவியையும், கார்ப்பெட்டின் சிவப்பையும் பார்த்துக்கொண்டு அப்படியே நின்றது - இரண்டு நாட்கள் வரை அதன் ஜோடியான மற்றொரு குருவி அந்த அறையையே சுற்றிச் சுற்றி வந்து கிரீச்சிட்டது.

தன்னை மிகவும் பாதித்த அந்த விஷயத்தை அவள் கேட்காமலே சொன்னான் அவன்.

"அதன் பின் ஒரு வாரம் அடிபட்ட அந்தக் குருவி என் மனசை விட்டுப் போகவே இல்லை. சாப்பிடும் போதும்

- தூங்கும் போதுகூட-அதன் நினைவு வரும். அது மட்டுமில்லை. அதற்குப் பின் அறையையே சுற்றிச்சுற்றி வந்து பரிதாபமாகக் கிரீச்சிட்ட அந்த இன்னொரு குருவி..." என்று அந்த நினைவின் சோகத்தில் சற்றுப் பேசாமல் இருந்தான்.

பின் ஒரு ஆழமான பெருமூச்சோடு, "என்ன செய்யலாம் சொல்லுங்கள்... லைஃப் ஈஸ் லைக் தட்..." வருத்தமான புன்னகையில் அவளைப் பார்த்தான்.

அவள் என்ன சொல்வது என்று தெரியாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வை மென்மையும்... இதமுமாகப் பனிச்சிட்டது. அந்தப் பனிச்சிடலைப் புரிந்து கொண்டு அரை வினாடி பேசாமல் இருந்தான்.

'இந்தப் பனிச்சிடலும், மென்மையும் இன்னும் சிறிது நேரத்தில் - தான் சொல்லப் போவதைக் கேட்ட பின் மாறி விடுமா' என்று தோன்றியது. அதை நினைத்தபோது கஷ்டமாகக் கூட இருந்தது.

ஒரு நிமிஷம் அவளிடம் எதையும் சொல்லாமல், 'சாரி, மிஸ் சஸி. உங்களை வரவழைத்ததற்கு மன்னித்து விடுங்கள். ஸாரி ஃபார் தி இன்கன்வீனியன்ஸ்...' என்று சொல்லி அவளைக் காரில் கொண்டு போய் விடச் சொல்லலாமா என்று கூட நினைத்தான். ஆனால், அப்படிச் சொல்லாமல், அதற்கு மாறாகத் தான் சொல்லிக் கொண்டிருந்த விஷயத்தைத் தொடர்ந்தான்.

"நான் கொடுத்திருந்த விளம்பரத்திலிருந்து - கேட்டிருந்த தகுதிகளிலிருந்து-சாதாரணமான வேலைகளில் ஒன்றை எதிர்பார்த்து நீங்கள் இங்கே வந்திருக்கலாம். ரிஸெப்ஷனிஸ்ட், பர்ஸனல் ஸெகரெட்டரி, பப்ளிக் ரிலேஷன் ஆபீஸர் என்று இதில் எதையாவது நினைத்துக் கொண்டிருக்கலாம். இல்லையா, மிஸ் சஸி..?" என்று கேட்டான்.

அவள் ஆமாம் என்று தலையாட்டினாள்



அவன் இன்னமும் தயங்கியவனாக, "ஆனால்... ஆனால்... இவை எதுவும் இல்லை என்று கேள்விப்படுவது உங்களுக்குக் கஷ்டமானதாக இருக்கும். ஏமாற்றமாகக் கூடத் தெரியும்."

"இல்லை!" என்று தலையாட்டிச் சிரித்தாள் அவள். "வேலையே இல்லை என்றால்தான் கஷ்டமாக இருந்திருக்கும் ஏமாற்றமாகத் தெரிந்திருக்கும். பட், இப்போது அப்படி இல்லையே... அதெல்லாம் இல்லாது போனாலும் வேறு ஏதோ ஒரு வேலை இருக்கிறது..."

அந்தச் சிரிப்பையும், வெண்மையாகப் பனிச்சிட்ட பற்களின் ஒழுங்கான வரிசையையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

'இவளா...? இவளையா...? குழந்தையாகச் சிரிக்கிற இந்தச் சிரிப்பையா...?' என்று தோன்றியது.

'இவளே குழந்தையாகத்தானே தெரிகிறாள்...?' என்றும் பட்டது. நினைத்துக்கொண்டான். 'இவளிடம் கேட்கக் கூடிய விஷயமா அது...' என்று மீண்டும் தயங்கினான். ஆனாலும் கேட்பதைத் தவிர வேறு வழி இல்லை. இவளைத் தவிர வேறு யாரிடமும் தன்னால் கேட்க முடியாது. என்ன காரணத்தினாலோ இவள் தன் மனசுக்கு மிகவும் நெருங்கினவளாகத் தோன்றினாள்.

வேறு யாராலும் அப்படி நெருங்க முடியாது என்றும், ஏழு வருஷத்திற்கு முன்னால் இதே மாதிரி ஒரு சாதாரணப் பார்வையில் தன் மனசை நெருங்கி-பின் தன்னை நெருங்கி - தன்னிடம் இடம் பிடித்துக் கொண்ட புவனா சட்டென்று நினைவுக்கு வந்தாள்.

'புவனா... புவனேஸ்வரி...!' ஆழமான பெருமூச்சோடு அவளை இன்னும் இவளுக்கு அறிமுகப் படுத்தவில்லை என்பது நினைவுக்கு வர-

"வருகிறீர்களா, முதலில் என் மனைவியைப் பார்த்து விட்டு வரலாம்..." என்று கேட்டான். மனைவி!



# 4

சஸி சரேலென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் அந்தப் பார்வையை - அதில் விழுந்த பள்ளத்தைப் புரிந்து கொண்டான். மனசுக்குள் அதைவிட ஆழமாக இன்னும் பெரிய பள்ளமாக விழுந்து போயிருக்கும் என்றும் நினைத்துக் கொண்டான்.

விழுந்துதான் போயிற்று. பெரிய பள்ளமாகத்தான் இருந்தது. தான் அவன் கல்யாணமாகாதவனாக இருக்க வேண்டும் என்று ஏன் எதிர்பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மனசு எவ்வளவு சீக்கிரம் பிரமைகளில் ஆழ்ந்து போகிறது என்றும் நினைத்துக் கொண்டாள்.

இது என்ன பிரமை? அடித்தளமில்லாமல் மளமள வென்று உருவான பிரமை. இதற்கு என்ன காரணம்? எதிரில் பார்க்கிற இந்த அழகு- ஆறடி உயரத்தில் நிற்கிற கம்பீரம்... பளபளவென்று மின்னுகிற நிறம்...? இல்லாவிட்டால், நெஞ்சைத் தொடுகிற இந்தப் பேச்சு... குளிர வைக்கிற பார்வை...

எதுவானாலும் நிஜத்தைச் சந்திக்கத் தான் தயாராக வேண்டும். நிஜங்கள் தவிர்க்க முடியாதவை. வாழ்க்கையை விட்டு விலக்க முடியாதவை. விலக்க முடியாதவைகளோடு கை குலுக்குவதைத் தவிர வேறு வழி இல்லை.

அவள் சட்டென்று அதிகம் களைத்துப் போனாள். அந்த நாளை நினைத்தபோது சலிப்பாகக்கூட இருந்தது. என்ன அனுபவங்கள் என்று தோன்றிற்று. இந்த அனுபவமில்லாமல் - சலிப்பில்லாமல் எந்த நாள்தான் இருக்கிறது என்றும் சொல்லிக் கொண்டாள். சட்டென்று அந்த வீட்டை விட்டு அவனை விட்டு எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போய்விட வேண்டும் என்று தோன்றியது.



எங்கேயாவது - யாருமில்லாத இடத்தில் மனிதர்களே இல்லாத காட்டில்... அப்படி எங்கே போக முடியும்...? நினைவில் கூட நிஜம்தான் முடிவாகத் தன்னைத் தாக்கு கிறது என்று நினைத்தபோது மெதுவாகச் சிரிப்பு வந்தது. கூடவே சாந்தியின் நினைவும் வந்தது. அவள் கூட இப்படித்தான் சிரிப்பாள். இந்த மாதிரிதான் சிரிக்க வேண்டும் என்றும் சொல்லுவாள். அவளுக்குச் சிரிக்கக் கற்றுக் கொடுத்ததே சாந்திதான்.

"என்ன, வருகிறீர்களா?" என்று மிகவும் தயங்கின குரலில் மறுபடியும் மெலிசாகக் கேட்டபோது அவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு எழுந்தாள். உதட்டில் ஒட்டிய அந்த லேசான புன்சிரிப்போடு அவனுடன் மாடிப் படிகளில் ஏற ஆரம்பித்தாள்.

"ஒரு நிமிஷம் இருக்கிறீர்களா, இதோ வருகிறேன்..." மூடியிருந்த அறையின் வாசலில் அவளை நிற்க வைத்து விட்டு உள்ளே போனான் க்ருபாகர். அவன் அந்த அறைக் கதவைத் திறந்து மூடினபோது உள்ளேயிருந்து வந்து ஏர்கண்டிஷன் குளிர்ச்சி சில்லென்று முகத்தைத் தாக்கியது. அந்த அரை வினாடிக் குளிர்ச்சியில் சுறுசுறுப்பாக உணர ஆரம்பித்தாள் சஸி. வாசலை விட்டுச் சற்று நகர்ந்து மாடி வராந்தாவையும் - சுவரில் ஒட்டியிருந்த பெரிய போஸ்டர் களையும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

எத்தனை போஸ்டர்கள்! எல்லாம் குழந்தைகளின் படங்கள். வெளி நாட்டுக் குழந்தைகள். நீலக் கண்கள். செம்பட்டைத் தலைகள். அழகான கன்னங்கள். சிவப்பு உதடுகள். மொழுமொழுவென்ற உடம்புகள்...

பச்சைப் பசேலென்று பனி விழுந்த இலைகளின் பின்னணியில் ஒரு பெண் குழந்தை. படம் முழுதும் சிரிப்பாய், பொன்னிறக் கூந்தலாய் ஒரு பிஞ்சு முகம். கையில் கொத்துப் பூவோடு தன் நீண்ட கவுன் தடுக்காமல் புல் வெளியில் ஓடி வருகிற சிறுமி. அந்தப் பசுமையும் - முகங்களும் - கீழே இருந்த வெள்ளை எழுத்து வாசகங்களும் மனதில் பதிந்துதான் போயிற்று.

Everything that lives,
Lives not alone,
Not for itself..
Life's meaning is love's secret..
All my tomorrows
depend on your love...

சட்டென்று அந்தக் கடைசிப் படத்தின் வாசகம் மனதில் அழுத்தமாகப் பதிந்தது. 'உன்னுடைய அன்பில் என்னுடைய நாளைப் பொழுதுகள்..' அந்தக் குழந்தையின் இடத்தில் கையில் பூங்கொத்திற்குப் பதிலாக சர்டிபி கேட்டுகள் அடங்கின ஃபைலோடு தான் நிற்பதாகத் தோன்றியது. புல்வெளி பஸ் ஸ்டாப்பிங்காக மாறிற்று. வாசகங்களும் மாறிப் போயின.

All my tomorrows depend on your job... 'உன்னுடைய வேலையில் என்னுடைய நாளைப் பொழுதுகள்..'

கற்பனையில் கூடத் தன்னால் வேலையை விட்டு விலக முடியாததை நினைத்தபோது சிரிப்பு வந்தது. மெது வாகச் சிரித்தபடி அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"உள்ளே போகலாமா..?" என்று கேட்டுக் கொண்டு வந்த க்ருபாகர் அவன் உதட்டின் சிரிப்பைப் பார்த்ததும் நின்றான். 'எப்படிச் சிரிக்கிறான் இவன்!' என்று நினைத்துக் கொண்டான்.

"என்ன நீங்களாகவே சிரித்துக் கொள்கிறீர்கள்...?" என்று கேட்டான்.

"இல்லை, இந்த 'ஆல் மை டுமாரோஸ் டிபெண்ட் ஆன் யுவர் லவ்' படித்ததும் சிரிப்பு வந்தது.."

சிரிக்க அதில் என்ன இருக்கிறது என்பது புரியாமல் அவனைப் பார்த்தான். அவன் அதே புன்சிரிப்போடு சொன்னான்-



"இந்தக் குழந்தையின் இடத்தில் நான் நிற்கிற மாதிரி தோன்றியது. கையில் பூவிற்குப் பதிலாக ஒரு ஃபைல். புல்லுக்குப் பதிலாக பஸ் ஸ்டாப்பிங். டிபெண்ட் ஆன் யுவர் லவ்விற்குப் பதிலாக டிபெண்ட் ஆன் யுவர் ஜாப்.."

அவன் சிரித்துக் கொண்டுதான் நின்றான். அவனால் சிரிக்க முடியவில்லை.

Job!

வேலை..!

'இத்தனை பேசியும் இவன் இன்னும் வேலை என்றே நினைத்துக் கொண்டிருக்கிறான்.. இது அறியாமையா - குழந்தைத்தனமா அல்லது சாமர்த்தியமா..?'

அவன் மெதுவாக நிமிர்ந்து அந்த முகத்தைப் பார்த்தான். முகம் சலனமற்றுக் கிடந்தது. அந்த மாதிரி சாமர்த்தியம் எதுவும் தெரியவில்லை. கண்களும் சிரிப்பும் பளிச்சிட, போஸ்டரில் இருந்த அதே குழந்தை முகமாக - குழந்தைச் சிரிப்பாக.. இவன் மனசில் கூடக் குழந்தையாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

உடனே புவனாவின் முகமும் வந்து போயிற்று. இதே மாதிரி குழந்தை முகமாக இருந்ததுதான் அதுவும். குழந்தைச் சிரிப்பாகச் சிரித்ததுதான். அப்புறம்தான் எல்லாம் மாறிப் போயிற்று. தனக்குக் குழந்தை இல்லை என்ற குறையில் - ஏக்கத்தில் பிறக்கவே பிறக்காது என்று தெரிந்து கொண்ட பின் - முகம், மனசு எல்லாம் விகாரமாயிற்று. கண் எப்போதும் பளபளத்தது. வாய் வார்த்தையாகக் கொட்டிற்று..

இரண்டு வருஷமாக அவள் அப்படிக் கொட்டிக் கொண்டு தான் இருக்கிறாள். நெருப்புத் துண்டுகளாக விசிறிக் கொண்டிருக்கிறாள். அந்த விசிறலில் மனசு எரிந்து கொண்டுதான் இருக்கிறது. அந்த எரிச்சல் தாங்காமல்தான் அவன் அவளுடைய அந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்

கொண்டான். செய்தித் தாளில் விளம்பரப் படுத்தினான். சலியைத் தேர்ந்தெடுத்து வரவழைத்தான்.

இப்போதும் அவனேதான் அவளிடம் சொல்லியாக வேண்டும். மெதுவாக நிதானமாகச் சொல்ல வேண்டும். அந்த அதிர்ச்சி மனசை அதிகமாகத் தாக்காமல், காயப் படுத்தாமல், ஜாக்கிரதையாய், இயல்பாய், சாதாரணமாய்...

'சாதாரண விஷயமா இது! எப்படிச் சொல்ல முடியும் இதை...? எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டாய் புவனா...? நீ செய்வாயா இதை...? தன் மனைவிக்குக் குழந்தை பிறக்க வழியில்லை என்பதைத் தெரிந்து கொண்ட ஒருவன் அந்த மனைவியின் நிம்மதிக்காக - சந்தோஷத்திற்காக - நிர்பந்தத் திற்காக - தனக்கு ஒரு குழந்தையைப் பெற்றுத் தரச் சொல்லி உன்னைக் கேட்டால் செய்வாயா...?

'செய்ய முடியுமா...? முடியாது என்பது உன் பதிலாக இருக்கிறபோது வேறொரு பெண்ணால் முடியும் என்று உன்னால் எப்படி நினைக்க முடிந்தது? வெறும் பணத்திற் காகவா...? அவள் இங்கே என்னுடன் தங்குகிறவரை மாதம் நீ கொடுக்கப் போகிற அந்த ஆயிரம் ரூபாய்களுக்காகவா...? வெறும் பணத்திற்காக மட்டுமா...? அதுவும் இந்த சலியா...?'

அவன் சட்டென்று தன் உதட்டைக் கடித்துக் கொண்டான். புவனா சொன்னாள் என்றால் தன்னால் எப்படிச் சம்மதிக்க முடிந்தது என்று யோசித்தான்.

எப்போதும் அழுகிற அவளுடைய அழுகைக்காகவும் கோபத்திற்காகவும் - போடுகிற சண்டைகளுக்கும் பயந்தா...

இல்லை. அதற்கும் மேற்பட்ட ஒரு காரணம் தன் அடி மனசிற்குள் புதைந்து போயிருக்க வேண்டும். சலிப்பு அவள் மீதே ஏற்பட்டிருக்கவேண்டும். அவளுடைய அந்தக் கோபத்தினால் சுருங்குகிற முகமும் - மனசு சுருகப் பேசுகிற பேச்சுகளும் வெறுத்துப் போய் அன்பாக - தோழமையாக - இதமாக இருக்கக் கூடிய ஒரு துணைக்காக ஏக்கப் பட்டிருக்க வேண்டும்.



தன் கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டு, தானும் சந்தோஷமாக இருந்து, தன்னையும் சந்தோஷப்படுத்தக் கூடிய ஒரு துணைக்காக...

சந்தோஷம்...!

- எத்தனை நாளாகி விட்டது, அப்படி ஒரு வார்த்தை இருப்பதை நினைத்து, எத்தனை வருஷங்களாகி விட்டன. புவனாவிற்கு அந்தப் பெரிய ஆபரேஷன் ஆனதிலிருந்து, குடல்களை யெல்லாம் பிரித்துவிட்டு டாக்டர் சொன்ன அந்தச் செய்திக்குப் பின் சந்தோஷம் என்ற உணர்ச்சி அவனிடம் மரத்துத்தான் போய் விட்டது.

அப்படி மரக்கச் செய்தவளே புவனாதான். அத்தனைக்கும் டாக்டர் அதிர்ச்சியாகக் கூடச் சொல்ல வில்லை. ரணத்தைப் பஞ்சால் ஒற்றி எடுக்கிற இதமாகத் தான் சொன்னாள்.

"ஐ யம் வெரி ஸாரி, மிஸஸ் க்ருபாகர். குழந்தை இல்லை என்பதை நீங்கள் ரொம்பவும் சாதாரண விஷயமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்காக மனசைப் போட்டு அலட்டிக்கக் கூடாது. நீங்களும் சங் கடப்பட்டு மற்றவர்களையும் சங்கடப்படுத்தக் கூடாது. இதை ஒரு சின்ன விஷயமாக நினைச்சு ஒதுக்கித் தள்ளிடணும். என்ன...?"

"இதுவா டாக்டர் சின்ன விஷயம்...?" என்று நிமிர்ந்த போது அவள் பார்வை அடிபட்டுக் கிடந்தது. "யு நோ, ஹௌ மச் ஐ லவ் பேபீஸ்..."

"என்ன பண்ண முடியும் சொல்லுங்கள்...?" என்று டாக்டர் மென்மையாகச் சிரித்தாள், அவளை இதமாக வருடிக் கொடுக்கிற மாதிரிப் பார்த்தாள். அதில் ஒரு வினாடி மௌனமாய்த் தலையைக் குனிந்து கொண்டிருந்த புவனா பின் சரேலென்று நிமிர்ந்தாள். குரல் கரகரக்கக் கேட்டாள்.

"வேறு எதுவுமே பண்ண முடியாதா டாக்டர்...?"

"குழந்தை [illegible] மேலே அவ்வளவு ஆசை என்றால் யு பெட்டர் அடாப்ட் எ சைல்ட்!"

"நோ டாக்டர்!" சட்டென்று மறுத்தாள் அவள். கண் கலங்கிக் கிடந்தது. குரல் மல்கிற்று. "வேறு யாருடைய குழந்தையோ, என்னதான் சுவீகாரம் எடுத்தாலும் எப்படி எங்க குழந்தையாகும் டாக்டர்...?"

டாக்டர் அவளைச் சிரிக்க வைக்கும் முயற்சியில் அந்தக் கனத்தைக் குறைத்து லேசாக்க மெதுவான விளையாட்டுச் சிரிப்போடு, 'ஓகே. தென் யு ஹேவ் யுவர் ஹஸ்பெண்ட்'ஸ் சைல்ட். உங்க கணவரோட குழந்தை உங்களுக்குக் குழந்தையாகலாமே..." என்று சொல்லி விட்டுப் போனாள்.

அதையே ஸ்திரமான நம்பிக்கையாய்ப் பிடித்துக் கொண்டு மெல்ல முணுமுணுக்க ஆரம்பித்தாள் புவனா.

ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்ததும் மெதுவாக அதைப் பற்றிப் பேசவும் தொடங்கினாள். யோசித்து யோசித்து ஒரு நாள் ராத்திரி சாதாரணமாகக் கேட்கிற குரலில் கேட்டாள்.

"டாக்டர் சொன்னதை நீங்களும் யோசிச்சீங்களா க்ருபா...!"

"என்ன சொன்னார் புவனா...?" அவன் தன் வழக்கமான புன்சிரிப்போடு மெதுவாக ஒருக்களித்து அவள் பக்கம் திரும்பினான். ஜன்னல் வழியாக நிலா வெளிச்சம் அவள் முகத்தின் ஒரு பகுதியில் மட்டும் பட்டுப் பளபளத்தது.

அந்த மாதிரி பௌர்ணமி இரவுகளில் அவன் ஏர்கண்டிஷனரைப் போடுவதில்லை. ஜன்னலையும், கதவையும் திறந்து வைத்து - மாமரக் காற்றையும், தரையில் ஆடுகிற கிளைகளின் நிழல்களையும் - நட்சத்திரங்களையும் பார்த்துக்கொண்டு - தோட்டத்துச் சில்வண்டின் இரைச்சலை-நிலாக் கால ராத்திரிகளில் கரைகிற காகங்களை - எப்போதாவது வருகிற கார்களின் ஹார்ன் சத்தத்தைக் கேட்டுக் கொண்டு படுத்திருப்பான்.



"என்ன அழகு பார்த்தாயா, புவனா...?" என்று மாய்ந்து போவான். "இதை விட்டு விட்டு ஜன்னலையும் கதவையும் மூடி - கர்ட்டனைத் தள்ளி ஏர்கண்டிஷனரை ஆன் பண்ணச் சொல்கிறாயே...!"

"ப்ச்சூ...இந்த நிலா வெளிச்சத்திலும், நட்சத்திரத்திலும் நாய் குரைப்பிலும், வண்டுச் சத்தத்திலேயும் தனியா என்ன அழகு வந்துடறது உங்களுக்கு...?"

அவள் அதைக் கேட்டுப் பேசாமல் இருப்பான். எது சொல்லியும் அந்த மனசைக் கஷ்டப்படுத்த இஷ்டப்படாமல்-

"இதுல தனியா எந்த அழகும் இல்லாமற் போகலாம். ஆனால், உன் முகத்துல இப்படி நிலா வெளிச்சம் அடிக்கிற போது எவ்வளவு அழகாக இருக்குத் தெரியுமா...?" என்பான்.

அதில் அவள் குளிர்ந்து போவது தெரியும். அவன் மெல்லத் தன் வலது கையால் அவள் தோளைச் சேர்த்துத் தன்னோடு அணைத்துக் கொள்வான்.

"ஆமாம், புவன், நான் விளையாட்டுக்குச் சொல்லலை, நீ இன்னிக்கு ரொம்ப அழகாகத்தான் இருக்கே..."

"இன்னிக்குன்னு அழுத்திச் சொன்னால் மீதி நாளெல்லாம் அழகா இல்லேன்னு அர்த்தமா...?"

"அப்படியா நான் சொன்னேன். என் புவனா என்னிக்குமே அழகுதான்."

அவள் சட்டென்று பெருமூச்சு விடுவாள். சரேலென்று அவன் கையை விலக்குவாள், மல்லாந்து படுத்துக் கொள்வாள். முகம் இறுகுவது தெரியும். கண்ணோரம் பளபளக்கும்.

"வெறும் அழகாக மட்டும் இருந்து என்ன பிரயோஜனம் ... அதே மாதிரி அழகாய் ஒரு குழந்தையைப் பெற்றெடுக்க முடியலையே...!"

"என்ன புவனா இது..?" என்று அவன் குரலும் மாறி போகும். "குழந்தை இல்லேன்னு நான் எப்போதாவது ஏதாவது சொல்லியிருக்கேனா, புவனா..?"

"சொன்னால்தானா..?"

"சரி. நினைச்சாவது இருக்கேனா..?"

"நினைக்காமல் இருக்க முடியுமா? இல்லை, நீங் நினைக்கிறது எனக்குத் தெரியலேன்னு நினை சுண்டிருக்கீங்களா..?"

அவன் சட்டென்று எழுந்து கட்டிலில் உட்கார்ந்தான்

"என்ன புவனா இது..?" என்று அவளைப் பார்த்தான்

"என்ன புவனா...என்ன புவனான்னு கேட்டால். இருக்கிறதைத் தானே சொல்றேன்."

"இருக்கிறதையா..?"

"ஆமாம். மனசுல நினைக்கிறதை."

"நினைக்கிறதையா..? என்ன நினைக்கிறேன் நான்..?

"நமக்கு ஒரு குழந்தை இருந்தால் எப்படி இருக்கும்னு நினைக்கிறதை, ஆசைப்படறதை. பீதிக் குழந்தைகளை பார்த்து ஏக்கப்படறதை..."

அவன் சட்டென்று வெள்ளையாய்ச் சிரித்தான்.

"மை குட்நெஸ். என்ன கற்பனை உனக்கு..? இந்த அளவு கற்பனையை வச்சுண்டா கதை எழுதாமல் இருக்கே..?"

"கற்பனையில்லை, கதையுமில்லை. நான் நிஜமாகத் தான் சொல்றேன். நிஜத்தைத்தான் பேசறேன்."

"டோண்ட் பி ஸில்லி புவன். பி பிராக்டிகல்-" அவன் சிரித்தபடி கட்டிலின் பக்கத்து மேஜையிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். ஆழமாக



புகையாக இழுத்துக் கொண்டபோது அவள் முகத்தில் சிரிப்பில்லாததைக் கவனித்தான்.

"என்ன புவன் யோசனை..?" என்று கேட்டான்.

"ஒண்ணுமில்லை. டாக்டர் சொன்னதை யோசித் தேன்."

"என்ன சொன்னார் டாக்டர்..?"

"தென், யுஹேவ் யுவர் ஹஸ்பெண்ட்'ஸ் சைல்ட்..."

அவன் புகைப்பதை நிறுத்தி விட்டு அவளைக் கூர்மையாகப் பார்த்தான். நேராகக் கண்களுக்குள் பார்த் தான்.

"ஆர் யு க்ரேஸி...?" என்றான் புன்னகையை வர வழைத்துக் கொண்டு.

"எஸ்..." என்று அவளும் எழுந்து உட்கார்ந்தாள். கழுத்தோரம் ஒதுங்கின சங்கிலியைச் சரி பண்ணிக் கொண்டாள்.

"ஐயம் க்ரேஸி ஆஃப்டர் எ சைல்ட்..." என்றாள். "குழந்தைகள் என்றால் எனக்கு எவ்வளவு பிரியம்னு உங்களுக்கே தெரியும். நான் ஒரு கிண்டர்கார்டன் ஸ்கூல் வைக்கணும்னு எவ்வளவு ஆசைப்பட்டேன் என்பதும் தெரியும். அப்பாதான் கல்யாணத்தைச் சாக்காகச் சொல்லி அதைத் தடுத்துவிட்டார். குழந்தைகள் மீது அவ்வளவு ஆசை வச்சுண்டிருந்த எனக்குக் குழந்தையே கிடையா துன்னு சொல்றது எவ்வளவு...எவ்வளவு பெரிய..."

அதற்கு மேல் சொல்ல முடியாமல் அவள் அழுகையில் உடைந்ததும் அவன் சிகரெட்டை அணைத்து ஆஷ்ட் ரேயில் போட்டு விட்டு அவளை இன்னும் நெருங்கி உட்கார்ந்தான். மெதுவாகத் தோளில் கை வைத்து-

"தட்ஸ் ஆல் ரைட் புவன். டேக் இட் வித் ஈஸ். இந்தக் கஷ்டத்தை நாம இரண்டு பேருமாகப் பகிர்ந்து

கொள்ளலாம். நமக்கு நாமே குழந்தையாக நினைச்சுக்கலாம்!" என்றதும் அவள் சரேலென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"நோ. ஐ வாண்ட்டு ஹேவ் எ சைல்ட். எனக்குத்தான் அதற்கு வழியில்லை. என் குழந்தைன்னு என்னால் கொஞ்ச முடியாது. ஆனால், உங்க குழந்தையைக் கொஞ்சலாமே. அதை என் குழந்தையாக ஏத்துக்கலாமே..."

"வாட் நான்ஸென்ஸ்!" என்று கட்டிலை விட்டு எழுந்தான் அவன்.

ஜன்னல் பக்கத்தில் போய் நின்று வானத்தைப் பார்க்க ஆரம்பித்தான். நிறைய சரிகைத் துணுக்குகளாக இறைந்து கிடந்தன. ஜிகினாப் பொட்டுகளாக நடுவில் சிலது மின்னின.

அவன் பார்த்துக் கொண்டிருந்தபோதே அவளும் பக்கத்தில் வந்து நின்றாள். மெதுவாக அவன் தோளில் கை வைத்தாள்.

"க்ருபா..." என்று கூப்பிட்டாள். அவன் திரும்பிப் பார்த்தான்.

"ப்ளீஸ் க்ருபா: எனக்குக் குழந்தை வேணும், க்ருபா உங்களுடைய குழந்தை எனக்கும் குழந்தைதானே, க்ருபா..."

"டாக் வித் ஸம் ஸென்ஸ்!" என்று கோபப்பட்டான் அவன். "எவ்வளவு சுலபமாகக் கேட்கிறாய் நீ...? புடவை, நகை கேட்கிறாற் போல், கடையில் வாங்குகிற பொருள் மாதிரி... இன்னிக்கு நீ ரொம்ப அப்ஸெட் ஆன மாதிரி தெரிகிறது. வா, வந்து படுத்துத் தூங்கு. காலையில் எல்லாம் சரியாகப் போய்விடும்."

"நோ!" என்றாள் அவள் தீர்மானமான குரலில், "ஐ வாண்ட் யுவர் சைல்ட்."

அந்தக் குரலில் தெரிந்த அழுத்தமும் பிடிவாதமும் அவனை நிஜமாகவே பயமுறுத்தியது.

# 5



அப்படிச் சின்னப் பிடிவாதமாகத்தான் ஆரம்பித்தாள் புவனா. பின் அதுவே கோபமாக-பயமுறுத்தலாக மாறிக் கடைசியில் அழுகையில் போய் முடிந்தது. அப்போதெல்லாம் க்ருபாகர் அன்பாகத்தான் நடந்து கொண்டான். கோபப்படாமல் நிதானமாக இருந்தான். மெதுவாகச் சமாதானப் படுத்தினான். ஆனாலும், அவள் தான் சொன்னதில் பிடிவாதமாக இருக்கவே, மாடி அறைக்கு வருவதைக் குறைத்துக் கொண்டான். அவளோடு பேசுவதைத் தவிர்த்தான். சில சமயம் வீட்டிற்கு வரப் பிடிக்காமல் தொழிற்சாலையிலேயே தங்கவும் ஆரம்பித்தான்.

அப்படித் தங்கி விட்டு மறுநாள் சாயந்திரம் திரும்பி வருகிறபோது அவளுடைய கோபம் இன்னும் அதிகமாகும். முகம் சிவந்து போகும். தன் குரலை உயர்த்தி ஏதாவது சண்டைக்கு ஆயத்தம் பண்ணுவாள். அவன் ஒன்றும் பேசாமல் மீண்டும் வெளியில் போகக் கிளம்பினால் சட்டென்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்குவாள். விரல் நகங்கள் தோளில் பதிந்து சின்னச்சின்னச் சிவப்புப் பூக்களாக எட்டிப் பார்க்கும். அந்த எரிச்சலில் அவன் தன் கீழ் உதட்டைக் கடித்துக் கொள்வான். 'இந்த நிலைமையில் இவளிடம் கோபப் படக்கூடாது' என்று மௌனமாக இருப்பான்.

ஆனால், அந்த மௌனமும் அவளுக்குத் தவறாகத் தான் படும். அவள் சரேலென்று விலகி மாடிக்குப் போவாள். அந்த இருட்டிலும் சிலுசிலுப்பிலும் தரையில் படுத்துக் கொண்டு அழுவாள். அவன் பின்னாலேயே போய் எழுப்பினால் விருட்டென்று கையை உதறுவாள்.

"எனக்குக் குழந்தை இல்லேன்றது உங்களுக்கு இவ்வளவு சந்தோஷமான விஷயமாக இருக்கு. இல்லே?"

"டோண்ட் பி ஸில்லி. கீழே இறங்கி வா, போகலாம்."

"வர மாட்டேன். எதற்காக வரணும்...?"

"என்ன புவனா இது...?"

"எனக்குக் குழந்தை இல்லேன்னுதானே உங்களுக்கு இவ்வளவு அலட்சியம். என்னைப் பார்க்கப் பிடிக்கலை ஏன், வீட்டிற்கு வரவே பிடிக்கலை: இல்லை...?"

அவன் அவளை நினைத்துப் பரிதாபப் பட்டான். சட்டென்று தரையில் உட்கார்ந்து அவள் தலையைத் தன் மடி மீது வைத்துக் கொண்டான். மெதுவாக வருடிக் கொடுத்தான். மெல்லக் கண்களைத் துடைத்து,

"வா புவன். கீழே போகலாம். பசிக்கிறது. புவனா.." என்று கூப்பிட்டான்.

"நான் கேட்டதற்குச் சரின்னு சொல்லுங்க. வரேன்..."

"அதற்கும் இப்போது நீ கீழே வருவதற்கும் என்ன சம்பந்தம்..."

"நிறையச் சம்பந்தம் இருக்கு."

"சரி. இருக்கிறதாகவே வச்சுக்கோ. ஆனால், நீ நடக்க முடியாததை யெல்லாம் கேட்டால் எப்படி புவனா...?"

"நடக்க முடியாததா...எது நடக்க முடியாதது...?"

"என்னால் இன்னொரு கல்யாணம் பண்ணிக்க முடியாது. புவனா. என் மனசுல நீதான் இருக்கே... நீ மட்டும்தான் இருக்கே..."

அவள் சரேலென்று எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டு சிரித்தாள்.

"மை குட்நெஸ். உங்களை யாரு இப்போ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொன்னது...?"



"அப்படின்னா...?" என்று அவன் புரியாமல் அவள் முகத்தைப் பார்த்தான். நெற்றி சின்னச் சுருங்கலாய்ச் சுருங்கிக் கிடந்தது.

"நீங்களாகச் சம்மதப்பட்டாலும் உங்களை யாருக்கும் நான் விட்டுக் கொடுக்க மாட்டேன். மனசால நினைக்கக் கூட விட மாட்டேன். யு ஆர் மைன் அண்ட் ஐ யம் யுவர்ஸ்..."

"என்ன புவனா சொல்றே நீ...?" என்று சலித்துப் போனான் அவன்.

"கல்யாணம் பண்ணிக்க வேணாம். வேறு எந்தக் கமிட்மெண்ட்டும் வேண்டாம். கொஞ்ச நாளைக்கு முன்னால் நான் இந்த மாதிரி ஒரு விஷயத்தைப் பேப்பரில் படிச்சேன். நிஜமாக நடந்தது. ஒரு விளம்பரம் கொடுக்கலாம். போட்டோவோடு விவரங்கள் எல்லாவற்றையும் எழுதச் சொல்லலாம்.

"பின் நாம் தேர்ந்தெடுக்கிற பெண்ணை வரச் சொல்லலாம். அவள் ஏழைப் பெண்ணாக இருக்கணும் நம்மோடு இருக்கச் சம்மதிக்கணும். கூடவே வச்சுண்டிருந்து, குழந்தை பிறந்ததும்-அவள் தேவை குழந்தைக்கு அவசியமில்லைன்னு ஆனதும்-கொஞ்சம் பணம் கொடுத்து அனுப்பிடலாம். அது வரை மாதச் சம்பளமாக ஆயிரமோ-ஆயிரத்தைநூறோ கொடுக்கலாம்..."

"வாட் நான்ஸென்ஸ்!" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டான் அவன். முகமும், காதோரங்களும் சிவந்து போயிற்று. கோபத்தில் வார்த்தைகளாக வரத் தவித்ததை அடக்கிக் கொண்டான்.

மெதுவாகச் சின்னப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, "கண்ட கண்ட கதையையும், பேப்பர் ந்யூஸையும் படிச்சு, மனசை இப்படி வக்கிரமாக ஆக்கிண்டிருக்கே. உலகத்தில் எங்கோ ஏதோ நடந்தது என்றால் உனக்கு ஏன் இப்படியெல்லாம் தோணனும்...? இதை யெல்லாம் விட்டு விட்டு மனசைத் துடைச்சு சுத்தப்படுத்திண்டு வா, புவனா. முதலில் கீழே இறங்கிப் போகலாம்..."

அந்த உதட்டுச் சிரிப்பில் அவள் ஏமாறவில்லை. குரலின் கரகரப்பில் தெரிந்த வெறுப்பையும் கண்டிப்பையும் புரிந்து கொண்டாள். அதற்கு நிச்சயமாய் அவன் சம்மதிக்க மாட்டான் என்று தோன்றிற்று. சம்மதிக்க வைத்து விட வேண்டும் என்ற பிடிவாதமும் ஏற்பட்டது.

அந்தப் பிடிவாதத்தில் மீண்டும் அழுகையும் புலம்பலுமாக வார்த்தைகளில் நெருப்பைக் கொட்ட ஆரம்பித்ததும், அவன் அங்கு இருக்கப் பிடிக்காதவனாகக் கீழே இறங்கி வந்தான். சாப்பிடாமலே படுத்துக் கொண்டான்.

'என்ன ஆயிற்று இவளுக்கு. ஏன் இப்படி நடந்து கொள்கிறாள்..? எங்கோ நிஜமாக நடந்து, பத்திரிகையில் வந்த செய்தி. இதை மனசில் வைத்துக் கொண்டு, தானும் கஷ்டப்பட்டு, என்னையும் கஷ்டப்படுத்தி... என்ன இதெல்லாம்..!'

யோசிக்க யோசிக்க அவனுக்கு அவளுடைய அடிமனம் மெல்லப் பிடிபட்டது. அதில் ஏற்பட்டிருக்கிற குறையும், தாழ்வு மனப்பான்மையும் புரிந்தது. அவளை ஒரு நல்ல மனோதத்துவ டாக்டரிடம் காட்டினால் சரியாகப் போய் விடுவாள் என்று நினைத்தான்.

மறு நாள் அழைத்துக் கொண்டு போனபோது அந்த டாக்டர் அவளிடம் நிதானமாகக் கேள்விகள் கேட்டார். மாடர்ன் ஆர்ட் மாதிரி இருந்த கையகலப் படங்களைக் காட்டி விளக்கம் கேட்டார். பின் அவனிடமும் தனியாகக் கேள்விகள் கேட்டார். நரம்பு சம்பந்தப்பட்ட டாக்டர் ஒருவருக்குப் போன் பண்ணி, அவளை அங்கு போகச் சொன்னார்.

அந்த டாக்டர் அவளைப் பரிசோதித்து, மூளையின் இயக்கங்களை எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு வரச் சொன்னார். அந்த ரிப்போர்ட் வந்ததும் - சைக்கியாட்ரிஸ்ட்டின் ரிப்போர்ட்டையும் படித்து விட்டு அவனை மட்டும் தனியாக உள்ளே கூப்பிட்டுப் பேசினார்.



"இது ஒன்றுமில்லை, மிஸ்டர் க்ருபாகர். வெறும் தாழ்வு மனப்பான்மைதான். தன்னால் ஒரு குழந்தையைப் பெற முடியவில்லை என்கிற குற்ற உணர்ச்சி. நீங்கள் குழந்தைக்காக ஏங்குவதாக நினைக்கிற போலியான நினைப்பு. கூடவே கொஞ்சம் வலிப்பு வியாதியும் இருக்கிறது.

"மிகவும் லேசான எபிலெப்டிக் அட்டாக்தான். அதற்கு ட்ரிப்டனாலும், ஸர்மாண்டிலும் கொடுத்திருக்கிறேன். தூங்குவதற்குக் கார்டினால் மாத்திரைகளும் தந்திருக்கிறேன். ஆனாலும்.. இந்த மாத்திரைகளை விட ஒரு குழந்தை உங்கள் பிரச்சினைகளைச் சுலபமாகத் தீர்த்து வைக்கக் கூடும் என்று நினைக்கிறேன். எனவே, லெட் அஸ் ஸீ..." என்று புன்சிரிப்பாகச் சொன்னதும் அவன் அதிர்ந்துதான் போனான்.

'அத்தனை ஆழமான அடியாகவா இது அவள் மனசில் விழுந்து போயிருக்கிறது..? நம்மால் இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிகிறபோது அவளால் மட்டும் ஏன் முடியவில்லை? ஒரு வேளை நாம்தான் இதற்குக் காரணம் என்கிற பட்சத்தில் இதே மாதிரிதான் நடந்து கொண்டிருப்போமோ..? நாம் காரணமில்லை என்பதால்தான் இது மனசை நெருடவில்லையோ...?'

அந்த நிஜம் மனசைத் தாக்கினபோது, அவன் அவளுக்காகப் பரிதாபப்பட்டான். நெருப்பை விழுங்கின உணர்ச்சியில் அவ்வார்த்தையைப் புரிந்து கொண்டான். அதை யாரிடமும் சொல்ல முடியாமல் - சொல்கிற மாதிரி ஆதங்கமான மனிதர்கள் யாருமில்லாமல்- விசிறி விசிறி உள்ளுக்குள்ளேயே எரிய வைத்துக் கொண்டு, அந்தக் கதகதப்பில் அவளும் கருகித் தன்னையும் கருக அடித்து.. அந்த மாதிரி எத்தனை நாட்கள்! எவ்வளவு மாதங்கள்!

கடைசியில் அந்த மாத்திரைகளும் சக்தியற்றுப் போய்.. மறுபடியும் அதே டாக்டர்களைப் பார்த்து.. வேறு வழி இல்லாமல் விளம்பரம் கொடுத்து.. சஸியை வரவழைத்து..

'சஸி...சஸி... இதையெல்லாம் புரிந்து கொள்வாயா நீ...?' அவன் மெதுவாக நிமிர்ந்து அவளைப் பார்த்தான். பின்-

"இந்தக் குழந்தைப் படங்களையெல்லாம் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது...?" என்று கேட்டான்.

"குழந்தைகள் என்றால் உங்களுக்கு ரொம்ப ஆசை என்று நினைக்கிறேன்..." சஸி புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"யு ஆர் ரைட். பட், எனக்கு மட்டுமில்லை, சஸி. புவனாவிற்குக் கூட ஆசைதான். ரொம்ப ஆசை. வெறும் குழந்தைப் பைத்தியம் அவள். நிறையக் குழந்தைகளாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகக் கிண்டர் கார்டன் ஸ்கூல் ஒன்று ஆரம்பிக்க ஆசைப்பட்டவள்..."

"அப்படியா...?"

என்றபோது சஸியின் கண்களில் ஒரு சின்ன கிண்டர் கார்டன் ஸ்கூல் விரிந்தது.

நீலமும், வெள்ளையுமான உடைகள். மண்ணில் பதிகிற கிருஷ்ணன் காலடிகள், கத்தல்கள், சிரிப்புகள், சந்தோஷங்கள், மரத்தடி விளையாட்டுகள், ரயில் விளையாட்டு, யானை விளையாட்டு, கண்ணாமூச்சி விளையாட்டு... எத்தனை குதிப்பு! எவ்வளவு சந்தோஷம்! எல்லாம் ஒரு வாரம்தான். பின் அந்த இனிமை முடிந்து போயிற்று. லீவில் போயிருந்த அந்த டீச்சர் வந்ததும் வேலையை விட வேண்டியதாயிற்று. ஒரு வாரமானாலும் அவளால் மறக்க முடியாத அனுபவம்.

"ராஜு என்னைத் திட்டறான் மிஸ்..."

"ஷீலா என்னோட குதிரை மேல ஏறி உட்கார்ந்து விட மாட்டேன்றா மிஸ்..."

"அவசரமா பாத்ரூம் போகணும் மிஸ்..."

"ரயில் விளையாட்டு வேணாம். திருடன் விளையாட்டு விளையாடலாம் மிஸ்..."



"மிஸ்...ஒரு கதை சொல்லுங்க மிஸ்..."

அவள் சட்டென்று தன்னைக் கலைத்துக் கொண்டு நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். உதட்டில் அதே புன்சிரிப்பு ...

"உங்களுக்கு எத்தனை குழந்தைகள்...? என்று கேட்டாள்.

"இல்லை. இதுவரை குழந்தை இல்லை..."

"இதுவரை இல்லாவிட்டால் என்ன...? இனிமேல் இருக்கும். நிச்சயமாக இருக்கும்..."

அவன் ஒரு சோகமான சிரிப்போடு பதில் சொன்னான்.

"நோ மிஸ் சஸி. வி ஆர் நாட் ஃபார்ச்சுனேட் இனஃப் ஃபார் தட் ஷி கான்ட் ஹேவ் எ சைல்ட்..."

அவன் மெதுவாக ஆரம்பித்து ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டு போனான். அவளுடைய அழுகை - கோபம் - வெறுப்பு - சாப்பிடாமல் படுப்பது-சண்டை போடுவது - தன்னைப் பார்க்கும்போதே கத்த ஆரம்பிப்பது என்று எல்லாவற்றையும் சொன்னான். எதையும் மறைக்கவில்லை.

"இப்போதும், உங்கள் எதிரிலும் அவள் கத்த ஆரம்பிக்கலாம்; சண்டை போடலாம். டாக்டர் ஸேஸ், இட்ஸ் எ டைப் ஆஃப் ஹிஸ்டீரியா. அந்தக் கத்தல், கோபம் எல்லாம் எனக்குச் சலித்துப் போய்விட்டது சஸி. ஐ யம் ரியலி வெரி டயர்ட் ஆஃப் தீஸ் திங்ஸ்..."

அந்தக் குரலில் தெரிந்த வேதனையைப் புரிந்து கொண்டு சஸி பேசாமல் நின்றாள். என்ன பேசுவது என்று புரியாமற் போயிற்று. அத்தனைக் குழந்தைப் படங்களின் அர்த்தமும் புரிகிற மாதிரியும்-பின் எதற்குமே அர்த்தமில்லாதது போலவும் தோன்றிற்று. வெறும் கஷ்டங்களும்-மனசை உருக்குகிற சோகமும்தான் வாழ்க்கையின் பின்னணியாகப் பட்டது.

'அவை இல்லாத வாழ்க்கையே இருக்காதோ...? எத்தனை விதமான கஷ்டங்கள்...எவ்வளவு சோகங்கள்... இத்தனைக்கும் இடையில் சிரித்துக் கொண்டு நிற்க யாரால் முடியும்? எத்தனை பேருக்கு வரும்? இவனுக்கு மட்டும் எவ்வளவு இயல்பாக வருகிறது அந்தச் சிரிப்பு. அந்தச் சிரிப்பிற்கு அடியில் இத்தனை பெரிய சோகம் இருப்பதாகச் சொன்னால் யாரால் நம்ப முடியும்...?'

அவள் அந்த முகத்தை நிமிர்ந்து பார்த்து, மிகவும் தழைந்து போன குரலில், "ஐ யம் ஸாரி..." என்றாள்.

"தட்ஸ் ஆல் ரைட்..." என்று அதே சிரிக்கிற முயற்சியில், "வருகிறீர்களா, அவளைப் பார்த்துவிட்டு வரலாம்..." என்று அழைத்துக் கொண்டு போனான்.

உள்ளே போனதும், அந்த அறையையும் கட்டிலில் உட்கார்ந்திருந்த புவனாவையும் பார்த்துச் சற்று அசந்து போனாள் சஸி.

'இவளா... இவளுக்கா... இத்தனை அழகாகப் பளிச்சென்று இருக்கிற இவளுக்கா இந்தக் குறை...?'

அவளைப் பார்த்ததும் புவனாவும் மலர்ச்சியாகச் சிரித்தாள். மிகவும் சுலபமாக ஒருமையில், "வாம்மா..." என்றாள். "இப்படி உட்கார்ந்துக்கோ..." என்று தன் கட்டிலைக் காட்டினாள்.

"பரவாயில்லை..." என்று சஸி மறுத்தும், விடவில்லை. தன் பக்கத்திலேயே உட்கார வைத்துக் கொண்டாள். பின் இன்னும் நன்றாக, நிதானமாக அவளைப் பார்த்தாள். ஒரு திருப்தியான சிரிப்புடன் அவளைப் பற்றின விவரங்களைக் கேட்டுக் கொண்டாள்.

சஸி தன்னைப் பற்றின நிஜங்களைச் சொன்னாள். தனக்கு அந்த வேலை எவ்வளவு முக்கியம் என்று தெரியப் படுத்தினாள். மீண்டும் அவள் வேலை என்று சொன்னதும், க்ருபாகர் நிமிர்ந்து வேதனையாகப் பார்த்தான்.

'இன்னுமா புரிந்து கொள்ளவில்லை இவள்...'



சஸி அவளைப் பார்க்காமல் பேசிக் கொண்டே போனாள்.

"நான் நர்ஸிங் படிக்கவில்லை. ஆனாலும் உங்களைச் சரியாய்க் கவனித்துக் கொள்ள என்னால் முடியும். ஒரு நல்ல நர்ஸ் செய்வதை விட அதிகமாகச் செய்ய முடியும். என்னை நம்பி நீங்கள் இந்த வேலையை..."

"என்ன சொல்கிறாய் நீ...?" என்று இடையில் நறுக்கிட்டு அவளைப் பார்த்தாள். பார்வை தீர்க்கமாக இருந்தது. அதைக் கவனித்த சஸி சற்றுப் பயந்து போனவளாக-

"உங்களைப் பார்த்துக் கொள்ள உதவியாக இருக்கத்தானே நான்...என்னை...பேப்பரில் அட்வர்டைஸ் பண்ணி..."

"இல்லை, அதற்கில்லை!" என்று பார்வை சரேலென்று அவனிடம் திரும்பியது.

"இன்னமும் இவளிடம் சொல்லவில்லையா நீங்கள்...?"

அவன் இல்லை என்று தலையாட்டினான்.

"சரி. நானே சொல்கிறேன். நீங்கள் கீழே போய்ச் சமையற் காரரை இரண்டு கப் காப்பி கலக்கச் சொல்லி ஆயாவிடம் கொடுத்தனுப்பச் சொல்லுங்கள். பாவம், சஸி. வெய்யிலில் வந்திருக்கிறாள்..."

"பரவாயில்லை. எனக்குக் காப்பி வேணாம். சற்று முன்புதான் கீழே ஜூஸ் சாப்பிட்டேன்."

"கீழே ஜூஸ் சாப்பிட்டாயா...? அப்படியானால் நீ வந்து ரொம்ப நேரம் ஆயிற்றா...?"

"இல்லை...வந்து...ஒரு அரை மணி நேரம் இருக்கும்..."

"அரை மணியா...? இவர் இப்போதுதான் வந்ததாகச் சொன்னாரே... அது பொய்யா...?"

அவள் மறுபடியும் க்ருபாவைத் தீட்சண்யமாகப் பார்க்க, அவன் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

"பொய்யா சொன்னீங்க..?"

"....."

"எதற்காகப் பொய் சொல்லணும்?"

"...."

"எல்லாத்துக்கும் பேசாமல் நின்றால் என்ன அர்த்த என்னை அவமதிச்சதாக அர்த்தமா...?"

"புவனா!" என்று உதட்டைக் கடித்துக் கொண்டா அவன்.

'அவள் ஆரம்பிக்கப் போகிறாள். சஸியின் மு பெரிதாகக் கத்தி, சண்டை போட்டு அதற்கு முன் இ இடத்தை விட்டுப் போய்விடவேண்டும்...'

"சரி, நான் கீழே போய்க் காப்பி அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்துக் கொண் நிற்காமல் வெளியில் வந்தான்.

'இத்தனை நேரம் தான் பொறுமையாக - நிதா மாகப் பேசிப் புரிய வைக்க முயன்றதை யெல்லாம் அவ நிமிஷத்தில் போட்டு உடைத்து விடப் போகிறாளே' என் பயந்தான். சஸி தன்னைக் தவறாக நினைத்து வி போகிறாளே என்றும் கவலைப்பட்டான். 'தன்னைப் புரி கொள்ளாமல், தன் மீது கோபப்பட்டு வெறுக்க ஆர பித்தால்...?' அந்த நினைவே அவனுக்குக் கஷ்டமா இருந்தது.

'சஸி, ப்ளீஸ், என்னைப் புரிந்து கொள்வாயா சஸி

காப்பியை அனுப்பி விட்டு ஹாலில் காத்து கொண்டிருந்தான். உட்கார முடியாமல்-பத்திரிகையை புரட்டிப் படிக்க முடியாமல்-சிகரெட்டைப் பற்ற வைத்து புகைக்கப் பிடிக்காமல்-மனசுக்குள் அலையாய் அலைந் சிகரெட்டை அணைத்து ஆஷ் ட்ரேயில் போட்டு விட் நிமிர்ந்தபோது சஸி இறங்கி வருவது தெரிந்தது.

36 30403



அவள் ஒரு எதிர்பார்ப்புடன் அவன் முகத்தைப் பார்த்தாள். ஆனால் அந்த முகத்திலிருந்து எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. எப்போதும்போல் சாதாரண மாகத்தான் இருந்தான். நிதானமாக இறங்கி வந்து கொண்டிருந்தான்.

அவன் கீழே வருவதற்குச் சற்று முன்பு காப்பி கொண்டு போன அந்த ஆயா புவனாவின் அறையிலிருந்து வேகமாக வந்தாள். நேராக அவனிடம் வந்து, புவனா இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டு அழு வதையும், தான் எவ்வளவு சொன்னாலும் கேட்காததையும் சொன்னாள்.

அதைக் கேட்ட உடனே அவன் சஸியைப் பார்த்தான். அவள் அதே மாதிரி தலையைக் குனிந்து கொண்டுதான் இருந்தாள். பார்வை உயரவே இல்லை. அவன் சொல்ல முடியாத வேதனையுடன் படிகளில் ஏற ஆரம்பித்தபோது மிகவும் கனமாக உணர்ந்தான். அதிகம் சலித்துப் போன வனாகத் தெரிந்தான்...



# 6

**ப**தினைந்து நிமிடங்களில் மறுபடியும் கீழே இறங்கி வந்தான், க்ருபா. முதல் படி இறங்கும்போதே ஹாலில் உட்கார்ந்திருந்த சஸியைப் பார்த்தான்.

'இவள் ஏன் இன்னும் போகவில்லை...?' என்று நினைத்துக் கொண்டான். தன்னிடம் சொல்லி விட்டுப் போகக் காத்திருப்பதாகத் தீர்மானித்தான். சட்டென்று அந்தத் தீர்மானம் போய், 'யு ஸ்கௌண்ட்ரல், இதற்கா விளம்பரம் கொடுத்தாய்?' என்று கேட்டு, 'ஹௌ டேர் யு

ஆஸ்க் மி லைக் தட்...?' என்று கோபமாகப் பார்த்து, அவ அனுப்பிய அந்தக் கடிதத்தைக் கிழித்து முகத்தில் எறிந்து

ஆனால் சஸி அப்படி எதுவும் செய்யவில்லை அவனைப் பார்த்ததும் சட்டென்று எழுந்து நின்றா இறங்கிக் கீழே வருகிறவரை பேசாமல் இருந்து பின், "வொ ீஸ் ஷி..?" என்று கேட்டான்.

அவன் பதில் சொல்லாமல் அவன் முகத்தை பார்த்தான். அந்தக் கண்களையே பார்த்துக் கொண் அரை வினாடி மௌனமாக நின்றான். அந்தப் பார்வையை தாங்கிக் கொள்ள முடியாமல் அவள் மெதுவாக தலையைக் குனிந்து கொண்டதும் அவன் தன் கை குட்டையை எடுத்து முகத்தை ஒரு தரம் அழுத்தி துடைத்துக் கொண்டான்.

"ஆயா, ஜில்லுனு ஒரு டம்ளர் ஐஸ் வாட்டர் கொண் வா..." என்றான்.

வந்ததும் குடித்து விட்டு, "உங்களுக்கு வேண்டுமா... என்று அவளைப் பார்த்தான்.

அவள் தலையசைத்ததும் அவளுக்கும் இன்னொ டம்ளர் தண்ணீர் வந்தது. அதைக் குடித்து முடிக்கிற வ பேசாமல் இருந்து விட்டுப் பின் மெதுவாகக் கேட்டா

"டிட் ஷி ஹர்ட் யு சஸி..?"

இல்லை என்று தலையாட்டல்தான் பதிலா கிடைத்தது.

"நான் மனசில் பட்ட காயத்தைக் கேட்கவில்லை, ச புவனா உன் உடம்பில் ஏதாவது அடிகளாக... அல்லது ந கீறலாக..."

அதற்கும் வெறும் தலையாட்டல்தான் பதில்.

'ஹெல் வித் யு. வாயைத் திறந்து பேசேன். கோ மானால் நாலு கத்தல் கத்தேன் இல்லாவிட்டால் புவ சற்று முன் கீறின மாதிரி நகத்தால் கீறிக் காயப்படுத்தே



அந்தக் கடிதத்தைக் கிழித்து என் முகத்தில் விசிறேன். துவும் செய்யாமல் ஏன் இப்படி நிற்கிறாய்? மௌனமாக ன்று, அமைதியான முகத்தோடு என்னை இன்னும் எதற்கு ிம்ஸை பண்ணுகிறாய்..? ஐ யம் டயர்ட், சஸி.. ஆல்ரெடி வரி டயர்ட்...'

அவன் ஒரு சின்னப் பெருமூச்சோடு உதட்டைக் டித்துக் கொண்டான். பின் சரேலென்று எழுந்தான்

"நீங்கள் எங்கே போக வேண்டும், சொல்லுங்கள். ராப் பண்ணிவிட்டு நான் தொழிற்சாலைக்குப் போகிறேன்."

அவள் கொஞ்சம் தயங்கின மாதிரி நின்றதும், அவன் அந்தத் தயக்கத்தில் மீண்டும் அடிப்பட்டுப் போனவனாக வேகத்தோடு பேசினான்:

"ஓகே. என்னுடன் வருவது கஷ்டமாக இருந்தால் ஒரு டாக்ஸி கொண்டு வரச் சொல்லட்டுமா?"

"டாக்ஸியா..? எதற்கு... வேண்டாம்!" என்று அவசரமாக மறுத்தபோது, அவளுக்குத் தன் பர்ஸில் இருந்த கடைசி எண்பது பைசாக்கள் ஞாபகத்திற்கு வந்தன.

"அப்படியானால், எப்படிப் போகப் போகிறீர்கள்?.."

"நீங்கள் போகிறபோது பக்கத்து பஸ் ஸ்டாப் பிலாவது என்னை விட்டு விடுங்களேன்..."

"சரி, வாருங்கள்" என்று ப்ரீஃப் கேஸை எடுத்துக் கொண்டான் அவன்.

வாசல் வராந்தாவிற்கு வந்தபோது அன்று காலையில் அவனை அங்கு சந்தித்தது சட்டென்று நினைவுக்கு வந்தது. எப்படி இருந்தான் அவன்! பனிச்சென்று தெளிவாக, முழுந்தைச் சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே, எப்படி வந்து நின்றான்! இப்போது அந்தச் சிரிப்பெல்லாம் போய் முகம் வாடிக் கலங்கின மாதிரி... இந்தக் கலங்கலுக்கு யார் காரணம்..? தெளிவாய்க் கிடந்த குளத்தில் கல்லெறிந்த

மாதிரி என்ன இது..? அந்த அலை எல்லாம் அடங்கி மறுபடியும் தெளிய வைக்க முடியுமானால்..? மீண்டும் இவள் முகத்தைப் பிரகாசமாக்கி குழந்தைச் சிரிப்பாகச் சிரிக்க வைக்க முடிந்தால்..?'

அவன் யோசித்துக் கொண்டே காரை வாசல் வராந்தாவின் முன் கொண்டு வந்து நிறுத்தினான். அவளுக்காகப் பின் பக்கக் கதவைத் திறந்து விட்டான். அவள் ஏறிக் கொண்டதும் காரைக் கிளப்பினான். கேட்டைத் தாண்டினதும் -

"இப்போதே உங்களுக்கு வீட்டிற்குப் போகணுமா..?" என்று ரிவர்ஸ் மிர்ரரில் அவளைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

அந்தக் கேள்வியில் அர்த்தம் புரியாமல், "அப்படி ஒன்றுமில்லை. ஏன் கேட்கிறீர்கள்...?" என்று நேராக அவனைப் பார்த்தாள் அவள்,

"அவசரமான வேலையாக எதுவுமில்லையென்றால் என்னோடு இன்னும் சிறிது நேரம் இருக்க முடியுமா, சஸி நான் உங்களிடம் பேச வேண்டும். யாரிடமாவது பேசித்தான் ஆக வேண்டும். அப்படிப் பேச எனக்கு யாருமில்லை. மனசை நெருங்கின நண்பர்கள் இல்லை. அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என்று எவரும் இல்லை. எனக்கு மட்டுமில்லை. புவனாவிற்குக் கூட அப்படி யாருமில்லாததுதான் அவளின் இந்தக் கஷ்டத்திற்குக் காரணமாக இருக்கும் என்று தோன்றுகிறது. அதே மாதிரி எல்லாவற்றையும் உள்ளுக்குள் போட்டு இறுக்கி மூடி நானும் அவளைப் போல் ஆகி விடப் போகிறேனோ என்று பயமாகக் கூட இருக்கிறது. இன்று எதேச்சையாக நீங்கள் வந்தீர்கள். எங்களைப் பற்றிய விஷயங்களையெல்லாம் தெரிந்து கொண்டீர்கள். இவ்வளவு தெரிந்து கொண்ட உங்களிடம் பேசுவது சுலபமாக இருக்கும் என்று நினைக்கிறேன்..."

அதைக் கேட்டதும் அவள் ஒன்றும் சொல்லாமல் அவனையே பார்த்தாள். பார்வை மிகவும் மென்மையாக



இருந்தது. எல்லாக் கஷ்டங்களையும் துடைத்துக் குளிர்விக்கிற மாதிரி தோன்றியது.

அதில் கொஞ்சம் குளிர்ந்துதான் போனான் அவன். அந்தக் குளிர்ச்சியை அனுபவிக்கிற மாதிரி சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பின் அவன் பேசினபோது குரல் கரகரவென்று வந்தது.

"எங்கள் கஷ்டங்கள் எல்லாவற்றையும் சொல்லி உங்கள் மனசில் ஏற்கனவே பாரமாக இறக்கி வைத்தாகி விட்டது. இப்போது இது வேறு என்ன புதுப் பாரம் என்று நீங்கள் நினைத்தாலும் நினைக்கலாம்..."

"என்ன இப்படிப் பேசுகிறீர்கள்...?" என்று கேட்டபோது அவள் குரலும் தழைந்து போயிற்று.

"இல்லை சஸி. நீங்கள் அப்படி நினைப்பதில் தப்பு ஒன்றுமில்லை. அப்படி நினைப்பதுதான் சரியாகக் கூட இருக்கும். உங்கள் நிலைமையில் நான் இருந்திருந்தாலும் அப்படித்தான் நினைத்திருப்பேன். பார்த்து - பேசி - பழகி இருக்காத ஒருத்தியிடம் இவ்வளவு பேசினது கூட அதிகம் தான். இதற்கு மேல் பேச நினைப்பது தேவை இல்லாதது தான். என்னைப் பற்றி எல்லாம் தெரிந்து கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களால் என்ன செய்ய முடியும்? இதெல்லாம் எனக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனாலும் நான் பேச நினைக்கிறேன் என்றால்... இந்த அளவிற்குக் கூட என்னை நெருங்கினவர்களாக யாருமில்லை, சஸி..."

"ப்ளீஸ், நீங்கள் பேசுங்கள், தயவு செய்து இப்படியெல்லாம் நினைக்காமல் சாதாரணமாக என்னை ஒரு நல்ல சிநேகிதியாக நினைத்துப் பேசுங்கள்."

'சிநேகிதி! எத்தனை இதமான வார்த்தை. இதில்தான் மனசு எப்படிக் குளிர்ந்து போகிறது! இவளால் பஞ்சால் ஒற்றுகிற மாதிரி எவ்வளவு இதமாகப் பேச முடிகிறது! குளிர்ச்சியாகப் பார்க்க முடிகிறது! இத்தனைக்கும்

பின்புமா...? எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட பின்னாலுமா...? என்ன வார்த்தை அது...?"

அந்தச் சினேகத்தைத்தான் அவன் புவனாவிடமும் எதிர் பார்த்தான். அது ஏன் அவளுக்குப் புரியவில்லை? குழந்தை இல்லாவிட்டால்தான் என்ன? இந்த உலகத்தில் எத்தனை பேருக்குக் குழந்தை இல்லை!

அவர்கள் எல்லோரும் இப்படி நினைக்க ஆரம்பித்து விட்டால் எப்படி...? எல்லார் மனசும் இதே மாதிரி ஆனால் என்ன ஆகும்? இப்படிக் கத்தி அழுது, ஆர்ப்பாட்டம் பண்ணி, சண்டை போட்டு, மனசையும் உடம்பையும் புண்ணாக்கிக் கொண்டு... 'ஏன் புவனா நீ இப்படி மாறிப் போனாய்...'

அவனையே பார்த்துக் கொண்டிருந்த சஸி மெதுவாக,

"என்ன இப்படி மௌனமாகி விட்டீர்கள்...?" என்று கேட்டாள்.

அவன் சட்டென்று கலைந்து திரும்பினான். பின்,

"ஒன்றுமில்லை, சஸி... நீங்கள் சொன்ன அந்த ஒரு வார்த்தை போதுமென்று நினைக்கிறேன். சினேகிதி! என்ன இதமான வார்த்தை அது! அதைச் சொல்ல வேண்டுமென்று எப்படித் தோன்றியது உங்களுக்கு...?"

அவள் பதில் சொல்லாமல் புன்னகை செய்தாள்.

அவன் காரை மவுண்ட் ரோடின் இடது பக்கம் திருப்பி கன்னிமாரா ஓட்டலுக்குள் நுழைந்தான். 'கோலம் ரெஸ்டாரெண்டி'ன் வாசலில் நிறுத்தினான்.

"வருகிறீர்களா?" என்று அவளை அழைத்துக் கொண்டு உள்ளே போனான். இரண்டு பேர் மட்டும் உட்காருகிற மேஜைக்கு வந்து உட்கார்ந்ததும் மெனு கார்டை அவள் பக்கம் நகர்த்தினான்.

"என்ன சாப்பிடுகிறீர்கள்...?" என்று கேட்டான்.



அதைக் கேட்டதும் அவள் மெல்லச் சிரித்தாள். சிரித்துக் கொண்டே சொன்னாள்:

"இந்த மெனு கார்டில் எனக்கு ஒன்றும் புரியாது. வெறும் மசாலா தோசையையும் இட்லியையும் விட்டால் வேறு எதுவும் தெரியாது. அது கூடச் சாந்தி வாங்கிக் கொடுத்துச் சாப்பிட்டிருக்கிறேனே தவிர, நானாக வாங்கினதில்லை. வாங்க என்னால் முடியவும் முடியாது..."

இதைக் கூட அவளால்தான் சிரித்துக் கொண்டே சொல்ல முடியும் என்று நினைத்துக் கொண்டான். என்ன சிரிப்பு அது! சோகமான சிரிப்புதான். ஆனாலும் அழகான சிரிப்பு. இந்தச் சிரிப்பில்லாமல் அவள் முகத்தைப் பார்க்கவே முடியாது என்று தோன்றியது.

அந்த மௌனத்தைப் பார்த்ததும் அவள், "என்ன, பேசாமல் இருக்கிறீர்கள்...?" என்று கேட்டாள்.

"இல்லை, யார் அது சாந்தி என்று நினைத்துக் கொண்டேன்..."

"நான் இப்போது தங்கியிருக்கிறேனே... அந்தப் பெரியம்மாவின் பெண்..."

அதன் பின் ஸ்டுவர்ட், பென்சிலும் சின்ன நோட்டுப் புஸ்தகமுமாக வந்தும் அவனே ஆர்டர் பண்ணினான். ஸ்டுவர்ட் போனதும் அவளைப் பார்த்தான்.

"சஸி... நீங்கள் எப்படிப் பேசுகிறீர்கள். எவ்வளவு இனிமையாகப் பழகுகிறீர்கள். சினேகிதி! எத்தனை அழகான வார்த்தை அது. அப்படியே நெஞ்சைத் தொடுகிற வார்த்தை... இந்த மாதிரி ஒரு இதமான பேச்சுக்கு - பார்வைக்கு நான் எப்படித் தவித்திருக்கிறேன் தெரியுமா...? புவனாவிடம் இந்த நட்பை எதிர்பார்த்து எப்படி ஏமாந்து போனேன். அப்படிப் பேச வேண்டுமென்று உனக்கு - ஐ யாம் சாரி, உங்களுக்கு..."

"ஜஸ்ட் எ மினிட்..." என்று நடுவில் குறுக்கிட்டாள் அவள். "என்னை அப்படியே கூப்பிடுங்களேன் ப்ளீஸ். நீ,

உனக்கு என்றே சொல்லுங்களேன். உங்களை விட நான் எல்லாவற்றிலும் சின்னவளாகத்தான் இருப்பேன்..."

"இல்லை, சஸி. வயசால் வேண்டுமானால் நீ சின்னவளாக இருக்கலாம். ஆனால், மனசால் ரொம்பப் பெரியவள். இத்தனை அதிர்ச்சியான ஒரு விஷயத்தைக் கேட்டுக் கொண்டு கோபப்படாமல் - அதற்காக எங்களை வெறுக்காமல் இந்த மாதிரி சிரித்துக் கொண்டிருக்க உன்னைத் தவிர வேறு யாராலும் முடியாது சஸி..."

அதைக் கேட்டு அவள் லேசாகப் புன்னகை செய்தாள்.

"எதற்காகக் கோபப்படணும்? ஏன் வெறுக்கணும், சொல்லுங்கள்."

ஒரு வேளை புவனாவும் இவளிடம் ஒன்றும் சொல்ல வில்லையோ..' என்ற சந்தேகம் ஏற்பட்டது. மெல்லத் தயங்கி அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே,

"புவனா உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லையா, சஸி..?" என்று கேட்டான்.

"சொன்னார்கள்."

"என்ன சொன்னார்கள்...?"

"நீங்கள் எதற்காக என்னை வரவழைத்தீர்களோ, அந்தக் காரணத்தைச் சொன்னார்கள்."

"அதைக் கேட்ட பின்பும் கோபம் வரவில்லையா...?"

சிறிது நேரம் பேசாமல் இருந்தாள் அவள். ஏதோ யோசிக்கிற மாதிரி இருந்தாள். பின் சட்டென்று ஆரம்பித்தாள். நேராக அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே பேசினாள்:

"நீங்கள் இவ்வளவு தூரம் மனம் விட்டுப் பேசுகிறபோது நானும் மனம் விட்டுச் சில விஷயங்களைச் சொல்வதுதான் நியாயம். ஏற்கனவே நான் இந்த மாதிரி நிறைய அதிர்ச்சி தரும் பேச்சுகளைக் கேட்டிருக்கிறேன்.



உனக்கு வேலை வேணுமா... இன்னிக்கு ராத்திரி ஓட்டல் ரூமிற்கு வருவாயா...? கொஞ்சம் ஒத்துழைப்பால் உனக்கு நல்ல வேலையாக வாங்கித் தர என்னால் முடியும். 'ஹௌ எபௌட் ஷேரிங் பெட் வித் மி...?' இப்படிக் கேட்டுக் கேட்டுப் பழக்கமாகி விட்டது என்று கூடச் சொல்லலாம். இதற்கெல்லாம் கோபப்படுவதில் அர்த்தமே இல்லை என்று அடங்கிப் போய் விட்டது. ஆனால், உங்கள் விஷயத்திலும் அதே அடக்கம்தான் என்று சொல்ல வரவில்லை..." என்றவள் சற்று நிறுத்தினாள்.

தகுந்த வார்த்தையாகத் தேடி, தேடின வார்த்தை கிடைத்து விட்ட மாதிரி ஆரம்பித்தாள்:

"உங்களைப் பார்த்ததும் என் மனசுக்குப் பிடித்துப் போய் விட்டதுதான் இதற்குக் காரணம். உங்களோடு பேசினதில் உங்கள் மனத்தைப் புரிந்து கொண்டதில் - ஒரு சின்னக்குருவி அடிபட்டு விழுந்து இறந்ததற்காக வருத்தப் பட்டதில் - அந்த அறையையே சுற்றி வந்த மற்றொரு குருவியை நினைத்து சோகப்பட்ட நீங்கள் - அதன் தனிமையை நினைத்துச் சங்கடப்பட்ட நீங்கள் - என்னை வரவழைத்து அப்படி ஒரு விஷயத்தைக் கேட்க வேண்டு மானால் அதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டுப் போயிருக்க வேண்டும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

"உள் மனசில் எவ்வளவு அடி வாங்கியிருந்தால் இதற்குச் சம்மதித்திருப்பீர்கள் என்று தெரிந்து கொள்ள முடிகிறது. அப்புறம் உங்கள் மனைவியோடு பேசினதில் - அவர்கள் உங்களிடம் நடந்து கொண்டதைப் பார்த்த பின்பு - எனக்கு உங்கள் மீது ஏற்பட்ட பிடிப்பு இன்னும் அதிகமாகிறதே தவிரக் குறையவில்லை..."

அவன் கரகரத்த குரலில், "சஸி!" என்று மெதுவாக அவளைப் பார்த்தான். பார்வை பளபளத்தது.

"... ஆனாலும் என்னால் இதற்குச் சம்மதிக்க முடியும் என்று தோன்றவில்லை. உங்கள் மனைவி சொன்னார்கள், இதற்காக மாதம் ஆயிரம் ரூபாய் தருவதாக..."

அவன் சட்டென்று குறுக்கிட்டுப் பேசினான்:

"ஐ யம் ஸாரி, சஸி. அந்த மாதிரி அவன் ஏதாவது பேசிவிடப் போகிறானே என்றுதான் நான் கவலைப் பட்டேன்..."

"அவர்கள் தவறாக ஒன்றும் பேசவில்லையே... வேலையைச் சொல்லி விட்டுச் சம்பளத்தைச் சொல்லாமல் இருந்தால் எப்படி...?"

அடிபட்டுப் போனவனாக அவளை மறுபடியும் நிமிர்ந்து பார்த்தான் அவன். கீழ் உதட்டை லேசாய்க் கடித்துக் கொண்டான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்! நம் மனசிற்குப் பிடிக்காமற் போனாலும் உண்மை உண்மைதானே...!"

அதற்கும் அவன் பேசாமல் இருந்தான்.

"டு பி வெரி ஃப்ராங்க் வித் யு அந்த ஆயிரம் ரூபாய் என்பது எனக்கு எவ்வளவு பெரிய தொகை தெரியுமா...? என்னால் நினைத்தே பார்க்க முடியாதது, கனவில் வந்தால் கூட எண்ணத் தெரியாமல் கையை நடுங்க வைப்பது. நூறு ரூபாய் வேலையாவது கிடைக்குமா என்று அலைந்தவளுக்கு ஆயிரம் ரூபாய் என்பது எவ்வளவு பெரிய விஷயம்!

"அது இருந்தால் அம்மா, தம்பி, தங்கைகள் எல்லோரையும் எப்படி வைத்துக் கொள்ளலாம்! வீட்டில் தினமும் எப்படிச் சமைக்கலாம்! புதுசு புதுசாக ஓணத் திற்கும் விஷுவிற்கும் துணிகள் எடுக்கலாம். இன்னும் இரண்டு வருஷமானால் பெரிய தம்பியைக் காலேஜுக்குக் கூட அனுப்பலாம். சிக்கனமாகச் செலவு பண்ணி பாதிப் பணத்தைப் பாங்கில் போட்டால், அப்புறம் நீங்கள் வீட்டை விட்டு அனுப்பினாலும், ஒரு வருஷத்திற்கு வேலை எதுவும் இல்லா விட்டால் கூட உட்கார்ந்து சாப்..."

"ப்ளீஸ், சஸி. ஸ்டாப் இட்!" அவன் பொறுக்க முடியாமல் சொன்னான்.



"ஐ யம் ஸாரி. உங்களைக் கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக நான் இதையெல்லாம் சொல்லவில்லை. நானே எனக்குள் எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்துக் கொள் கிறேன். ஆனாலும் கூட என்னால் இதற்குச் சரி சொல்ல முடியாது என்பதற்காகச் சொல்ல வருகிறேன். பணத் திற்காக இதைச் செய்ய முடியுமானால் இதற்கு முன்பு என்னிடம் கேட்டவர்களுக்கெல்லாம் நான் சரி சொல்லியிருக்க வேண்டும்.

"நிரந்தரமான ஒரு நல்ல வேலையாகத் தேடிக் கொண்டிருக்க வேண்டும். என்னால் முடியாத காரணத் தினால்தான் நான் அப்படிச் செய்யவில்லை. அத்தனைக் கஷ்டங்களுக்கும் கூடச் செய்ய முடியாமற் போயிற்று. அதே மாதிரிதான் இப்போது இதற்கும் என்னால் சரி சொல்ல முடியவில்லை..."

"வேண்டாம், சஸி. ப்ளீஸ். நீ எதையும் சொல்ல வேண்டாம்."

"இல்லை, க்ருபாகர். எனக்கு நீங்க புரிந்த மாதிரி உங்களுக்கு நானும் புரிய வேண்டும். என்னைப் பற்றி நீங்களும் தெரிந்து கொள்ள வேண்டும்.

"அடுத்த நிமிஷத்திலிருந்து இருக்கிற இடம் கூட நிலையில்லாத இந்த நிலைமையில், கையில் எண்பது காசு மட்டுமே எதிர் காலமாக இருக்கிறபோது, வெறும் பணத் திற்காகச் சம்மதிப்பது என்பது என்னால் முடியாத காரியம். இதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும்."

அவன் சாப்பிடுவதை நிறுத்தி விட்டு அவளையும் பார்க்க முடியாதவனாகத் தலையைக் குனிந்து கொண்டே இருந்தான். "பட் ஐ கேன் டு திஸ் ஃபார் யுவர் சேக்..." சொல்லுகிற போதே அவன் குரல் உடைந்து தழைந்து போயிற்று. சொன்ன அந்தத் தொனியில் மனசு உருக அவள் உட்கார்ந்திருந்தாள்.

"உங்களைப் பார்த்த அந்த நிமிஷத்திலிருந்து என் மனசிற்குள் ஏற்பட்ட அந்த உணர்ச்சி என்ன என்பதைப்

புரிந்து கொண்டால் என்னால் சரி சொல்ல முடியும். இது வெறும் இன்ஃபாச்சுவேஷன்.

"உங்கள் அழகில், கம்பீரத்தில், மனதிற்குப் பிடித்த மாதிரிப் பேசின விதத்தில் ஏற்பட்ட சலனம்... அல்லது ஈஸ் இட் ரியல் லவ்... எது என்பது மனசுக்குப் புரிகிறவரை அல்லது தீர்மானமாகத் தெரிகிறவரை நீங்கள் எனக்கு... என்னை..."

அவள் சொல்ல முடியாமல் தடுமாறினபோது, அவன் மேஜை மீது கிடந்த அவள் கைகளைச் சட்டென்று பற்றிக் கொண்டான். ஒரு நிமிஷம் உணர்ச்சி வசப்பட்டவனாக அழுத்திப் பின் சரேலென்று விலக்கினான்.

அந்த ஸ்பரிஸத்தில் எல்லாவற்றையும் சொல்லி விட்ட மாதிரி நினைத்தான். வெறும் பார்வையில் தெரியப் படுத்தினான்.

'சஸி... சஸி... ஐ லவ் யு சஸி...'

அவளும் அதைப் புரிந்து கொண்டாள். நேராக அவன் முகத்தைப் பார்த்தாள். ஒரு வினாடி பார்த்துக் கொண்டே இருந்தாள்.

'ஐ டூ லவ் யு க்ருபா...'

அவன் பார்வை தழைந்தபோது பேரர் ஒரு நீளமான பர்ஸ் மாதிரி மடித்த வெல்வெட் அட்டையில் பில்லை வைத்து மூடிக் கொண்டு வந்து மேஜை மீது வைத்தான்.



# 7

அந்த ரெஸ்டாரெண்டை விட்டு வெளியில் வந்ததும் காரில் ஏறாமல் சற்றுத் தயங்கி நின்றாள், சஸி.



அவளுக்காக முன் பக்கக் கதவைத் திறந்து வைத்துக் காத்திருந்த க்ருபாகர், என்ன என்கிறாற்போல் நிமிர்ந்து பார்த்தான்.

"ஒன்றுமில்லை. இப்படியே நடந்து வீட்டிற்குப் போய் விடலாமா என்று பார்க்கிறேன்."

"இங்கிருந்து வீடு வரைக்குமா?"

"ஆமாம்."

"இந்த வெய்யிலிலா...?"

அவள் பதில் சொல்லாமல் லேசாகப் புன்னகை செய்தாள் - இந்த வெய்யில், நடை எல்லாம் எனக்குப் பழக்கம் தான் என்கிற மாதிரி.

"ஏன், சஸி, வீட்டில் இறக்கி விடுவதால் உனக்கு ஏதாவது அசௌகரியமா...?"

"இல்லை. ஆனால், பெரியம்மா அனாவசியமாய் ஏதாவது கேள்விகள் கேட்பாள். நான் நிறையப் பொய்களாகச் சொல்ல வண்டி வரும். அதைத் தவிர்க்கலாமே என்று பார்க்கிறேன்."

அதைக் கேட்டு அவன் சற்று யோசித்தான். பின் -

"அப்படியானால் ஆட்டோ, டாக்ஸி எதிலாவது போய் விடேன், சஸி..." என்றான்.

அந்தக் குரலில் தெரிந்த ஆதங்கம் அவள் மனசைத் தொட்டது. அதில் குளிர்ந்து போய் அவனைப் பார்த்த போது பார்வைக்கும் அதே குளிர்ச்சி வந்தது.

"நடப்பது எனக்குக் கஷ்டமில்லை. இப்படி நடந்து நடந்து நடை பழகிப் போய் விட்டது. நடக்காமல் வேறு எதிலாவது போனால்தான் கஷ்டமாகத் தெரிகிறது..." என்றாள்.

அதைக் கேட்டு அவனும் மெல்லப் புன்னகை செய்தான். பின் நிதானமாகச் சொன்னான்.

"நடக்கலாம், சஸி. சாயந்திர நேரமானால் கன்யா குமரிவரை கூட நடக்கலாம். சிலுசிலுவென்ற காற்றில், பேசு வதற்கு ஒரு துணை இருக்கிற தோழமையில் நடப்பது சௌகர்யமானதுதான். ஆனால், இப்போது - இந்த அனல் அடிக்கும் வெய்யிலில் எதற்காக நடக்கணும்?"

"இந்த வெய்யில் கூட எனக்குக் கஷ்டமில்லை. இதுவும் பழக்கமானதுதான். இன் ஃபாக்ட் இந்த வெய்யில் தான் பழக்கம் என்று கூடச் சொல்லலாம். அதனால் நீங்கள் சிரமப் படாதீர்கள், மிஸ்டர் க்ருபாகர். நான் போய் விடுவேன்..."

அவள் சொல்லிச் சிரித்ததும், அவனால் மேலே ஒன்றும் சொல்ல முடியாமற் போயிற்று.

அந்த முகத்தையே பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தான். அந்தப் பிரிவு தவிர்க்க முடியாதது என்று தெரிந் ததும் மனசுக்குள் கஷ்டப்பட்டான். இனிமையாகக் கேட்டுக் கொண்டிருந்த இசை ஒன்று சட்டென்று நின்று போன மாதிரி உணர்ந்தான்.

'போக வேண்டுமா, சஸி. போய்த்தான் ஆக வேண்டுமா...?'

குழந்தை மாதிரி என்ன இது... என்று உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டான். தனக்குள் படர்ந்த வெறுமை உணர்ச்சியை மறைத்தபடி உதட்டின் புன்னகையில் மெதுவாகத் தலையாட்டினான். 'மறுபடியும் எப்போது பார்க்கலாம், சஸி..' என்று கேட்க நினைத்துக் கேட்காமலே காரைக் கிளப்பினான்.

கார் நகர ஆரம்பித்ததும், "வரட்டுமா...?" என்று மறுபடியும் கையாட்டி விட்டு வேகத்தை அதிகப் படுத்தினான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற சஸி பின் மெதுவாக நடக்க ஆரம்பித்தாள். சாலைக்கு வந்ததும் வெய்யிலின் உக்கிரம் அதிகம் தெரிவதாகத் தோன்றியது.



"ரப்பிஷ்! என்ன பேசறே நீ?" என்று அதட்டினாள், சாந்தி. "ஒரு மனிதரைப் பிடிக்கிறது வேறே. அவர் மேல் பிரியம் வைக்கிறது வேறே. உன்னுடையது வெறும் பிடிப்புதான்..."

"இல்லை, சாந்தி... இது சாதாரணமான பிடிப்பு மட்டும் இல்லை. ஐ திங்க்... க்ருபா மேல நான் வச்சுக் கொண்டிருக்கிறது ப்ரியம்தான், சாந்தி..."

"என்ன...!" என்று சாந்தியின் பார்வை பளபளத்தது. ஆனால், சஸி தன் தலையை உயர்த்தவில்லை. பார்வை சிமெண்ட்டுத் தரையில் பதிந்திருந்தது.

கை 'க்ருபா' என்று ஆங்கிலத்தில் ஆள் காட்டி விரலால் எழுதிக் கொண்டிருந்தது.

அதையும் கவனித்த சாந்தி அதற்குமேல் ஒன்றும் பேச வில்லை. பேசுவதற்கு ஒன்றுமில்லை என்கிறாற் போல் மௌனமாக இருந்தாள். தூரத்து லேடி வெல்லிங்டன் ஹாஸ்டல் விளக்கையும், போகிற வண்டிகளையும் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம் என்று ஐந்து நிமிஷம் அப்படியே போயிற்று. பின் சஸிதான் மெதுவாக நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

"என்ன சாந்தி மௌனமாயிட்டே?"

"இனிமேல பேச என்ன இருக்கு...?"

"என் மேல கோபமா, சாந்தி?"

"கோபமில்லை, வருத்தம்."

"வருத்தமா... ஏன், சாந்தி...?"

"நீ இப்படி இருக்கியேன்னு. இதைப் பார்க்கிறபோது, என்னை உனக்கே புரியலையோன்னு தோணறது. வேலைக்காக அலைஞ்சு அலைஞ்சு சலிச்சுப் போயிட் டேன்னு நினைக்கறேன். அப்படி அலையறபோது நீ சந்திச்ச கசப்பான மனிதர்கள் - கசப்பான அனுபவங்கள் எல்லாம்

சேர்ந்துதான் உன்னை இந்த அளவிற்கு விரட்ட இருக்கிறது."

"இல்லை, சாந்தி... நிச்சயமாக இல்லை. வெறும் வேலைக்காக ஏற்படுத்திக் கொண்ட முடிவு இல்லே. ப்ளீஸ் சாந்தி, என்னைப் புரிஞ்சுக்கோயேன். உன்னாலேயே என்னை என் மனசைப் புரிஞ்சுக்க முடியலைன்னா வேறு யாரால் முடியும், சாந்தி...?"

சாந்தி அதில் நெகிழ்ந்து போனவளாகச் சட்டென்று அவன் கையைப் பற்றினாள். மெத்து மெத்தென்று நீள நீளமாய் என்ன விரல்கள்... என்று நினைத்துக் கொண்டாள். மனசை வருடிக் கொடுக்கிற மாதிரி மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்:

"உன்னை நான் புரிஞ்சுக்கலேன்னா நினைக்கிறே? புரிஞ்சுண்டதால்தான் இப்படிப் பேசறேன். இனிமேலாவது நீ சந்தோஷமாக இருக்கணும்னு நினைக்கறேன். கஷ்டம் என்றால் என்னவென்றே உனக்கு மறந்து போயிடணும்னு ஆசைப்படறேன். அதனால்தான் நீ மேலும் மேலும் கஷ்டங்களை இழுத்து விட்டுண்டு பாரம் சுமக்கிற சுமை தாங்கியாக மாறி அதுலேயே அழுந்தி நின்னுடப் போறியேனு வருத்தப்படறேன்..."

அதில் உருகிப்போய்த் தன் கைகளைப் பற்றியிருந்த அவள் விரல்களை ஒரு தரம் அழுத்தினான், சஸி. பின், "என் சந்தோஷம் க்ருபாவைச் சந்தோஷப்படுத்தறதில்தான் இருக்கு, சாந்தி..." என்றான்.

"க்ருபா-க்ருபா... யார் அந்த க்ருபா? எப்படி இவ்வளவு சீக்கிரம் உன் மனசை நெருங்கி, இப்படி ஆழமாக ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டான். எனக்குப் போட்டியாய் வந்திருக்கிற அவனை என்னால் பார்க்க முடியுமா, சஸி...?"

"ஒய் நாட்... நாளைக்கே கூடப் பார்க்கலாம்."

"இரு, சஸி. அவசரப்படாதே. இதைப் பற்றி இன்னும் நீ யோசிக்க வேண்டும். இது சாதாரண விஷயமில்லை



...பதை மனசில் வைத்துக் கொண்டு யோசிக்க வேண்டும். ...னோடு மட்டும் போய் விடுகிற விஷயமில்லை. அதுவும் அந்த க்ருபாவோடு எப்போதும் இருப்பது சாத்திய...லை. அவன் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் ...வதும் இல்லை. ஒரு குழந்தைக்குப் பின் நீ பிரிந்து வர ...ண்டியவள் தான். அந்தப் பிரிவிற்கு நீ எப்போதும் ...ாராக இருக்க வேண்டும்..."

"வேண்டாம், சாந்தி. அதைப் பற்றி யெல்லாம் பேசா...யேன் ப்ளீஸ். வருகிறபோது அதை யெல்லாம் ...அனுபவித்துக் கொள்ளலாமே. இப்போதே எதற்கு இந்தக் ...ப்பு!"

"எப்போதுமே கசப்பை முதலில் நினைச்சுப் பார்த்...ணும். அதைத் தாங்கிக் கொள்கிற சக்தி இருக்கிறதா ...ன்று யோசிக்கணும். அதை முதலில் யோசி, சஸி. அதைத் ...ளிப் போட்டு அதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் ...ர்க்காதே. அப்புறம் க்ருபாகரிடம் உனக்கு ஏற்பட்டி...ப்பது எது என்று கண்டுபிடி. அதுவரை இந்த விஷயத்தை ...னசை விட்டுக் கொஞ்சம் நகர்த்தி வை. அந்த இடம், வீடு, ...ன்னுடைய க்ருபா எல்லாரையும் சற்றுத் தள்ளி வை. ...ப்படியும் பழைய மாதிரி வேலை தேடு. உன் அதிர்ஷ்டம் ...ரு வேலை கிடைக்கிறது என்று வைத்துக் கொள். ...ப்போதும் இதே நினைப்பு தோன்றுகிறதா, பார். என்ன, ...ி, நான் சொல்வது புரிகிறதா...?"

சஸி அவளை வெறுமையாய்ப் பார்த்தான். அந்தப் பார்வையில் எல்லாம் புரிந்த மாதிரியும், ஒன்றுமே புரியாத ...ாகவும் தெரிந்தது. ஒரு குழந்தையின் பார்வையாகப் ...ட்டது. அந்த முகமும் பார்வையும் சாந்தியின் மனசை ...ன்னவோ செய்தது.

"என்ன சஸி, அப்படிப் பார்க்கறே! இதைப் போட்டு ...னசை இன்னும் குழப்பிக்காதே! எது நடக்கிறதோ ...டக்கட்டும் என்று விட்டு விட்டு எழுந்திரு. வா வீட்டிற்குப் போகலாம். பீச் காலியாகிக் கொண்டே வருகிறது பார்..."

சேர்ந்துதான் உன்னை இந்த அளவிற்கு விரட்ட
இருக்கிறது."

"இல்லை, சாந்தி.. நிச்சயமாக இல்லை. வெறும் வேலைக்காக ஏற்படுத்திக் கொண்ட முடிவு இல்லே. ப்ளீஸ் சாந்தி, என்னைப் புரிஞ்சுக்கோயேன். உன்னாலேயே என்னை என் மனசைப் புரிஞ்சுக்க முடியலைன்னா வேறு யாரால் முடியும், சாந்தி..?"

சாந்தி அதில் நெகிழ்ந்து போனவளாகச் சட்டென்று அவன் கையைப் பற்றினாள். மெத்து மெத்தென்று நீள நீளமாய் என்ன விரல்கள்... என்று நினைத்துக் கொண்டாள். மனசை வருடிக் கொடுக்கிற மாதிரி மெதுவாகப் பேச ஆரம் பித்தாள்:

"உன்னை நான் புரிஞ்சுக்கலேன்னா நினைக்கிறே? புரிஞ்சுண்டதால்தான் இப்படிப் பேசறேன். இனிமேலாவது நீ சந்தோஷமாக இருக்கணும்னு நினைக்கறேன். கஷ்டம் என்றால் என்னவென்றே உனக்கு மறந்து போயிடணும்னு ஆசைப்படறேன். அதனால்தான் நீ மேலும் மேலும் கஷ்டங் களை இழுத்து விட்டுண்டு பாரம் சுமக்கிற சுமை தாங்கியாக மாறி அதுலேயே அழுந்தி நின்னுடப் போறியேனு வருத்தப் படறேன்..."

அதில் உருகிப்போய்த் தன் கைகளைப் பற்றியிருந்த அவள் விரல்களை ஒரு தரம் அழுத்தினான், சஸி. பின், "என் சந்தோஷம் க்ருபாவைச் சந்தோஷப்படுத்தறதில்தான் இருக்கு, சாந்தி..." என்றான்.

"க்ருபா-க்ருபா.. யார் அந்த க்ருபா? எப்படி இவ்வளவு சீக்கிரம் உன் மனசை நெருங்கி, இப்படி ஆழமாக ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டான். எனக்குப் போட்டியாய் வந்திருக்கிற அவனை என்னால் பார்க்க முடியுமா, சஸி..?"

"ஓய் நாட்... நாளைக்கே கூடப் பார்க்கலாம்."

"இரு, சஸி, அவசரப்படாதே. இதைப் பற்றி இன்னும் நீ யோசிக்க வேண்டும். இது சாதாரண விஷயமில்லை



...பதை மனசில் வைத்துக் கொண்டு யோசிக்க வேண்டும். ...னோடு மட்டும் போய் விடுகிற விஷயமில்லை. அதுவும் அந்த க்ருபாவோடு எப்போதும் இருப்பது சாத்திய ...லை. அவன் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் ...வதும் இல்லை. ஒரு குழந்தைக்குப் பின் நீ பிரிந்து வர ...டியவன் தான். அந்தப் பிரிவிற்கு நீ எப்போதும் ...ராக இருக்க வேண்டும்..."

"வேண்டாம், சாந்தி. அதைப் பற்றி யெல்லாம் பேசா ...யேன் ப்ளீஸ். வருகிறபோது அதை யெல்லாம் ...பவித்துக் கொள்ளலாமே. இப்போதே எதற்கு இந்தக் ...?"

"எப்போதுமே கசப்பை முதலில் நினைச்சுப் பார்த் ...ணும். அதைத் தாங்கிக் கொள்கிற சக்தி இருக்கிறதா ...று யோசிக்கணும். அதை முதலில் யோசி, சஸி. அதைத் ...ளிப் போட்டு அதிலிருந்து தப்பித்துக் கொள்ளப் ...ர்க்காதே. அப்புறம் க்ருபாவிடம் உனக்கு ஏற்பட்டி ...பது எது என்று கண்டுபிடி. அதுவரை இந்த விஷயத்தை ...சை விட்டுக் கொஞ்சம் நகர்த்தி வை. அந்த இடம், வீடு, ...னுடைய க்ருபா எல்லோரையும் சற்றுத் தள்ளி வை. ...படியும் பழைய மாதிரி வேலை தேடு. உன் அதிர்ஷ்டம் ... வேலை கிடைக்கிறது என்று வைத்துக் கொள். அப்போதும் இதே நினைப்பு தோன்றுகிறதா, பார். என்ன, ..., நான் சொல்வது புரிகிறதா...?"

சஸி அவளை வெறுமையாய்ப் பார்த்தான். அந்தப் ...ர்வையில் எல்லாம் புரிந்த மாதிரியும், ஒன்றுமே புரியாத ...கவும் தெரிந்தது. ஒரு குழந்தையின் பார்வையாகப் ...ட்டது. அந்த முகமும் பார்வையும் சாந்தியின் மனசை ...ன்னவோ செய்தது.

"என்ன சஸி, அப்படிப் பார்க்கறே! இதைப் போட்டு ...னசை இன்னும் குழப்பிக்காதே! எது நடக்கிறதோ ...க்கட்டும் என்று விட்டு விட்டு எழுந்திரு. வா. வீட்டிற்குப் ...ோகலாம். பீச் காலியாகிக் கொண்டே வருகிறது பார்..."

அவள் எழுந்து புடவையைச் சரி பண்ண கொண்டதும் சஸியும் எழுந்தாள். வழி முழுதும் இரண் பேரும் எதுவும் பேசவில்லை. யோசித்துக் கொண் வந்தார்கள். வீட்டிற்கு வந்ததும் பெரியம்மா வாசலிலே நிற்பது தெரிந்தது. அவர்களைப் பார்த்ததும்,

"எங்கே போயிட்டீங்க...? உங்களுக்காக எத்தனை நேரம் உள்ளுக்கும் வாசலுக்கும் அலையறது...?" என்றா

அதற்கும் பதில் சொல்லாமல் புன்சிரிப்பாகச் சிரித் விட்டு உள்ளே போனபோது ஹால் கடிகார ஒன்பதடித்தது.



# 9

ரெஸ்டாரெண்ட் வாசலில் சஸியை விட்டு வந் க்ருபா மெதுவாகத்தான் காரை ஓட்டினான். வேகமாக போய் என்ன செய்வது என்று நினைத்துக் கொண்டா அப்போது தொழிற்சாலைக்குப் போகப் பிடிக்கவில்லை வேறு எங்கு போவது என்றும் தெரியவில்லை. தனியாக போய் எங்கே உட்கார முடியும்? உட்கார்ந்து என்ன செய் முடியும்? பேச ஒரு துணை கூட இல்லாமல் எப்படி பொழுதைத் தள்ள முடியும்...?

ஆனால், அந்த மாதிரி எத்தனைப் பகல்கள் - எத்தனை ராத்திரிகளைத் தள்ளியிருக்கிறான். கையில் சிகரெட் புகையப் புகைய - மனசு பாரமாக அழுந்திக் கிடக்க வெற்றுப் பார்வையில் ஜிம்கானாவில் - பீச் ஓரத்தில், டிரைவ் இன்னில் அப்படி எத்தனை இடங்கள்... எத்தனை நாட்கள்

ஆனால், அந்த எல்லா நாட்களையும் விட அன்று மனசு மிகவும் கனத்துப் போயிற்று. பாரம் அதிகமாகத்



தெரிந்தது. அந்தப் பாரம் குறைய யாரிடமாவது பேச வேண்டும் போல் இருந்தது. யார் கையையாவது இதமாகப் பற்றிக் கொள்ள வேண்டும். பேசக் கூட வேண்டாம். அந்த ஸ்பரிசம் மட்டும் போதும். அதிலேயே தன்னை வெளிக் காட்ட முடியும். ஒன்றுமே இல்லாமல் கரைந்து போய் விட முடியும்.

ஆனால், அப்படி யார் இருக்கிறார்கள் என்று நினைத்த போது சட்டென்று சஸியின் ஞாபகம் வந்தது. சற்று முன்னே வாசலில் நின்று கையாட்டின அந்த உருவம் மனசில் நிறைந்து போயிற்று. என்ன முகம் அவளுக்கு! நீள நீள இமைகளும், மெதுவாய் அரவணைக்கிற பார்வையுமாய் என்ன கண்கள்! குரல் உயராமல், பாவம் மாறாமல், நெஞ்சை வருடுகிற குளிர்ச்சியில் என்ன பேச்சு...!

"சஸி... எப்படி அந்த மாதிரி 'இருக்க முடிகிறது உன்னால்...? வெறும் பார்வையில் மனசைக் கட்டிப் போட முடிகிறது? சாதாரணப் பேச்சில் பிடித்து வைத்துக் கொள்ள முடிகிறது...!'

இத்தனை வருஷத்தில் புவனா ஒரு நாள் கூடத் தன்னிடம் அப்படிப் பேசினதில்லை என்பது நினைவுக்கு வர சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டான் அவன் பேச்சு மட்டுமில்லை, பார்வையில் கூட அந்த அரவணைப்பு இருந்ததில்லை. புவனாவிடம் அந்த மாதிரி பெண்மைத் தன்மைகளே கிடையாதோ என்று கூட அவன் சந்தேகப் பட்டிருக்கிறான். கத்தரிநாக்கில் வார்த்தைகள் நறுக்நறுக் கென்றுதான் வரும். சட்சட்டென்று குரல் உயரும். கன்றுகின்ற கோபத்தில் முகம் பளபளக்கும்.

கோபம் மட்டுமில்லை; சந்தோஷம், துக்கம், வெறுப்பு, விருப்பு எல்லாவற்றையும் காட்டி விடுகிற முகம் கண்ணாடி முகம். எதையும் வார்த்தையாகக் கொட்டி விடுகிற சுபாவம். உள்ளுக்குள் எதுவும் தங்காமல் அடித்துக் கொண்டு வந்து, அந்த வேகத்தில் எதிரில் நிற்பவர்களையும் அடித்துக் கொண்டு போய்...

அப்படி இல்லாமல் சஸிதான் எப்படி நடந்து கொண்டாள்! என்ன சிரிப்பு அது! அத்தனைப் பெரிய விஷயத்திற்கும் புன்சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டு நின்று அதற்கப்புறமும் ஓட்டலுக்கு வந்து சொன்னதை யெல்லாம் நிதானமாகக் கேட்டுக் கொண்டு என்னைப் புரிந்து கொண்டு - தன்னைப் புரிய வைத்து..

'சினேகிதி..!'

'எப்படிச் சொன்னாய்,சஸி. அடிபட்ட இடத்தை பஞ்சால் ஒற்றுகிற இதத்தில் எப்படிச் சொன்னாய்! அந்த சினேகிதத்திற்காக நான் அலைவதை எப்படிப் புரிந்து கொண்டாய்..? உனக்கு மட்டும் இதெல்லாம் எப்படி சாத்தியமாயிற்று..? உன்னை மாதிரி இன்னொரு பெண்ணை என்னால் சந்திக்க முடியுமா, சஸி..? எங்கே, எப்போது சந்திக்கப் போகிறேன்..?'

'நோ! வேண்டாம். இனிமேல் யாரையும் சந்திக்க வேண்டாம். யாரும் உன் மாதிரி இருக்க வேண்டாம். நீதான், சஸி. உன்னைச் சந்தித்த இந்தச் சந்தோஷம் ஆச்சரியம் எல்லாம் எனக்குள் எப்போதும் அப்படியே இருக்கும். அது போதும், சஸி.'

உடனே, 'போதுமா..?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். போதும் என்று தோன்றிற்று. அதை விட வேறு எதுவும் வேண்டாம் என்று நினைத்துக் கொண்டான். தன்னோடு தன்னைப் புரிந்து கொண்டு மனசுக்கு இதமாக - ஆறுதலாக அவள் சொன்ன மாதிரி ஒரு நல்ல சினேகிதியாக..

'இருப்பாயா, சஸி..? இரேன் ப்ளீஸ்..!'

சட்டென்று அவளைப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று. கூடவே, அவளை இனிமேல் பார்க்கவே முடியாதோ என்று நினைத்தபோது மனசு கனத்துப் போயிற்று. ஆழமான பெருமூச்சு வெளிப்பட்டது. உடனே காரைத் திருப்பி அவள் வீட்டிற்குப் போய், 'வா, சஸி!'



என்று அவளைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வர வேண்டும் போல் இருந்தது.

ஆனால், வருவாளா அவள்? வர முடியுமா..? வருகிற அளவிற்கு மனசு துணியுமா..? அந்த வீட்டை விட்டு - சாந்தியை விட்டு !

சாந்தி..!

என்ன துணை அது! அதை நினைத்துச் சந்தோஷப் பட்டான் அவன். அந்த நட்பு கூடக் கிடைக்காமற் போயிருக்கிற பட்சத்தில் சஸி உடைந்து போயிருப்பாள். அத்தனைக் கஷ்டங்களையும் தாங்கிக் கொள்ள முடியா சோகத்தில் கஷ்டப்பட்டுப் போய்..

நல்ல வேளையாய் சாந்தி அவளுக்குக் கிடைத்தாள். அதே மாதிரி தன்னுடைய சாந்தியாகத்தான் சஸியைத் தேடினான் அவன். அது புரியாமல் தானும் புவனா மாதிரி வேதனைப் படுவதாக நினைத்து, தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டு, மனசுக்குள் மெதுவாகத் திட்டி...

'நோ.. அது இல்லை, அதற்காக இல்லை. என்னைப் புரிந்து கொள்வேன், சஸி. புரியவில்லையானால் இன்னும் சரியாகப் புரிய வைக்க ஒரு சந்தர்ப்பம் கொடேன்... என் மனசின் இத்தனை பிரியமும், உனக்காகத்தான் என்பதைத் தெரிந்து கொள்ளேன். உனக்காக என்றால் - வெள்ளை வெளேரென்று உயரமாய் அழகாய் இருக்கிற உன் உடம்பிற்காக இல்லை. உனக்காக உள்ளுக்குள் இருக்கிற அந்த சஸிக்காக... புரிகிறதா, சஸி..?'

கார் அம்பத்தூர் தொழிற் பேட்டையைத் தாண்டிப் போய் விட்டதை உணர்ந்து சட்டென்று நிறுத்தினான். இவ்வளவு சீக்கிரமாகவா அம்பத்தூர் வந்து விட்டோம் என்று நினைத்துக் கொண்டான். ரிவர்ஸ் கியரைப் போட்டுத் திருப்பித் தொழிற்சாலை வாசலில் நிறுத்தின போது, காவலுக்கு நின்றிருந்த அந்த செக்யூரிட்டி ஆள் ஓடி வந்து கேட்டைத் திறந்தான். பின் குனிந்து குட் மார்னிங் சொன்னான். பதிலுக்கு க்ருபாவும் குட் மார்னிங் சொன்னதும், சல்யூட் அடித்துக் கார் போக வழி விட்டான்.

காரைப் போர்ட்டிகோவில் நிறுத்திப் பூட்டி விட்டு இறங்கி உள்ளே போனபோது -

பனிச்சென்ற சிரிப்புகள் - குட்மார்னிங் சார்கள் - எழுந்து நிற்கிற உருவங்கள்... - அடங்கிப் போன டைப் ரைட்டர்கள்...

சட்டென்று சலித்துப் போனான் அவன். எல்லாமே வெறும் பாவனைகளாகப் பட்டது. இதன் மூலம் தான் தள்ளி நிற்கிற மாதிரி தோன்றியது. வெறும் மரியாதையில் இவர்கள் எவ்வளவு சுலபமாகத் தன்னை ஒதுக்கி விடுகிறார்கள் என்று நினைத்துக் கொண்டான். இந்த மரியாதையும் எழுந்து நிற்பதும் இல்லாமல் தாங்கள் பாட்டுக்கு டைப் அடித்துக் கொண்டு - லெட்ஜர்களைப் புரட்டிக் கொண்டு... டீ கப்பை உறிஞ்சிக் கொண்டு டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான்.

அப்படி இருக்கிற பட்சத்தில் அவனால் எல்லாரோடும் சுலபமாகப் பழக முடிந்திருக்கும். பேச முடிந்திருக்கும், சிரிக்க முடிந்திருக்கும், தன் கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்திருக்கும்.

அதெல்லாம் சாத்தியமே இல்லை என்ற நினைப்பில் அவன் உள்ளே போய் உட்கார்ந்தான். இன்டர்காமில் காரியதரிசி ஸ்டெல்லாவைக் கூப்பிட்டபோது மிகவும் களைப்பாக உணர்ந்தான். அந்த வெய்யிலில் காரில் வந்த தனக்கே இவ்வளவு அசதியும் களைப்பும் இருக்குமானால், நடந்து போன சசிக்கு எப்படி இருந்திருக்கும்' என்று எண்ணிப் பார்த்தான். அவளை அப்படி விட்டு வந்ததே தவறோ என்று கூட நினைத்தான்.

'எவ்வளவு தூரம்... கன்னிமாராவிலிருந்து... அவள் எங்கே இருக்கிறாள்...? தங்கசாலையா...! திருவல்லிக் கேணியா... மைலாப்பூரா... எங்கே...?

அன்று கடிதம் எழுதிப் போட்டபோது ஞாபகம் இருந்த விலாசம் இன்று மறந்து போயிருந்தது. வீட்டிற்குப்



போனதும் அவள் விலாசத்தை டைரியில் குறித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்து நிமிர்ந்தபோது மிஸஸ் ஸ்டெல்லா மாத்யூஸ் கையில் நோட்டுப் புஸ்தகமும் பென்ஸிலுமாக நின்று கொண்டிருப்பது தெரிந்தது. சட்டென்று புன்சிரிப்பாகச் சிரித்து,

"டேக் யுவர் ஸீட் ப்ளீஸ்..." என்றான்.

அவள் உட்கார்ந்ததும் அவசரமாகப் பதில் எழுத வேண்டிய கடிதங்கள் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டான். பின் அவைகளுக்குப் பதில் டிக்டேட் பண்ணி - டைப் அடித்த கடிதங்களில் கையெழுத்துப் போட்டு - ஸேல்ஸ் மானேஜர் சீதாராமனுடன் அந்த எக்ஸ்போர்ட் ஆர்டரைப் பற்றிப் பேசி - உள்ளே தொழிற்சாலையை ஒரு முறை சுற்றிப் பார்த்து - முக்கியமான டெலிபோன் கால்களை மட்டும் பண்ணி, பேசி விட்டு எழுந்தபோது மறுபடியும் போன் அடித்தது. ரிஸீவரை எடுத்து ஹலோ சொன்னதும் ஆபரேட்டரின் குரல் கேட்டது.

"கால் ஃப்ரம் யுவர் ரெஸிடென்ஸ் சார்..."

"ஹூ ஈஸ் காலிங்...?"

"யுவர் ஒய்ப் ஸார்."

அவன் அரை வினாடி யோசித்துப் பின் பதில் சொன்னான்.

"நான் வீட்டிற்குத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன் என்று சொல், ஷீலா."

"ஓ.கே. ஸார்."

'வீடு... வீட்டைத் தவிர வேறு இடமில்லை. எங்கே போனாலும், எத்தனை நேரமானாலும் கடைசியில் அங்குதான் போயாக வேண்டும். புவனாவைத்தான் பார்த்தாக வேண்டும். சிடுசிடுக்கிற அந்த முகத்தை - சுடுகிற வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டுதான் ஆக வேண்டும். வேறு வழி இல்லை. இதிலிருந்தெல்லாம் தப்பித்துக் கொண்டு விட முடியாது. எதை விட்டும் விலகிப் போய்

விட முடியாது. அப்படி விலகி நின்று சந்தோஷப்படவும் முடியாது...'

அறையை விட்டு வெளியில் வந்து காரில் ஏறி உட்கார்ந்து நிதானமாகக் கிளப்பினான் அவன்.



## 10

தெரு அமைதியாக இருந்தது. அந்த மத்தியான வெய்யிலுக்கும் புழுக்கத்திற்கும் ஒடுங்கிப் போன மாதிரிக் கிடந்தது. எப்போதாவது போகிற செருப்புச் சத்தத்தையும், தூரத்துக் கார் ஹாரன் ஓசையையும் தவிர,வேறு சப்தம் எதுவு மில்லை. பண்டம் விற்பவர்களின் கூக்குரல் கூட இல்லை.

அபூர்வமான அந்த அமைதியைப் பார்த்துக் கொண்டே ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்திருந்தாள், சஷி. முழுங்காலைக் கட்டி முகத்தை அதில் பதித்துக் கொண் டிருந்தாள்.

பெரியம்மா பார்த்தால் அதற்கும் சத்தம் போடுவாள். எப்போது பார்த்தாலும் என்ன உட்காரல் இது என்று கத்துவாள். நல்ல வேளையாகப் பெரியம்மா வீட்டில் இல்லை.

அந்த வெய்யிலுக்கு லஸ்ஸின் கடைகள் வீணாகப் போய் விடக் கூடாது என்று போயிருந்தாள். நல்லி கடைப் புடவைகளும், ராமனாதன் கடை எவர்சில்வர் பாத்திரங் களும் மாதத்திற்கு ஒரு தரமாவது பெரியம் மாவைப் பார்க்கா விட்டால் ஏங்கிப் போகும். அந்த ஏக்கத்தைத் தீர்த்து வைப்பதற்காகப் பெரியம்மாவும் கிளம்பி விடுவாள்.



அன்றும் அப்படித்தான் கிளம்பியிருந்தாள். காலையில் பத்து மணிக்கெல்லாம் போய் விட்டாள். அவள் போன பின் சஷி வீட்டைப் பெருக்கித் துடைத்து, துணி துவைத்து எல்லா வேலைகளையும் முடித்து விட்டுத்தான் வந்து உட்கார்ந்தாள்.

மணி பன்னிரண்டானதும் இனிமேல் பெரியம்மா வரமாட்டாள் என்று நினைத்துக் கொண்டாள். அப்படியே ஏதாவது சினிமாவிற்குப் போயிருப்பாள். காமதேனுவில் பகல் காட்சிக்கு நுழைந்து விட்டிருப்பாள். இனி மேல் நாலு மணிக்கு மேல்தான் திரும்பி வருவாள். அதுவரை நிம்மதியாய், மனசுக்குப் பிடித்த விதமாய் இருக்கலாம். மெலிசான குரலில் பாட்டுப் பாடலாம். ஜன்னலின் கைப்பிடிச் சுவரில் உட்கார்ந்து தெருவைப் பார்க்கலாம்.

அப்படி உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தபோது தெருவில் போன அந்த வெள்ளைக் காரில் க்ருபாவின் ஞாபகம் வந்தது. அவனுடையதும் வெள்ளைக் கார்தான். வெளி நாட்டுக் கார். உடனே - அவனைச் சந்தித்து, அந்த வீட்டிற்குப் போய்ப் பதினைந்து நாட்களாகி விட்டன என்பது நினைவுக்கு வந்தது.

இந்தப் பதினைந்து நாட்களில் நிறையத் தரம் அவனை நினைத்துக் கொண்டாகிவிட்டது. குளிக்கிற போது, சாப்பிடும் போது, வேலை செய்கிறபோது, ராத்திரி தூக்கம் வராமல் படுத்துக் கொண்டிருக்கிறபோது, இண்டர்வ்யூவிற்காகப் போனபோது...

இந்தப் பதினைந்து நாட்களில் இரண்டு இடங்களில் அவள் இண்டர்வியூவிற்குப் போய் வந்து விட்டாள். இரண்டு இடங்களிலும் வட இந்தியர்கள் நிற்க வைத்தே பேசினார்கள். நுனி நாக்கின் உடைந்து போன ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்டார்கள். கடைசியாக அவளிடமே இரண்டாயிரமும் நாலாயிரமும் டெபாஸிட் கேட்டார்கள்.

"சிட் ஃபண்ட் கம்பெனியாயிற்றே... முன் பணம் இல்லாவிட்டால் எப்படி நம்ப முடியும்...?"

அவள் தாங்க்ஸ் சொல்லிவிட்டு வெளியில் வந்து விட்டாள். இரண்டாயிரம் மூன் பணம். புவனா தருவதாகச் சொன்ன இரண்டு மாதச் சம்பளம்... இந்த இல்லாமையைத் தானே அவன் சுட்டிக் காட்டினான். அப்போது என் அதற்குக் கோபம் வந்தது. வெறும் கையாலாகாத கோபம். எதற்காக இந்த வறட்டுக் கோபம்? இதை யார் மீது காட்ட முடியும்? காட்டினால் யார் சும்மா இருப்பார்கள்...?

வரட் வரட்டென்று ஜன்னலில் வந்து உட்கார்ந்து கத்தின காகத்தின் கத்தலில் சட்டென்று கலைந்துபோனாள் அவள். 'இதற்கு என்ன தைரியம்! இவ்வளவு பக்கத்தில் வந்து உட்கார்ந்து கத்துகிறதே' என்று நினைத்தாள். அதை விரட்டலாமா என்று கையைச் சற்று உயர்த்தி, பின் பேசாமல் இருந்தாள். அரை வினாடி விடாமல் கத்தி விட்டு அது விருட்டென்று பறந்து போயிற்று.

நினைத்தால் அது சட்டென்று பறந்து போவதை நினைத்து மெலிசாகப் பெருமூச்சு விட்டாள். மீண்டும் பார்வை தெருவிற்குத் திரும்பினபோது இரண்டு வீடுகள் தள்ளித் தபால்காரர் வருவது தெரிந்தது. அந்தத் தபால்காரர் நல்லவர். வயதானவர். கிறிஸ்துவர் 'உனக்குச் சீக்கிரம் வேலை கிடைக்கும்மா' என்று அவர் சிரிக்கிற சிரிப்பில் அவளுக்குச் சற்று சந்தோஷமாகக் கூட இருக்கும். மனசு பரபரக்கும். தன் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைச் சுமந்து கொண்டு வரப் போகிறவர் இவர்தான் என்ற எண்ணம் மனசில் ஆழமாகப் பதிந்து போயிருந்தது.

அப்போதும் அதையே நினைத்துக் கொண்டு வாசல் கம்பிக் கதவைத் திறந்து நடையில் நின்றபோது அவர் தெருப்படியில் சைக்கிள் பெடலை அழுத்தி சைக்கிளை நிற்க வைத்து விட்டு உள்ளே வந்தார்.

"உஷ்... என்ன வெய்யில்மா இது...!" என்று முகத்தையும் கழுத்தையும் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார். பின்,



"கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தாரியாம்மா?" என்று கேட்டார். அவள் உள்ளே போய் ஒரு பெரிய கண்ணாடித் தம்ளர் நிறையத் தண்ணீர் கொண்டு வந்தாள். குடித்துவிட்டு அவர் ஒரு நீளமான பழுப்புக் கவரை நீட்டி, "உனக்குத் தாம்மா!" என்றார்.

சஸி கவரை வாங்கிப் பார்த்தாள். கவரின் மேல் 'இந்தியன் ஏர்லைன்ஸ்' என்று நீலத்தில் அச்சிடப் பட்டிருந்தது. தபால் காரரை அனுப்பி விட்டுக் கதவைத் தாழ் போட்டுக் கொண்டு உள்ளே வந்து பழையபடி உட்கார்ந்து கவரைப் பிரித்தாள்.

விமானப் பணிப் பெண் வேலைக்குப் பயிற்சி கொடுக்க அவள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாள். அவள் வந்து சேர வேண்டிய இடம் - தேதி - கொண்டு வர வேண்டிய பொருட்கள்... என்று வரிசையாகவடுக்கப் அடுக்கப் பட்டிருந்தது. பயிற்சிக் காலம் முடிகிறவரை வேலைக்கு உத்தரவாதம் இல்லை. அதன் பின் சென்னை - பம்பாய் - கல்கத்தா - டெல்லி என்று எங்கும் அவள் அனுப்பப் படலாம். பயிற்சிக் காலம்வரை கணிசமாகக் குறிப் பிட்டிருந்த ஒரு தொகை ஸ்டைபெண்டாகத் தரப்படும்.

உடனே, அவளுக்குத் தான் போன அந்த இண்டர்வியூ ஞாபகத்திற்கு வந்தது. விமான நிலையத்திற்குச் சற்றுத் தள்ளி ஏர்லைன்ஸ் ஆபீஸில் இண்டர்வியூ.

அவள் போனபோது அறை வாசலில் நிறையப் பதினெட்டு வயசுகள், லிப்ஸ்டிக் உதடுகள், பெரிது பெரிதாய்க் கொண்டைகள், குதிகால் உயர்ந்த செருப்புகள், நுனி நாக்கு ஆங்கிலங்கள், சரளமான சிரிப்புகள்...! அதில் அவள் தனியாகத் தான் தெரிந்தாள். பாவனை எதுவு மில்லாமல் நின்றிருந்தாள். அதனாலேயே தான் தேர்ந் தெடுக்கப்படப் போவதில்லை என்று தீர்மானித்தாள். அந்தத் தீர்மானத்துடன் உள்ளே போனாள்.

அந்த ஏர்கண்டிஷண்ட் அறையில் ஒரு பெரிய மேஜையடியில் மூன்று பேர் உட்கார்ந்திருந்தார்கள். நடுவில்

கம்பீரமாக உட்கார்ந்திருந்த அந்த அம்மாள்தான் சீஃப் ஏர் ஹோஸ்டஸ், மிஸ் தாஸ் என்று வெளியில் இருந்தவர்கள் பேசினதை நினைத்துக் கொண்டாள். மிஸ் தாஸ் கல்கத்தாவிலிருந்து வந்திருப்பவள். அவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறவள். உயரம் பார்த்து எடை எடுத்து - நடக்கச் சொல்லி - தூரத்தில் நின்று சின்ன எழுத்துக்களைப் படிக்கச் சொல்லி - கேள்விகளைக் கேட்டு -

'பெயர்...?

கல்லூரி?

தற்போது தங்கியிருக்கும் இடம்?

பெற்றோர்?

கூடப் பிறந்தவர்கள்?

அந்த அலுவலகத்தில் யாரும் தெரிந்தவர்கள் - சொந்தக் காரர்கள்?

அப்படியானால், அவர்களின் பெயர்கள்? இந்தியாவின் எந்த இடத்திலும் வேலை செய்ய விருப்பம்?

விமானம் பறந்து கொண்டிருக்கும்போது உள்ளே வெடி குண்டு இருப்பதாகத் தெரிந்தால் பயணிகளிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை...?

பயந்து போய்க் கத்துகிற ஒரு வயதான கிழவியைச் சமாதானப் படுத்துவீர்கள்?

அல்லது சட்டென்று கன்னத்தில் ஒரு அறை வைத்து உட்காரச் செய்வீர்கள்?

ஏர்போர்ட் சினிமா பார்த்தீர்கள்?

கதைப் புத்தகம் படித்தீர்கள்?

சரி. நீங்கள் போகலாம். நாங்கள் தெரியப் படுத்துவோம்.



இப்போது தெரியப்படுத்தி இருந்தார்கள். அவள் சந்தோஷமாக - பறக்கும் விமானத்தில் தன்னை நிறுத்திப் பார்த்தாள். வழவழவென்று பட்டில் பூப் போட்ட புடவை அழகான கொண்டை - ரோஜா நிறமாய்க் கன்னங்கள் - குவிந்த உதட்டில் லிப்ஸ்டிக் - சிரிப்பு - சந்தோஷமாய் வரவேற்பு - ஒரு பெரிய ட்ரேயில் நிறைய சாக்லெட்டுகள் - அப்புறம் ஸ்டூவர்ட் கூட வர 'எக்ஸ்க்யூஸ் மி. வுட் யு லைக் டு ஹேவ் காஃபி ஆர் டீ...?'

அவளின் விமானத்தில் ஒரு நாள் க்ருபாகர் வந்தாலும் வரலாம். அவளைப் பார்த்ததும் கண் அகல ஹலோ சொல்லலாம். ஆனால்... ஆனால்... அவனிடம் சொல்லாமல் போக முடியுமா...? சொன்னால் அந்த முகம் எப்படி மாறும்? சிரிப்பு எப்படி டக்கென்று நின்றுபோகும்? 'போகப் போகிறாயா, சஸி...? போய்த்தான் ஆக வேண்டுமா...?' என்று கண்கள் எப்படிக் கெஞ்சும்...

முடியுமா தன்னால்...? அதைப் பார்த்த பின் போக முடியுமா...? வேலைக்காக, அதில் கிடைக்கிற சம்பளத்திற்காக - மனசை இங்கேயே விட்டு விட்டு...

வாசல் கதவு தட்டப் படுகிற சத்தத்தில் சட்டென்று கைப்பிடிச் சுவரை விட்டு இறங்கி கவரைப் பெட்டிக்குள் வைத்து மூடினாள். அவசரமாகக் கதவைத் திறக்க முடினபோது பெரியம்மா ரிக்ஷாக்காரனோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். ரிக்ஷாக்காரன் பெரிய குரலில் அசிங்கமாக ஏதோ கத்த, பெரியம்மாவும் பதிலுக்குக் கத்தி விட்டுக் கடைசியில் அவன் கேட்ட காசைக் கொடுத்து விட்டு வந்தாள். இதை முதலிலேயே கொடுத்திருக்கலாமே என்று நினைத்துக் கொண்டு பெரியம்மா வாங்கிக் கொண்டு வந்திருந்த புடவைப் பைகளையும் சாமான்களையும் எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள், சஸி.

பெரியம்மாவும் உள்ளே வந்து முற்றத்தில் கைகால் அலம்பிக் கொண்டே,

"பால் வந்தாச்சா...?" என்று கேட்டாள்.

அப்போதுதான் பாலின் நினைவு வர, சஸி பாட்டிலையும் கார்டையும் எடுத்துக் கொண்டு ஓடினாள். போகும்போதே கடிகாரத்தைக் கவனித்தாள். மணி நாலாகி இருந்தது. பால் வண்டி திரும்பி வந்து காலி பாட்டில்களை எடுத்துக் கொண்டு போகிற நேரம். இத்தனை நேரமாய் வெறும் கனவுகளில் கற்பனைகளில் இருந்திருக்கிறோம்...

அவள் போன போது காலி பாட்டில்கள் வண்டியில் ஏறிக் கொண்டிருந்தன. அவள் தன் கார்டை நீட்டினபோது டிப்போக்காரர் பாலை விற்று விட்டதைத் தெரியப் படுத்தினார். வேண்டுமானால், அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவதாகச் சொன்னார். பெரியம்மா 'கத்த ஆரம்பிப்பாளே' என்று பயந்து கொண்டே சஸி காசை வாங்கிக் கொண்டு வந்தாள். அதே மாதிரி பெரியம்மா கத்தத்தான் ஆரம்பித்தாள்.

"ஏதோ தவறிப் போச்சு, பெரியம்மா. இதோ வேறே எங்கேயிருந்தாவது வாங்கிக் கொண்டு வந்துடறேன்..." என்று சொல்லிவிட்டு ஒரு பாத்திரத்தோடு வெளியில் போனாள். பக்கத்துத் தெரு பால் கடையில் அவளுக்குப் பால் கிடைத்தது. இது பாட்டில் பாலை விட விலை அதிகம். அதற்கும் பெரியம்மா சத்தம் போடத்தான் போகிறாள். எதற்குத்தான் அவள் சத்தம் போடவில்லை என்று நினைத்துக் கொண்டே திரும்பி வந்தாள்.

அதிசயமாகப் பெரியம்மா ஒன்றும் சொல்லவில்லை. சஸி பரபரவென்று ஃபில்டரை வைத்துப் பொடியைப் போட்டு டிகாக்ஷனை இறக்கினாள். பாலைக் காய்ச்சி காப்பி கலந்த போது பால் தண்ணியாகத்தான் இருந்தது. காப்பியைப் பெரியம்மாவிற்குக் கொடுத்து விட்டுத் தனக்கும் கலந்து கொண்டாள்.



பின் சப்பாத்திக்கு மாவு பிசைந்து, உருட்டிப் போட்டு, தவ்வாயில் போட்டு, எடுத்து, கூட்டுப் பண்ணி வைத்துவிட்டு, குளித்து உடை மாற்றிக் கொண்டாள். வெள்ளைப் புடவையில் பெரிதாய்ச் சிவப்புப் பார்டர், கைத்தறிப் புடவை. சாந்தி தனக்குப் பிடிக்காமல் அவளுக்குக் கொடுத்திருந்தாள். அது பெரியம்மாவிற்குப் பிடிக்காத புடவை. அதனால் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை.

அதைக் கட்டிக் கொள்கிற போதெல்லாம் சாந்தி, 'இது கூட உனக்கு எப்படிப் பொருந்திப் போகிறது...!' என்று கண்ணகலப் பார்ப்பாள். அதை நினைத்துக் கொண்டே பெரியம்மாவின் எதிரில் வந்து நின்றாள். அந்த ஏர் ஹோஸ்டஸ் வேலை பற்றிச் சொல்வதா, வேண்டாமா என்று யோசித்து, பின் வேண்டாம் என்று முடிவு செய்தாள். முதலில் க்ருபாவிடம் சொல்லி விட்டுத்தான் சாந்தியிடம் கூடச் சொல்வது என்று நினைத்துக் கொண்டாள். அதனால், என்ன என்று பெரியம்மா கேட்ட போது, ராம கிருஷ்ணா மடம் வரை போவதற்கு அனுமதி கேட்டாள்.

"எப்போ பார்த்தாலும் மடத்தில் என்ன வேலை... சன்யாசியாகப் போறயா என்ன...?"

"போனால் நிம்மதிதான் பெரியம்மா..." என்று சிரித்தாள், சஸி. ஆனால், பெரியம்மாவின் முகத்தில் சிரிப்பில்லை.

"நீயெல்லாம் சன்யாசியானால் மடம் உருப்பட்ட மாதிரி தான்..." என்றாள்.

ஒன்றும் சொல்லாமல் அடிபட்ட பார்வையோடு பேசாமல் நின்றாள், சஸி.

'மடத்திற்குத்தான் போறியோ... வேற எங்கே போறியோ, யாருக்குத் தெரியறது நீ போற இடமெல்லாம்...'

என்று மறுபடியும் பதிலை எதிர்பார்க்கிற மாதிரி அவனைப் பார்த்தாள், பெரியம்மா.

அதற்கும் எந்தப் பதிலும் வராமல் போகவே-

"சரி, சரி, போ. எப்போ திரும்பி வருவே...?" என்று கேட்டாள்.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஆறடிக்கப் பத்து நிமிஷங்கள் இருந்தன. கால் நடையாகப் போனாலும் எட்டு மணிக்குத் திரும்பி விடலாம். அவன் பஸ்ஸில் போக முடிவு செய்திருந்தான். ஆனாலும் பெரியம்மாவிடம் எட்டரை மணிக்குள் வந்து விடுவதாகச் சொல்லி விட்டுக் கிளம்பினான். படியிறங்கினபோது பெரியம்மா ஏதோ முணுமுணுப்பது கேட்டது. ஆனால், அவன் அதைக் கவனிக்காமல் தெருவில் இறங்கி நடந்தான்.

பஸ் ஸ்டாப்பிங்கிற்கு வந்து பஸ் பிடித்து லஸ்ஸில் இறங்கிக் குளத்தங்கரை வரை நடந்து ராமகிருஷ்ணா மடத்திற்குள் நுழைந்தபோது, மரத்தடியில் நின்ற அந்த வெள்ளை வெளி நாட்டுக் காரைப் பார்த்தான் அவன். காரிலிருந்து இறங்கிக் கண்ணாடியை ஏற்றிக் கதவைப் பூட்டிக் கொண்டிருந்தாள், க்ருபா.

அவன் நடை சட்டென்று நின்றது. கண்கள் பனிச்சிட்டன. மெதுவாக அருகில் போய், "ஹலோ" சொன்னபோது சரேலென்று திரும்பினாள் அவள்.

"சஸி...!"

உதட்டோரப் புன்னகையில் கண்களின், பளபளப்பில் அந்தக் குரலின் துடிப்பில் அவனை முழுதுமாய்ப் புரிந்து கொண்டாள் அவள்...



# 11

காரில் சரிந்து அப்படியே நின்று கொண்டாள், க்ருபாகர். அவனை அங்கு சந்தித்த சந்தோஷமும், வியப்பும் மாறாமல் முகத்தில் தங்கிப் போயிருந்தது. உதடு புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டிருந்தது. அந்த உயரமும், பச்சை டீ ஷர்ட்டும், முகத்தை மறைக்கிற பெரிய கண்ணாடியும், முன் நெற்றியில் விழும் தலை முடியும்... அரை வினாடி பார்த்துக் கொண்டேயிருந்தான், சஸி. பின்...

"நீங்கள் எங்கே இந்தப் பக்கம்...?" என்று மெதுவாகக் கேட்டான்.

"அதே கேள்வியைத்தான் நானும் உன்னிடம் கேட்க வேண்டுமென்று நினைத்தேன்!" என்று அவள் சிரித்துக் கொண்டே சொன்னதும் அவனும் சிரித்தான்.

"நான் அடிக்கடி வருகிற இடம் இது. மனசு கஷ்டப்படுகிறபோது -சந்தோஷமாக இருக்கும்போது தேடிக் கொண்டு வருகிற இடம்."

"அப்படியா...?" என்று மீண்டும் புன்னகை செய்தாள் அவள். "இப்போது எது மனசில் இருக்கிறது - சந்தோஷமா, இல்லை கஷ்டமா, சஸி...?"

"அதிசயமாய் இன்று மட்டும் சந்தோஷம்..."

அதைக் கேட்டு அவள் முகம் பனிச்சிட்டது.

"ஸ்வீட்? க்யூட், வெரி க்யூட். அந்தச் சந்தோஷத்திற்கான காரணத்தை நான் தெரிந்து கொள்ளலாமா சஸி...?"

"ஓ எஸ். இன்ஸ்பாக்ட் நானே உங்களைப் பார்த்து சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்..."

"என்னைப் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று நினைத்தாயா...? நிஜமாகவா, சஸி...?"

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்...?" சரேலன்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் அவள்.

"இல்லை, ஒரு வேளை நீ என்னை மறந்துகூட போயிருக்கலாம் என்று நினைத்தேன். அன்று வீட்டிற்கு வந்து விட்டுப் போனதிலிருந்து இந்தப் பதினைந்து நாட்களாக உன்னைப் பற்றின எந்தத் தகவலும் இல்லையே சஸி..."

"அதற்காக... மறப்பதா...? உங்களையா...?" என்று சோகமாகச் சிரித்தாள் அவள் "ஏன் க்ருபா, அது அவ்வளவு சுலபம் என்றா நினைத்தீர்கள்...?"

"சஸி..." என்று நெகிழ்ந்து போய் அவளைப் பார்த்தான் அவன். அரை வினாடி பார்த்துக் கொண்டே இருந்தான். பின் பேச ஆரம்பித்தபோது குரல் கரகரவென்று வந்தது.

"உனக்குத் தெரியாதா, சஸி... தினமும் உன்னை எதிர் பார்த்து, ஏமாந்து, மனசுக்குள் அலையாக அலைந்து பின் எப்படியாவது உன்னை ஒரு தரமாவது பார்த்து விட வேண்டும் என்று அந்தத் திருவல்லிக்கேணித் தெருவில் சுற்றினதெல்லாம் உனக்கு எப்படித் தெரிய முடியும்?"

"நிஜமாகவா...? எங்கள் தெருவில் சுற்றினீர்களா...?"

"ம்..."

"நான் பார்க்கவே இல்லை, க்ருபா..."

"பார்க்காததனால்தானே இந்த அலைச்சல், தவிப்பு எல்லாம்... ஏன் சஸி, அந்த மாதிரி தவிப்பும் அலைச்சலும் உனக்கு இல்லவே இல்லையா?"



சட்டென்று வந்துவிட்ட அந்தக் கேள்வியை அடக்க முடியாமல் கேட்டு விட்டு சங்கடப்பட்டுக் கொண்டு நின்றான் அவன்.

சட்டென்று மனசுக்குள் சின்னச் சிலிர்ப்பாக ஒன்று ஓட, அவனையே பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் சஸி.

'க்ருபா... க்ருபா... இந்த அளவிற்கா நீங்கள் என்னை விரும்புகிறீர்கள்! அதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது. க்ருபா... இந்தப் பிரியத்திற்காக நான் எது செய்தால் தான் என்ன...!'

சற்று நேரத்திற்குப் பின் அவன் நிமிர்ந்து பார்த்தான்.

"ஏன், சஸி, இங்கேயேதான் நின்று பேச வேண்டுமா...?" என்று கேட்டான்.

"இல்லை உள்ளே போகலாம் வாருங்கள்."

"அதைச் சொல்லவில்லை நான்..." என்று சற்றுத் தயங்கினான். பின்-

"வெளியில் எங்காவது போய்ப் பேசலாமே...?" என்று கேட்டான்.

"எங்கே போவது?"

"பீச்சுக்குப் போகலாமா...?"

அவன் சற்று யோசித்துச் சரி சொன்னதும், கார் கதவைத் திறந்து டிரைவிங் ஸீட்டில் உட்கார்ந்தான். அவளுக்காகப் பக்கத்துக் கதவைத் திறந்து விட்டான்.

கச்சேரி ரோடு வழியாகச் சாந்தோம் வந்து காந்தி சிலைக்குப் பக்கத்தில் உள்ள மணலோரத்தில் நிறுத்தி வைத்தான். கண்ணாடிகளை ஏற்றிக் கதவைப் பூட்டிக் கொண்டு, "வா,சஸி..." என்றான்.

இரண்டு பேரும் மணலில் போய் உட்கார்ந்து கொண்டார்கள். சிறிது நேரம் பேச்சில்லாத மௌனத்தில் போயிற்று. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு,

20213
3630403

பின் தூரத்து அலைகள், ஓடுகிற குதிரைகள், எங்கோ சுற்றுப் ராட்டினம் என்று பார்வை மாறி மாறி அலைந்து மறு படியும் முகத்திலேயே தங்கியது. கடைசியில் சஸிதான் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"பேச வேண்டும் என்று அழைத்துக் கொண்டு வந்து விட்டுப் பேசாமல் உட்கார்ந்திருந்தால் என்ன அர்த்தம்...?"

"பேசினால்தானா...?" என்று புன்சிரிப்பாகச் சிரித்தான் அவன்.

அந்த பதிலில் அயர்ந்துப் போனான் அவன். என்ன பதில் அது! 'பேசினால்தானா...?' - யோசித்துப் பார்த்த போது அது எத்தனை உண்மை என்று பட்டது.

"என்ன சஸி அப்படிப் பார்க்கிறாய்..?"

"இந்த மாதிரியெல்லாம் பேச வேண்டுமென்று உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது...?"

"சொல்லட்டுமா... சொன்னால் என்னைத் தப்பாக நினைக்க மாட்டாயே...? நான் வேண்டுமென்றே சொல் வதாக நினைக்க மாட்டாயே?"

"ப்ளீஸ், க்ருபா. தயவுசெய்து இந்த மாதிரியெல்லாம் கேட்காதீர்கள். உங்களை என்னால் தப்பாக நினைக்கவே முடியாது. உங்கள் வரையில் தப்பு என்பது எட்டிக் கூடப் பார்க்காது என்று நினைத்துக் கொண்டிருப்பவள் நான். நீங்கள் எது செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்று தீர்மானித்துக் கொண்டிருப்பவள்."

"நிஜமாகவா, சஸி. அப்படியானால், உன்னிடம் 'யு பி வித் மி' என்று கேட்டால் அது கூடச் சரியாக இருக்கும் என்றா நினைக்கிறாய்...?"

"ஆமாம்."

"நிஜமாகவா...?"

"நிஜமாகத்தான்."



"அப்படியானால், கேட்டு விடுகிறேன், சஸி. யு ப்ளீஸ் பி வித் மி சஸி. என்னோடு - என்னுடையவளாக இரு, சஸி..."

அவள் சட்டென்று நிமிர்ந்து அவனைக் கூர்மையாகப் பார்த்தாள்.

"என்ன சஸி அப்படிப் பார்க்கிறாய்?"

"உங்களோடு வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், உங்களுடையவளாக முடியுமா, க்ருபா...?"

அந்த உண்மை மனசைத் தாக்க, அவன் அடிபட்ட வனாகத் தலையைக் குனிந்து கொண்டான். சிறிது நேரம் கை மணலில் அளைந்தது. எதையோ எழுதி எழுதி அழித்தது. பின் நிமிர்ந்து அவளைப் பார்த்தபோது குரல் குழைந்து வந்தது.

"என்னைப் பொறுத்தவரை-என் மனசைப் பொறுத்த வரை நீ என்னுடையவள்தான் சஸி."

'க்ருபா...!' என்று சட்டென்று அவன் கையைப் பற்றிக் கொண்டாள் அவள். தன் விரல்களோடு அவன் விரல் களைக் கோர்த்து மெல்ல ஒரு தரம் அழுத்தினாள். உதடு லேசாக நடுங்க, அவன் முகத்தைப் பார்த்தாள். பார்வை பளபளத்தது.

"இது போதும் க்ருபா, எனக்கு. இது ஒன்று போதும்..."

அவனும் உணர்ச்சி வசப்பட்டவனாக அவளை நெருங்கி உட்கார்ந்தான். மெல்லத் தோளில் கை போட்டுத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவள் வலது கையைப் பற்றித் தன் உதட்டில் வைத்து மெதுவாக முத்தமிட்டான்.

"யு ஆர் மைன் டியர். ஆல்வேஸ் மைன்!" என்றான். பின் சற்றுத் தயங்கி, "உன்னிடம் நான் ஒன்று சொல்லலாமா, சஸி...?" என்று கேட்டான்.

"சொல்லுங்கள், க்ருபா..."

"ஏன் சஸி, நீயுமா வெறும் கல்யாணத்தினால் ஒருத்தி ஒருவனுக்குச் சொந்தமாகி விட முடியும் என்று நினைக்கிறாய்? இத்தனை புத்திசாலித்தனமான உனக்குக் கூடவா அந்த எண்ணம்...! அது தப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால், அதுதான் சரி என்பதும் இல்லை, சஸி. என்னையும் புவனாவையுமே உதாரணத்திற்கு எடுத்துக் கொள், கல்யாணத்தினால் மட்டுமே மனசு ஒன்றிப் போய் விடாது என்பதைப் புரிந்து கொள்..."

அவன் சற்று நிறுத்தித் தூரத்துக் கடலையே பார்த்துக் கொண்டிருந்தான். பின் அவன் முகத்தைப் பார்த்தான். மெதுவாக...

"நீ 'சில நேரங்களில் சில மனிதர்கள்' பார்த்தாயா, சஸி...?" என்று கேட்டான்.

"ஏன் கேட்கிறீர்கள்?"

"பார்த்தாயா, சொல்லேன்...?"

"ஓ எஸ். என்னால் மறக்க முடியாத படம் அது. மறக்க முடியாதது மட்டுமில்லை, சஸி. என்னை அழவைத்த படமும் கூட. பைத்தியமாக அடித்த படம். நாலைந்து தரம் தனியாக உட்கார்ந்து பார்த்து, அந்தச் சோகத்தில் அமுந்தி-பின் தூக்கம் வராமல், சாப்பிடப் பிடிக்காமல்... என்ன படம் அது! அந்தப் பிரபு மாதிரி, கங்கா மாதிரி, அவர்களுடைய ரிலேஷன்ஷிப் மாதிரி... ஏன் சஸி, அதற்கப்புறம் - மனசு அப்படி இக்கியப்பட்டுப் போனதற்கப்புறம் கல்யாணம் எதற்கு? வெறும் நூறு பேர் சாட்சிக்காகவா? இந்தச் சமூகம் ஒப்புக் கொள்வதற்காகவா...? ஹெல் வித் இட்...!"

"என்ன க்ருபா இது...? ஒரு படத்திற்குப் போய் இப்படிக் கோபப்படுகிறீர்கள்...!"

"கோபமில்லை, சஸி. வருத்தம். வாழவும் விடாமல்-சாகவும் அடிக்காத இந்தப் பாழாய்ப்போன-காய்ந்து சருகாகிப் போன சமூகத்தின் மீது வருத்தம். வெறும் படமா



அது...? நீ கூடவா அதைப் படம் என்று சொல்கிறாய்? இல்லை, சஸி. அது வாழ்க்கை. வித்தியாசமான வாழ்க்கை...

"உன்னை முதன் முதலாகப் பார்த்தேனே... அப்போதே சட்டென்று அந்த கங்கா ஞாபகம்தான் வந்தது. நீதான் என்னுடைய கங்கா என்று தீர்மானித்து-ஏன் சஸி, நீ என்னிடம்-என்னை-எனக்கு அந்த மாதிரி..." எப்படிச் சொல்வது என்று புரியாமல் தடுமாறினான்.

"எனக்கு சொல்லத் தெரியவில்லை, சஸி. எப்படிச் சொல்வது என்றும் புரியவில்லை. 'ஐ லவ் யு' என்று மட்டும் தான் என்னால் திருப்பித் திருப்பிச் சொல்ல முடிகிறது. அதே மாதிரி உறுத்துவதாக இருந்தாலும் சில உண்மைகளைச் சொல்லி விட வேண்டும் என்று தோன்றுகிறது.

"புவனாவை என்னால் விட்டு விட முடியாது, சஸி. அவளைப் பிரிய முடியாது. 'பிரிய மாட்டேன்' என்று நான் அவள் அப்பாவிற்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறேன். அந்தச் சத்தியத்திற்காக மட்டுமில்லை. என்னாலேயே அது முடியாது.

"அதற்காக உன் வாழ்க்கையை-எதிர் காலத்தைப் பாழாக்குகிற தைரியமும் இல்லாமல்-உன்னிடம் கேட்கிற துணிச்சலுமில்லாமல்-சாப்பிடாமல், தூங்காமல்... இப்போதுதானா, சஸி?... வெறும் சாப்பாடும் தூக்கமும் தானா...? நான் சிரித்து எத்தனை நாளாகி விட்டது. நாளா...? எத்தனை வருஷமாகி விட்டது...

"ரொம்ப நாளைக்கப்புறம் அன்று உன்னை வராந்தாவில் பார்த்துச் சிரித்தேனே. அதுதான் நான் வெகு நாட்களுக்கப்புறம் சிரித்த சிரிப்பு. உண்மையாய்ச் சிரித்த சிரிப்பு. என் மனசுக்குள்ளிருந்து தானாக-இயல்பாக...

"நான் ஏன் உன்னைப் பார்த்தேன்? எதற்காக வரவழைத்தேன்? நீ ஏன் இப்படி என் மனசில் ஒட்டிக் கொண்டாய்? ஏன் சஸி, எத்தனைப் பெண்களைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் ஏற்படாத சலனம் இப்போது மட்டும் எதற்காக...? ஐ நோ மை வீக்னெஸ். ஐ

நோ தட் ஐ கெனாட் லீவ் புவனா. அப்படி இருக்கிறபோது இது என்ன, சஸி. உன் மனசையும் சலனப்படுத்தி, உன் வாழ்க்கையையும் நாசமாக்குவதற்கா..?"

"ஷ்..! என்ன க்ருபா இது.." அவள் ஆதரவாக அவன் கையைப் பற்றினாள்.

"என்ன க்ருபா என்று அதட்டினால் உண்மை பொய்யாகி விட முடியுமா, சஸி..? உன்னை என்னால் நீ சொன்ன மாதிரி என்னுடையவளாக்கிக் கொள்ள முடியுமா...? முடியாது என்கிற போது-மறந்து விட முடியாமல், விட்டு விடுகிற சக்தியும் இல்லாமல்.. சஸி, இது தப்போ, சரியோ எனக்குத் தெரியாது. புவனாவிற்குச் செய்கிற துரோகமா என்பதும் புரியவில்லை. ஆனால், இழக்க என்னால் முடியாது, சஸி. இதை யோசித்து-ஒரு முடிவும் தெரியாமல், இந்தப் பதினைந்து நாட்களாக மனசுக்குள்ளேயே அலைந்து அலைந்து, நிறைய சிகரெட் பிடித்து.."

"போதும், க்ருபா!" என்று மெலிசான குரலில் அதட்டினாள் அவள். "இனிமேல் நீங்கள் அலைய வேண்டாம். எதைப் பற்றியும் யோசிக்க வேண்டாம். ஒன்று மட்டும் உங்களுக்குப் புரிந்தால் போதும், க்ருபா..."

என்ன என்று கேட்காமல் தலையைக் குனிந்து மௌனமாக உட்கார்ந்திருந்தான் அவன். "நான்தான் உங்களுடைய கங்கா என்பது புரிந்தால் போதும். ஆனால், அந்தப் பிரபு மாதிரி நீங்களும் கடைசியில் அப்படிக் கேட்க மாட்டீர்களே.. என்னை விட்டுப் போய் விட மாட்டீர்களே..?"

தலை நிமிர்ந்தபோது அவன் கண்ணோரத்தில் நீர் கட்டியிருந்தது. உதடுகள் லேசாக நடுங்கின.

"உன்னை விடுவதா..? நெவர் சஸி. நெவர்."

"ப்ராமிஸ்..?"



"ப்ராமிஸ்."

நீட்டின அவள் வலது கையில் தன் கையை வைத்தான். பின் தன் கையோடு சேர்த்துக் கொண்டான். மெல்ல அவள் தோளில் கை வைத்து அணைத்துக் கொண்டான்.

அப்புறம் பேச்சில்லாத மௌனத்தில் வெகு நேரம் அப்படியே போயிற்று.

# 12



அன்று இரவு சாந்தியிடம் மொத்த விவரத்தையும் சொன்னாள், சஸி. சொல்லி முடித்தபோது கண்ணோரம் கசிந்து கன்னத்தில் கோடாக வழிந்தது. பதறிப்போய்ச் சாந்தி அவள் தோளில் கை வைத்தபோது அவள் அந்தக் கையைப் பற்றி முகத்தை அதில் பதித்துக் கொண்டாள். அந்த அழுகைக்கிடையில் மெலிசான குரலில் பேசினாள்:

"ப்ளீஸ் சாந்தி. அலவ் மி டு கோ தேர் சாந்தி. மனசில் இடம் கொடுத்த பின் வெறும் உடம்பு என்ன பெரிய விஷயம் சாந்தி. ஐ திங்க் யு கேன் அண்டர்ஸ்டாண்ட் மி."

அந்த அழுகையையும் குமுறலையும் பார்த்த பின்பு-எல்லாவற்றையும் கேட்ட பின்பு, சாந்தியால் எதுவும் சொல்ல முடியவில்லை. எது சொன்னாலும் சரியாக இருக்காது என்று தோன்றவே சட்டென்று அந்த முகத்தை நிமிர்த்தி-

"நீ போ, சஸி. உன்னை இனிமேல் நான் தடுக்க மாட்டேன். பி ஹேப்பி அண்ட் மேக் ஹிம் ஆல்ஸோ ஹேப்பி!" என்றதும், சஸி நம்ப முடியாமல் கண்ணகல அவளைப் பார்த்தாள்.

"என்ன அப்படிப் பார்க்கறே?"

"நீ சொல்றது நிஜம்தானான்னு பார்க்கறேன்."

"நான் எப்போதாவது உன்கிட்டே பொய் சொல்லி யிருக்கேனா?"

"தேங்க்யு, சாந்தி. தேங்க்யு!" என்று அவள் மடியில் மீண்டும் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் கிளம்பிப் போனபோது, க்ருபா அவளுக்காக வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தான். அவளைப் பார்த்ததும் முகம் சட்டென்று மலர்ந்தது. மெலிசான குரலில் குட்மார்னிங் சொன்னான். பின்-

"புவனாவிடம் நேற்று நீ போன் பண்ணினதாகச் சொன்னேன். நீயும் அதையே சொல்" என்றான்.

அவர்கள் மாடிக்குப் போனபோது புவனா பனிச்சென்று இருந்தாள். குளித்து, உடை மாற்றி, தலை வாரிப் புதுசாகத் தெரிந்தாள். கையில் ஏதோ மணிகளை வைத்துக் கோர்த்துப் பை பின்னிக் கொண்டிருந்தாள். எதிரில் மணிகள் நிரம்பிய பிளாஸ்டிக் பெட்டியும், மெலிசான நைலான் கயிற்றுச் சுருளும், சின்னக் கத்திரிக்கோலும் இருந்தன.

சஸியைப் பார்த்ததும் கோர்ப்பதை நிறுத்தி விட்டு, 'வா' என்று தலையாட்டினாள். பின் ஆயாவைக் கூப்பிட்டு அந்த மணிகளையும், ஒயரையும், பாதி கோர்த்துக் கொண்டிருந்த பையையும் கொடுத்து உள்ளே கொண்டு போய் வைக்கச் சொன்னாள். பின் மூன்று டம்ளர் ஜூஸிற்குச் சொல்லிவிட்டு சஸியைப் பார்த்தாள்.

"இன்றைக்கு நானே ஜூஸ் கொண்டு வரச் சொல் விட்டேன்!" என்று க்ருபாவைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் சஸி சற்று பயந்துதான் போனாள். அன்றைய சம்பவத்தை இவள் மறக்கவே இல்லை என்பதைப் புரிந்து கொண்டாள். மறக்காதது மட்டு



மில்லை; இப்போது கூட அதற்குத் தண்டனை கொடுக்கிற மாதிரி என்ன பார்வை!

"எப்போது வந்தாய்?"

அந்தக் கேள்வியில் கலைந்து நிமிர்ந்தாள், சஸி.

"இப்போதுதான்."

"இப்போதுதான்னால்... நிஜமாகவே இப்போது தானா? இல்லே, அன்னிக்கு மாதிரி கீழே உட்கார்ந்து சாவகாசமாகப் பேசிட்டு வரியா?"

சஸி தன் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக் கொண்டாள். பெரியம்மாவின் கேள்விகளை விட இது ஒன்றும் பெரிசில்லை என்று நினைத்துக் கொண்டு-

"இல்லை. இப்போதுதான் வந்தேன்!" என்றாள்.

"சரி, நம்பறேன். நேத்து நீ போன் பண்ணினாயாமே?"

"ஆமாம்."

"என்ன சொன்னே?"

"சரின்னு சொன்னேன்."

"எதற்குச் சரி சொன்னே?"

"எதற்காக என்னை வரவழைத்தீர்களோ அதற்கு."

"அதற்கு இத்தனை நாட்களா தேவைப்பட்டது?"

சஸி பேசாமல் இருந்தாள்.

"திடீர்னு இப்போ ஏன் சரி சொல்லணும்னு தோணித்து?"

"என் நிலைமை அப்படி."

"அந்த நிலைமை அன்னிக்கு இல்லையா?"

"இல்லை!"

"நடுவில் என்ன மாற்றம்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

பொய் சொல்ல வராமல் அவன் மெதுவாகத் திரும்பி க்ருபாவைப் பார்த்தான்.

"அவர்தான் மாற்றமா?" என்று அதே பார்வையோடு கேட்டாள், புவனா.

கேள்வி நெருப்பாக மனசில் விழ, சஸி 'என்ன இது?' என்று கேட்கிற பார்வையாய்ப் பார்த்தாள்.

"அப்படிப் பார்த்தால் என்ன அர்த்தம்? ஆமாம்னு அர்த்தமா, இல்லைன்னு அர்த்தமா?"

"என்ன புவனா இது?" என்று க்ருபாகர் முதல் தடவையாய்ப் பேச ஆரம்பித்ததும் அவள் அவனை அடக்கினாள்.

"நீங்க இப்போ இதுல தலையிட வேணாம். வெறும் சாட்சியாய்ப் பார்த்துக் கொண்டு நின்றால் போதும்!"

அதைக் கேட்டு க்ருபா பேசாமல் இருந்தான். பின் சஸியே பதில் சொன்னாள். குரல் பயப்படாத பாவனையில் தைரியமாய் அவள் சொன்னதை மறுக்கிற மாதிரி வந்தது.

"இல்லை."

"என்ன இல்லை?"

"என் மாற்றத்திற்கு யாரும் காரணமில்லை."

"அப்படியானால் எது காரணம்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

மீண்டும் பதில் சொல்லாமல் தலை குனிந்து நின்றிருந்தாள் சஸி. அப்போது ஆயா ஜூஸ் கொண்டு வரவே சிறிது நேரம் மௌனமாகப் போயிற்று. காலித் தம்ளர்களை எடுத்துக் கொண்டு ஆயா போனதும் மறுபடியும் புவனாவே பேச்சை ஆரம்பித்தாள்.

"இதோ பார், உனக்கு ஒன்று மட்டும் அழுத்தமாகச் சொல்லி வைக்கிறேன். வெறும் பணத்திற்காகத்தான் நீ



இதைச் செய்ய வேண்டுமே தவிர வேறு எதற்கும் இல்லை முக்கியமாக அவருக்காக இல்லை. அப்புறம் அவருடனேயே அவருக்கு இரண்டாவது பெண்டாட்டியாகவோ-வேறு எதுக்காகவோ தங்கிவிடலாம்னு நினைக்காதே. அந்த மாதிரி நினைப்பிருந்தால் இப்போது கிள்ளி எறிஞ்சுடு. அதெல்லாம் நடக்காத விஷயங்கள். நடக்க நான் அனுமதிக்கவும் மாட்டேன்.

"குழந்தை ஆசையால் - வேற எந்த வழியும் சாத்திய மில்லை என்கிற ஒரே காரணத்தால்தான் நான் இதற்குச் சம்மதித்தேனே தவிர வேறு எதற்கும் இல்லை. அவரோடு இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் நீ இதை ஞாபகம் வச்சுக்கணும். நீ மட்டுமில்லை. நான் கூடத்தான். யாருமே செய்யத் துணியாத ஒரு காரியத்திற்குத் துணிஞ்சிருக்கேன் என்பதையும் ஞாபகம் வச்சுக்கணும்.

"குழந்தை பிறந்து மூணு மாசமோ நாலு மாசமோ ஆன பின்னால் குழந்தையைக் கொடுத்து விட்டுப் போகத் தயாராகணும். வேறு எந்தத் தொடர்பும் அதற்கு மேல் உனக்கு இங்கு கிடையாது. அதன் பின் நீ யாரோ நாங்க யாரோ தான். அது மட்டுமில்லை. இந்த விஷயம் நம் மூணு பேரைத் தவிர வேற யாருக்கும் தெரியக் கூடாது. யாராவது கேட்டால் நீ என்னைக் கவனிச்சுக்க வந்திருக்கேன்னு சொல்லணும். என்ன, புரிகிறதா?"

சஸி ஒன்றும் சொல்லாமல் அடிபட்ட பார்வையோடு பேசாமல் நின்றாள். அந்தப் பார்வை க்ருபாவை மிகவும் வேதனைப்படுத்தி இருக்க வேண்டும். மெதுவாக அவன் பேச ஆரம்பித்தபோது மீண்டும் கையமர்த்தினாள் புவனா.

"நீங்க ஒண்ணும் சொல்ல வேண்டாம். அவளுக்குச் சொன்னதெல்லாம் உங்களுக்கும் சேர்த்துச் சொல்லப் பட்ட விஷயம்தான். அப்புறம் என்னை ஏமாற்ற நினைச்சால்-எனக்குத் துரோகம் பண்ணப் பார்த்தால் யு கான்ட் ஸி மி அகெய்ன்... நான்... நான்..."

அவள் மேலே பேச முடியாதவளாக அழுகையில் உடைந்த போது க்ருபா அருகில் போய்ச் சமாதானப் படுத்தினான்.

அவள் பேசாமல் விசும்பிக் கொண்டிருக்கவே, அந்த முகத்தை நிமிர்த்திக் கண்களைத் துடைத்தான்.

"இத்தனைக்கும் நான் உன்னை விடவில்லையே புவனா. இனிமேலா உன்னை விட்டு விடுவேன் என்று நினைக்கிறாய்? அதுவும் அப்பாவிற்குச் சத்தியம் செய்து கொடுத்த பின்னுமா?"

அவள் சரேலென்று நிமிர்ந்தாள்.

"அப்படியானால் அப்பாவிற்காகத்தான் என்னோடு இருப்பதாகச் சொல்கிறீர்களா?"

"டோன்ட் பீ ஸில்லி புவன். ஐ ப்ராமிஸ் தட் ஐ வோன்ட் லீவ் யு..."

"அவனையும் அதே மாதிரி ப்ராமிஸ் பண்ணச் சொல்லுங்கள்."

"எதே மாதிரி? இதே மாதிரியா, 'ஐ வோன்ட் லீவ் யு'ன்னா?"

"இன்னை குழந்தை பிறந்த கொஞ்ச நாளில் நமக்கும் அவளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லேன்னு. குழந்தை தன்னுடையது இல்லேன்னு . வெறுமனே கையடிச்சுக் கொடுத்தால் போதாது. எழுதிக் கொடுக்கணும்."

"எழுதிக் கொடுக்கணுமா?" என்று சரேலென்று சஸியைப் பார்த்தான் அவன் அவள் தலை நிமிராமல் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

"என்ன புவனா, இது? இதற்குப் போய் எதற்கு எழுத்தும் சாட்சியும். மனச்சாட்சி போறாதா?"

"போறாது."

"அப்படியானால் நீயே கேள்."



புவனா கேட்காமல் கேட்கிற பாவனையில் சஸியை நிமிர்ந்து பார்த்தாள். அதற்கும் அவள் தலை உயராமற் போகவே,

"என்ன, சஸி?" என்றாள்.

அதே மௌனத்தில் அவள் நிமிர்ந்து பார்த்தபோது, கண் மனசைப் போலவே கலங்கிக் கிடந்தது. குரல் கேள்வியாக வந்தது.

"உங்க கிட்டே ஒன்று மட்டும் கேட்கலாமா?"

"கேளு."

"இதற்கெல்லாம் வெறும் காகிதமும், கையெழுத்துமா சாட்சியாகி விட முடியும்? அப்படியே இருந்தாலும் அதை மீற எத்தனை நாழியாகும்? அப்புறம் நீங்கள் என்னை என்ன செய்ய முடியும்? கோர்ட்டிற்கு இழுக்க முடியுமா? வக்கீல் வைத்து வாதாடி நமக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தை எல்லாருக்கும் சொல்ல முடியுமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நான் உங்களை நம்புகிற மாதிரி நீங்களும் என்னை நம்பணும். இதைத் தவிர எனக்கு வேறு எதுவும் சொல்லத் தோணலை."

அதைக் கேட்டுப் புவனா சிறிது யோசித்தாள். பின்-

"சரி. எழுதித் தர வேண்டாம். ஆனால், முதலில் உன்னை எங்க டாக்டர் கிட்டே காட்டி செக்-அப் பண்ணணும். நீ இப்போதே அந்த மாதிரி எதுவும் இல்லைன்னு நிரூபிக்கணும்."

"அந்த மாதிரின்னா... எந்த மாதிரி...?"

"இப்போ நீ ப்ரெக்னென்ட் இல்லைன்னு. ஒரு வேளை அப்படி இருந்து அதை இந்தச் சந்தர்ப்பத்திற்கு உபயோகிச்சு என்கிட்டேயிருந்த பணத்தையும் வாங்கிண்டு..."

"என்ன?"

'சீ' என்று அந்த இடத்தை விட்டு ஓடி விட வேண்டும் போல் இருந்தது, சஸிக்கு.

'நீயும் உன் பணமும்! அதற்காகவா நான் இதைச் செய்கிறேன் என்று நினைத்தாய்? க்ருபா... க்ருபா... உங்களுக்காக... எல்லாமே உங்களுக்காக. உங்கள் விஷயம் என்பதால் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, எதற்கும் பதில் சொல்லாமல் நின்று... நானா...?'

'எப்படிப் பேசுகிறாய், புவனா? எவ்வளவு சுலபமாகப் பேசுகிறாய். நானா...? என்னைப் பார்த்தா...?'

அவள் மெதுவாகத் தலையை உயர்த்தி க்ருபாவைப் பார்த்தபோது அவனும் அவளைப் பார்த்தான்-பார்வையில் கெஞ்சி. ஸாரி, சஸி, வெரி ஸாரி. அவளுக்காக நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் 'மன்னிப்புக் கேட்டுக் கொண்டு -தயவு செய்து எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்ட மாதிரி இதையும் பொறுத்துக் கொள்ளேன்' என்று வேண்டிக் கொண்டு...

அந்தப் பார்வையில் மனசில் பட்ட நெருப்பு அணைய சட்டென்று நிதானமானாள், சஸி.

"ஓகே, நான் மெடிக்கல் செக் - அப்பிற்கு ரெடி!" என்றாள்.

"சரி. அப்படியானால், நீ ஊருக்குப் போய் உன் அம்மா, தம்பி, தங்கைகளைப் பார்த்து விட்டு வந்து விடு. அவர்களிடம் வெளிநாட்டில் வேலை கிடைத்து, போகப் போவதாகச் சொல்லி பணத்துடன் வா. இப்போது தங்கி இருக்கிற இடத்திலும் அதே போல் சொல்லி விடு. அப்புறம் உன் பெட்டி படுக்கையோடு இங்கே வா.

"அதற்குள் நாம் எந்த ஊருக்குப் போவது என்பதை முடிவு செய்து வைக்கிறேன். அநேகமாகப் பங்களூர் தான் சரிப்படும். அங்கிருந்து டெலிபோனில் கம்பெனி விவகாரங்களைக் கவனிக்க முடியும். நினைத்தால் ஒரே நாளில் கிளம்பி மெட்ராஸ் வந்து திரும்பியும் வந்து விடலாம்.



"அங்கே எங்களுக்கு ஒரு வீடு கூட இருக்கிறது. நாங்கள் இதுவரை போய்த் தங்காத வீடு.

"இங்கேயும் நான் வேறு பெரிய டாக்டர்களிடம் காட்ட ஊருக்குப் போவதாகச் சொல்லி விடுகிறேன். என்னைப் பார்த்துக் கொள்ள நீயும் அவரும் வருகிறீர்கள். அப்புறம் பெரிய ஆபரேஷன் பண்ணினதில் எனக்குக் குழந்தை பிறக்கிறது. நாங்கள் குழந்தையோடு திரும்பி விடுவோம். நீ அங்கிருந்தே நேராக உங்க ஊருக்குப் போகலாம்..."

சஸி அயர்ந்து போனாள். 'யோசித்து யோசித்து எவ்வளவு சாமர்த்தியமாக இவள் காயை நகர்த்துகிறாள். இவளுடைய செஸ் ஆட்டத்தில் தான் ஒரு மேட் ஆகிப் போன ராஜா...?'

அது தானா, இல்லை க்ருபாவா என்ற சந்தேகம் வர அவள் நிமிர்ந்து பார்த்தபோது அவனும் அதே மாதிரி அதே பார்வையில் அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

## 13



டாக்டர் பரிசோதித்து சரி சொன்னதும் சஸி ஊருக்குக் கிளம்பினாள். க்ருபா ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். கூடை கூடையாகப் பழங்களும் பிஸ்கட்டுகளும் வாங்கிக் கொண்டு வந்தான்.

"எதற்கு க்ருபா இதெல்லாம்?" என்று சஸி கேட்ட போது வருத்தம் தோயச் சிரித்தான்.

"நீ செய்கிற மாதிரி எதுவும் என்னால் செய்ய முடியாது, சஸி. இப்படி வெறும் பொருளாகத்தான் செய்ய முடியும்..." என்று சொல்லிக் கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டான். அதற்கு மேல் பேச முடியாமல் நின்றான்.

அப்போது மட்டுமில்லை. நிறையத் தடவை அவன் அப்படித்தான் ஆகிப் போகிறான். அவளைப் பார்க்கிற போதே பார்வை உருக-குரல் தழுதழுக்க - கைகளைப் பிடித்துக் கொண்டு என்ன சொல்வது என்று புரியாமல் வெற்றுப் பார்வையாய்ப் பார்த்துக் கொண்டு...

"நான் உன்னை என்ன கேட்டேன், சஸி... என் கங்காவாக இரு என்றுதானே... ஆனால், உனக்கு முன்னால் அந்த கங்கா ஒன்றுமே இல்லை, சஸி... அவள் எதுவும் புரியாமல் தன்னை அவனுக்குக் கொடுத்தவள். அதுவும் தானாகக் கொடுக்கவில்லை. அவனாகத்தான் எடுத்துக் கொண்டான். ஆனால், நீ... நீ சஸி?" என்று சொல்லிச் சொல்லி உருகிப் போனான், உடைந்து போனான்.

அப்போதும் ஸ்டேஷனில் அந்த மாதிரி ஏதோ ஆரம்பிக்கவே சட்டென்று அவனை நிறுத்தினாள் சஸி.

"க்ருபா... இன்னொரு தரம் இப்படிப் பேசினால் நான் ஊரிலிருந்து திரும்பி வரவே மாட்டேன். இனிமேல் இப்படியெல்லாம் பேசாதீர்கள். ப்ளீஸ், பேச மாட்டேன் என்று சொல்லுங்கள்."

அவன் ஒரு வினாடி அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்து பின், 'ஓகே. சஸி'. என்றான். அதன் பின்பு சிறிது நேரம் பேச்சில்லாமற் போயிற்று. ரயில் கிளம்பப் போகிற அறிவிப்பிற்கும், பச்சை விளக்கையும் தொடர்ந்து சட்டென்று நிதானமாய் ஆரம்பித்து, பின் வேகமாயிற்று. அவன் உருவம் சின்னதாகிக் ...ட்டத்தில் மறைகிறவரை கையாட்டினாள், சஸி. பின் யாரிடமும் எதுவும் பேசாமல் வெளியில் பார்த்துக் கொண்டு வந்தாள்.

ஊருக்குப் போனதும் போஸ்ட் ஆபீஸிலிருந்து க்ருபாவின் ஆபீசுக்குப் போன் பண்ணினாள். தான் சௌகரியமாய் வந்து சேர்ந்ததைத் தெரிவித்தாள். 'எப்போது வருவாய், சஸி?' என்று அவன் கேட்டதும் -

"பத்தே நாள். க்ருபா..." என்று சொல்லிப் போனை வைத்தாள்.

அவளை எதிர்பார்க்காத அம்மாவும், தங்கை தம்பிகளும் சந்தோஷமாக வரவேற்றார்கள்.

"எனக்கா' இவ்வளவு பழங்களும் பிஸ்கெட்டுகளும்... எங்கேயாவது வேலை கிடைச்சிருக்கா..." என்று கேட்டார்கள். அரை வினாடி தயங்கி, தனக்குச் சிங்கப்பூரில் வேலை கிடைத்திருப்பதாகச் சொன்னாள் சஸி. இரண்டு வருட காண்ட்ராக்ட் என்று நம்ப வைத்தாள். அதுவரை அவளைப் பார்க்க முடியாது என்று தெரியப்படுத்தினாள். நடுவில் எது தேவையானாலும் சாந்திக்கு எழுதச் சொன்னாள்.

நிறைய சாமான்களும், துணிகளுமாக வாங்கிக் கொடுத்து விட்டுக் கிளம்பினபோது கண்களில் நீர் நிறைந்தது. அவர்களை ஏமாற்றுகிற குற்ற உணர்ச்சி மனசை இறுக்கியது. ஆனாலும், அம்மா இனிமேல் உழைக்க வேண்டாம் என்பதில் - சாப்பாட்டிற்கும் துணிக்கும் கஷ்டப்பட வேண்டாம் என்பதில் ஒரு நிம்மதி ஏற்பட்டது.

அந்த நிம்மதியுடன் செண்ட்ரலில் இறங்கி நேராகப் பெரியம்மாவின் வீட்டிற்குப் போனாள். பெரியம்மாவிடமும் அதே சிங்கப்பூர் விஷயத்தைச் சொல்லி நம்ப வைத்தாள். பின் சாந்தியின் கைகளைப் பிடித்துக் கொண்டு குரல் கரகரக்க 'வரட்டுமா...?' என்ற போது கண்களில் நீர் தளும்பியது. சாந்தியின் கண்களும் கலங்கிப் போயிற்று.

"திரும்பவும் உன்னை எப்போது பார்க்க முடியும், சஸி."

"தெரியவில்லை சாந்தி. அநேகமாக ஒரு வருஷத்திற்கப்புறம்தான் பார்க்க முடியும் என்று நினைக்கிறேன். அதற்கு முன்னால் யாரும் என்னைப் பார்ப்பதை -

யாருக்கும் இது தெரிவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்று நினைக்கிறேன்."

"உன் க்ருபா கூடவா சஸி..?"

'என் க்ருபா..!' சஸி அவளைக் கேள்விக் குறியாகப் பார்த்துப் பின் சோகமாகச் சிரித்தாள்.

"அவர் விரும்பினால்கூட முடியாது, சாந்தி. புவனாவும் எங்களுடன்தான் இருக்கப் போகிறாள். பங்களூருக்கு வரப் போகிறாள்..."

"அப்படியானால் கடிதமாவது எழுதுவாயா, சஸி..?"

"தெரியலை. பார்க்கணும். போனதும் ஒரு லெட்டர் போட்டு விடுகிறேன். ஆனால் நீதான் எப்படிப் பதில் எழுதுவாய் என்பது தெரியவில்லை. அது புவனாவின் கையில் கிடைத்தால்..?"

"இதற்கு க்ருபாவைக் கேட்டு ஏதாவது ஒரு வழி கண்டுபிடி சஸி.. அப்புறம்... அப்புறம் நீ கன்ஸீவ் ஆனால் உனக்குக் குழந்தை பிறந்தால் எனக்குத் தெரிவிப்பாயா, சஸி..?"

"நிச்சயமாக. தெரிவிக்கிறது மட்டுமில்லை, எப்படியாவது நீ வந்து ஒரு தடவை பார்க்கணும். குழந்தையை மட்டுமில்லை. க்ருபாவைக் கூடப் பார்க்கணும்..."

"பார்க்கணும்னுதான் எனக்கும் ஆசை; ஆனால், எங்கே முடியப் போகிறது..?"

சஸி சிறிது நேரம் யோசித்தாள். பின் சட்டென்று பனிச்சிட்ட முகத்தோடு அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏன் முடியாது, சாந்தி? நாங்கள் நாளன்றைக்கு ப்ளேனில் பங்களூர் கிளம்புகிறோம். நீ விமான நேரத்தைக் கண்டு பிடித்து ஏர்போர்ட்டிற்கு வாயேன். பேச முடியாது போனாலும் பார்த்துக் கொள்ளலாமே... க்ருபாவைத் தூரத்தில் நின்றாவது பார்க்கலாமே..?"



உடனே சாந்தியும் முகம் பனிச்சிடச் சரி சொன்னாள். சஸியுடன் டாக்ஸி ஸ்டாண்ட் வரை கூட வந்தாள். டாக்ஸி கண்ணை விட்டு மறைகிறவரை பார்த்துக் கொண்டு நின்றாள். பின் 'என்ன பெண் இவள்' என்று நினைத்துக் கொண்டபோது மனசு கனத்துப் போயிற்று. அதே கனத்துடன், வீட்டிற்குத் திரும்பினாள். சஸி இல்லாத அந்த வீட்டை நினைத்துப் பார்த்தபோது அந்தக் கனம் இன்னும் அதிகமாயிற்று.

அதே மாதிரி சஸிக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. தன்னை முழுசாகப் புரிந்து கொண்ட ஒருத்தியும் பிரிந்து போகப் போவதை நினைத்து மனசு சங்கடப்பட்டது. டாக்ஸி எலியட்ஸ் ரோடு வழியாக போயஸ் கார்டனில் திரும்பி அந்த வீட்டின் வாசலில் நிற்கிறவரை அந்தக் கஷ்டமும் வருத்தமும் குறையவில்லை. க்ருபாவைப் பார்த்ததும் அந்த வருத்தமும் சற்று அடங்கிற்று.

டாக்ஸியிலிருந்து அவள் இறங்குவதைப் பார்த்த உடனே ஆபீஸ் அறையில் ஏதோ ஒரு ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்த க்ருபா நாற்காலியைத் தள்ளி விட்டு எழுந்து வந்தான்.

"வா, சஸி. எப்போது வந்தாய்..?" என்று கேட்டான்.

"காலையில்தான் வந்தேன்."

"ஊரில் எல்லோரும் சௌக்கியமா? உன் அம்மா, தம்பி தங்கைகள்...?"

"எல்லோரும் சௌக்கியம்தான்."

"அவர்கள் என்ன படிக்கிறார்கள்..?"

சஸி சொன்னாள். அவன் நிதானமாகக் கேட்டுக் கொண்டான். அம்மாவின் உடம்பைப் பற்றி விசாரித்தான். பின்-

"போ, சஸி. குளித்து விட்டு வா, சாப்பிடலாம்!" என்றான்.

சஸி தனக்குக் கொடுக்கப்பட்ட அறைக்குப் போய்ப் பெட்டியை வைத்து விட்டு ஷவரின் அடியில் நின்றாள். அந்தக் குளிர்ச்சியில் மனசும் உடம்பும் சிலிர்த்துப் போயிற்று. தலையைத் துவட்டி டவலால் சுற்றி முடிந்து கொண்டு வெளியில் வந்தாள். அதே கருநீல வாயில் புடவையுடன் அறையை விட்டு வந்த போது க்ருபா அவளுக்காகச் சாப்பிடக் காத்துக் கொண்டு நின்றான்.

" வா, சஸி. பிரயாணமும் அலைச்சலும்... ரொம்பப் பசியாக இருக்கும்..." என்றான்.

ஆனால், மாடியிலிருந்து புவனா கீழே இறங்கி வந்ததும் அவளைச் சாப்பிடக் கூப்பிடவில்லை. "நீ உன் அறைக்குப் போ. சாப்பாடு அங்கேயே வரும்!" என்றாள். நீ நிற்க வேண்டிய இடம் அதுதான் என்று காட்டுகிற மாதிரி- அந்த வரம்பை மீறாதே என்று எச்சரிக்கிற மாதிரி தோன்றியது. வெறும் சாப்பாட்டிற்கே இந்த எச்சரிக்கை என்றால் மீதி விஷயங்களுக்கு...? அதுவும் க்ருபாவின் விஷயத்திற்கு...? நினைக்கவே பயமாகத்தான் இருந்தது.

அதோடு அறைக்கு வந்தபோது பின்னாலேயே சாப்பாடும் வந்தது. ஓட்டல் சாப்பாடு மாதிரி ஒரு தட்டால் மற்றொரு தட்டை மூடி ஆயா கொண்டு வந்தாள். சாப்பிடப் பிடிக்காமல் சிறிது நேரம் அளைந்து விட்டுப் பின் கை கழுவிக் கொண்டு வந்தாள். கூடவே புவனாவும் அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன, சாப்பிடலையா...?" என்று கேட்டாள்.

"இல்லை, பசிக்கலை...?" என்று எழுந்து நின்றாள், சஸி.

"பரவாயில்லை. உட்கார்ந்துக்கோ. ஏன் பசிக்கலை...?"

"ரயிலில் வந்த அலைச்சல். எதுவும் பிடிக்கலை."

"பணத்தை அம்மாவிடம் கொடுத்தாயா...?"

"ம்..."



"என்ன சொன்னாய்?"

"வேலை கிடைத்துச் சிங்கப்பூர் போகப் போவதாக..."

"நம்பினாளா...?"

"ம்... என் அம்மா எதையும் நம்புவாள்."

"வேறு எதவும் கேட்கவில்லையா?"

"இல்லை...?"

"கடிதத் தொடர்போ, வேறு எந்த விதமான தொடர்புகளுமோ இருக்க கூடாது என்பதைத் தெரியப் படுத்தினாயா...?"

"ம்..."

"நாளைய மறுநாள் நாம் கிளம்புகிறோம் என்பது தெரியுமா...?"

அதன்பின் புவனா ஒன்றும் கேட்கவில்லை. ஜன்னல் வழியாகத் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் திரும்பி மறுபடியும் சஸியைப் பார்த்தாள்.

"உனக்குத் தேவையான அளவிற்குப் புடவை ஜாக்கெட் எல்லாம் இருக்கா...?"

"ம்..."

"எத்தனை புடவைகள் இருக்கு...?"

"மூன்று."

"என்ன...?"

"மூன்று புடவைகள்."

அவளையே அரை வினாடி இமைக்காமல் பார்த்தாள், புவனா. பின் -

"சாயந்திரம் மூன்று மணிக்கு என்னோடு கிளம்பி வா. கொஞ்சம் புடவைகளும் ரவிக்கைத் துணிகளும் வாங்கித்

தருகிறேன். நாளைக்குள் டெய்லரிடம் கொடுத்துத் தைத்துக் கொண்டு விடலாம்..."

"வேண்டாம். எனக்கு இருக்கிற புடவைகளே போதும்."

"சொன்னால் கேள், சஸி. நீ இன்னும் பழைய சஸி இல்லை. இன்னியிலிருந்து புது சஸி. எங்கள் சஸி என்பதை ஞாபகம் வைத்துக் கொள். மூன்று மணிக்குத் தயாராக இரு. அதுவரை அறைக் கதவை மூடிக் கொண்டு நிம்மதியாகப் படுத்துத் தூங்கு. ஏதாவது வேண்டுமானால் ஆயாவைக் கேள். என்ன..." என்று சொல்லி விட்டுப் போனாள்.

சஸி பதில் எதுவும் சொல்லவில்லை. அவள் போனதும் அறைக் கதவை மூடிக் கொண்டாள். படுக்கையில் படுத்தபோது தூக்கம் வரவில்லை. ஏதோ நினைவிற்கு வந்து, மனசைப் பாரமாக அழுத்திற்று. தான் சின்ன வயசில் ஆற்றங்கரையில் விளையாடினது ஞாபகத்திற்கு வந்தது. ஆற்றின் ஈரமான மணலில் காலை வைத்து பாதத்திற்கு மேல் பெரிதாய் மண் குவித்துக் கையால் தட்டிக் கெட்டியாக்கி பின் பாதத்தை மெதுவாக வெளியில் இழுத்தால் மணல் வீடு.

அந்த மாதிரி எத்தனை தடவைகள். எத்தனை மணல் வீடுகள். சரிவதாய், ஸ்திரமில்லாததாய், ஆதாரமற்றதாய்... அப்போதாவது சின்ன வயசு. மளமள வென்று கற்பனைகளை வளர்த்துக் கொள்கிற வயசு. இப்போது என்ன...? எதற்காக இப்படி மனசில் வீடு கட்டி...? இது குழந்தைத் தனமா...? இல்லை, எல்லாம் புரிந்து பெரிய மனிதத்தனமா? என்ன சொல்வது இதை? எப்படிச் சொல்வது...! எதற்காக இதெல்லாம்...?

வெளியில் போர்டிகோவிலிருந்து காரைக் கிளப்புகிற சத்தம் கேட்டதும் அவள் எழுந்து போய் ஜன்னல் திரையைத் தள்ளிவிட்டுப் பார்த்தாள், க்ருபாகர்தான்.

ஜன்னலில் பனிச்சிட்ட அந்த முகத்தைப் பார்த்ததும் அவள் கண்களும் பனிச்சிட்டன. யாரும் தன்னைக் கவனிக்க



வில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, "சாப்பிட்டாயா...?" என்று சைகை காட்டினான்.

அவள் சிரித்துக் கொண்டே ஆயிற்று என்று தலையாட்டினாள். அந்த கண்களில் தெரிந்த அன்பையும், பரிவையும் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'இதற்காகத்தான், இதற்காக மட்டுமேதான்...' என்று நினைத்துக் கொண்டாள். அவன் மெதுவாகக் கையாட்டி விட்டுப் போனதும் திரும்பவும் வந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள்.

பத்து நிமிஷம் போயிருக்கும். புவனா கதவைத் தட்டுகிற சத்தம் கேட்டது. எழுந்து திறந்ததும்-

"ரெடியாக இருக்கிறாயா...?" என்று கேட்டாள் புவனா. அவள் தலையாட்டினதும்,

"காப்பி சாப்பிட்டாயா...?" என்று விசாரித்தாள்.

"இல்லை, இப்போது வேண்டாம்."

"என்ன வேண்டாம்...? ம்...? மத்தியானமே சரியாகச் சாப்பிடவில்லை... இதோ பார் சஸி, நீ உடம்பைச் சரியாகப் பார்த்துக் கொண்டால்தான் என் குழந்தையும் சரியாக வளரும். புரிகிறதா...?"

'என் குழந்தை... இப்போதே என் உரிமை...'

சஸி பதில் எதுவும் சொல்லாமல் ஆயா கொண்டு வந்த காப்பியைக் குடித்துவிட்டுக் கிளம்பினாள்.

புவனாவே காரை ஓட்டிக் கொண்டு வந்தாள். வழியில் பேச்சு எதுவும் இல்லை. அனாவசியமாய்த் தன்னோடு பேசப் பிடிக்காமல் அவள் மௌனமாக வருவதைப் புரிந்து கொண்டு சஸியும் பேசாமல் இருந்தாள்.

கார் மவுண்ட் ரோடின் ஒரு பெரிய புடவைக் கடையின் முன் நின்றது. புவனாவைப் பார்த்ததும் கடைக்காரர்கள் சிரித்துக் கொண்டே வரவேற்றார்கள்.

குளிர்பானம் வரவழைத்தார்கள். உட்காரச் சொல்லி வற்புறுத்தினார்கள். புவனா ஒரு பார்வையில் எல்லா வற்றையும் அலட்சியப்படுத்தி விட்டுப் பத்துப் பதினைந்து புடவைகளை எடுத்து வைத்தாள்.

பூப்போட்ட பட்டுப் புடவைகள், பாலிஸ்டர்கள், ஆர்கண்டிகள்,ஷிபான்கள்... எல்லாவற்றிற்கும் பொருத்த மான ஜாக்கெட்டுகளும் வாங்கினதும் பில் பணத்தைச் செக்காகக் கொடுத்தாள். பிடித்திருக்கிறதா என்று கூடக் கேட்காமல் 'வா சஸி...' என்று வெளியில் வந்தாள். புடவைப் பெட்டிகள் பெரிய அடுக்கில் காருக்கு வந்தன. பின் கதவைத் திறந்து உள்ளே வைத்துப் பூட்டிவிட்டு மறுபடியும் காரைக் கிளப்பினாள்.

கார் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து இடது பக்கம் திரும்பி, உம்மிடியார்ஸ் வாசலில் நின்றது. வேண்டாம் என்று சஸி பயந்து மறுத்தும் விடாமல் ஒரு ஜதை வளையல்களும், சின்னத் தோடும், கழுத்திற்கு மெலிசான சங்கிலியும் வாங்கினாள். அங்கேயே அவைகளைப் போட்டுக் கொள்ளச் சொன்னாள்.

'எவ்வளவு அழகாக இருக்கிறாய் நீ!' கண்ணகலப் பார்த்தாள்.

காருக்குத் திரும்பின போது சஸிக்கு அவளை நினைத்து வியப்பாக இருந்தது. பிரமித்துக் கூடப் போயிற்று. அவள் வாங்கின புடவைகளும், நகைகளும், அதற்கான பணமும்...

'இத்தனை தாராளமான மனசில் எப்படி இவ்வளவு அழுத்தமும் இறுக்கமும் வந்தது...? நெருப்பாக எப்படிப் பேச்சைக் கொட்டத் தோன்றுகிறது? அதே புவனாதானா இல்லை...?'

அந்த முரண்பாட்டை நினைத்து ஆழமாய் ஒரு தரம் பெருமூச்சு விட்டாள்.



காலை ஒன்பது மணிக்கு விமானம் என்று முதல் நாள் இரவே சொல்லி விட்டுப் போயிருந்தாள், புவனா. எட்டே கால் மணிக்கு விமான நிலையத்தில் இருந்தாக வேண்டும் என்றும் சொல்லியிருந்தாள். அதைக் கேட்டதும் சட்டென்று சாந்தியின் நினைவு வந்தது சஸிக்கு. அவள் விமான நிலையத்திற்கு வருவாள் என்றும் தோன்றியது. பேச முடியாமற் போனாலும் தூரத்தில் நின்றாவது பார்க்கலாம். க்ருபாவைக் காட்டலாம். க்ருபாவைப் பார்த்ததும் என்ன நினைப்பாள் அவள்? அந்தச் சாந்தமான முகத்தை, கம்பீரமான உருவத்தை எப்படிப் பிடிக்காமற் போக முடியும்...?

'உனக்குப் பிடிக்கும் சாந்தி. நிச்சயமாகப் பிடிக்கும். ஆனாலும் அவரைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்று சொல்லேன் ஒரு வார்த்தையாவது பேசி விட்டுப் போயேன். உன் முடிவு தப்பானதில்லை என்று என் கையைப் பிடித்து அழுத்தேன்...'

எப்படியாவது அவளிடம் ஒரு வார்த்தையாவது பேசி விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டே அப்படியே தூங்கியும் போனாள்.

மறுநாள் காலையில் சீக்கிரம் எழுந்து குளித்து உடை மாற்றி ஏழு மணிக்கெல்லாம் தயாராகி விட்டாள். கண்ணாடியில் மீண்டும் தன்னை ஒரு முறை பார்த்துக் கொண்டபோது சட்டென்று சிரிப்பு வந்தது. அந்தப் புதுப் புடவையும், நகைகளும், அதன் பளபளப்பும்...

தான் ஒரு கல்யாணப் பெண் மாதிரி தோன்றுவதை நினைத்துக் கொண்டாள். உடனே அந்தச் சிரிப்பு நின்றது. முகம் மாறியது.

கல்யாணம்...!

தனக்கா...? க்ருபாவுடனா...? அது எப்போதும் இல்லை. தான் அவனுடைய மனைவி இல்லை. சட்டபூர்வமாய், சம்பிரதாயப்படி... எப்படியும் இல்லை. இனிமேல் இருக்க

முடியாது. தன்னைப் பொறுத்தவரை கல்யாணம் என்பது ஒரு கனவு. பகற் கனவு.

கூடவே கல்யாணம் பண்ணிக் கொண்டால்தானா என்று தோன்றிய போது சட்டென்று அன்று க்ருபா பீச்சில் கேட்டது நினைவுக்கு வந்தது.

'ஏன், சஸி, நீயுமா வெறும் கல்யாணத்தினால் ஒருத்தி ஒருவனுக்குச் சொந்தமாகி விட முடியும் என்று நினைக்கிறாய்? இத்தனை புத்திசாலியான உனக்குக் கூடவா அந்த எண்ணம்...?'

இல்லை க்ருபா. எனக்குக் கல்யாணம் வேண்டாம். அக்கினி சாட்சியாக வலம் வர வேண்டாம். மாலையும் கழுத்துமாக நிற்க வேண்டாம். ஆனால், கடைசிவரை நான் உங்கள் மனைவி என்ற எண்ணத்தோடு உங்கள் மனசின் உயரமான இடத்-

"என்ன, தயாராகி விட்டாயா?" அறை வாசலில் புவனாவின் குரல் கேட்டதும் சட்டென்று கலைந்து எழுந்து நின்றாள்.

"ம்.."

"சூட்கேஸில் எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டாகி விட்டதா..?"

"ம்.."

"நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதா...?"

"என்ன சொன்னீர்கள்...?"

"என்ன சொன்னேனா...?" புவனாவின் பார்வை உஷ்ணமாயிற்று. வார்த்தைகளிலும் அந்த உஷ்ணம் தெரிந்தது.

"வெறும் பணத்திற்காகத்தான் நீ இதைச் செய்கிறாயே தவிர வேறு எதற்கும் இல்லை. முக்கியமாய் அவருக்காக இல்லை; என்ன, புரிகிறதா?"



'புரிகிறது' என்று தலையாட்டினாள் அவள். சற்று முன் தான் நினைத்ததை எண்ணிப் பார்த்தாள். நிஜம்தான் எத்தனை கசப்பாக இருக்கிறது என்று தோன்றியது. ஆழமான ஒரு பெருமூச்சோடு புவனாவை நிமிர்ந்து பார்த்த போது-

"என்ன பார்க்கிறாய்...? கிளம்பலாமா?" என்று கேட்டாள் அவள்.

"ம்..."

அடுத்த பத்து நிமிஷத்திற்கெல்லாம் கார் அவளையும், க்ருபாவையும், இரண்டு சூட்கேஸ்களையும் மட்டும் ஏற்றிக் கொண்டு வெளியில் வந்தது. புல் தரையை அரை வட்டம் அடித்துக் கேட்டைத் தாண்டியது. ஒரு வினாடி ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தாள், சஸி. அவன் நல்ல முகம் களைப்பில் ராத்திரி முழுவதும் தூங்காததைக் காட்டியது. கண்கள் சிவந்து போயிருந்தன. 'என்ன ஆயிற்று இவர்களுக்குள்..? ஏன் புவனா வரவில்லை?' சிறிது தயங்கி, அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு மெதுவாகக் கேட்டாள்:

"என்ன ஆயிற்று க்ருபா?"

"ம்...?" அவன் அவளைத் திரும்பிப் பார்க்காமல் சாலையையே பார்த்துக் கொண்டு பதில் சொன்னான்.

"ஏன் புவனா வரவில்லை க்ருபா?"

"பிடிக்கவில்லை, வரவில்லை.."

"பிடிக்க வில்லையா..? என்ன பிடிக்கவில்லை...?"

"எல்லாமேதான்."

"எல்லாமே என்றால் என்ன, க்ருபா...?"

அவன் சட்டென்று காரை ஓர் ஓரமாக மர நிழலில் நிறுத்தினான். பின் அவள் முகத்தைப் பார்த்தான். கண்களில் சொல்ல முடியாத ஒரு சோகம் தெரிந்தது.

"நீ என்ன சின்னக் குழந்தையா, சஸி? உனக்கு ஒவ்வொன்றாய் அர்த்தம் சொல்ல வேண்டுமா..? அப்படிச் சொல்லத்தான் முடியுமா...? ம்...? அவளுக்கு நம்முடன் வரப் பிடிக்கவில்லை. நாம் பழகுவதைப் பார்க்கப் பிடிக்கவில்லை. பார்த்தால் தாங்கிக் கொள்ள முடியும் என்று தோன்றவில்லை. தனக்குச் சொந்தமான ஒன்று வேறு யாருக்கோ சொந்தமாவதை-தற்காலிகச் சொந்தம் தான் என்றாலும்-அதைத் தாங்கிக் கொள்கிற சக்தி-பார்க்கிற சக்தி- கூடவே சாட்சியாக இருக்கிற சக்தி எதுவும் இல்லை. இட் ஈஸ் எ பியர் பொஸஸிவ்னெஸ். நான் அவளுடைய உடைமை. வெறும் உடைமைதான். அந்த வீடு மாதிரி-சோபா, நாற்காலி மாதிரி-மற்றப் பொருட்கள் மாதிரி..."

அவன் முகம் சிவந்து போயிற்று. கண்களிலும் அதே சிவப்புத் தெரிந்தது. மேலே பேச முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்ட போது ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த கை லேசாக நடுங்குகிற மாதிரி தோன்றியது. சஸி சட்டென்று அந்தக் கரத்தின் மீது தன் கையை வைத்து அழுத்தினாள். அந்த ஸ்பரிஸத்தில் அவனைப் புரிந்து கொண்ட இதம் தெரிந்தது. பார்வை மென்மையாய் வருடிக் கொடுத்தது. அதில் உடைந்து போனான் அவன்.

"எஸ், சஸி. நான் ஒரு இயந்திரம்தான். அவளைப் பொறுத்தவரை வெறும இயந்திரம் ஒரு குழந்தையைப் பெற்றுத் தருகிற இயந்திரம். அந்த இயந்திரத்தின் இன்னொரு பாகமாக இப்போது நீ வந்து சேர்ந்திருக்கிறாய் அல்லது மாட்டிக் கொண்டிருக்கிறாய். இப்போது கூட, இட் ஈஸ் நாட் லேட், சஸி. நீ இங்கேயே இப்போதே கீழே இறங்கிப் போகலாம். வெறும் மணல் வீட்டில் வாழ நினைக்காமல், நல்ல பலமான அஸ்திவாரத்தோடு கூடிய வீட்டில் வாழலாம். நான் வெறும் மணல். அதுவும் ஆற்று மணல் கூட இல்லை, கடற்கரை மணல். இதை நம்பி-இதில் போய் நீ உன்...வேண்டாம், சஸி... தயவு செய்து கீழே இறங்கிப் போய் விடு."

"என்ன க்ருபா இது...?"



"என்ன க்ருபா என்று கேட்டால்? அப்படிப் ர்த்தால் என்ன அர்த்தம்! ப்ளீஸ் என்னை அப்படிப் ர்க்காதே. இந்தப் பார்வையில்தான் நான் உடைந்து ாகிறேன். உருகி ஒன்றுமே இல்லாமல்..." சட்டென்று த்திச் சரேலென்று ஒரு வேகத்தோடு அவள் கைகளைப் ற்றி அழுத்தினான். "போகாதே சஸி, போய் விடாதே. ும் போய்விட்டால் நான் உள்ளுக்குள் இன்னும் சிதறிப் ாய்விடுவேன். தூள் தூளாக உருத்தெரியாமல் போய் ிடுவேன்..."

"க்ருபா..." என்று அதட்டினாள் அவள். "என்ன சுகிறீர்கள்? உங்களை விட்டு என்னால் எப்படிப் போக டியும்? எங்கே போக முடியும்? நீங்களாகப் போ என்று ான்னால் தவிர நான் போகமாட்டேன், க்ருபா. த்தியமாக உங்களை விட்டுப் போக மாட்டேன்..."

"அப்படி என்னால் சொல்ல முடியவில்லையே, சஸி! த்தியம் பண்ண முடியவில்லையே..."

"வேண்டாம். நீங்கள் எந்தச் சத்தியமும் பண்ண வண்டாம். எதுவும் சொல்ல வேண்டாம். என்னோடு ிருக்கிற வரை - அது எத்தனை குறுகிய காலமானாலும் என்னை உங்கள் மனைவியாக நினைத்து-அப்படியே -த்தி... செய்வீர்களா க்ருபா? அந்த ஒரு கௌரவத்தை னக்குக் கொடுப்பீர்களா...?"

"மனைவியாக நினைப்பதா...? என்ன பேச்சு சுகிறாய் சஸி...? யு டோண்ட் நோ ஹௌ மச் ஐ லவ் யு! வெறும் நினைப்பா...? மனைவி என்ற நினைப்பா? நோ. நீ ன் மனசில்-நெஞ்சில் ஓ... நோ... எனக்குச் சொல்லத் தெரியவில்லை சஸி. வார்த்தைகளுக்குச் சக்தி இருக்கும் ன்று தோன்றவில்லை..."

"சொல்ல வேண்டாம். நீங்கள் அன்று சொன்னீர்களே பசினால்தானா என்று. அதே போல் இன்று நான் கேட்கிறேன். சொன்னால்தானா க்ருபா...?"

"புரிகிறதா உனக்கு? சொல்லாமலே என்னைப் புரிந்து கொள்ள முடிகிறதா சஸி?"

அதற்குப் பதில் சொல்லாமல் அவன் கையைப் பற்றினாள். மெதுவாகத் தட்டிக் கொடுத்தாள். சின்ன குழந்தையின் கையை வருடுகிற மாதிரி மிருதுவாய் ஒரு தடவை வருடினாள். அதே குழந்தையைப் பார்க்கிற பார்வையாய் நிமிர்ந்து பார்த்தாள்.

"காரைக் கிளப்புங்கள் க்ருபா. இப்போதே மணியாகி விட்டது. நமக்காக யாரும் விமானத்தை நிறுத்தி வைக்கப் போவதில்லை..."

அவன் காரைக் கிளப்பிக் கொண்டே சொன்னான்.

"நாமும் விமானத்தில் போகப் போவதில்லை!"

"விமானத்தில் போகப் போவதில்லையா? என்ன சொல்கிறீர்கள்?" அவள் ஆச்சரியமாய் அவனைப் பார்த்தாள். அவன் வருத்தமாகச் சிரித்துக் கொண்டே பேசினான்.

"இதுவும் புவனாவின் உத்தரவுதான் சஸி-

'பிளேன் வேண்டாம். காரில் போங்கள்.'

'ஓ.கே.'

'நான் வரவில்லை. நீங்கள் போங்கள்.'

'சரி'

'இன்னும் ஒரே மாதம். அவள் கன்ஸீவ் ஆனதாகப் போனில் சொல்லுங்கள். நான் அன்றைக்கே ப்ளேனில் கிளம்பி விடுகிறேன்.'

'ஆல் ரைட்'

'நான் அங்கே வந்த பின் நீங்கள் இங்கு வந்து விடலாம்.'

'என்ன...?'



'ஆமாம். அதன்பின் உங்களுக்கு அங்கு என்ன வேலை! அவளைக் கவனித்துக் கொள்ள நான் ஒருத்தி போதாதா...?'

"என்னிடமிருந்து பதிலில்லை. இது தான் சஸி நேற்று ராத்திரி நடந்த பேச்சு. அவள் வருவாளாம். அதன் பின் நான் கிளம்பி மெட்ராஸ் போகணுமாம். எப்படி இருக்கிறது பார்த்தாயா சஸி. எத்தனை சுயநலம் பார்த்தாயா...?"

அதைக் கேட்டதும் அவள் மனசும் கனத்துப் போயிற்று. ஆனாலும் வெளியில் எதையும் காட்டாமல் மென்மையாகச் சிரித்தாள்.

"என்ன சஸி சிரிக்கிறாய்? என் தவிப்பும் வேதனையும் புரியாமல் சிரிக்கிறாயே. உன்னை அந்த நிலைமையில் விட்டு விட்டு, அதுவும் அவளிடம் விட்டுவிட்டு என்னால் எப்படிப் போக முடியும்...?"

"நான் ஒரு சின்னக் கதை சொல்லட்டுமா க்ருபா...?"

"கதையா...?"

"ம்... கேளுங்கள். ஒருவன் ஒரு கல்யாண வீட்டிற்குப் போனானாம். கல்யாணப் பந்தலுக்குள் எரிந்து கொண்டிருந்த அக்கினியைப் பார்த்து ஓவென்று அழுதானாம். எல்லோரும் ஏம்ப்பா அழறேன்னு கேட்டதற்கு, 'இந்த அக்கினி மாப்பிள்ளையின் வேஷ்டியில் பிடித்து, பெண்ணின் புடவையில் பிடித்து, அப்படியே பக்கத்தில் நிற்கிற தோழிப் பெண்ணின் மேல் பிடித்து, பின் பந்தலையே பிடித்தால் எல்லார் கதியும் என்ன ஆகும் என்று நினைத்தேன். அழுகை வந்தது. அழுகிறேன்.' என்றானாம்..."

அதைக் கேட்டு குபீரென்று சிரித்தான் கிருபாகர். முழு அரை நிமிடம் ஆயிற்று. மெல்ல அடங்கினதும்-

"பின் என்ன க்ருபா...? அந்த மாதிரித்தான் நீங்களும் இருக்கிறீர்கள். இப்போது எதற்கு இந்தக் கவலை? இன்னும் அங்களுருக்கே போகவில்லை. அதற்குள் திரும்பி வருகிற

கவலையா..? முதலில் நிகழ்காலத்தை ரஸிக்கப் பார்ப்போம் க்ருபா..."

"ஓ.கே. சஸி!" என்று புன்சிரிப்போடு மறுபடியும் காரைக் கிளப்பினதும் சஸி மெதுவாக ஏர்போர்ட்டில் சாந்தி தங்களுக்காகக் காத்துக் கொண்டு நிற்பதைச் சொன்னாள். க்ருபா பக்கத்துக் கடையின் ஓரத்தில் காரை நிறுத்தி டெலிபோன் செய்துப் பேசிவிட்டு வந்தான்.

"ஓ.கே. தெள..? ஏர்போர்ட் ரிஸப்ஷனைக் கூப்பிட்டு சாந்திக்கு செய்தியை அறிவித்துவிடச் சொன்னேன். பங்களூர் போனதும் முதலில் அவளுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிடு. புவனா வருவதற்குள் எத்தனைக் கடிதங்கள் வேண்டுமானாலும் எழுதலாம். என்ன?"

சரி என்று சிரித்தாள் அவள்.

அதன் பின் வழி முழுதும் பேசிக்கொண்டு போனார்கள். சித்தூரில் காரை நிறுத்தி ஒரு ஓட்டலில் கார மான சாப்பாடு சாப்பிட்டார்கள். பின்பு எங்கும் நிறுத் தாமல் மூன்றரை மணிக்கெல்லாம் காப்பிக்கு பங்களூர் போய் விட்டார்கள்.

அவன் ஜெயநகரில் இருந்த தங்கள் வீட்டிற்கு முன் காரை நிறுத்தினான். அங்கு அதுவரை காவலுக்கு இருந்த வாட்ச்மேனை அனுப்பி இரண்டு காப்பி வரவழைத்தான். பின் அவனையும் காப்பி சாப்பிட்டு வரச் சொன்னான். சஸிக்கு வீட்டைச் சுற்றிக் காண்பித்தான்.

வீடு சற்றுப் பெரிதாகத்தான் இருந்தது. ஆனால் சுத்த மாக இருந்தது. அந்த வாட்ச்மேன் பெருக்கித் துடைத்து நன்றாக வைத்திருந்தான். சமையலறையில் அப்போதே சமைக்கலாம் போலிருந்தது. புவனா போனில் கூப்பிட்டுச் சொல்லியிருக்க வேண்டும். எல்லா சாமான்களும் வாங்கி டப்பாக்களில் கொட்டி வைக்கப்பட்டிருந்தன. படுக்கை அறையில் தலையணைகளின் உறை மாற்றி, புதிதாக விரிப்பு மாற்றி, உறைகளின் மீது 'மேக் லவ்' எழுதி...



அவர்கள் கீய்ஸர் போட்டு அந்தக் குளிருக்கு இதமான வெந்நீரில் குளித்தார்கள். உடை மாற்றி, தலைவாரி, பிரயாணக் களைப்பு போகப் புதுசாக வெளியில் வந்தார்கள். வாட்ச்மேனைக் கூப்பிட்டுப் பணம் கொடுத்து இனிமேல் நாலைந்து மாதங்களுக்கப்புறம் வந்தால் போதும் என்று சொல்லியனுப்பினார்கள். பின் உட்லண்ட்ஸ் போய்ச் சாப்பிட்டுவிட்டு வரும் வழியில் ஒரு நகைக் கடையில் காரை நிறுத்தினான் க்ருபா.

"உள்ளே வா சஸி..." என்று அழைத்துக் கொண்டு போனான்.

ஆங்கிலத்தில் K-ம் S-ம் பொறித்த இரண்டு மோதி ரங்களை அளவு பார்த்து வாங்கிக் கொண்டான். பூர்ணிமா ஸில்க் ஹவுஸில் அழகான பட்டுப் புடவை ஒன்றும் வாங்கினான்.

வீட்டிற்கு வந்ததும்

"இதைக் கட்டிக் கொண்டு வா சஸி!" என்றான்.

அவள் கட்டிக் கொண்டு வந்ததும் சுவாமி படத்தின் எதிரில் நின்று-

"இதோ இந்த முருகனுக்குக்கூட இரண்டு பெண் டாட்டிதான். அதனால் இவரே இந்தக் கல்யாணத்திற்குச் சாட்சியாக இருக்கட்டும்!" என்று அவள் விரலில் தன் மோதிரத்தைப் போட்டான். தானும் அவள் மோதிரத்தைப் போட்டுக் கொண்டான். பின்-

அவளைப் பார்த்த பார்வையில், மென்மையாய் அணைத்து தலை உச்சியில் முத்தமிட்டு ஐ லவ் யு சஸி என்று உருகின உருகலில்-

முதல் தடவையாய் அந்த இரவில் நிறைய தரம் சிரித்தான் க்ருபாகர்

# 15



அந்த ராத்திரி மட்டுமில்லை, அதே மாதிரி நிறைய ராத்திரிகள். சிரிப்பும் பேச்சுமாக அமர்க்களப்பட்ட ராத்திரிகள். மனசு நிறையச் சந்தோஷமாய் வெளியில் போன ராத்திரிகள். ஒவ்வொரு நாளாய் ஒவ்வொரு இடமாய்... அப்படி எத்தனை இடங்கள்... லால்பாக், கப்பன் பார்க், நந்திஹில்ஸ், மைசூர் சாமுண்டீஸ்வரி கோவில், பிருந்தாவனம், அங்கிருந்து ஊட்டி ஒரு மாத காலம் அஞ்ஞாத வாசமாய் யார் கண்ணிலும் படாமல், யாருடனும் பேசாமல் இரண்டு பேர் மட்டுமே உலகமாய், உலகம் முழுவதும் இரண்டே பேராய்...

ஒரு நாள் மாலை பொட்டானிகல் கார்டனைச் சுற்றி வந்தபோது மெதுவாகக் கேட்டான் க்ருபா.

"இப்படியே நடந்து போய்க் கொண்டே இருக்கலாம் போல் இல்லை சஸி..?"

அதைக் கேட்டதும் மெலிசாகப் புன்னகை செய்தாள் அவள்.

"என்ன சஸி சிரிக்கிறாய்..?"

"ஒன்றுமில்லை க்ருபா. அது எப்படிச் சாத்தியமாகும் என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது."

"சிரிக்க வேண்டிய விஷயமா இது? இதற்கா சிரிக்கிறாய்..?"

"இப்படி சிரித்துச் சிரித்துத்தான் மனசில் பாரமாக இருப்பதைக் கரைத்துக் கொள்ள வேண்டுமே தவிர வேறு என்ன செய்ய முடியும் சொல்லுங்கள்.."

"என்னால் சிரிக்க முடியவில்லையே சஸி. சிரிப்பு ...வில்லையே! உன்னைப் போல் எல்லாவற்றையும் ...மாக எடுத்துக் கொள்ளத் தெரியவில்லையே..."

"தெரியும் க்ருபா. தெரிய வேண்டும். இல்லாவிட்டால் ...போழுதும் அழுதுகொண்டே இருக்க வேண்டியது ...ன்."

அதைக் கேட்டு வினாடி யோசித்து - பின், "உண்மை ...ன் சஸி!" என்று பெருமூச்சு விட்டான். கூடவே, "உன்னை ...ன்று கேட்கலாமா சஸி" என்று குரல் தழையக் கேட்டான்.

"கேளுங்கள்..."

"என்னை விட்டுப் போகிறபோதும் சிரிப்பாயா ...வி..? உன்னால் சிரிக்க முடியுமா..?"

சரேலென்று அவள் நடை நின்றது. பார்வை ...ர்ந்தது. அவன் முகத்தில் ஒரு வினாடி நிலைத்துப் பின் ...ழந்தது.

"இப்போது ஏன் க்ருபா ஞாபகப் படுத்துகிறீர்கள்? ...ன் அதை நினைத்துப் பார்க்கக் கூட விரும்பவில்லை ...ருபா..."

"நானும் தான் விரும்பவில்லை சஸி. ஆனாலும்..."

"எதிர்பார்ப்பதா..? என்ன சஸி..? அதையா நான் எதிர் ...ர்ப்பேன்? அந்தப் பிரிவை நினைக்கிறபோதே ...ளுக்குள் நடுங்கிப் போகிறேன். ஒன்றுமில்லாமல் ...டைந்து போகிறேன். அப்படி ஒரு நாள் வரவே கூடாது ...ன்று ஆசைப்படுகிறேன். ஏன் சஸி, இந்தச் சிரிப்பு, ...தோஷம் எல்லாம் தற்காலிகமானதுதான்..? கனவு மாதிரி ...ந்தரமில்லாததுதானா..?"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? உங்களுடைய ...ரிப்பு, சந்தோஷம் எல்லாவற்றிற்கும் இதுதான் ஆரம்பம் ...ன்று நினைத்துக் கொள்ளுங்களேன்..."

"ஆரம்பம்தான் சஸி. ஒரு நல்ல ஆரம்பம்தா ஆனால் அப்படி ஆரம்பித்து வைத்தவளே நீதானே. நீ என்னை விட்டுப் போய் விடப் போவதானால்...?"

"நான் போனாலும் குழந்தை இருக்குமே க்ருபா..."

குழந்தை...!

சட்டென்று நின்று கண்ணகல அவளைப் பார்த்தா

"நிஜமாகவா சஸி...?"

"நான் எப்போது உங்களிடம் பொய் சொல் யிருக்கிறேன்...!"

அவன் ஒன்றும் பேசத் தோன்றாமல் அரை வினா அப்படியே நின்றான். பின் அவள் கைகளைப் பற்றி கொண்டான். மென்மையாய் ஒரு தரம் வருடிக் கொடு தான். குரல் கரகரக்க மெதுவாக , "கன்க்ராஜு லேஷன்ஸ்..." என்றான். தானும் அதையே திருப்பிச் சொ ல்லாமா என்று அவன் கேட்டபோது சந்தோஷமாக புன்னகை செய்தாள். பின், "லெட் அஸ் செலிப்ரேட் இ எங்கே போகலாம் சொல்லு சஸி..." என்றான்.

"ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு, இங் ஃப்ரெண்ட்ஸ் (Friends) படம் வந்திருக்கிறது. போகலாமா...

"ஓகே. வா சஸி..." என்று தோளில் கை போட் அணைத்தபடி காருக்கு வந்தான்.

தாஸப்பிரகாஷுக்கு வந்து சாப்பிட்டுக் கொண் ருந்த போது புவனாவின் ஞாபகம் வந்தது. ஒவ்வொரு நா காலையிலும் அவன் போன் பண்ணிக் கொண்டுதா இருக்கிறாள். 'எனி குட் லக்...?' என்று விசாரிக்கிறாள். அன்று காலை கூட போன் பண்ணினாள். அவன் வழக்கப்படி அதே பதிலைச் சொன்னான். இப்போது போன் பண்ணி சொன்னால் என்ன...? எவ்வளவு சந்தோஷப்படுவா புவனா...?



ஆனால் உடனே மறுநாளே அவள் கிளம்பி விடுவாள் என்று தோன்றவே பேசாமல் எழுந்தான். ஸ்வெட்டரைப் போட்டுக் கொண்டு காருக்கு வந்தபோது குளிர் ஒடுக்கிற்று. யாரோ பிடித்து உலுக்குகிற மாதிரி உடம்பு நடுங்கிற்று. எதிரில் வருகிற எதுவும் தெரியாமல் பனி கொட்டிற்று. அவனுடைய காரில் மஞ்சளில் பளிச்சிடுகிற பனி விளக்கு கள் இருந்ததால் சுலபமாக ஓட்ட முடிந்தது.

அவர்கள் தியேட்டருக்கு வந்து டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே வந்தபோது தான் படம் ஆரம்பித் திருந்தது. தங்கள் ஸீட்டைப் பார்த்து உட்கார்ந்ததும் படத்தில் ஒன்றிப் போனார்கள்.

கிட்டத்தட்ட படத்தில் வந்த அந்த பெண் மிஷெல் தன்னை மாதிரி தன் நிலையில் இருப்பதாக உணர்ந்தாள் சஸி.

அப்பா அம்மா யாருமில்லாமல், நிறையக் கஷ்டப் பட்டு, பின் பால் என்கிறவனைச் சந்தித்து, காதலித்து, பெரிய பணக்காரப் பையனான அவன் பெற்றோரிட மிருந்து அந்தக் காதலுக்கு எதிர்ப்புக் கிளம்பினதும், அவன் வீட்டை விட்டு வந்ததும், அவனோடு வெகு தூரத்தில் அதிக மனிதர்கள் இல்லாத இடத்திற்குப் போய் வேலை கிடைக்காமல் சாப்பிட எதுவும் இல்லாமல் திண்டாடி குழந்தை பிறக்கப் போகிற சந்தர்ப்பத்தில் அவனுக்கு வேலை கிடைத்து, அவனே அவளுக்குப் பிரசவம் பார்த்து, குழந்தையை நன்றாக வளர்க்க வேண்டும் என்று கனவு காண்கிற நிலையில் ஒரு நாள் காலையில் வேலைக்குப் போனபோது அவனுடைய அப்பா போலீஸ் உதவியோடு வந்து அவனை அழைத்துக் கொண்டு போய்விடுகிறார். வெகு நேரமாகியும் அவன் வீட்டிற்கு வராமல் போகவே அவள் வெளியில் வந்து அவனுக்காகக் காத்துக் கொண்டு நின்று பின் தேட ஆரம்பிக்கிறாள்...

சட்டென்று எழுந்து கொண்டாள் சஸி. அதற்கு மேல் தாங்க முடியாமல் போய் மனசைப் பாரமாக அழுத்திற்று. கண்ணோரம் நீர் கட்டி பார்க்க முடியாமல் தடுமாறிப் பின்

உள்ளுக்குள்ளேயே தெறித்து விழுந்த விம்மலோடு எழுந்த போது அவனும் ஒரு வார்த்தை பேசாமல் எழுந்தான். மௌனமாகவே காருக்கு வந்தான். அதே மௌனத்தோடு ஓட்டலுக்கு வந்து அறையைத் திறந்ததும்-

சரேலென்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். முகத்தை அவள் தோளில் புதைத்துக் கொண்டு ஒரு வினாடி அப்படியே நின்றான். பின்...

"என்ன படம் சஸி... எதற்காக இதற்கு அழைத்துக் கொண்டு போனாய்...?" என்று கேட்டான்.

"இவ்வளவு கனமாக இருக்கும் என்று தெரியாது க்ருபா...?" என்று மெதுவாய் ஆரம்பித்து மேலே பேச முடியாமல் அழுகையில் உடைந்தாள் அவள்.

"அந்த ரிஷேலுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் க்ருபா. என்னை மாதிரி அவளும் அவனை நம்பி அவனுக்காக வந்து கடைசியில்... ஆனால் அங்கே அவனை விட்டு விட்டுப் போக வைக்கிறார்கள். இங்கே நான்... நான் உங்களையும் குழந்தையையும் விட்டு..."

"நோ சஸி..." என்று சட்டென்று மறுத்தான் அவன். "ஐ வோண்ட் லீவ் யு லைக் தட். எப்போதும் விடமாட்டேன் சஸி. என்றைக்குமே...?"

"நிஜமாகவா க்ருபா...?"

"நிஜமாகத்தான்."

"ப்ராமிஸ்...?"

"ஐ ப்ராமிஸ்..."

"ஓ... தாங்க்யு க்ருபா..."

"என்ன சஸி இது. இதற்குப் போய் இப்படியெல்லாம் நன்றி சொல்லிக் கொண்டு... ம்... சொல்ல வேண்டியது நானா அல்லது நீயா?"

அவள் பதில் சொல்லாமல் சிரித்தாள்.



அந்தச் சிரிப்போடு படுக்கைக்கு அழைத்துக் கொண்டு வந்தான். படுத்துக் கொண்டிருந்தபோது ஒரு கையால் அவளை அணைத்து அந்த முகத்தையே பார்த்தபடி மென்மையாகக் கேட்டான்.

"ஏன் சஸி, சாயந்தரம் அத்தனை விவேகமாகப் பேசின நீயா இப்போது படத்தைப் பார்த்துவிட்டு இப்படி அழுவது...?"

"படமா அது...? அதையா படம் என்று சொல்கிறீர்கள்...? இல்லை க்ருபா. அது படமில்லை. என்ன பெயர் பார்த்தீர்களா...? Friends. நண்பர்கள். இதை விடப் பொருத்தமான பெயர் இருக்க முடியுமா... என்ன பெயர் அது...!"

அதையே அவனும் நினைத்துப் பார்த்தான். என்ன தலைப்பு என்று தோன்றியது - எப்படி வைக்கத் தோன்றியது! என்ன நட்பு அது. தான் சஸியிடம் சொன்ன மாதிரி என்ன நட்பு. அந்த நட்பு ஏன் பிரிந்து போயிற்று... அது போய்ப் பிரியலாமா...? புவனா... ப்ளீஸ் இந்த நட்பைப் பிரிக்காதே புவனா... அதில் வந்த அப்பா மாதிரி என்னை அழைத்துக் கொண்டு போய்விடாதேயேன் ப்ளீஸ்...

சஸியும் அதே மாதிரி நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதனால் கண்களை மட்டும் மெல்ல உயர்த்தி அவனையே பார்த்தாள். அந்தப் பார்வையின் சோகத்தில் மெதுவாகக் கேட்டான் அவன்.

"என்ன சஸி...?"

"புவனாவிற்குச் சொல்ல வேண்டாமா...?"

"சொல்லணுமா...?"

"என்ன க்ருபா இது. இப்படிக் கேட்கிறீர்கள். இதற்காகத்தானே என்னை வரவழைத்தாள். நம்மை இங்கே அனுப்பி வைத்தாள். தினமும் போன் பண்ணிப் பேசுகிறாள்..."

"ஆனால் தெரிந்த உடனே கிளம்பி வந்து விடுவாளே சஸி..."

அந்தக் குரலின் ஏக்கமும் சோகமும் அவனை என்னவோ பண்ணியது. அவளும் உள்ளுக்குள் சுருண்டுதான் போனாள். ஆனாலும் புவனாவிற்குச் சொல்லாமல் இருக்க முடியாது என்று தோன்றியது. அதை அவளிடம் சொன்னதும் அவன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். மல்லாந்து படுத்து மின்சார விசிறியையே பார்த்துக் கொண்டிருந்தான். கடைசியில் பேசினபோது குரல் கெஞ்சலாக வந்தது.

"இன்னும் இரண்டு நாள் இங்கேயே இருந்து விட்டு அப்புறம் பங்களூர் போய் டாக்டரிடம் காட்டி நிச்சயித்துக் கொண்ட பின் தெரியப்படுத்தலாமே..?"

அதுவும் சரிதான் என்று தோன்றவே அவள் பேசாமல் இருந்தாள். பின் ஒருக்களித்துப் படுத்து அவன் தோளில் கை போட்டு அந்த அரை இருட்டில் அவன் முகத்தையே பார்த்தாள். பார்வை மின்னிற்று. குரல் காதருகில் மெலிசாக இருந்தது.

"உங்களுக்கு என்ன குழந்தை வேண்டும் க்ருபா..."

"ம்..?"

"என்ன குழந்தை வேண்டும் என்று கேட்டேன்.."

"உன் சாயலில் உன் மாதிரியே ஒரு பெண் குழந்தை.."

"என்ன பெயர் வைப்பீர்கள்?"

"நீ என்ன பெயர் சொல்கிறாயோ அது."

" 'ஜனனி' என்று வைக்கலாமா?"

அந்தப் பெயரைத் தனக்குள் ஒரு தரம் சொல்லிப் பார்த்துக் கொண்டான். "எஸ். அதையே வைக்கலாம் சஸி!" என்றான்.



சட்டென்று தன் வீட்டில் மாட்டியிருந்த படங்களின் ஞாபகம் வந்தது. கையில் ஒரு கொத்துப் பூவோடு புல்தரையில் ஓடி வருகிற குழந்தை, படம் முழுவதும் பெரிதாய்ச் சிரிக்கிற குழந்தை, முத்தமிடுகிற குழந்தை, குண்டுக் கன்னங்கள், போலித்தனமே தெரியாத கண்கள், சின்ன உதடுகள்...

இதில் எது ஜனனி? எந்த முகம் ஜனனிக்கு? சஸி மாதிரி இருக்கும்...! அல்லது தன் மாதிரி..? ஆண் குழந்தையாகப் பிறந்தால்..? அல்லது தான் ஆசைப்பட்ட மாதிரியே இன்னொரு சஸியாய் - சின்ன சஸியாய்-அதே அழகோடு...

'சஸி... சஸி... என்ன பெண் நீ..'

உடம்பும் மனசும் சிலிர்க்க அவளைத் திரும்பிப் பார்த்த போது அவன் தூங்கிப் போயிருந்தான். முகம் சிரிக்கிற மாதிரி இருந்தது. 'தூக்கத்திலும் என்ன சிரிப்பு இவளுக்கு...!' என்று நினைத்துக் கொண்டே போர்வையை இழுத்துச் சரி பண்ணிவிட்டுப் படுத்துக் கொண்டாள். தூக்கம் வராமல் மனசு வெகு நேரம் அலை பாய்ந்தது. பின் கண் இழுக்க அப்படியே மெல்ல அயர்ந்து போனாள்.



# 16

இரண்டு நாட்களுக்குப் பின் கிளம்பி பங்களூர் வந்ததும் சஸியை ஒரு நல்ல லேடி டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போனான் க்ருபா. அந்த டாக்டரின் உதவியாளரிடம் மிஸஸ் க்ருபாகர் என்றே பெயர் கொடுத்தான். அதைப் படித்துவிட்டு கேள்விக்குறியோடு அவனைப் பார்த்தாள் சஸி.

"என்ன க்ருபா இது. இப்படிப் பெயர் கொடுக்கிறீர்கள். இது புவனாவிற்குத் தெரிந்தால் என்ன ஆகும்?"

"அவளுக்கு எப்படித் தெரிய முடியும்...?" என்று சிரித்தான் அவன். அந்தச் சிரிப்பும், குழந்தைத்தனமும் அவள் மனசைத் தொட்டன.

"குழந்தை மாதிரி பதில் சொல்கிறீர்களே... அடுத்தடுத்து நான் செக் அப்பிற்கு இங்கேதானே வர வேண்டும்? இதே நர்ஸிங் ஹோமில் தானே டெலிவரியை வைத்துக் கொண்டாக வேண்டும்..?"

"ஆமாம் சஸி!" என்று உதட்டைக் கடித்துக் கொண்டான். அவன் பின், "இல்லை சஸி. புவனா உன்னை இங்கே அழைத்துக் கொண்டு வரமாட்டாள். நான் இங்கு வந்த காரணத்தினாலேயே அவள் வேறு டாக்டரிடம் போவாள்!" என்றான்.

"அப்படியானால் சரி!" என்று அவள் மென்மையாய்ப் புன்னகை செய்தபோது அவள் உள்ளே அழைக்கப் பட்டாள்.

டாக்டர் ஷீலா ஜோசப் அவளை இதமான சிரிப்போடு வரவேற்றாள். ஒரு மஞ்சள் அட்டையில் அவளைப் பற்றின விவரங்களைக் குறித்துக் கொண்டாள்.

பெயர்-

வயது

கணவர் பெயர்-

வேலை-

விலாசம்-

டெலிபோன் எண்-

முதல் இரண்டிற்கும் தயங்காமல் பதில் சொன்ன சஸி, மூன்றாவது கேள்விக்குச் சற்றுத் தயங்கினாள். டாக்டர் புன் சிரிப்போடு நிமிர்ந்து பார்த்தாள்.



"என்ன, ஹஸ்பெண்ட் பெயரைச் சொல்ல மாட்டீர்களா? பார்க்க இவ்வளவு மாடர்னாக இருக்கிறீர்கள், கணவர் பெயரைச் சொல்லத் தயங்குகிறீர்களே...?"

'பெயரைச் சொல்லவா தயக்கம். ஒரு நாளைக்கு ஓராயிரம் தடவை நானே க்ருபா, க்ருபா என்று எப்படிக் கூப்பிடுகிறேன்... ஆனால் இப்போது...? புரியாது. இது யாருக்கும் புரியாது. புரிந்தாலும் இதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்...'

அதற்கும் அவள் பேசாமல் இருக்கவே டாக்டர் உதவியாளர் அனுப்பின சீட்டைப் பார்த்தாள்.

"மிஸஸ் க்ருபாகர். ஆம் ஐ கரெக்ட்...?" என்று கேட்டாள். உதட்டில் அதே புன்சிரிப்பு ஓடியது. அதற்கு மேலும் பேசாமல் இருக்க முடியாமல் சஸி மெதுவாகத் தலையாட்டினாள்.

"அவருடைய வேலை...?"

"விலாசம்?"

டெலிபோன் எண் எல்லாவற்றிற்கும் தயங்கித் தயங்கிப் பதில் சொன்னாள். அந்தத் தயக்கத்தை பயம் என்று தவறாகப் புரிந்து கொண்ட டாக்டர் அவளிடம் இன்னும் அன்பாகப் பேசினாள்.

"ரிலாக்ஸ் யுவர்ஸெல்ஃப் மிஸஸ் க்ருபாகர். இது உங்களுடைய முதல் குழந்தை என்பதால் கொஞ்சம் பயந்து போயிருக்கிறீர்கள். பட், Nothing to worry about, There is nothing likebeing a mother in this world. அது ஒரு இனிமையான அனுபவம். சந்தோஷமான அனுபவம். அம்மாவாகப் போகிற இந்த சந்தோஷத்திற்கும் பெருமைக்கும் இணையாக எதையுமே சொல்ல முடியாது. That is something very great. So-இந்தப் பயம் எல்லாம் அவசியமே இல்லை. ரிலாக்ஸ் ஃபுல்லி..."

அம்மா...!

There is nothing like being a mother in this world. அந்த சந்தோஷத்திற்கும் பெருமைக்கும் இணையாக எதையுமே சொல்லமுடியாது...

'டாக்டர், டாக்டர்... நான் அம்மாவானாலும் அம்மாவாக இருக்கப் போவதில்லை அந்தப் பெருமையையும் சந்தோஷத்தையும் அனுபவிக்கப் போவதில்லை. என் குழந்தை என்னை அம்மா என்று கூப்பிடப் போவதில்லை. அதன் அழகை-வளர்ச்சியை என்னால் பார்க்க முடியப் போவதில்லை. நான் என்ன அம்மா... எப்படி அம்மா என்று சொல்லிக் கொள்ள முடியும்? சொல்ல யார் அனுமதிப்பார்கள்...'

அவள் கண்களில் நீர் முட்டி கன்னத்தில் வழியப் போகிறோம் என்று பயமுறுத்தியது. அதை டாக்டர் பார்த்து விடப் போகிறாளே என்று கைக்குட்டையைத் தவறவிடுகிறமாதிரி தவறவிட்டு கீழே குனிந்து எடுக்கிற சாக்கில் சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டாள். நிமிர்ந்து டாக்டரைப் பார்த்து வெறும் சிரிப்பாகச் சிரித்தாள்.

"எவ்வளவு அழகாகச் சொல்கிறீர்கள் டாக்டர் There is nothing like being a mother in this world. என்ன வார்த்தை அது...!"

டாக்டர் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே எடை பார்க்கக் கூப்பிட்டாள். எடையைக் குறித்துக் கொண்டு 'எத்தனை நாளாயிற்று' என்று கேட்டாள். சசி சொன்னதும் ஒரு உயரமான மெத்தை விரித்து ரப்பர் ஷீட் போடப்பட்ட மேஜையில் படுக்க வைத்தாள். கைக்கு ரப்பர் க்ளவுஸ் போட்டுக் கொண்டு பரிசோதித்தாள். பின் கையலம்பிக் கொண்டு சசியை நாற்காலியில் உட்காரச் சொல்லி ப்ளட் ப்ரெஷர் பார்த்தாள். பின் மணியை அழுத்தி நர்ஸைக் கூப்பிட்டாள்.

"இவர்களுடைய யூரினைக் கலெக்ட் பண்ணி இருக்கிறாய் இல்லையா..." என்று கேட்டாள்!

"எஸ் டாக்டர்!" என்று தலையாட்டினதும்,



"அதை டெஸ்டிங்கிற்கு லெபாரெட்டரிக்கு அனுப்பிவிடு!" என்று சொல்லி நர்ஸ் போனதும் சசியைப் பார்த்தாள்.

"ஃப்ராக் (Frog) டெஸ்ட் பண்ணிப் பார்த்து விடலாம். பட், இட் ஈஸ் கன்ஃபர்ம்ட், உங்கள் கணக்குப்படி ஐம்பது நாளாகிறது இல்லையா... லெட் அஸ் வெயிட் அண்ட் ஸீ. நாளன்றைக்கு வாருங்கள். டெஸ்ட் ரிசல்ட் வந்துவிடும்!" என்று சொன்னாள்.

வெளியில் வந்ததும் க்ருபா அவளை ஆர்வமாகப் பார்த்தான். அவள், டாக்டர் தன் உடம்பைப் பற்றிச் சொன்னதை மட்டும் சொன்னாள். இரண்டு நாட்களுக்குப் பின் வரச் சொன்னதைச் சொன்னாள்.

க்ருபா மௌனமாய்க் கேட்டுக் கொண்டான். காரில் உட்கார்ந்ததும், "எங்கே போகலாம் சசி...?" என்று கேட்டான்.

"வீட்டிற்கு..."

பளிச்சென்று வந்த பதிலில் சரேலென்று திரும்பி அவளைப் பார்த்தான்.

"ஏன் சசி என்னவோ மாதிரி இருக்கிறாய்...?"

"ஒன்றுமில்லை க்ருபா..."

"சொல்லு சசி... உன்னோடு நான் சந்தோஷத்தை மட்டும்தான் அனுபவிக்க வேண்டுமா...? கஷ்டத்தைப் பகிர்ந்து கொள்ளக் கூடாதா...?"

"கஷ்டமா...? எனக்கென்ன கஷ்டம் க்ருபா...? நீங்கள் கூட இருக்கிறபோது எதுதான் கஷ்டமாகத் தெரியும்...?"

"பின் ஏன் என்னவோ மாதிரி இருக்கிறாய்..."

"டாக்டர் ஏதோ சொன்னார்கள்... மனசு அதில் கொஞ்சம் சலனப்பட்டுப் போய் விட்டது."

"அப்படி என்ன சொன்னார்கள்?"

"There is nothing like being a mother என்றார்கள். அதைவிடப் பெரிய சந்தோஷமோ பெருமையோ இருக்க முடியாது என்றார்கள்..."

"அது நிஜம்தானே சஸி..." என்று சொல்லிவிட்டு சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டான் அவன்.

"நிஜம்தான். ஆனால் அந்த நிஜம் என் வரை பொய்யாகப் போவது தான் கஷ்டமாக இருக்கிறது."

"சஸி..." என்று தாங்க முடியாத ஒரு வருத்தத்தோடு அவளை நிமிர்ந்து பார்த்தான். சோகமான அந்த முகம் அவனை என்னவோ செய்தது. எவ்வளவு பெரிய இழப்பு இவளுடையது என்று நினைத்ததும் மனம் இன்னும் சங்கடப் பட்டது. அவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டு, மெதுவாகத் தலையை வருடி, மென்மையாய் அணைத்தும் ஆறுதலாக ஏதாவது சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால் கூடவே எந்த ஆறுதலை இவளுக்குச் சொல்ல முடியும் என்று தோன்றிற்று. 'எதைச் சொன்னால் சரியாக இருக்கும்...? எந்த வார்த்தையில் சொல்ல முடியும்...?'

**ஆழமான** ஒரு பெருமூச்சோடு வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தினான். தனக்குச் சாப்பாடு எதுவும் வேண்டாம் என்று சொல்லி,

"நீ சாப்பிடு சஸி. நான் கம்பெனிக்காக எதிரில் உட்கார்ந்து கொள்கிறேன்" என்றான்.

"வேண்டாம் க்ருபா! நீங்கள் மாடிக்குப்போய் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அவ்வளவு தூரம் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறீர்கள். களைப்பாக இருக்கும். நான் இதோ பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்". என்றதும் அவன் மாடிக்குப் போனான்.

அவள் சாப்பிட்டு மேஜையைத் துடைத்து மீதிச் சாப்பாட்டை மூடி வைத்து எல்லாக் கதவுகளையும்



போட்டுக் கொண்டு மாடிக்குப் போனபோது க்ருபா படுக்கை அறையில் இல்லை. பால்கனி இருட்டில் கூடை நாற்காலியைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவளைப் பார்த்தும் கையில் இருந்த சிகரெட்டை அணைத்துவிட்டு "வா சஸி!" என்றான்.

அவள் வந்து நாற்காலியில் உட்காராமல் கீழே தரையில் அவன் காலடியில் உட்கார்ந்து மெதுவாக அவன் மடியில் தலையைச் சரித்துக் கொண்டாள். அவன் விரல்கள் அவள் தலையை வருடின. அதில் ஒரு நடுக்கம் தெரிந்தது. சில நிமிடங்கள் பேசாமல் இருந்து பின் பேச ஆரம்பித்தபோது குரலுக்கும் அதே நடுக்கம் வந்தது.

"உனக்கு நான் பெரிய தப்பாகத்தான் பண்ணி விட்டிருக்கிறேன் சஸி..."

"க்ருபா..." என்று அவள் தலையை உயர்த்தினபோது அவன் விடவில்லை.

"ப்ளீஸ் சஸி, அப்படியே சாய்ந்து கொண்டிரேன். நீ என் மடியில் இப்படிச் சாய்ந்து கொண்டிருப்பது மனசுக்கு எவ்வளவு இதமாக இருக்கிறது தெரியுமா...?"

அதைக்கேட்டு மெலிசாகப் புன்னகை செய்தாள் அவள். அந்த அன்பில் மனசு ஒரு தரம் சிலிர்த்து, பின் அதே சிலிர்ப்பு உடம்பிலும் ஓடிற்று. 'என்ன பிரியம் இது. இந்தப் பிரியத்திற்காக இப்படியே இதில் நனைந்து கொண்டே செத்துப் போய்விட்டால்தான் என்ன...!'

"ஏன் க்ருபா, இப்படியே உங்கள் மடியில் தலையை வைத்துக்கொண்டே செத்துப் போய்விட்டால் என்ன என்று தோன்றுகிறது..."

"உனக்கு இப்போதுதானே அப்படித் தோன்றுகிறது. எனக்கு உன்னோடு இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் அதே மாதிரித் தோன்றியிருக்கிறது. இப்படி மனசு ஒன்றி ஐக்கியமாகி ஒரு நாள் வாழ்ந்தால் கூடப் போதும் என்று தோன்றியிருக்கிறது. ஆனால் அப்படியெல்லாம் செத்துப்

போக நம்மால் முடியுமா சஸி. அதெல்லாம் கதைகளி[ல்] நடக்கலாம். சினிமாவில் நடக்கலாம். வாழ்க்கையில் நட[க்க] முடியுமா...?"

அவள் ஒன்றும் பேசவில்லை. பேச முடியவில்லை. மெதுவாகத் தன் கைகளால் அவன் கால்களை வளைத்து[க்] கொண்டாள். அவன் அப்படியே கைநீட்டி எதிரில் டீபாயி[ல்] கிடந்த சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒன்றைப் பற்[ற] வைத்துக் கொண்டான்.

"இன்னொரு சிகரெட்டா க்ருபா...?"

"ப்ளீஸ். என்னைத் தடுக்காதே சஸி. இது எனக்[கு] இப்போது தேவையாக இருக்கிறது. மனசின் பாரத்தை இதனால் நான் கொஞ்சம் குறைத்துக் கொள்ள முடியு[ம்] என்று தோன்றுகிறது."

"ஐயம் ஸாரி க்ருபா. எதையோ சொல்லி உங்க[ள்] மனசில் பாரமாக இறக்கி வைத்து விட்டே[ன்] போலிருக்கிறது..."

"என்னிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல் [வேறு] யாரிடம் சொல்லப் போகிறாய் சஸி. அப்படி யார் இரு[க்]கிறார்கள் உனக்கு. இதை யாரிடம் சொல்ல முடியும்..."

"அதற்காக உங்களை இப்படிக் கஷ்டப்படுத்தி இருக்க வேண்டாம்..."

"கஷ்டமா...இதுவா...என்ன சஸி... இதையே கஷ்ட[ம்] என்றால் நீ அனுபவிப்பதை என்ன சொல்வது? உனக்[கு] நான் செய்த தவறை எப்படிச் சொல்வது...?"

"தவறா...? எதைத் தவறு என்கிறீர்கள்...?"

"புவனா மட்டுமில்லை. நான் கூட உனக்குப் பெரி[ய] தப்பாகத்தான் செய்திருக்கிறேன். நினைத்துப் பார்க்கி[ற] போது ரொம்ப சுயநலமாக நடந்து கொண்டு விட்டேனோ என்று தோன்றுகிறது..."

"என்ன க்ருபா இது...?"



"என்ன என்றால் என் மனசில் பட்டதைச் சொல்லித்தானே ஆக வேண்டும். உண்மையை ஒப்புக் கொண்டுதானே ஆகவேண்டும்..."

"எந்த உண்மையை...?"

"உன் அழகிற்கும் மனசிற்கும் நிச்சயமாக உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைத்திருக்கும் சஸி. என்னை மாதிரி ஏற்கனவே கல்யாணமாகாதவனாக-முதல் மனைவியை விட முடியாதவனாக-இன்னும் அழகானவனாக..."

"இருக்கலாம் க்ருபா... ஆனால் இத்தனை பிரியமானவனாக-அன்பானவனாக இருந்திருக்கவே முடியாது க்ருபா... இது போதும் எனக்கு. இந்த அன்பை நினைத்துக் கொண்டே ஒரு மாமாங்கம் வாழ்ந்து விடலாம்..."

"ஆனால் நான் வேறு விதமாக நினைக்கிறேன் சஸி. புவனாவை வரவழைத்து அவளிடம் பேசிப் பார்க்கலாம் என்றிருக்கிறேன்."

தன் தோளில் கிடந்த அவன் கையை விலக்கித் தானும் சற்று விலகி அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன பேசப் போகிறீர்கள்?..."

"உன்னை என்னுடைய இன்னொரு மனைவியாக ஏற்றுக்கொள்ள அனுமதி கேட்கப் போகிறேன். அவள் மறுத்தாலும் நான்-"

"நோ க்ருபா!" என்று குரல் நடுங்கச் சொன்னாள் அவள்.

"இதை நானே அனுமதிக்க மாட்டேன்."

"நீயே அனுமதிக்க மாட்டாயா? என்ன சஸி...?"

"உங்களை அவள் நிலையில் வைத்துக் கொஞ்சம் யோசியுங்கள். சிறிது நேரத்திற்கு நீங்கள் புவனாவாக,

அவளைக் க்ருபாவாக நிறுத்திப் பாருங்கள். நான் சொல்வது புரியும்."

"சஸி!"

"எத்தனை மனுஷத்தனமாய்-எவ்வளவு நம்பிக்கையோடு நம்மை அனுப்பி வைத்திருக்கிறாள். இந்த மாதிரி யார் செய்வார்கள் க்ருபா? நான் செய்ததை மட்டும் ஆச்சரியம் என்கிறீர்களே... புவனா செய்தது மட்டும் ஆச்சரியமில்லையா? அது மட்டும் பெரிய விஷயமில்லையா?"

"இருக்கலாம். ஆனால் இதை அவள் தனக்காகச் செய்து கொண்டாள். ஒரு குழந்தை வேண்டும் என்கிற சுயநலத்தினால்தான் செய்தாள்...ஆனால் நீ...உன்னுடையது...?"

"இன் எவே என்னுடையதும் சுயநலம்தான் க்ருபா உங்களோடு, உங்கள் மனைவியாகக் கொஞ்ச காலமாவது இருக்கலாம் என்ற சுயநலம். பின் அந்தப் பசுமையின் நினைவோடு வாழ்ந்து விடலாம் என்ற சுயநலம்..."

அவன் எதுவும் பேச முடியாமல் ஒரு வினாடி அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? இந்த உலகத்தில் எல்லோருமே ஏதோ ஒரு வகை சுயநலத்தோடுதான் இயங்குகிறார்கள். அதனால் புவனாவை மட்டும் தப்புச் சொல்லிவிட முடியாது. மேலும் நீங்கள் அப்படிக் கேட்டால் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். ஏற்கனவே மனவியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிற அவள் இன்னும் எப்படிப் பாதிக்கப்படுவாள் என்று நினைத்துப் பாருங்கள். அதற்கு மேல் அந்த வீட்டில் நிம்மதி இருக்குமா?... உங்களாலோ... அவளாலோ... அல்லது என்னாலோ சாதாரணமாகப் பழக முடியுமா?... எல்லாரும் கஷ்டப் பட்டு... எல்லாரையும் கஷ்டப்படுத்தி... இதெல்லாம் என்ன க்ருபா...? எதற்காக...? மனிதர்கள் பிறப்பதே தானும் சந்தோஷமாக இருந்து மற்றவர்களையும் சந்தோஷப் படுத்தத்தானே!"



'பேசாதே... பேசாதே...' என்கிறாற் போல அவன் உதட்டில் தன் விரல்களை வைத்து மூடினான் க்ருபா. அதற்குமேல் தாங்க முடியாது போலிருந்தது. அழுகை வரும் என்று தோன்றியது. மனசின் மூலையில் சின்னதாய் விளக்கை ஏற்றி வைத்த மாதிரி பிரகாசித்தது.

'என்ன பேசுகிறாள் இவள்...! எப்படிப் பேசுகிறாள்...! ஒரு பிரச்சனையை ஒட்டி நின்றும், அதை விட்டுத் தள்ளிப் போயும்... வெறும் அழகு மட்டுமில்லை. இந்தப் புத்திசாலித்தனமும்தான்... மனுஷத்தனமும் தான்...இத்தனை பேசியும் இந்தப் பேச்சைக் கேட்ட காரணத்தினாலேயும் உன்னை என்னால் பிரிய முடியாது போலிருக்கிறதே சஸி... நான் என்ன செய்யப் போகிறேன்... எப்படி இதைத் தாங்கிக் கொள்ளப் போகிறேன். அதன் பின் எப்படி வாழப் போகிறேன்...?'

அப்போதே அவளை விட்டுப் பிரிகிற வேதனையில் அவளை அருகில் இழுத்து மென்மையாய் அணைத்துக் கொண்டான். 'என்னை விட்டுப் போகாதே சஸி...' என்று கேட்க நினைத்துக் கேட்காமல்-கேட்க முடியாமல் மௌனமாக இருந்தான்.



# 17

இரண்டு நாட்களுக்குப் பின் டாக்டர் வீட்டுக்குப் போனதும், டாக்டர் அவளை அதே புன்சிரிப்போடு வரவேற்றாள். கன்க்ராஜுலேஷன்ஸ் சொன்னாள்.

"என்ன குழந்தை வேண்டும் உங்களுக்கு" என்று கேட்டாள்.

"பெண் குழந்தை டாக்டர்."

20213
36 80403

"பெண் குழந்தையா...? ஆச்சரியமாக இருக்கிறதே. எல்லாரும் முதல் குழந்தை ஆணாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். பட் யு ஆர் டிஃபரெண்ட்."

'எஸ். ஐ யம் டிஃபரண்ட் இன் எவ்ரி வே' என்று நினைத்துக் கொண்டே, "ஹி வாண்ட்ஸ் எ கேர்ள் பேபி!" என்று பதில் சொன்னாள் சஸி.

"குட் லக்" என்று சிரித்தாள் டாக்டர். பின், "எல்லாம் நார்மலாக இருப்பதால் உங்களுக்கு மாத்திரைகள் எதுவும் தேவை இல்லை. நன்றாகச் சாப்பிடுங்கள். முடிந்தால் மாலை நேரத்தில் சிறிது தூரம் நடங்கள். ஒவ்வொரு மாதமும் செக் அப்பிற்கு வாருங்கள்."

சஸி தாங்க்ஸ் சொல்லிவிட்டு வெளியில் வந்ததும் க்ருபாவைப் பார்த்துச் சந்தோஷமாகச் சிரித்தாள். அவன் புரிந்து கொண்டான். எதுவும் பேசாமல் அவளைப் போல் அதே புன்சிரிப்பில் தன் சந்தோஷத்தைத் தெரியப் படுத்தினான். பின் வீட்டிற்கு வந்ததும் மின்சார விசிறியைச் சுழலவிட்டு அவளை உட்காரச் சொல்லி, "டாக்டர் என்ன சொன்னார்கள்?" என்று கேட்டான்.

"எல்லாம் நார்மலாக இருப்பதாகச் சொன்னார்கள். சாயந்திர நேரத்தில சிறிது தூரம் வாக் போகச் சொன்னார்கள்."

"அவ்வளவுதானே...? இந்தப் பங்களூரில் வாக்கிங் போகத்தானா இடமில்லை. ஏன் சஸி, தினமும் நானே அழைத்துக் கொண்டு போகட்டுமா?" என்று கேட்டான்.

ஆர்வமாய் மின்னுகிற அந்தக் கண்களைப் பார்த்ததும் அவனால் மறுக்க முடியவில்லை. "ஓ எஸ். அழைத்துக் கொண்டு போங்களேன்..." என்றாள்.

ஒரு வினாடிக்கெல்லாம் அவன் முகம் மாறியது. "எப்படி முடியும்?" என்றான் வருத்தத்தோடு. "புவனா வந்தால் விடவா போகிறாள்? முதலில் என்னை இங்கே இருக்கவே அனுமதிக்கப் போகிறாளோ இல்லையோ!"



அதைக் கேட்டுச் சட்டென்று அவன் கையைப் பற்றினாள் சஸி. அந்த விரல்களின் அழுத்தத்தில் திடுக்கிட்ட மாதிரி அவளைப் பார்த்தான் அவன்.

"என்ன சஸி!"

"ப்ளீஸ் க்ருபா. இந்த மாதிரி நிலைமையில் என்னை விட்டுப் போய் விடாதீர்கள் க்ருபா. நீங்கள் பக்கத்தில் இருப்பதே ஆறுதலாக இருக்கும். பயம் இல்லாமல் இருக்கும். நீங்கள் என்னைப் பார்க்கக்கூட வேண்டாம். பேச வேண்டாம். இந்த வீட்டின் ஏதோ ஒரு மூலையில் நான் சுவாசிக்கிற அதே காற்றைச் சுவாசித்துக் கொண்டு-நான் ஒதுங்கியிருக்கிற அதே நிழலில் நீங்களும் ஒதுங்கி இருக்கிறீர்கள் என்ற நினைப்பே என்னைத் தைரியப் படுத்தும். எனக்கும் பலமாக இருக்கும். புவனாவிடம் என்ன சொல்வீர்களோ-எப்படிச் சொல்வீர்களோ தெரியாது. இப்போது என்னை விட்டுப் போகக் கூடாது... என்ன?"

அதில் நெகிழ்ந்து போனான் அவன். குரல் கரகரக்க "ஓ கே." சொன்னான்.

பகல் சாப்பாட்டிற்குப் பின் புவனாவிற்குப் போன் பண்ணினான். அவளிடம் விஷயத்தைச் சொன்னதும் அவள் ஒரு வினாடி பேசாமல் இருந்தாள்.

"என்ன புவனா பேச்சே இல்லை?"

"எப்போது தெரியும் இது உங்களுக்கு...?"

"இப்போதுதான்."

"இப்போதுதானா...? நிஜமாகவே இப்போது தானே...?"

"ஆமாம் புவனா..."

மறுபடியும் அவள் நம்பாத மாதிரி பேசாமல் இருந்தாள். பின்-

"எத்தனை மாதம்...?" என்று கேட்டான்.

"எத்தனை மாதமாகிவிட முடியும் புவனா...? ஜஸ்ட் ஃபிஃப்டி டேஸ். டாக்டர் கூட கன்ஃபர்ம் பண்ணி விட்டார்."

"எந்த டாக்டர்...?"

"டாக்டர் ஷீலா ஜோசப்."

"யார் அது ஷீலா ஜோசப்?"

"இங்கே நர்ஸிங் ஹோம் வைத்திருக்கிறாள்."

"அவன் எங்கே இப்போது..."

"எவன்?"

"சஸியைத்தான் கேட்கிறேன்."

"கீழே இருக்கிறான்."

"அப்படியா... நான் நாளைக் காலை ஃப்ளைட்டில் கிளம்பி வருகிறேன். ஏர்போர்ட்டிற்கு வாருங்கள்."

"எத்தனை மணி ஃப்ளைட்...?"

"காலை ஆறு மணி ஃப்ளைட். நீங்கள் மட்டும் தனியாக ஏர்போர்ட்டிற்கு வந்தால் போதும். துணையோடு வர வேண்டாம். இனிமேல் அந்தத் துணையை அப்படியே விட்டுவிட வேண்டியதுதான். புரிகிறதா...?"

என்ன பேச்சு...! அதில் எத்தனை வெறுப்பும் கோபமும்...!

அவன் ஒன்றும் சொல்லாமல் போனை வைத்தான். சஸியிடம் அவள் சொன்னதையெல்லாம் சொன்னான்.

"ஏன் சஸி, இத்தனை நாள் ஏர்கண்டிஷண்ட் அறையில் இருந்தவளை இப்போது மறுபடியும் தூக்கி



நெருப்பில் போட்டால் எப்படி இருக்கும் சஸி..." என்று மருகினான். "நீயும் அதே மாதிரி நெருப்பாக விசிறி இருக்கக் கூடாது? அனலாகக் காய்ந்திருக்கக் கூடாது? எதற்காக இப்படிக் குளிர்ச்சியாய் இருந்து என்னையும் குளிர வைத்தாய்...? இந்தக் குளிரை மனசும் உடம்பும் அனுபவித்ததால் தானே இப்போது அந்தத் தணல் அதிகம் தெரிகிறது. அதிகமாக மனசுக்கு உறைக்கிறது? ம்?"

அன்று இரவு முழுவதும் தூக்கம் வராமல் புலம்பினவனை மெல்ல அணைத்துச் சமாதானப்படுத்தினாள் சஸி. சின்னக் குழந்தைக்குச் சொல்கிற மாதிரி சொன்னாள். கடைசியில் அவன் மெதுவாக ஓய்ந்து சின்னச் சிரிப்பாகச் சிரித்த போது-

"அனேகமாக இதுதான் உன்னோடு இப்படிச் சேர்ந்து சிரிக்கிற கடைசிச் சிரிப்பாக இருக்கப் போகிறதோ என்னவோ...?" என்று ஆழமாகப் பெரு மூச்சுவிட்டான். அந்தப் பேச்சும்- அவனுடைய வருத்தமும் மனதைச் சுட அவள் அப்படியே கண்களை மூடிக் கொண்டாள்.

மறுநாள் காலையில் அவன் ஏர் போர்ட்டிற்குத் தனியாகத்தான் போனான். போவதற்கு முன் அவளை ஒரு தரம் ஆழமாகப் பார்த்தான். அந்தப் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவள் தலை குனிந்த போது மெதுவாக முகத்தை நிமிர்த்தினான்.

"சஸி..." என்று தடுமாறி, தன் உதட்டால் அவள் உதட்டை இறுக அழுத்தி, "வரட்டுமா...?" என்ற போது கண் கலங்கித்தான் போயிற்று. அந்தக் கலக்கம் விமானத்திலிருந்து இறங்கின புவனாவைப் பார்க்கிற வரை அப்படியே இருந்தது. பின் மெதுவாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "எப்படி இருக்கிறாய் புவனா...?" என்று கேட்டான்.

"அதுதான் பார்க்கிறீர்களே...? ஒரு தடவை அதைத் தெரிந்து கொள்ளவாவது மெட்றாஸ் வந்து விட்டுப் போக உங்களுக்குத் தோன்றவில்லை. இல்லை...?"

"ஐ யம் ஸாரி புவன். வரக்கூடா..."

"அது சரி. அதுதான் எல்லாவற்றிற்கும் வசதியாக ஒருவார்த்தை இருக்கிறதே- ஸாரி. கொலை பண்ணி விட்டுக் கூடசுலபமாகச் சொல்லி விடலாம்."

"என்ன புவனா இது...? வந்த உடனேயே...?"

"உண்மையைச் சொல்வதற்கு வந்த உடனே என்ன, கொஞ்சம் கழித்து என்ன...?"

அதற்குப் பதில் சொல்லாமல், "எது புவனா உன் சூட்கேஸ்..." என்று பேச்சை மாற்றினான் அவன்.

"நல்லவேளை யார் புவனா நீ என்று கேட்காமற் போனீர்களே... அதோ அந்த ப்ரௌன்."

அவன் சூட்கேஸை கார் டிக்கியில் வைத்துவிட்டுக் கதவைத் திறந்து அவளுக்கும் பக்கத்துக் கதவைத் திறந்து விட்டான். சிறிது தூரம் போனதும் அவளே பேசினாள்:

"நான் வந்தாயிற்று. இனிமேல் நீங்கள் மெட்றாஸ் கிளம்பிப் போகலாம் இல்லையா..."

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை.

"என்ன பதிலே இல்லை? இப்படி மௌனமாக வந்தால் என்ன அர்த்தம்? போகப் போவதாக அர்த்தமா, இல்லை என்று அர்த்தமா...?"

"புவனா...எங்கேயாவது நிதானமாக உட்கார்ந்து காப்பி சாப்பிட்டுக் கொண்டே பேசலாமா..."

"என்ன பேசப் போகிறீர்கள்...?"

"சொல்கிறேன்."

அவன் காமத் ரெஸ்டாரெண்டில் நிறுத்தி உள்ளே போனான். தனியாய் கோடியில் கிடந்த மேஜையில் போய் உட்கார்ந்தான்.



"டிபன் ஏதாவது சாப்பிடுகிறாயா புவனா...?" என்று கேட்டான்.

அவள் வேண்டாம் என்று தலையாட்டினதும் இரண்டு காப்பி மட்டும் ஆர்டர் பண்ணினான். பின் நிதானமாகப் பேச ஆரம்பித்தான்:

"நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேட்டுக் கொள்ள வேண்டும் புவனா. அனாவஸ்யமாய் கோபப்படக் கூடாது. கத்தக் கூடாது. அப்படிக் கத்துவதானால் நான் சொல்லவே இல்லை..."

"சொல்லுங்கள்..."

"நீ கோபப்பட மாட்டேன் என்று சொல்லு."

"மாட்டேன்."

"இங்கே கத்தி அமர்க்களப்படுத்தக் கூடாது."

"இல்லை."

அப்போது காப்பி வந்தது. அவன் இரண்டு கோப்பைகளிலும் சர்க்கரை போட்டுக் கலக்கி ஒன்றை அவள் பக்கம் நகர்த்தினான். "சாப்பிடு புவனா..." என்று சொல்லித் தன்னுடைய கோப்பையை உறிஞ்சினான். அவன் குடித்து முடிக்கிறவரை அவள் தன்னுடையதைத் தொடாமல் இருக்கவே-

"என்ன புவனா சாப்பிடலை...?" என்று கேட்டான்.

இல்லை என்று தலையாட்டினாள்.

"ஏன்...?"

"முதலில் நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள்."

"ஒன்றுமில்லை புவனா. குழந்தை பிறக்கிறவரை நான் இங்கேயே இருக்கிறேன் புவனா. அதற்கு முன்னால் என்னைப் போகச் சொல்லி விடாதே ப்ளீஸ். இதுவரை

உன்னிடம் நான் எதையும் கேட்டதில்லை. முதல் தடவையாய் இதை" அதற்கு மேல் பேச முடியாமல் நிறுத்தினான்.

அவன் முகம் சட்டென்று கொஞ்சம் தெளிவடைந்தது. எதையோ பெரியதாக எதிர்பார்த்து பின் இதைக் கேட்டதும் அவ்வளவுதானா என்று தோன்றிற்று. அந்த சந்தோஷத்தில்

"அவ்வளவுதானே, இருங்களேன்!" என்றாள்.

அந்தப் பதிலை அவன் எதிர்பார்க்காததால் கொஞ்சம் திகைத்துப் போனான்.

'புவனாவா இவள்...? இத்தனை சாந்தமாக, பொறுமையாக, 'அவ்வளவுதானே...இருங்களேன்...' என்று...தவறிப் போய் வந்து விடவில்லையே...? தன் காதில் தப்பாக விழுந்து விடவில்லையே. அதை உறுதிப்படுத்திக் கொள்ள மெதுவாய் மறுபடியும் கேட்டான்:

"நிஜமாகத்தானே சொல்கிறாய்?"

"நிஜம்தான்."

"தேங்க்யு புவன்!" அவன் அவள் கைகளைப் பற்றி அழுத்தினதும் சட்டென்று உதறிக் கொண்டாள். அவனை நிமிர்ந்து பார்த்தபோது கண்களில் பொறியாகச் சின்னக் கோபம் ஒன்று எட்டிப் பார்த்தது.

"என்ன புவன்...?"

"நீங்கள் இங்கே இருக்க வேண்டுமானால் எனக்கு ஒரு வாக்குக் கொடுக்க வேண்டும்..."

"என்ன...?"

"கொடுத்தால் மட்டும் போதாது. அதை மீறவும் கூடாது."

"சொல்லு புவன்."



"எந்தக் காரணத்தைக் கொண்டும் இனிமேல் அவளைப் பார்க்கக் கூடாது, பேசக் கூடாது. நான் இல்லாத போது இருந்த மாதிரி இருக்கக் கூடாது. என்ன...? இட்ஸ் ஆல் ஓவர் நௌ..."

'ஓவர்...? ஆரம்பத்திலேயே முடித்து வைக்கப் பார்க்கிறாயே...?' என்று கேட்க நினைத்து-கேட்பதால் என்ன உபயோகம் என்பதைப் புரிந்து கொண்டு வேறு வழியில்லாமல், "சரி புவனா..." என்று தலையாட்டினான்.

பின் காரில் வந்து கொண்டிருந்தபோது சசி சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

'நீங்கள் இதே வீட்டில், இதே நிழலில், இதே காற்றைச் சுவாசித்துக் கொண்டிருப்பீர்கள் என்பதே மனசுக்கு இதமாக- பெரிய பலமாக இருக்கும்...'

'எத்தனைப் பெரிய உண்மை அது. அதே இதத்தில் பலத்தில்தான் நானும் இருக்கப் போகிறேன் சசி...'

வீட்டு வாசலில் காரை நிறுத்தினதும் சிரித்துக் கொண்டே வந்து கதவைத் திறந்தாள் சசி.



# 18

**தூ**க்கம் வராமல் புரண்டு படுத்தான் க்ருபா. மல்லாந்து படுத்து மின்சார விசிறியைப் பார்த்தான். பின் இரவு விளக்கைப் பார்த்தான். ஜன்னலின் அடைபட்ட வானத்தைப் பார்த்தான். கடைசியாகப் பார்வை புவனாவின் முகத்தில் பதிந்தபோது அவளும் தூங்காதது தெரிந்தது. விழித்துக் கொண்டு படுத்திருப்பது புரிந்தது. அந்த அரை இருட்டில் அவள் முகம் நல்ல வெள்ளையில் பளிச்சிட்டது.

அதைப் பார்த்துக் கொண்டே மெதுவாகக் கேட்டான் அவன்:

"தூக்கம் வரலையா புவனா..?"

"ம்..?"

"இன்னுமா தூக்கம் வரலை..?"

"இல்லை."

"ஏன் புவனா..?"

"நீங்கள் ஏன் தூங்கலை..?"

"எனக்கும் தூக்கம் வரலை..?"

"அதுதான் என்ன காரணம்..?"

"காரணம்னு தனியாக ஒன்றுமில்லை."

"மனசில் ஏதாவது கஷ்டமா..?"

"கஷ்டமா..? எனக்கென்ன கஷ்டம் புவனா..?"

"ஒருவேளை நான் பக்கத்தில் இருக்கிறதே கஷ்டமாக இருக்கிறதோ என்னவோ..?"

"என்ன புவனா இது?"

"என்ன புவனான்னு நெற்றியைச் சுருக்கினால்..? நான் வேண்டுமானால் கீழே போய் அவளை இங்கே அனுப்பட்டுமா..?"

"புவனா!" என்று அதட்டினான் அவன்.

"என்ன பேச்சு இதெல்லாம்?"

"என்ன பேச்சு என்றால் உண்மையைச் சொல்லித் தானே ஆகணும்..."



"எந்த உண்மையை..?"

"உங்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. நான் சசி மாதிரி அழகாக இல்லை. அவளைப் போல் பக்குவமாக நடந்து கொள்ளத் தெரியவில்லை. அதனால்தான் நீங்கள் இப்படி உடம்பால் பக்கத்தில் படுத்துக் கிடந்தாலும் மனசால் வெகுதூரத்திற்குப் போய் விட்டீர்கள்..."

அந்த உண்மை மனத்தைத் தாக்க அரை வினாடி அயர்ந்து போனான் அவன். பின் ஒருக்களித்துப் படுத்து வலது கையால் அவளை அணைத்து அருகில் இழுத்துக் கொண்டான். மெதுவாய்க் கூந்தலை வருடினான்.

"ஏன் புவன், உன்னை விட்டு என்னால் அப்படி விலகிப் போய்விட முடியும் என்றா நினைக்கிறாய்..? ஏதோ யோசனையில் இருந்து விட்டேன் புவன்..."

"அப்படி என்ன யோசனை..?"

"ஃபாக்டரி யோசனைதான். வேறு எந்த யோசனை இருக்க முடியும்?"

"பொய். வர வர நீங்கள் நிறையப் பொய் சொல்கிறீர்கள்."

"நிறையப் பொய் சொல்கிறேனா..? அப்படி என்ன சொன்னேன்..?"

"ஒவ்வொன்றாக நிரூபிக்க முடியுமா...? எல்லாம் அவரவர்கள் மனசுக்குத் தெரியும். இப்போது சொல்லலையா ஃபாக்டரி யோசனை என்று..?"

"நிஜமாகவே அந்த யோசனைதான் புவனா. சாயந்திரம் சாரங்கபாணி அங்கிருந்து போன் பண்ணினார் தொழிற்சாலையில்—"

"சரி, சரி. நீங்கள் விளக்கச் சொல்ல வேண்டாம். அதுதான் நிஜம் என்று நம்புகிறேன். அதே மாதிரி இன்னொரு விஷயத்திற்கும் நிஜத்தைச் சொல்வீர்களா..."

"என்ன விஷயம்?"

"இது என்ன மோதிரம் கையில்.. யார் போட்ட இதை? இந்த S-யாருக்கு சொந்தம்...?"

அவனிடமிருந்து அதற்குப் பதில் வரவில்லை.

"இப்படிப் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்? மத்தியானம் பார்த்தால் அவள் விரலிலும் இதே மாதிரி போட்டு ஒரு மோதிரம். ஏது என்று கேட்டால் இதே போல் தான் அவளும் பேசாமல் நின்றாள். என்ன இதெல்லாம். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்...?"

அந்தக் குரலும் பார்வையும் நிட்சண்யமாக வரவே சட்டென்று அவளை நம்ப வைக்கிற விதமாகப் பேச்சை ஆரம்பித்தான் அவன்.

"ஒரு அர்த்தமும் இல்லை. டாக்டர் வீட்டிற்குப் போனால் அந்த டாக்டரும் நர்ஸும் வெறுமையான அவள் கழுத்தையும் முகத்தையும் மாறி மாறிக் கேள்விக் குறியாகப் பார்த்தார்களாம். அதற்காக அவர்களை ஏமாற்றுவதற்காகத்தான் இந்த மாதிரி-"

"ஏமாற்றுவது அவர்களையா என்னையா...?"

"புவனா...?"

"நான் என்ன சின்னக் குழந்தையா இதையெல்லாம் நம்ப...?"

"நீ நம்பாமற்போனாலும் உண்மை அதுதான்?"

"ஓ.கே.அப்படியானால் இனிமேல் அந்த மோதிரம் எதற்கு? கழற்றிக் கொடுத்து விடுங்கள் பார்க்கலாம்..."

அதைக் கேட்டு அரை வினாடி தயங்கினான் அவன்.

"பார்த்தீர்களா...? இந்தத் தயக்கம் ஒன்று போதாது நீங்கள் சொன்னதெல்லாம் பொய் என்று நிரூபிக்க..."



அவன் சரேலென்று அந்த மோதிரத்தைக் கழற்றி அவள் கையில் கொடுத்தான். பின்-

"இப்போது உன் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டதா புவனா...?" என்று கேட்டான்.

"இல்லை..."

"இல்லையா...? இன்னும் என்ன செய்ய வேண்டும்...?"

"இதே மாதிரி அவள் விரலின் மோதிரத்தையும் வாங்கித் தர வேண்டும்."

"ஓ.கே. புவனா...? என்று ஆழமாகப் பெருமூச்சு விட்டான். "நாளைக் காலையில் வாங்கித் தருகிறேன்..."

அதன் பின் அவள் அவனை இன்னும் நெருங்கி வந்தாள். மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். பின்பு மெதுவான அழுகையில் அவனுடைய ஜிப்பாவை நனைக்கத் தொடங்கியபோது அழுகையையும், உடம்பு நலுங்குவதையும் பார்த்துப் பதறிப் போனான் அவன்.

"என்ன புவனா இது... எதற்காக இப்போது அழுகிறாய்...?"

அவளிடமிருந்து பதில் வராமல் ஆழமான ஒரு விம்மல் மட்டும் தெறித்தது.

"ச்...என்ன புவன்... குழந்தை மாதிரி ஏன் இந்த அழுகை..ம்..? சொல்லு புவனா..."

"உங்களுக்கு என்னைப் பிடிக்க வில்லை, இல்லை...?"

"டோண்ட் பி ஸில்லி புவன்..."

"இப்படிச் சொல்லிச் சமாளிக்கின்றீர்களே தவிர, பிடிக்கிறது - மனசு பூர்த்தியாய்ப் பிடிக்கிறது என்று பதில் வரவில்லையே...?"

"பதில் வந்தால்தானா...? இல்லாவிட்டால் புரியவில்லையா...?"

"புரியாமல் தானே கேட்கிறேன்."

"சொன்னால் நீ நம்பணும். என்னை மீண்டும் மீண்டும் சந்தேகப்படக் கூடாது."

"இல்லை. சொல்லுங்கள்."

"ஐ லவ் யு புவனா, வித் ஆல் மை ஹார்ட்."

"அப்படியானால் என்னை அங்கே தனியாக விட்டு விட்டு எப்படிச் சஸியோடு கிளம்பி வந்தீர்கள்? இத்தனை நாளும் என் நினைவு கூட இல்லாமல் இருக்க எப்படித் துணிந்தீர்கள்...?"

"நான் கிளம்பி வந்தேனா..? நானாகவா கிளம்பினேன்...? என்ன புவனா இப்படிப் பேசுகிறாய்...?"

"சரி, நான் தான் சொன்னேன் என்றால் நீங்கள் எப்படி இந்த மாதிரி கிளம்பி வரலாம்..? இதற்கு சம்மதிக்கலாம்...? சொல்லுங்கள்."

சரேலென்று எழுந்து உட்கார்ந்தான் அவன். 'என்ன இது...? எதற்காக இப்படிப் பேசுகிறாள்...?' என்று தோன்றிற்று. அதற்கு எந்தப் பதிலை எப்படிச் சொல்வது என்று தடுமாறிப் பின் பேச ஆரம்பித்தான்:

"என்ன புவனா இப்படிப் பேசுகிறாய்...? என்ன ஆயிற்று உனக்கு...? அன்று என்னோடு இதற்காகச் சண்டை போட்டதெல்லாம் மறந்து போய் விட்டதா புவனா? என்னவெல்லாம் சொன்னாய்...? எப்படிப் பேசினாய்..? அழுது அமர்க்களம் பண்ணி, என் சட்டையைப் பிடித்து உலுக்கி உடம்பெல்லாம் கீறி, பின் சஸியை வரவழைத்து அவனோடு கிளம்பியே ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து. அதே புவனாவா நீ...? உனக்குள் இன்னும் எத்தனை புவனாக்கள்? எத்தனை முரண்பாடுகள்...? உன்னை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை புவனா... இதில் எது உண்மையான புவனா...? அன்று என்னோடு சண்டை போட்ட புவனாவா...? அல்லது இதோ இப்படிக் கேட்கிற புவனாவா...? எது என் புவனா?"



'என்புவனா...' அந்த வார்த்தையில் சட்டென்று கிழ்ந்து போனாள் அவள். மனசு ஒரு தரம் சிலிர்த்தது. தே சிலிர்ப்பு உடம்புக்கு வர குரல் நடுங்கக் கேட்டாள்:

"நான் உங்களுடைய புவனாதானே...?"

அந்தக் கேள்வி வந்த விதத்தில் சரேலென்று தலையை யர்த்தி அவளைப் பார்த்தான் அவன்.

"இதில் என்ன சந்தேகம் புவனா?"

"அதே மாதிரி நீங்களும் என்னுடையவர்தானே..?"

"ஆ ஆமாம்..."

"அப்படியானால் நான் ஒன்று கேட்பேன், ஸ்வீர்களா...?"

"கேள் புவனா..."

"சஸியை அழைத்துக் கொண்டு போன மாதிரி ன்னையும் இரண்டு மாதம் மைசூர், ஊட்டி எல்லாம் ழைத்துக் கொண்டு போங்களேன்."

'சஸியை அழைத்துக் கொண்டு போன மாதிரியா...?' ன்று கேட்க நினைத்து சட்டென்று நிறுத்திக் ாண்டான். அவன் அடி மனசு மெல்லப் பிடிபடுகிற திரி தோன்றியது. சற்று முன் அவள் கேட்ட கேள்விகளுக் ல்லாம் காரணம் புரிந்தது. ஆனாலும் நிதானமாக,

"அதெல்லாம் நீ பார்க்காத இடங்களா புவனா...?" ன்று கேட்டான்.

"பார்ப்பதற்கா கேட்கிறேன்..." என்று அவள் பார்வை யர்ந்த போது அவன் அந்தப் பார்வையைச் சந்திக்க டியாமல் தலையைக் கவிழ்ந்து கொண்டான். குரல் டும் முணுமுணுப்பாக வந்தது.

"இப்போது எப்படிப் போக முடியும் புவனா...?"

"ஏன் முடியாது ?"

"சுஸியை எப்படித் தனியாக விட முடியும்.."

"ஏன், என்னைத் தனியாக விட்டு விட்டு நீங்கள் வரவில்லையா..?"

"அது வேறு, இது வேறு புவனா. நீ உனக்குப் பழக்கப்பட்ட இடத்தில் உன் ஊரில் உன் வீட்டில் உனக்குப் பரிச்சயமான மனிதர்களோடு இருந்திருக்கிறாய்; ஆனால் சுஸி அப்படி இல்லை. ஊர், பாஷை, மனிதர்கள் எல்லாமே புதிது. உதவிக்குக் கூட யாரும் இல்லை. மேலும் இந்த நிலைமையில் அவளைத் தனியாக விட்டு விட்டு எங்கே போக முடியும்?"

"இப்போது இவ்வளவு அக்கறையாக அவளுக்காக யோசிக்கிற நீங்கள் அன்று எனக்காக அப்படி யோசிக்கவில்லையே.."

"டோண்ட் பி ஸில்லி புவன். நீயும் அவளும் ஒன்றா.. அவள்" சட்டென்று நினைவுக்கு வந்தாற்போல் நிறுத்திக் கொண்டான் அவன். கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான். அவள் ஒரு வினாடி கண் அகல, பார்வை பளபளக்க அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் பின்சற்று அழுத்தமான குரலில்,

"ஏன் நிறுத்தி விட்டீர்கள்? மேலே சொல்லுங்கள்" என்றாள்.

அவன் அதற்கும் மௌனமாக இருந்தான்.'

"நானும் அவளும் எப்படி ஒன்றாக முடியும்..?ம்.. அவள் அவள்தான், நான் நான்தான்."

"ஐயம் ஸாரி புவன். வெரி ஸாரி. தவறிப் போய் ஏதோ சொல்லி விட்டேன்."

"தவறிப் போகவில்லை. சரியாகத்தான் சொல்லியிருக்கிறீர்கள். எந்த இடத்தில் தாக்கினால் எதிராளியை வீழ்த்த முடியும் என்று தெரிந்து வைத்துக் கொண்



ருக்கிறீர்கள். ஆனால் இதற்கெல்லாம் என்னை அசைத்து விட முடியாது. நாளைக்கே நாம் கிளம்புகிறோம்."

"இல்லை. என்னால் நாளைக்குக் கிளம்ப முடியாது. ான் நாளை தொழிற்சாலை விஷயமாக சாரங்க பாணியோடு டெலிபோனில் பேசியாக வேண்டும்."

"பேசின பின்பு கிளம்பலாம். அப்படியே பேச ுடியாவிட்டால் கூட மைசூர் ஓட்டல் அறையில் ட்லிபோன் இருக்கும்."

"இருக்கலாம். ஆனால் நான் இங்கிருந்தே "

"நோ. யு ஆர் கமிங்."

அந்தக் குரல் அதில் தெரிந்த அழுத்தம் கண்களில் ட்டிப் பார்த்த கோபம் முகத்தின் சிவப்பு.. இந்த நிலையில் வளோடு சண்டை போடக் கூடாது என்று நினைத்துக் காண்டான். மறுத்துச் சொல்லக் கூடாது. சொன்னால் லூனை ஊசியால் குத்தின மாதிரி வெடித்துப் போவாள் ந்த. ஆரம்பிப்பாள். நசுத்தால் சீறுவாள் அதையெல்லாம் விர்க்க வேண்டுமானால் இப்போதும் இதற்கும் சரி சால்லித்தான் ஆக வேண்டும். வேறு வழி இல்லை.

"ஓ. கே. புவன். போகலாம். இப்போது நீ படுத்துத் ங்கு."

அவள் அமைதியாகிப் படுத்துக்கொண்டதும் அவன் கரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான். பின் வெளி ராந்தாவில் வந்து நின்றான். வெகு நேரம் வானத்தை வெற்றுப் பார்வையாய்ப் பார்த்தான். பின் உள்ளே போகப் டிக்காமல் அங்கே அப்படியே தரையில் படுத்துக் கொண்டான். சிறிது நேரத்திற்குப் பின் தூங்கியும் ானான்.

காலையில் புவனா எழுந்து பார்த்தபோது அவன் ந்தக் குளிரிலும் பனியிலும் உடம்பை ஒடுக்கிக் கொண்டு ரையில் படுத்திருப்பது தெரிந்தது. சட்டென்று கட்டிலை ட்டு இறங்கி அவனை எழுப்புவதற்காக முதுகில் கை

வைத்த போது அந்தக் கையில் வெம்மையாய்ச் சூடு பரவியது.



# 19

அவனை எழுப்பி உள்ளே அழைத்துக் கொண்டு வந்து படுக்க வைத்தாள் புவனா. கீழே இறங்கிப் போய்ச் சூடாகக் காப்பி கலந்து கொண்டு வந்தாள். அவனிடம் கொடுத்து விட்டு அந்த முகத்தையே அரை வினாடி இமைக்காமல் பார்த்தாள். சிவந்து போன கண்களும், முகமும், கலைந்து கிடந்த தலையும்... சுள்ளென்று உள்ளுக்குள் ஒரு கோபம் எட்டிப் பார்க்க அழுத்தமான குரலில் கேட்டாள்.

"இப்போது மனசு நிம்மதியாகி விட்டதா...?"

அவன் உதட்டருகில் கொண்டு போன கோப்பையை நிறுத்திவிட்டு சட்டென்று அவளைப் பார்த்தான்.

"என்ன புவனா சொல்கிறாய் நீ?"

"இல்லை, இப்போது மனசு நிம்மதியாகி இருக்குமே என்று கேட்டேன்..."

"எதற்கு?"

"என்னை அழைத்துக் கொண்டு போகாமல் இருப்பதற்கு ஒரு காரணம் கிடைத்து விட்டது இல்லையா... அதனால் தானே அந்தப் பனியிலும் குளிரிலும் வெறும் தரையில் படுத்துக் கொண்டு இப்படிக் காய்ச்சலை வர வழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!"

அவன் ஒன்றும் பேசாமல் ஒரு நிமிடம் அவளையே பார்த்தான். பின் குடிக்கப் பிடிக்காமல் காப்பியைப் பக்கத்து



மேஜை மீது வைத்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவள் மறுபடியும் அதே குரலில் கேட்டாள்.

"என்னைத்தான் பிடிக்கவில்லை. நான் கொண்டு வந்த காப்பி கூடவா பிடிக்கவில்லை?"

"ப்ளீஸ், ஸ்டாப் டாக்கிங் லைக் தட் புவனா. கிளம்பு. நாம் இன்றைக்குப் போகத்தான் போகிறோம்..."

அவள் நம்ப முடியாத பார்வையில் அவனைப் பார்த்தாள்.

"என்ன பார்க்கிறாய்... இன்னும் ஒரு மணி நேரம். நீ எல்லா ஏற்பாடுகளையும் பண்ணிவிட்டுக் கிளம்பியாக வேண்டும்..."

"நிஜமாகவா..."

"நிஜமாகத்தான் புவன்."

"இந்த உடம்புடனா...?"

"என்ன பெரிய உடம்பு. அரை மாத்திரை க்ரோஸின் சாப்பிட்டால் சரியாகப் போய்விடும்."

அவள் அந்தச் சிரிப்பில் திருப்தி அடைந்தவளாகக் கீழே இறங்கி வந்தாள். யாருக்கோ போன் பண்ணி அந்தப் பழைய வாட்ச்மேனை அனுப்பச் சொன்னாள். அவனுடைய மனைவியையே சஷிக்குத் துணையாக வைத்தாள்.

"நாங்கள் திரும்பி வர ஒரு மாசம் ஆனாலும் ஆகும் திம்மப்பா. அதுவரை தங்கச்சியை நல்லா கவனிச்சிக்கோ. அப்புறம் அமெரிக்காவில் இருக்கிற அதன் வீட்டுக்காரர் வந்து நம்மைப் பத்தி ஒரு வார்த்தை தப்பு சொல்லக் கூடாது என்ன...?"

அவன் தலையாட்டினதும் சஷியைப் பார்த்தாள். உள்ளே அழைத்துக் கொண்டு போய் ஒரு வார்த்தை பேசாமல் கொஞ்சம் பணம் கொடுத்தாள்.

"வருகிறவரை இதைச் செலவிற்கு வச்சுக்கோ. ஜாக்கிரதை!" என்று மட்டும் சொன்னான்.

மறுபடியும் மாடிக்குப் போனபோது க்ருபா எழுந்து குளித்து உடை மாற்றித் தயாராக இருந்தான். அவனுடைய கண்கள் இன்னும் சிவந்து போயிருப்பதாக அவளுக்குத் தோன்றவே,

"இந்த உடம்போடு எதற்காகக் குளித்தீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே நெற்றியில் கை வைத்தாள். அந்தச் சூட்டில் சரேலென்று கையை இழுத்துக் கொண்டு

"என்ன க்ருபா இது! இப்படிச் சுடுகிறது. இந்த ஜுரத்தோடு எப்படிப் போவது?..." என்று அவனைக் கவலையாகப் பார்த்தாள்.

"ஓ திஸ் ஈஸ் நத்திங். மைசூர் போய் யாராவது டாக்டரிடம் காட்டலாம்!" என்று ஒரு வினாடி தயங்கிப் பின் மெதுவாகக் கேட்டான் அவன்:

"சஸியிடம் சொல்லிவிட்டாயா புவனா...?"

"என்ன சொல்லணும்...?"

"நாம் போகப் போவதை..."

"எதற்குச் சொல்லணும்....!"

"என்ன புவனா இப்படிக் கேட்கிறாய்...?"

"எனக்குச் சொல்ல வேண்டியது அவசியம் என்று தோன்றவில்லை. அதனால் சொல்லவில்லை. உங்களுக்கு அவசியமானால் சொல்லி விட்டு வாருங்கள்."

அவன் அதற்குப் பதில் சொல்லாமல் கீழே இறங்கி வந்தான். திம்மப்பாவைக் கூப்பிட்டுத் தனியாகச் சொன்னான். அவன் மனைவியிடமும் சொல்லிவிட்டுத் திரும்பினபோது அறை வாசலில் சஸி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். மாடிப் படிகளில் புவனா இறங்கி வருவது தெரிந்ததும் அவனிடம் சொல்லாமற் போக மனமில்லாமல் மெதுவான குரலில்



"ஜாக்கிரதையாக இரு சஸி. எந்தப் பயமும் இல்லை. உனக்குத் துணையாகத் திம்மப்பா இருப்பான். உதவிக்கு அவன் மனைவியும் இருக்கிறாள். ஸோ நீ பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. அனேகமாக நாங்கள் ஒரு வாரத்திலோ பத்து நாட்களிலோ திரும்பி விடுவோம்..." என்றான்.

சஸி அவனை ஒரு தரம் நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டான்.

அந்தப் பார்வையும், கண்களில் தெரிந்த லேசான கலக்கமும் அவனை மிகவும் கஷ்டப்படுத்தின. அருகில் போய் அவன் முகத்தை நிமிர்த்தி கண்களைத் துடைக்க கைகளும் மனமும் பரபரத்தன. உதட்டில் அழுத்தி முத்த மிட்டு 'வரட்டுமா சஸி...?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. மெதுவாய்த் தலையை வருடி, தோளில் கை போட்டு மென்மையாக அணைத்துக் கொண்டு வாசல் வராந்தா வரை கார் வரை கூட அழைத்துக் கொண்டு வந்து...

அதற்குமேல் ஒரு வினாடி அந்த இடத்தில் நின்றால் கூட அதில் ஏதாவது ஒன்றைச் செய்து விடுவோம் என்ற தோன்றவே சரேலென்று நகர்ந்து வாசலுக்குப் போனான். திரும்பிப் பார்க்காமல் டிக்கியைத் திறந்து திம்மப்பா விடமிருந்து சூட்கேஸை வாங்கி வைத்தான். பூட்டிவிட்டு டிரைவிங் ஸீட்டில் உட்கார்ந்தான். புவனாவும் வந்து உட்கார்ந்ததும் சட்டென்று காரைக் கிளப்பினான்.

கேட்டை விட்டு வெளியில் வந்து சிறிது தூரம் போனதும் புவனா அவன் முகத்தை ஆழமாகப் பார்த்துக் கொண்டு சொன்னாள்

"துஷ்யந்தன் கதை தெரியுமா உங்களுக்கு...?"

அவன் பதில் சொல்லாமல், அவளைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் மௌனமாகச் சாலையையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் விடவில்லை.

"அந்தத் துஷ்யந்தன் இப்படித்தான் சகுந்தலையிடமிருந்து பிரியா விடை பெற்றானாம். ஆனால் ஒரு சின்ன வித்தியாசம். அவன் மோதிரத்தைப் போட்டு விடை பெற்றான். இந்த துஷ்யந்தனோ தன் மோதிரத்தைக் கழட்டிக் கொடுத்தும்-"

"புவனா. வில் யு ப்ளீஸ் ஷட் அப்?"

முதல் தடவையாய் அவன் கோபப்பட்டு அந்தக் குரல் உயர்ந்து கேட்ட புவனா அதிர்ந்து போனாள். ஒரு நிமிஷம் பேச முடியாமல் அடங்கிப் போனாள். பின் அந்த அடக்கமும் அதிர்ச்சியும், அழுகையும் ஆத்திரமுமாக மாற வார்த்தைகள் தடுமாறி நெருப்பாக வெளியில் வந்தன.

"ஒய் ஷ்ட் ஐ..? நான் ஏன் பேசாமல் இருக்கணும்? எதற்காக இருக்கணும்? குற்றமுள்ள நெஞ்சு. அதுதான் இப்படிக் குறுகுறுக்கிறது. நான் கண்ணால் பார்க்கலை, அவனிடம் பேசினபோது அந்த முகமும் குரலும்...? கொஞ்சலாக... கெஞ்சுகிற மாதிரி... ஓ... நோ... நான் உங்களோடு வரமாட்டேன். இனிமேல் எங்கேயும் வர மாட்டேன். அவளையே மறுபடியும் அழைத்துக் கொண்டு போங்கள். அவள் கூடவே இருங்கள். அவளுடனேயே படுத்துக் கொள்ளுங்கள். இந்த ஒரு குழந்தை மட்டுமில்லை. இன்னும் எத்தனைக் குழந்தைகள் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளுங்கள்."

அந்தக் கத்தலில், அழுகையில், தலையில் அடித்துக் கொண்ட அடிகளில் தெருவில் போனவர்கள் திரும்பிப் பார்க்கவே காரின் வேகத்தை அதிகப்படுத்தி மெதுவான குரலில் கெஞ்ச ஆரம்பித்தான் அவன்.

"புவனா... ப்ளீஸ். என்னம்மா இது... ப்ளீஸ்..."

அது காதில் விழாதவளாக அவள் அவன் சட்டையைப் பிடித்து இழுத்தாள்.

"நிறுத்து வண்டியை. நிறுத்தப் போறியா இல்லையா...?"



அவன் ஒரு கையால் ஸ்டியரிங்கைத் திருப்பி வலது கையால் அவள் கையைப் பற்றி அழுத்தினான்.

"ப்ளீஸ், புவன். கண்ட்ரோல் யுவர்செல்ஃப். புவன். ஐயம் ஸாரி புவன். ப்ளீஸ்..."

"யாருக்கு வேணும் உன் ப்ளீஸும், ஸாரியும். யு ஆர் எ ச்சீட் (Cheat). உன்னை இனிமேல் நான் நம்பமாட்டேன். நான் போகத்தான் போகிறேன். நீ அவள் கூடவே இரு என்னை இங்கேயே இறக்கி விட்டு விட்டுப் போ..."

"முடியாது புவனா. அந்த மாதிரியெல்லாம் நீ போகக் கூடாது. உன்னை அப்படி இறக்கி விட முடியாது"-அவன் இன்னும் நிதானமாக, விவரம் புரியாமல் வெறி பிடித்து அழுகிற குழந்தைக்குச் சொல்கிற மாதிரி சொன்னான். அந்த நிதானம் அவளை இன்னும் கோபப்படுத்தி வெறுப்படையச் செய்தது. கண்கள் சிவந்து கலங்க, உதடுகள் துடிக்க அவனை ஒரு ஆக்ரோஷத்தோடு பார்த்தாள்.

"நிறுத்த மாட்டே இப்போ...?"

"மாட்டேன் புவனா."

அவள் சட்டென்று ஸ்டியரிங்கைப் பற்றி ஒடிக்க வண்டி தாறுமாறாக ஓட ஆரம்பித்தது. அவன் அதற்கும் சமாளித்து அவள் ஸ்டியரிங்கைத் திருப்ப முடியாமல் அழுத்திப் பிடித்துக் கொண்டபோது அந்தத் தோல்வி மனப்பான்மையைத் தாங்க முடியாமல் சரேலென்று குனிந்து என்ன செய்கிறோம் என்ற நினைவே இல்லாமல் அவனுடைய வலது முழங்கைக்குச் சற்றுக் கீழே தன்னுடைய அத்தனை வெறுப்பையும் ஆத்திரத்தையும் கொட்டி அழுத்திக் கடித்தபோது-

அவன் அந்த வலியும் எரிச்சலும் தாங்காமல் 'உஸ்' என்று அரற்றிக் கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டு மெல்ல ப்ரேக்கை அழுத்திச் சாலையின் இடது பக்க ஓரமாக வண்டியை நிறுத்தினான். மெதுவாய் அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்து விட்டுத் தன் கையைப் பார்த்தான். முழு வட்டமாய்ப் பற்கள் பதிந்த இடத்தில் ரத்தம் கசியச் சிவந்து

போயிருந்தது. ஒன்றுமே பேசாமல் தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்துக் காயத்தில் வைத்து அழுத்தினபோது அவள் வெறி அடங்கி அழுது ஓய்ந்த குழந்தை மாதிரி கதவோரத்தில் ஒடுங்கிக் கொண்டாள். தலையைக் குனிந்து கொண்டிருந்தாள். கண் கலங்கி கன்னத்தில் கோடு கோடாக நீர் வழிந்து கொண்டிருந்தது.

கையை ஒற்றிக் கொண்டு மறுபடியும் நிமிர்ந்து பார்த்தபோது அவள் கண்களும் கலங்கிக் கிடந்தன. அவள் பயந்து போய்க் கதவோரத்தில் ஒடுங்கிக் கிடப்பதைப் பார்த்ததும் தாங்க முடியாதவனாகப் பேச ஆரம்பித்தான். வார்த்தை வராமல் குரல் தழைந்தது:

"ஐயம் ஸாரி புவனா... நீ உன்னை இந்த அளவிற்கு... ஐ ரியலி ஃபீல் ஸாரி. நடந்ததற்கெல்லாம் நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன் புவனா..."

அவள் ஒன்றுமே பேசாமல் நீளமான ஒரு விசும்பலோடு அவன் மடியில் சரிந்தாள். ஆழமான கேவலும், கண்ணீருமாகக் கரைந்தபோது அவனும் கரைந்துதான் போனான். இனிமேல் அந்த மனசை எந்த விதமாகவும் கஷ்டப்படுத்தக் கூடாது என்று நினைத்துக் கொண்டான். அன்பைக் கூடக் கோபமாகவும், வெறுப்பாகவும், ஆத்திரமாகவுமே வெளிப்படுத்தத் தெரிந்த அந்த மனசைப் புரிந்து கொண்டபோது அவளுக்காக உள்ளுக்குள்ளேயே உடைந்து போனான்.

'உன்னைப் போல் என்னால் கோபப்பட்டோ அழுது தீர்க்கவோ முடியவில்லையே புவனா...' என்று சொல்லிக் கொண்டான். மெதுவாக அவள் தலையை வருடியபடி சில நிமிஷங்கள் பேசாமல் இருந்தான். பின்பு அந்தச் சாலையில் இரண்டொரு கார்கள் போக ஆரம்பிக்கவே மெல்ல அந்த முகத்தை நிமிர்த்தினான்.

"எழுந்திரு புவனா. கண்களைத் துடைத்துக் கொள். போகிறவர்கள் எல்லாம் நம்மையே பார்க்கிறார்கள் பார்..."



"பார்க்கட்டும். நன்றாகப் பார்க்கட்டும். நான் பண்ணின தவறுக்கு இப்படி உங்கள் மடியில் படுத்து அழுது அழுது தான் கரையப் போகிறேன்..."

"டோன்ட் பி ஸில்லி. நீ என்ன தப்பு பண்ணினாய் புவன். ஒன்றுமே இல்லையே..."

"ஒன்றுமில்லையா? இதுவா ஒன்றுமில்லை?" அவள் சரேலென்று அந்தக் கையை இழுத்துக் கைக்குட்டையை விலக்கிக் காட்டினபோது மென்மையாய் புன்சிரிப்பாய்ச் சிரித்தான் அவன்:

"இதுவா...? இதையா தப்பு என்கிறாய்... குழந்தை கோபத்தில் கடித்தால் வலிக்குமா என்ன...? இதற்குப் போய் இப்படியா அழுவது? எழுந்திரு புவனா..." அவன் குனிந்து அவள் முகத்தில் மெதுவாகத் தன் உதட்டை அழுத்தின போது அவள் அவன் கழுத்தைத் தன் கைனால் வளைத்துக் கொண்டு ஆர்வமாக அவன் உதட்டைத் தேடினாள். அந்த வேகத்தில், அவன் ஒரு வினாடி திணறிப் போனான். அவளுடைய அத்தனை கோபத்திற்கும், ஆத்திரத்திற்கும் காரணம் புரிகிற மாதிரி தோன்றியது. அதை நினைத்ததும் தன் மீதே கூடக் கொஞ்சம் வெறுப்பு ஏற்பட்டது. 'ஐயம் ஸாரி புவன்' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டு தன் கழுத்திலிருந்து மெதுவாக அவள் கைகளை விலக்கித் தானும் விலகினான். அதுவரை தங்களைத் தாண்டி எந்த வாகனமும் செல்லவில்லை என்ற நிம்மதியில் அவளைப் பார்த்துப் புன்சிரிப்பாகச் சிரித்தான்.

"ஸாரி டியர். இது அமெரிக்காவோ இங்கிலாந்தோ இல்லை. வி ஆர் வெரி மச் இன் இண்டியா. அதுவும் ஒரு ஹைரோட்டில், வெறும் காரில்... ஸோ மீதியெல்லாம் மைசூர் போய்த் தாஸப்பிரகாஷில் ரூம் எடுத்த பின்புதான்... என்ன?"

அதைக் கேட்டுத் தலை நிமிராமல், அவளும் சிற்றாகப் புன்னகை செய்தாள்.



# 20

**மை**சூர் போகிறவரை கூட க்ருபாவினால் தாங்க முடியவில்லை. கை வலியும் குளிரும் சேர்ந்து காய்ச்சலை அதிகமாக்கியது. தலை பாரமாக அழுத்தியது. ராம்நகர் வந்ததும் காரை நிறுத்தி விட்டான் அவன். ஸ்டியரிங் மீதே சரிந்து கண்களை மூடிக் கொண்டான். அதைப் பார்த்துப் பதறிப்போய் அவன் நெற்றியில் கை வைத்தாள் புவனா. உள்ளங் கையில் நெருப்பாகச் சூடு இறங்கிற்று

"உடம்பு இப்படிக் கொதிக்கிறதே. திரும்பிப் போய்விடலாம், வாருங்கள்" என்றபோது-

"இன்னும் கொஞ்ச தூரம்தானே புவனா! மெதுவாகப் போய் விடலாம்" என்று பிடிவாதம் பிடித்தான் அவன்.

"சரி. நீங்கள் நகருங்கள். நான் ட்ரைவ் பண்ணுகிறேன்!" என்று அவனைத் தன் ஸீட்டிற்கு வர வழைத்து அவன் காரைக் கிளப்பினபோது அவன் உட்காரக் கூட முடியாமல் அந்த ஸீட்டில் அப்படியே படுத்துக் கொண்டான்.

"வண்டியை நிறுத்தட்டுமா? பின் பக்கம் படுத்துக் கொள்கிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"வேண்டாம் புவன். ஐயம் கம்ஃபர்டபிள் ஹியர்!" என்று மறுத்துவிட்டுக் கண்களை மூடிக் கொண்டான்.

அதன் பின் மைசூர் வந்து ஓட்டலில் அறை எடுத்த பின்புதான் புவனா அவனை எழுப்பினாள். அப்போது அவனால் நிற்கக்கூட முடியவில்லை. ஓட்டல் பையன்கள் இரண்டு பேர் உதவிக்கு வர அவர்கள் தோளில் கை



போட்டுக் கொண்டுதான் நடந்தான். படியேற முடியாததால் கீழேயே ஒரு அறை ஒழித்துக் கொடுத்தார்கள்.

படுக்கையில் அவனைப் படுக்க வைத்து போர்த்தி விட்டாள் புவனா. பின் சூடாக இரண்டு கப் காப்பி வர வழைத்தாள். ஒரு கப் காப்பியை ஆற்றி மெதுவாக அவனைச் சாப்பிட வைத்தாள். பாதி டம்ளர் குடித்ததும் சட்டென்று எல்லாவற்றையும் வாந்தி எடுத்தான் அவன். அதைப் பார்த்துப் பயந்து போய் அவள் ஓட்டல் மானேஜரின் உதவியோடு டாக்டரை வரவழைத்தாள்.

டாக்டர் வந்து பார்த்து இன்ஜெக்ஷன் போட்டு மாத்திரை எழுதிக் கொடுத்து விட்டுப் போனார். அதற்கும் குறையாமல் நான்கு நாட்கள் கண் திறக்காத அந்தக் காய்ச்சலுக்கும் வாந்திக்கும் பின் அது டைஃபாய்டாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்ட டாக்டர் ரத்தப் பரிசோதனை செய்தார். டைஃபாய்டுதான் என்று உறுதியானதும், ஏதாவது நர்ஸிங் ஹோமில் அட்மிட் பண்ணச் சொன்னார். புவனா தயங்கிக் கொண்டே,

"ஏன் டாக்டர், பெங்களூருக்கே அழைத்துக் கொண்டு போய்விடட்டுமா?" என்று கேட்டதும் அவர் சற்று யோசித்தார்.

"இந்த நிலைமையில் உடம்பிற்கு எந்த அலைச்சலும் வேண்டாம் என்று நினைக்கிறேன். ஆனால் அங்கே இருப்பது தான் உங்களுக்குச் சௌகரியம் என்று நினைத்தால் அதிகமான சிரமம் எதுவுமில்லாமல் அழைத்துக் கொண்டு போகலாம்."

"காரில் அழைத்துக் கொண்டு போகலாமா டாக்டர்? எங்களுடையது டொயோட்டா வண்டி. அதிர்ச்சி, குலுங்கல் எதுவும் அதிகம் இருக்காது."

"அப்படியானால் சரி" என்றதும், அடுத்த பத்தாவது நிமிஷத்திற்கெல்லாம் அவனைப் பின் ஸீட்டில் படுக்க வைத்து பக்கத்தில் தலையணையை இதமாக வைத்து தானே ஓட்டிக் கொண்டு கிளம்பினாள்.

இரண்டரை மணி நேரத்தில் பங்களூர் வந்து வீட்டை அடைந்து திம்மப்பாவின் உதவியோடு அவனை மாடி பெட்ரூமில் படுக்க வைத்து டாக்டருக்குப்போன் பண்ணின அந்தக் கொஞ்ச நேரத்தில் அறை வாசலில் தயங்கி நின்ற சஙி தவித்துப் போனாள்.

'என்ன ஆயிற்று க்ருபா, உங்களுக்கு? போகும்போது நன்றாகத்தானே போனீர்கள். இந்த நாலு நாளில் இப்படி வரும்படி என்ன ஆயிற்று?'

அறைக்குள் நுழைந்து அவன் அருகில் போய் அந்த முகத்தை, உடம்பைத் தொட்டுப் பார்த்து-ஆறுதலாக, இதமாக ஏதாவது பேசவேண்டும் என்று மனசு துடித்தாலும் தைரியமில்லாமல் வெளி வராந்தாவிலேயே நின்றாள். அறையிலிருந்து திம்மப்பா வெளியில் வந்ததும்,

"என்ன ஆயிற்று திம்மப்பா?" என்று கேட்டாள்.

"ஏனில்லாம்மா ஜுரம். உடம்பு நெருப்பு மாதிரி கொதிக்கிறது. உள்ளே போய்ப் பாருங்களேன்" என்று சொல்லி விட்டுக் கீழே இறங்கிப் போய் விட்டான் அவன்.

அவள் உள்ளே போக முடியாமல், கீழே இறங்கிப் போகவும் மனசு வராமல் வராந்தா ஓரமாக நின்று மெதுவாக அந்த முகம் மட்டுமாவது தெரிகிறதா என்று பார்த்தாள். அந்தத் தடிமனான திரைச்சீலை சிறிது கூட அசையாமற் போகவே உள்ளுக்குள்ளேயே அரற்றிக் கொண்டிருந்தாள்.

எதேச்சையாக டாக்டர் வந்து விட்டாரா என்று பார்க்க வெளியில் வந்த புவனா, அறை வாசலில் அவளைப் பார்த்ததும் சட்டென்று நின்றாள்.

"என்ன?"

அந்த முகச் சுளிப்பையும், கேள்வியின் வெறுப்பையும் பார்த்த சஙி தயங்கிக் கொண்டே, "என்ன ஆயிற்று?..." என்று ஆரம்பித்தபோது,



"ஒன்றுமில்லை, வெறும் ஜுரம்தான்!" என்று அலுத்தரித்த மாதிரி பதில் சொன்னாள் அவள்.

மீண்டும் தயங்கின சஙி, "நான் பார்க்கலாமா?" என்று அடக்க முடியாமல் கேட்டதும்,

"முதலில் டாக்டர் வந்து பார்க்கட்டும். அதுவரை யாரும் அனாவசியமாக அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம். நீ கீழே போய் டாக்டர் வந்தால் மேலே அனுப்பு. அப்படியே சாந்தம்மாவை ஒரு டம்ளர் போர்ன் விடா கரைத்துக் கொண்டு வரச் சொல்" என்று சொல்லி விட்டு மறுபடியும் உள்ளே போய் விட்டாள்.

அதற்கு மேல் வராந்தாவில் கூட நிற்க முடியாதவளாக அவள் கீழே இறங்கி வந்தாள். டாக்டர் வந்ததும் மேலே போகச் சொல்லி விட்டுச் சாந்தம்மாவிடம் போர்ன் விடாவைக் கரைத்துக் கொடுத்தனுப்பினாள். டாக்டரிடமாவது விசாரிக்கலாம் என்று போர்டிகோவில் காத்துக் கொண்டிருந்தபோது டாக்டரோடு புவனாவும் கார்வரை கூட வந்தாள்.

"ஸோ, நர்ஸிங் ஹோமிலேயே அட்மிட் பண்ணச் சொல்கிறீர்களா, டாக்டர்?" என்று கேட்டாள்.

"தட்ஸ் பெட்டர்!" என்று பதில் சொன்ன டாக்டர் சட்டென்று நினைவிற்கு வந்தவராக, "மாடியிலேயே கேட்க நினைத்து மறந்து போனேன், மிஸஸ் க்ருபாகர். அவர் கையில் அது என்ன காயம், ஏதோ கடி மாதிரி தெரிந்ததே?" என்று கேட்டபோது உடனே பதில் சொல்லாமல் அரை நிமிஷம் தயங்கினாள் புவனா. பின்

"எங்கள் குழந்தை ஏதோ கோபத்தில் கடித்து விட்டது டாக்டர்!" என்றாள்.

"அப்படியா! குழந்தைக்கு என்ன வயசிருக்கும்?" என்ற அடுத்த கேள்விக்கு மீண்டும் தயங்கி, "நாலாகிறது!" என்றாள்.

"நாலு வயசுதானே, எதற்கும் ஒரு டெட்டனஸ் இன்ஜெக்ஷன் கொடுத்து விடுகிறேன். ஏனென்றால் கடி பலமாக இருக்கிறது. நான் போய் உடனடியாக எங்கள் நர்ஸிங் ஹோமிலிருந்து ஆம்புலன்ஸை அனுப்பி வைக்கிறேன். எங்கள் ஆட்கள் அவரைச் சிரமப் படுத்தாமல் ஸ்ட்ரெச்சரில் படுக்க வைத்து விடுவார்கள். ஸ்ட்ரெச்சர், ஆம்புலன்ஸ் என்றதும் பயந்து விடாதீர்கள். அவர் உடம்பை அலட்ட வேண்டாம் என்பதற்காகத்தான். வேறு எதற்கும் இல்லை!" என்று காரில் ஏறிக் கொண்டார்.

புவனா திரும்பி உள்ளே போனதும், சஸி கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டாள்.

"எங்கள் குழந்தை கோபத்தில் கடித்து விட்டது டாக்டர்."

சட்டென்று எல்லாம் புரிய பதைத்துப் போனான் அவன்.

'புவனா...எப்படிப் பொய் சொல்லி விட்டாய்! கடித்தது நீயா, குழந்தையா? கடிக்கக் கூடத் தோன்றுமா? அப்படிக் கூடக் கோபம் வருமா? அதுவும் க்ருபாவிடமா? அந்த மென்மையான மனசை-உடம்பை-எப்படிக் காயப் படுத்தத் தோன்றுகிறது? க்ருபா... க்ருபா... எப்படித் தாங்கிக் கொண்டீர்கள்? எப்படி முடிந்தது உங்களால்? அதனால் தான் இந்தக் காய்ச்சலா? ஒரு தரம், ஒரே தரம் உங்களைப் பார்க்க முடிந்தால்... முன் நெற்றியில் விழும் அந்தத் தலை முடியை ஒதுக்கி முகத்தைத் தடவிக் கொடுக்க முடிந்தால்... கூடவே இருந்து கவனிக்க முடிந்தால்... நோ. அதெல்லாம் முடியாது. இனிமேல் அதற்கெல்லாம் எனக்குத் தகுதி இல்லை. புவனா அனுமதிக்க மாட்டாள். இட்ஸ் ஆல் ஓவர் ஓவர்... எல்லாம் முடிந்து போன வசந்தம். இல்லை, க்ருபா! எப்படி முடிய முடியும்? நான் முடிகிற போதுதான் எனக்குள் ஏற்பட்ட இந்த வசந்தமும் முடியும். அப்போது கூட முடியாது, க்ருபா. அடுத்த பிறவி என்று ஒன்று இருக்குமானால் அப்போது மீண்டும் தொடரும். ஆனால், அதற்கெல்லாம் முன்பு இப்போது இந்த நிலைமையில்



உங்களை ஒரு தடவை பார்க்க முடிந்தால் போதும். முடியுமா, க்ருபா? ப்ளீஸ் புவனா, ஒரு தரம், ஒரே ஒரு தரம். அனுமதிப்பாயா, புவனா..?'

புவனாவின் அனுமதி இல்லாமலே அவனால் பார்க்க முடிந்தது. ஸ்ட்ரெச்சரில் அவனைக் கீழே இறக்கிக் கொண்டு வந்தபோது அந்த முகம், உடம்பு எல்லாமே ஒரு வினாடி கண்ணில் பட்டது. வலது கையின் அந்தக் காயம் கூட வீங்கிப் போய்ச் சிவப்பாகத் தெரிந்தது. ஒரு வினாடிதான். அதற்குள் ஸ்ட்ரெச்சர் ஆம்புலன்ஸில் நுழைந்து கதவுகள் மூடப்பட்டுக் கிளம்பின. உடனே புவனாவும் பின்னாலேயே திம்மப்பாவோடு காரில் கிளம்பினாள். போகும்போது சஸியைக் கூப்பிட்டுப் பேசினாள்:

"எனக்கு வேண்டிய துணிகளையும், அவருக்கு மாற்ற பைஜாமா, ஜிப்பாவையும் திம்மப்பா வரும்போது கொடுத்தனுப்பு. நான் இன்னும் கொஞ்ச நாளைக்கு வீட்டிற்கு வரமாட்டேன். அதுவரை ஜாக்கிரதையாக இருந்து வீட்டையும் கவனித்துக் கொள். என்ன?"

சஸி அதே மௌனத்தோடு தலையாட்டினான். திம்மப்பா திரும்பி வருகிறவரை தவித்துக் கொண்டு வாசலிலேயே இருந்தான்.

சாயந்திரம் ஐந்து மணிக்கு மேல் அவன் வந்ததும் கேள்விகளாகக் கேட்டான்:

'டாக்டர் என்ன சொன்னார், திம்மப்பா?

இப்போது எப்படி இருக்கின்றது?

நினைவுக்கு வந்ததா?

கண்ணைத் திறந்து பார்த்தாரா?

ஏதாவது பேசினாரா?

கொஞ்சம் ஹார்லிக்ஸாவது குடித்தாரா?

எந்த நர்ஸிங் ஹோம்?

எங்கே இருக்கிறது?

இங்கிருந்து எப்படிப் போக வேண்டும்?'

எல்லாவற்றிற்கும் நிதானமாகப் பதில் சொன்னான் அவன். பொறுமையாகச் சொன்னான். பின்-

"நீங்க வாங்க, சின்னம்மா, நானே கூட்டிக் கொண்டு போகிறேன்!" என்றான்.

"நீ அக்காவிடம் கேட்டுக் கொண்டு வா, திம்மப்பா, அப்புறம் வருகிறேன்" என்றாள் அவள்.

அவன் மறுநாள் காலை சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்து விட்டு, மாலை காப்பி எடுத்துக் கொண்டு போக வந்தபோது சஸி மெதுவாக-

"அக்காவிடம் கேட்டாயா, திம்மப்பா, என்ன சொன்னாள்?" என்று கேட்டாள்.

"கேட்டேன், சின்னம்மா. 'அய்யாவுக்கு ஒண்ணுமில்லை. வெறும் டைஃபாய்ட் ஜுரம்தான். அதனால் அவங்க இப்போ வர வேணாம். அதுவும் இந்த நிலைமையிலே வர வேணாம் அப்புறம் பார்த்துக்கலாம்'னு சொல்லிட்டாங்க" என்றதும் உள்ளுக்குள் உடைந்து போனாள், சஸி. ஆனால் அவன் எதிரில் எதையும் வெளிக் காட்டாமல் மெலிதாகச் சிரித்தாள்.

"ஜுரம் எனக்குத் தொற்றிக் கொள்ளப் போகிறதே என்று அக்காவுக்குப் பயம்!" என்றாள்.

"அதுவும் நிஜம்தானுங்களே!" என்று அவன் ஃப்ளாஸ்க்கை எடுத்துக்கொண்டு போனான்.

ஒரு வாரம்வரை அவரைப் பார்க்கத் தவித்த தவிப்பை அடக்கிக் கொண்டு தினமும் திம்மப்பாவிடம் விசாரித்த சஸி, அதற்கு மேல் தாங்க முடியாமல் மெதுவாக அவனிடமே கெஞ்சினாள்.



"இன்னிக்கு மத்தியானமா நான் நர்ஸிங் ஹோமிற்கு வந்து அவரைப் பார்க்கிறேனே, திம்மப்பா. அதுவரை நீ கொஞ்சம் சமாளிச்சுக்கோயேன்..."

"ஐயய்யோ...நீங்களானால் நான் தைரியமாச் சமாளிப்பேன், சின்னம்மா. ஏன், ஆனால், உங்க அக்காக் கிட்டே ஒன்றும் நடக்காது. அது யமன். கோபம் வந்தால் கண்மண் பார்க்காது. அந்த அய்யாவே நடுங்கறாங்கன்னா, நான் எந்த மூலைக்கு சொல்லுங்க."

"ப்ளீஸ், திம்மப்பா, நீ மனசு வச்சால் நடக்கும். அதிக நேரம் இல்லை. ஒரு அரை மணி நேரம் அக்காவை நீ எங்கேயாவது அழைச்சுக்கிட்டுப் போனால் நான் பார்த்து விட்டு வந்து விடுவேன். பாவம், நல்ல மனுஷன். அவர் கட்டிலேயே இருந்துகிட்டு அவரைப் போய்ப் பார்க்கா விட்டால் நன்றாக இருக்குமா சொல்லு?"

திம்மப்பா அவள் முகத்தையே பார்த்தான். அந்தக் குழந்தை முகமும், கெஞ்சலும் அவன் மனசைத் தொட்டிருக்க வேண்டும். அவனுக்கு சஸியைப் பிடிக்கும். அந்தச் சிரிப்பும் பேச்சும் அவனை வெகுவாகக் கவர்ந்திருந்தன. கோபமே வராத சாந்தமான அவளுடைய பாவம் அவனுக்குப் பிடித்திருந்தது.

'சின்னம்மா, உங்களைக் கட்டிக்கிட்ட உங்க அய்யா ரொம்பக் கொடுத்து வச்சவருங்க' என்பான் ஒரு நாள் எதையாவது வாங்கிக் கொண்டு வந்து புவனாவிற்குத் தெரியாமல் கொடுத்து 'நீங்க என் மகன் மாதிரி. சாப்பிடுங்க. இதைப் பார்த்தா கூட அக்கா கத்தும்' என்பான்.

அவனுடைய அந்தப் பிரியத்தை சஸி மறுத்ததேயில்லை. அதனால் இப்போது அவளுடைய ஆசைக்கு மறுப்புச் சொல்ல முடியாமல் தலையாட்டினான் அவன்.

"சரிங்க! சரியா மூணு மணிக்கு பழங்கள் வாங்க அக்காவை ஸிட்டி மார்க்கெட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போயிடறேன். அதற்கு முன்னால் உங்களுக்குப் போன்

பண்றேன். நீங்க தயாராக இருங்க. என் போன் வந்ததும் கிளம்பி ஒரு டாக்ஸியில் நர்ஸிங் ஹோம் வந்துடுங்க. சரியா கால் மணி நேரத்தில் திரும்பி வந்துடணும். உங்கக்கா பிசாசு மாதிரி நினைச்சுகிட்டா பாதியில் கூட திரும்ப வந்துடும். விஷயம் தெரிஞ்சா என் வேலை போயிடும். என்னைக் காட்டிக் கொடுக்காமல் கிளம்பி வந்துடணும், என்ன?"

"கால் மணியே அதிகம், திம்மப்பா. நான் வெறுமனே பார்த்துட்டுத்தானே திரும்பி வரப்போகிறேன்."

"என்கிட்டேயிருந்து போன் வரலைன்னா உங்கக்கா கிளம்பலேன்னு அர்த்தம். அப்போ நீங்களும் கிளம்பாதீங்க. என்ன?"

'சரி' என்று தலையாட்டினாள் அவள்.

பின் அன்று பகல் மூன்று மணிவரை துடிக்கும் மனசோடு காத்துக் கொண்டிருந்தாள். சாப்பிடப் பிடிக்காமல், வேலை செய்யத் தோன்றாமல், ஐந்து நிமிஷத்திற்கு ஒரு தரம் எந்த அறையில் இருந்தாலும் டெலிபோன் அடிக்கிறதா என்று ஹாலுக்கு ஓடிவந்து பார்த்து-

கடைசியில் மூன்றே கால் மணிக்கு டெலிபோன் அடித்தது. ஓடிவந்து எடுத்தபோது-

திம்மப்பா அவளை வரச் சொன்னான்.



# 21

**அ**ன்று காலையில் தலைக்குத் தண்ணீர் விடலாம் என்று சொல்லி விட்டுப் போனார் டாக்டர். அதனால் மெதுவாக எழுந்து போய் ஷேவ் பண்ணிக் கொண்டான்



க்ருபா. ஷாம்பு போட்டுத் தலைக்குக் குளித்தான். அவை இரண்டிற்குப் பின் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருப்பதாக உணர்ந்தான். உடம்பின் பலவீனமும் சற்றுக் குறைந்திருப்பதாக நினைத்தான். தலையை நன்றாகத் துடைத்து, ரோஜா நிறத்தில் வெள்ளைக் கோடுகள் போட்ட டெரிகாட் பைஜாமாவையும், மேல் சட்டையையும் போட்டுக் கொண்ட போது சட்டென்று சஸியின் ஞாபகம் வந்தது. அவளுக்குப் பிடித்தமான உடை அது. அவளுடன் இருந்த எல்லா ராத்திரிகளிலும் அவன் அதைத்தான் போட்டுக் கொள்வான். அவளும் ஒவ்வொரு நாளும் 'உங்கள் நிறத்தோடு இது எப்படிப் பொருந்திப் போகிறது க்ருபா...' என்று சொல்லி விட்டு மென்மையாகச் சிரிப்பாள்.

என்ன சிரிப்பு அது! கண்களுக்குள் புகுந்து மனசைத் தொட்டு, நெஞ்சை அப்படியே குளிர வைத்து... அந்தச் சிரிப்பு, பேச்சு இதையெல்லாம் கேட்டு எத்தனை நாளாகி விட்டது. கிட்டத்தட்ட ஒரு மாதம் இருக்குமா...? இருக்கும். நர்ஸிங் ஹோமில் சேர்ந்தே இன்றோடு இருபத்தைந்து நாட்களாகி விட்டன. அதற்கும் நாலைந்து நாட்கள் முன்பு மைசூருக்குக் கிளம்பின அன்று காலையில் அவளைப் பார்த்ததோடு சரி. அவசர அவசரமாக ஏதோ பேசினது தான். அதன் பின் இதுவரை அவளைப் பற்றின விவரம் எதுவுமில்லை. சொல்வதற்கு யாருமில்லை. திம்மப்பாவிடம் கேட்கலாம் என்றால் அதற்கும் வழியில்லை. புவனா அந்த அறையை விட்டு-அவனை விட்டு நகருவது கூட இல்லை.

'சஸி... சஸி... நீ எப்படி இருக்கிறாய், சஸி...? உன்னைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறதே! பார்த்து-மெதுவாக உன் முகத்தை நிமிர்த்தி, லேசான நீலத்தில் பளபளக்கிற அந்தக் கண்களில் முத்தமிட்டு... என்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு, உன் உடம்பின் மென்மையில் நானும் அழுந்திப் போய்... வருவாயா, சஸி...? வாயேன் இன்றைக்கே இப்போதே வாயேன்... ப்ளீஸ்...

'நோ. அவள் வர மாட்டாள். அவளால் வர முடியாது. புவனா அவளை வர விட மாட்டாள். புவனா... ப்ளீஸ்...!

உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், புவனா. ஒரு தரம் ஒரே தரம் தூரத்தில் நின்று வெறும் பார்வையாகப் பார்த்து விட்டுப் போகட்டுமே... அதற்குச் சரி சொல்லேன். கொஞ்சம் அனுமதி கொடேன். என்னை- என் மனசை-அது தவிக்கிற தவிப்பைப் புரிந்து கொள்ளேன்.'

ஆழமான ஒரு பெருமூச்சோடு பாத்ரூமை விட்டு வெளியில் வந்து தன் கட்டிலில் படுத்துக் கொண்டான் அவன். சிறிது நேரம் வெற்றுப் பார்வையாய் மேற் கூரையைப் பார்த்தான். புவனா ரசம் சாதமாகக் கரைத்துக் கொடுத்ததும் அமைதியாய்ச் சாப்பிட்டான். பின் ஒரு டம்ளர் தண்ணீர் குடித்துக் கொஞ்சம் நிதானமானான். உள்ளுக்குள் இறுகிக் கொண்டிருந்த எதுவோ தளர்ந்து சிறிது லேசான மாதிரி கூட உணர்ந்தான். ஆனாலும் அடி மனசுக்குள் மெலிசான குரலில் சலி சலி என்று முணுமுணுத்துக் கொண்டே இருந்தான்.

அவனுக்குத் தேவையான மருந்துகளைக் கொடுத்து விட்டுத் தானும் சாப்பிட்டு முடித்ததும் மெதுவாக அவன் எதிரில் வந்து நின்றாள், புவனா லேசான குரலில்,

"கொஞ்சம் ஸிட்டி மார்க்கெட்வரை போய் விட்டு வரலாமா என்று பார்க்கிறேன்" என்றாள்.

அவளுடைய அந்தக் குரலில கலைந்து திரும்பினான் அவன்.

"ம்...?" என்ற கேள்வியில் அவள் முகத்தைப் பார்த்தான்.

"என்ன யோசனை...? கொஞ்சம் ஸிட்டி மார்க்கெட்டில் வேலை இருக்கிறது. போய் விட்டு வரட்டுமா என்று கேட்டேன்."

"போய்ட்டு வாயேன், புவனா..."

"உங்களுக்கு ஏதாவது வேணுமா...?"



"எனக்கா...? எனக்கென்ன வேணும்...?" என்றவன் சட்டென்று, "ஜஸ்ட் எ மினிட், புவன். இப்படியே படுத்துக் கொண்டிருந்தால் கஷ்டமாக இருக்கிறது. போர் அடிக்கிறது. பேச்சுத் துணைக்குக் கூட யாருமில்லாதது இன்னும் அதிகக் கஷ்டமாகத் தெரிகிறது..."

"ஏன், பேசத் துணையாகத்தான் நான் இருக்கிறேனே என்னோடு பேசுங்களேன்.."

"உன்னோடு மட்டும் எத்தனை நேரம் பேசுவது; உன்னையும் போரடிக்க வைப்பது! ஸோ-கொஞ்சம் புத்தகங்கள் மட்டும் வாங்கிக் கொண்டு வாயேன். பெயர் களை எழுதித் தருகிறேன்."

அவன் பெயர்களைச் சொல்ல அவள் கடையில் வாங்க வேண்டிய சாமான்களைக் குறித்திருந்த டைரி யிலேயே அவைகளையும் குறித்துக் கொண்டாள். அயர்ன் ராண்டின் அட்லஸ் ஷ்ரக்ட், இர்விங் வாலஸின் ஸெவன் மினிட்ஸ், இர்விங் ஸ்டோனின் லஸ்ட் ஃபார் லைஃப், ஜாக்லண்டன், ஸ்டீஃபன் க்ரேன், கடைசியாக ஹெரால்ட் ராபின்ஸின் நெவர் லீவ் மி...

எழுதி முடித்து டைரியையும், பேனாவையும் கைப்பைக்குள் போட்டுக் கொண்டபோது அவள் மெலி சாகப் புன்னகை செய்தாள்.

"என்ன புவனா...?"

"இல்லை. இத்தனை ஸீரியஸான புத்தகங் களுக்கிடையில் அது என்ன ஹெரால்ட் ராபின்ஸின் நெவர் லீவ் மி..."

அதைக் கேட்டு அவன் ஒரு வினாடி அதிர்ந்து போனான். தன் மனசிற்குள் இருப்பதை அவள் கண்டு பிடித்து விடப்போகிறாளே என்று சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான். அதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் தவித்தான். அதற்குள் அவளே பேசினாள்:

"ஏன் க்ருபா, யு வாண்ட் டு ஐடண்டிஃபை யுவர் செல்ஃப் வித் தட் நெவர் லீவ் மி ஹீரோ..? வாட் ஈஸ் ஹிஸ் நேம்..? Brad..? எஸ் பிராட்... அப்புறம் அந்த எவைன் யாரு... சஸியா..? நோ, க்ருபா. ஐ யம் நாட் கோயிங் டு கெட் யு தட் புக். எவ்வரி திங் ஹேஸ் டு லீவ் அஸ் ஒன் டே.. வி ஹேவ்டு லீவ் எவ்வரி திங் அண்ட் கோ அவே. அதனால் இந்த மாதிரிப் புத்தகங்கள் எல்லாம் படித்து மனசை இன்னும் கெடுத்துக் கொள்ளாதீர்கள். வரட்டுமா..? சீக்கிரம் வந்து விடுகிறேன். அதுவரை பார்த்துக் கொள்ளச் சொல்லி நர்ஸிடம் சொல்லி விட்டுப் போகிறேன்..."

சரேலென்று திரும்பி-

"நோ..." என்றான் அவன் அழுத்தமான குரலில். "என்னை யாரும் இப்போது பார்த்துக் கொள்ள வேண்டாம். நான் குழந்தை இல்லை. மேலும் எனக்கு இன்றைக்கு அதிகக் களைப்பாக இருக்கிறது. நீ போனதும் கதவைத் போட்டுக் கொண்டு தூங்கப் போகிறேன்."

"ஓ கே. தூங்குங்கள். உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்றாவது சொல்லி விட்டுப் போகிறேன்" என்று கதவை மூடிக் கொண்டு போனாள்.

அவள் போனதும் அவன் எழுந்து போய்த் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு வந்தான். படுக்கப் பிடிக்காமல் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான். இடது கை விரல்களால் தலை மயிரை அளைந்து கொண்டே யோசித்தான். எழுந்து போய் சஸிக்குப் போன் பண்ணினால் என்ன என்று தோன்றியது. அந்தக் குரலையாவது கேட்கலாமே..?

ஆனால், டெலிபோன் நாலைந்து அறைகள் தள்ளிப் பொதுவான ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. எப்போதும் அதில் யாராவது பேசிக் கொண்டே இருப்பார்கள். அப்படியே இவன் பேசினாலும் எதுவும் கேட்க முடியாது. சுற்றிலும் மனிதர்கள். முக்கியமாக அவன் அறைக்கு வருகிற அந்த நர்ஸ். புவனாவிடம் தினமும் அரை



மணி நேரமாவது சிரித்துப் பேசி, காப்பி வாங்கிக் குடித்து... புவனா வந்ததும்.

'உங்க ஹஸ்பண்ட் யாருக்கோ போன் பண்ணினாரே..' என்று சொல்லி, இல்லா விட்டால் பேசின நபரின் பெயரையும் தெரிந்து கொண்டு அதையும் சொல்லி வைத்து-

நோ. முடியாது. ஒரு டெலிபோன் கூடப் பண்ண முடியாது. அந்தக் குரலைக் கேட்கிற வசதி கூடக் கிடையாது.

அவன் சட்டென்று கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு கட்டிலில் சரிந்தான். வேறு என்ன செய்யலாம் என்று யோசித்து ஒன்றும் தோன்றாமல் நெற்றிப் பொட்டை விரல்களால் அழுத்திக் கொண்டபோது மெலி சாய்க் கதவு தட்டப்படுகிற சத்தம் கேட்டது. அந்த நர்ஸாகத்தான் இருக்கும் என்று நினைத்து அவள் தான் தூங்குவதாக நினைத்துக் கொள்ளட்டும் என்று பேசாமல் படுத்திருந்தான். இரண்டு மூன்று வினாடிக்குப் பின்பும் அந்தத் தட்டல் நிற்காமல் போகவே எரிச்சலோடு சரே லென்று படுக்கையை விட்டு எழுந்தான்.

"ஹூ இஸ் தட்....?" என்று முகம் சின்னச் சிணுங்கலாகச் சிணுங்க கண்ணில் தெரிந்த லேசான கோபத்தோடு கதவைத் திறந்ததும்-

அவன் இதயம் சட்டென்று ஒரு வினாடி துடிப்பதை நிறுத்தி மீண்டும் தொடர்ந்தது.

"சஸி..நீயா..! நிஜமாகவே நீதானா...?"

"பின் யார் என்று நினைக்கிறீர்கள்..." என்று வழக்கமான புன்சிரிப்போடு அவன் உள்ளே வந்ததும், அவன் உடனே கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுச் சரே லென்று அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

"சஸி...சஸி...ஐ ஹோப் ஐ யம் நாட் இமாஜினிங்..." என்று அவன் காதருகில் குரல் கரகரக்கச் சொல்லி, அத்தனை நாள் தவிப்பு, தாகம், எல்லாவற்றையும் அந்த ஒரே நிமிஷத்தில் அடக்கிக் கொண்டு விடுகிற வேகத்தில் அவன் உதட்டைத் தன் உதட்டால் அழுத்தினபோது அவள் சற்றுத் தடுமாறிப் போனாள். அதுவரை அவன் எப்போதுமே அவளை அப்படி அணைத்ததில்லை. அந்த வேகம் இருந்ததில்லை. உதடுகள் இத்தனை அழுத்தமாகப் பதிந்ததில்லை. மென்மையாய் லேசாய் வீணையை மீட்டுகிற மாதிரி...

இது அந்த க்ருபா இல்லை. இத்தனை நாள் வேகத்தையும் உள்ளே அடக்கி இப்போது மழையாகக் கொட்டத் தவிக்கிற க்ருபா. அதில் என்னையும் கரைத்துத் தானும் கரைய நினைக்கிற க்ருபா...

'மை குட்னெஸ், இந்த அளவிற்கா நீங்கள் என்னை மிஸ் பண்ணியிருக்கிறீர்கள்? எனக்காகத் தவித்திருக்கிறீர்கள்? இந்த ஒரு நிமிஷத்திற்கு மேல் வாழ்க்கைதான் எதற்கு...? இப்படியே செத்துப் போய் விட்டால்தான் என்ன...?'

அவள் கண்கள் கலங்க-அந்த நினைப்பில் மனசு ஒரு தரம் சிலிர்த்து அடங்க-மெதுவாக அவன் அணைப்பிற்குள் ஒடுங்கிப் போனாள்.

பத்து நிமிஷங்கள்- எந்த நினைவும் இல்லாத பத்து நிமிஷங்கள்... பின் சட்டென்று அது நர்ஸிங் ஹோம் - அதுவரை அவன் நோயாளியாக இருந்தவன் என்பது நினைவிற்கு வர மெல்லத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அந்த அணைப்பிலிருந்து விலகினாள் அவள். அவன் முகத்தைப் பார்க்காமல் - பார்க்க முடியாமல் தரையைப் பார்த்துக் கொண்டே கேட்டாள்.

"என்ன க்ருபா இது...?"



அவள் தோள் மீதிருந்த தன் கையை விலக்காமலே அவனும் குறும்புச் சிரிப்பாகச் சிரித்து, "எது...?" என்று திருப்பிக் கேட்டான்.

"எதுவா? மை குட்னெஸ், இன்னும் ஒரு நிமிஷம் போயிருந்தால் என்னையும் இதே நர்ஸிங் ஹோமில் பக்கத்து அறையில் அட்மிட் பண்ணும்படி நேர்ந்திருக்கும்..."

"எதற்கு...?"

"எதற்கா...? அத்தனை எலும்புகளும் நொறுங்கி உடைந்து... இப்போதே எத்தனை எலும்புகள் உடைந்திருக்கிறதோ தெரியவில்லை..."

அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தான் அவன்; அந்தச் சிரிப்பில் மனசும் உடம்பும் லேசாகிப் போன மாதிரி உணர்ந்தான்.

'அப்பா...! இந்தப் பத்து நிமிஷங்களுக்கு இத்தனை சக்தியா...? இத்தனை நாள் தவிப்பும் இதற்கா...? இது என்ன சக்தி! ஒரு மனிதனை ஒன்றுமே இல்லாமல் அடித்துப் போடுகிற சக்தி...!' அவன் உடம்பு ஒரு தரம் சிலிர்த்து அடங்கியது. தானும் அடங்கியவனாக- பழைய க்ருபாவாக- அவளை மென்மையாகப் பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்...? உங்களுடைய இந்த வேகத்தையும், பலத்தையும் பார்த்தால் யாரும் நீங்கள் ஒரு மாதம் படுக்கையில் கிடந்தவர் என்று சொல்லவே மாட்டார்கள் க்ருபா..."

"ஈஸிட்?" என்று புன்சிரிப்பாகச் சிரித்தான்.

"யு நோ சஸி, எனக்கு உடம்பிற்கு வந்ததற்கே இதுதான் காரணம்..."

"எது...?" என்று அவளும் குறும்பாகப் பார்த்ததும் அவன் சிரிப்பை அடக்க முடியாமல் மறுபடியும் சிரித்தான். பின் மெதுவாக அவள் தோளில் கை போட்டுத் தன் மீது சரித்து அணைத்தபடி கட்டிலுக்கு அழைத்து வந்தான்.

அவன் உட்கார்ந்ததும் தானும் பக்கத்தில் உட்கார்ந்தான். அரை வினாடி இமைக்காமல் அந்த முகத்தையே பார்த்தான். பின் அவளுடைய கையைத் தன் கையில் கோர்த்துக் கன்னத்தில் பதிய வைத்துக் கொண்டே-

"எப்படி வந்தாய் சஸி..?" என்று கேட்டான். அந்தக் கேள்வியில் ஏற்பட்ட சுறுசுறுப்பில் கனவுகளும், மயக்கங்களும் கலைந்து போனவளாகத் தான் வந்த விதத்தையும், புவனா வருவதற்குள் திரும்பிப் போய் விட வேண்டும் என்பதையும் சொன்னாள். அந்தக் குரலில் தெரிந்த அவசரத்தைக் கவனித்த அவன்,

"போகலாம், இரு சஸி. புவனா இப்போது வர மாட்டாள். ஸிட்டி மார்க்கெட்டில் பாதியையாவது காரில் திணித்துக் கொண்டு வரா விட்டால் அவளுக்குச் சரிப்படாது. அதற்கு இன்னும் குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும். ஸோ ரிலாக்ஸ் பேபி..." என்றவன் சட்டென்று உதட்டில் வித்தியாசமான சிரிப்பு ஒன்று ஓட-

"ஹௌ ஈஸ் மை பேபி..?" என்று கேட்டான்.

"ம்..? ஷி ஈஸ் நாட்டி லைக் யு..." என்று அவளும் சிரித்தாள்.

"எங்கே, பார்க்கலாம்...." என்று அவன் கை சட்டென்று அவள் வயிற்றில் பதிய அவள் முகம் சிவக்க, சரேலென்று அந்தக் கரத்தை விலக்கினாள். அவளுடைய அந்த முகத்தையும், கண்களில் தெரிந்த வெட்கத்தையும், கன்னங்களின் சிவப்பையும் பார்த்து மறுபடியும் சிரித்தான் அவன். பின் சட்டென்று தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு-

"மை குட்நெஸ். இந்த நாளுக்கு என்ன வந்து விட்டது. எதற்காக என்னை இப்படிச் சிரிக்க வைக்கிறது..?" என்று கேட்டான்.

" எனக்கும் தெரியவில்லை க்ருபா. ஐ யம் ஆல்ஸோ வெரி ஹேப்பி டு டே!" என்றாள்



அதன் பின் சில வினாடிகள் பேச்சில்லாத மௌனத்தில் போயிற்று. பின் ஒரு குழந்தையைப் பார்க்கிற கனிவாக அவளைப் பார்த்துக் குரல் தழையக் கேட்டான்.

"எப்படி இருக்கிறாய், சஸி..?"

"ம்" என்று கலைந்து போன மாதிரி நிமிர்ந்தாள் அவள்.

"என்ன யோசனை...! எப்படி இருக்கிறாய் என்று கேட்டேன்..."

"எனக்கென்ன, க்ருபா, நான் நன்றாகத்தான் இருக்கிறேன். நான்தான் உங்களை எப்படி இருக்கிறீர்கள் என்று கேட்க வேண்டும்."

"எனக்கென்ன சஸி, நானும் நன்றாகத்தான் இருக்கிறேன். அதைத்தான் நீயே சற்று முன்பு பார்த்தாயே... ஆம் ஐ நாட் ஆல் ரைட்... ம்..? டெல் மீ..?"

அவள் பதில் சொல்லாமல் சிரித்தாள். அந்தச் சிரிப்பைப் பார்த்துக் கொண்டே அவன் பேசினான்.

"மறுபடியும் டாக்டரிடம் போனாயா..? அவள் என்ன சொன்னாள்..? ஏதாவது மருந்து எழுதிக் கொடுத்தாளா..?"

"ம்..?"

"என்ன உம்..? ஏன், சஸி, நீ அப்புறம் டாக்டரிடம் போகவே இல்லையா..?"

"..."

"இப்படிப் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்..? ம்..? நோ டியர். ஐ டோன்ட் லைக் திஸ். ஒவ்வொரு மாதமும் நீ செக் - அப்பிற்கு வர வேண்டும் என்று டாக்டர் சொல்லவில்லை..?"

அதற்கும் அவன் பேசாமல் இருந்தாள். அவன் மெதுவாகக் குனிந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்திக் கேட்டான்.

"ஏன் சஸி போகவில்லை...?"

"உங்களுக்கு உடம்பு இப்படி இருக்கிற போது என்னால் எப்படிப் போக முடியும் க்ருபா...?"

"என் உடம்பிற்கு என்ன...? அதுதான் சரியாகிப் போய் விட்டதே.. தலைக்குக் கூடத் தண்ணீர் விட்டுக்கொண்டாகி விட்டதே.."

"சரி, அப்படியானால் நானும் நாளைக்கே டாக்டரிடம் போகிறேன். போதுமா...?"

"நோ. போதாது டியர் நீ இன்னும் நன்றாகச் சாப்பிடணும். பால், பழங்கள் சாப்பிடணும். உடம்பை ஜாக்கிரதையாகக் கவனிச்சிக்கணும்."

"ஓகே. ஓகே. நான் என்னைக் கவனித்துக் கொள்கிறேனோ இல்லையோ... இனிமேல் உங்கள் குழந்தையை ஜாக்கிரதையாகக் கவனிக்கிறேன். போதுமா...?"

"சஸி..." என்று அடிபட்ட பார்வையில் அவளைப் பார்த்தான் அவன் பின் பேச ஆரம்பித்தபோது குரல் தழைந்து உருக்கமாக வந்தது.

"நோ சஸி. யு ஆர் மிஸ்டேகன். என் கவலையெல்லாம் உன்னைப் பற்றினது தானே தவிர குழந்தையைப் பற்றினது இல்லை. நீ எனக்காக - என்னுடைய நன்மைக்காக - சந்தோஷத்திற்காக எல்லாரையும் - எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்தவள். இது வெளியில் தெரிந்தால் என்ன ஆகும் என்று யோசித்துக் கூடப் பார்க்காமல் வந்தவள். எதிர்காலத்தையே என் ஒருவனின் நன்மைக்காக - சந்தோஷத்திற்காக... ஓ நோ. ஐயாம் பாதர்ட் ஒன்லி எபௌட் யு சஸி. நாட் எபௌட் தி பேபி..."



அந்தப் பேச்சில் உருகி எது சொல்லவும் தெரியாமல் அப்படியே உட்கார்ந்திருந்தாள் சஸி. ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் என ஐந்து நிமிஷங்கள் போனதும் அதற்கு மேல் தாங்க முடியாதவளாகக் கண் கலங்கி கன்னத்தில் கோடாக வழிய 'க்ருபா...' என்று அவன் மடியில் சரிந்து முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். சின்ன விசும்பல்களில் அவள் அழ ஆரம்பித்த போது அவன் கண்களும் லேசாகக் கலங்கின. ஆனாலும், ஒரு தடவை கீழ் உதட்டை இறுகக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் தலையை மென்மையாக வருடினான்.

"நோ சஸி. ப்ளீஸ் நோ. உன் அழுகையைத் தாங்கிக் கொள்கிற சக்தி எனக்கில்லை. ஸோ - ப்ளீஸ் டோன்ட் மேக் மி டு க்ரை..." என்றபோது-

"நோ க்ருபா. ஐ வோன்ட்!" என்று அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள் அவள். நீர்த்துளிகள் பளபளக்கிற ஈரமான இமைகளும், சிவந்து போன முகமுமாக மெலிசாகப் புன்னகை செய்தாள்.

"தட்ஸ் இட்!" என்று அவனும் உதட்டோரம் ஓடின சிரிப்பில் சொல்லி முடித்தபோது அறைக் கதவு தட்டப்பட்டது. அந்த வேகத்திலிருந்து அது புவனாவாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் அவளைப் பார்த்தான் அவன்.

அவளும் அதே சந்தேகத்தில் ஏற்பட்ட பயத்தோடு சட்டென்று எழுந்து நின்றாள். கை தானாகப் புடவையையும் தலையையும் சரி பண்ணிக்கொண்டது. அந்த விரல்களில் தெரிந்த நடுக்கத்தைப் புரிந்து கொண்ட அவன் 'பயப்படாதே' என்கிறாற் போல் ஒரு தரம் கையைப் பற்றி அழுத்தி விட்டு மெதுவாகப் போய்க் கதவைத் திறந்த போது-

அறை வாசலில் பொறுமையில்லாமல் நகத்தைக் கடித்த படி நின்று கொண்டிருந்தாள் புவனா.



# 22

சாதாரணமாகச் சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந்த புவனா சசியைப் பார்த்ததும் சட்டென்று நின்றான். பார்வை ஒரு வினாடி அவள் முகத்தில் பதிந்து பின் க்ருபாவின் முகத்திற்குப் போயிற்று. தரையைப் பார்த்தது. ஜன்னல், கட்டில் என்று மாறி மாறி அலைந்தது. கடைசியில் சாமான்களை எடுத்துக்கொண்டு திம்மப்பா உள்ளே நுழைந்ததும் அவனிடம் நிலைத்தது.

அவனும் சசியைப் பார்த்ததும் திடுக்கிட்ட மாதிரி நின்றான். அவள் ஏன் இன்னும் திரும்பிப் போகவில்லை என்ற கேள்வியில் மனசு பதறக் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான் பின் மெதுவாக நிலைமையைச் சமாளிக்க மெல்லச் சிரித்துக் கொண்டே கேட்டான்:

"நீங்க எப்போ வந்தீங்க சின்னம்மா?"

சசி சட்டென்று சுய நினைவிற்கு வந்தவளாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"இப்போதுதான் திம்மப்பா. பத்து நிமிஷம் இருக்கும்."

"சொல்லியிருந்தால் நானே காரை எடுத்துக்கிட்டு வந்திருப்பேனே... இந்த சமயத்துல எதற்காக ஆட்டோவும் டாக்ஸியும் பிடிச்சு அலைஞ்சிங்க..."

அதற்குச் சசி ஒன்றும் சொல்ல வில்லை. சொல்ல முடியவில்லை. மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டாள். மனசைப் பாரமாக ஏதோ அழுத்திற்று. அழக்கூட முடியாமல் நெஞ்சை அடைத்தது.

அதுவரை எதுவும் பேசாமல் நின்றிருந்த புவனா முதல் தடவையாகப் பேச ஆரம்பித்தான்:



"சாமானை வச்சுட்டு நீ கார் கிட்டே போய் இரு திம்மப்பா. இதோ இவளையும் அனுப்பிடறேன். வீட்டுல கொண்டு போய் விட்டுடு."

அவன் சரி என்று தலையசைத்து விட்டுப் போனான்.

அவன் போனதும் அறைக் கதவை மூடினான் புவனா. நேர் பார்வையாகச் சசியைப் பார்த்தான். எப்போது வந்தாய், எப்படி வந்தாய், எதற்காக வந்தாய், தான் இல்லாதது எப்படித் தெரிந்தது என்று எதுவும் கேட்க வில்லை. வார்த்தைகள் கட்டளை மாதிரி பளிச்சென்று வந்தது.

"இப்படித் திருட்டுத்தனமாக வருவது, பார்ப்பது, பேசுவது எல்லாவற்றையும் இன்றோடு நிறுத்திக் கொள். இதுதான் உனக்குக் கடைசி எச்சரிக்கை. இன்னும் ஆறேழு மாசங்கள் எங்களோடு இருக்கிறவரை ஒழுங்காக இருந்து சொன்ன பேச்சைக் காப்பாற்றி விட்டுப் போ. புரிகிறதா?"

சசி அதற்கும் தலை நிமிராமல் நின்றாள்.

"ஓ.கே. நீ கிளம்பலாம்!" என்ற புவனா ஏதேதோ நினைவிற்கு வந்தவனாக, "ஒரு நிமிஷம்" என்றான்.

"உன் கையில் போட்டுக் கொண்டிருக்கிறாயே அவருடைய மோதிரம், அதைக் கழற்றிக் கொடுத்து விட்டுப் போ."

ஒவ்வொரு வார்த்தையும் அடிகளாக விழ சரேலென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் சசி. பின் மெதுவாக க்ருபாவை, அவனுடைய இடது கை விரலை, அதில் அந்த 'எஸ்' போட்ட மோதிரம் இல்லாததை...

மௌனமாகத் தன் விரலின் மோதிரத்தையும் கழற்றிக் கொடுத்து விட்டு வெளியில் வந்தாள். காரில் ஏறினபோது கண் மல்கிக் கிடந்தது. வாய்விட்டு அழ முடியாமல் குரல் இறுகிற்று. அதுதான் க்ருபாகரைப் பார்த்துப் பேசுவது கடைசித் தடவையாக இருக்கும் என்று தோன்றியது. அந்த நினைவே தாங்கிக் கொள்ள முடியாததாக ஆயிற்று. உள்ளுக்குள் நீளமான விம்மலாக ஒன்று எழும்பிச் சத்தமில்லாமல் அடங்கிப் போயிற்று.

நினைத்த மாதிரியே அவளால் க்ருபாவைப் பார்க்க முடியவில்லை. அவன் நர்சிங் ஹோமை விட்டு வந்து கிட்டத் தட்ட ஐந்து மாதங்களாகியும் இரண்டு மூன்று தரம் எப்போதாவது - அவன் வெளியில் போகும்போது - போன் பேசக் கீழே இறங்கி வரும்போது பார்ப்பதோடு சரி. எதேச்சையாக அவனும் அவளைப் பார்க்க நேர்ந்தால் அந்தப் பார்வையில் தனியான ஒரு பளபளப்பு தெரியும். ஒரே வினாடியில் அவளை மெல்ல அணைத்து நிமிஷமாகப் பிரியும். அந்த உடம்பின் மாற்றங்களைக் கிரகித்துக் கொள்ளும். எப்படி இருக்கிறாய் சஸி என்று கேட்கும். ஐ யம் ஸாரி. இந்தச் சந்தர்ப்பத்தில் என்னால் உனக்குத் துணையாக ஆதரவாக இருக்க முடியவில்லை என்று கெஞ்சும். எல்லாம் ஒரு வினாடி. ஒரே வினாடிதான். பின் மீண்டும் பார்வை தழைய படியேறிப் போய் விடுவான் அவன். அதுகூட இந்த ஐந்து மாதங்களில் இரண்டு மூன்று தடவைக்கு மேல் இல்லை. அந்த அளவிற்கு ஜாக்கிரதையாக இருந்தாள் புவனா. நர்ஸிங் ஹோமில் நடந்த நிகழ்ச்சிக்குப் பின் ஒரு நிமிடம் கூட அவனை விட்டுப் பிரியாமல் இருந்தாள். சஸியை அவன் பார்வையில் படாமல் கவனித்துக் கொண்டாள்.

அவன் வாரக் கடைசியில் சென்னைக்குப் போகிறபோது மட்டும் கீழே இறங்கி வருவாள். சஸியோடு கூட இருப்பாள். அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டுக் கேட்டுச் செய்வாள். பாலில் குங்குமப்பூவைப் போட்டுக் காய்ச்சித் தருவாள். அந்த நாட்களில் டாக்டரிடம் செக் - அப்பிற்கும் அழைத்துப் போவாள்.

டாக்டரைக் கூட மாற்றித் தனக்குத் தெரிந்த ஒரு லேடி டாக்டரிடம்தான் அழைத்துப் போனாள் அவள். கால்ஸியம் மாத்திரைகளும், அயர்ன் மாத்திரைகளும் வாங்கிக் கொடுத்தாள். க்ருபா வீட்டில் இருந்தால் அவனை வீட்டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவளை வாக்கிங் அழைத்துப் போனாள்.

அப்படிப் போகிறபோதெல்லாம் சஸிக்கு அவன் ஞாபகம் வரும். "இந்த பங்களூரில் வாக் போகத்தானா



இடமில்லை. தினமும் நானே அழைத்துக் கொண்டு போகட்டுமா...?" என்று அவன் சிரித்துக் கொண்டே கேட்டது நினைவிற்கு வரும். மேலே நடக்கப் பிடிக்காமற் போகும். ஆனாலும் மௌனமாக நடப்பதைத் தவிர வேறு வழி இல்லாததை நினைத்துக் கொள்வாள்.

நாள் ஆக ஆகச் சிறிது தூரம் நடந்த உடனேயே மூச்சுத் திணறுவதாக உணர்ந்தாள். மேலே நடக்க முடியாமல் சட்டென்று நின்று விடுவாள். அப்போதெல்லாம் புவனா அவள் கையை ஆறுதலாகப் பற்றிக் கொள்வாள். நிதானமாகப் பேசுவாள்.

"என்ன சஸி, பயமாக இருக்கிறதா?"

சஸி இல்லை என்று வெறுமனே தலையாட்டுவாள்.

"நாள் ஆக ஆகக் கஷ்டமாக இருக்கிறதா சஸி?"

"இல்லை."

"ஒன்றும் பயமில்லை என்று டாக்டர் சொல்கிறார் சஸி. நார்மல் டெலிவரிதான் ஆகும் என்கிறார். நான் உன் கூடவே இருப்பேன். உனக்கு ஒன்றும் ஆகாமல் பார்த்துக் கொள்வேன். இப்போது இந்த சந்தர்ப்பத்தில் நான்தான் உன் அம்மா என்று நினைச்சுக்கோ. ஐ யம் ஹியர் டு ஹெல்ப் யு."

'அம்மா...!'

சஸி சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டாள். அந்த ஞாபகத்தில் நெஞ்சுக்குள் ஒரு வலி ஏற்பட்டது. எத்தனை நாளாகி விட்டது அம்மாவைப் பார்த்து. தம்பி, தங்கைகளை, சாந்தியை... அவர்களையெல்லாம் விட்டு வந்து கிட்டத்தட்ட ஒன்பது மாதமாகப் போகிறது. புவனா வருவதற்கு முன்பாவது கடிதம் வரும். சாந்தி எழுதுவாள். எல்லாரைப் பற்றியும்- எல்லாவற்றைப் பற்றியும் தெரிவிப்பாள். புவனா வந்த பின் அதுவும் நின்று போயிற்று.

சாந்தி மட்டும் இப்போது கூட இருந்தால்...? மனசுக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கும். க்ருபா பக்கத்தில் இல்லாத குறைக்கு எத்தனை இதமாக இருக்கும்.

இந்த ஒரு மாதமாகத்தான் அவன் க்ருபாவின் அண்மைக்கு அதிகம் ஏக்கப்பட்டாள். அவன் தன் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். தனக்குள் ஏற்படுகிற ஒவ்வொரு மாற்றத்தையும் அவனும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

ராத்திரி தூக்கம் வராமல் தவிக்கிற போது - குழந்தை வயிற்றில் அசைகிறபோது - மெதுவாய்க் கீழ் வயிற்றை முட்டுகிறபோது அந்த சந்தோஷத்தை - வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ள முடியாத உணர்வுகளை அவனோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது. அவன் கையை இறுகப் பற்றி -

'லுக் க்ருபா. உங்கள் பெண் உங்களை மாதிரியே என்னைத் தொந்தரவு செய்கிறாள் பாருங்கள்...' என்று ஒரு இயல்பான சின்னச் சிரிப்போடு சொல்ல வேண்டும்.

கால்கள் இரண்டும் சற்று லேசாக வீங்கி ராத்திரி நேரங்களில் குடைகிறபோது, 'ப்ளீஸ், க்ருபா கொஞ்சம் அழுத்தி விடுங்களேன்' என்று கெஞ்ச வேண்டும்.

சிறிது அவன் அழுத்தின உடனே, அந்தக் கைகள் இரண்டையும் இழுத்துக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும். உதட்டில் வைத்து அழுத்தி முத்தமிட வேண்டும்.

எல்லாமே கனவுகள். கற்பனைகள். எதுவும் நடக்காதவை. அவள் வரை நடக்க முடியாதவை. இதெல்லாம் சாதாரணமாக ஒரு மனைவிக்கு மட்டுமே நடக்கக் கூடியவை. அவள் அவனுடைய மனைவி இல்லை. மனைவிக்குச் சொந்தமான இந்த எந்த உரிமைகளும் அவளுக்குக் கிடைக்காதவை. கிடைக்க முடியாதவை. அவள்... அவள்... ஒரு... வெறும்...

மேலே நினைக்க முடியாமல் கண் கலங்கிய பார்வையை மறைக்க அவள் கீழ் உதட்டை இறுகக் கடித்துக் கொண்டாள். அதைக் கவனித்த புவனா சட்டென்று நின்றாள். மெதுவாக அவள் தோளில் கை வைத்தாள்.

"என்ன, சஸி... உடம்பை என்ன பண்ணுகிறது...?"



363040 3

ஒன்றுமில்லை என்று தலையாட்டினாள் அவள். ஆனால் கண்ணீரை மட்டும் கட்டுப்படுத்த முடியவில்லை. சட்டென்று முகத்தை இரண்டு கைகளாலும் மூடி விசும்ப ஆரம்பித்து நீண்ட விம்மல்களும், ஆழமான கேவல்களுமாக வெளிப்பட்ட போது அயர்ந்து போனாள், புவனா. இது வரை எந்தக் கஷ்டத்திலும், எத்தனை சோகத்திலும் சஸி அழுது அவள் பார்த்ததில்லை, வெறும் புன்னகையைத் தவிர எதையும் கண்டதில்லை. ஆனால் இப்போது, இப்படி புல் தரையில் உட்கார்ந்து முகத்தை மூடிக் கொண்டு குமுறிக் குமுறி அழ வேண்டுமானால்...?

'ஐ யம் ஸாரி, சஸி. உன்னை எனக்குப் புரிகிறது. உன் மனசு தெரிகிறது. ஆனாலும்... ஆனாலும்... அதற்காக க்ருபாவை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. எதற்காகவும், யாருக்காகவும். ஐ லவ் ஹிம் சோ மச். என்னுடையது முரட்டுத்தனமான அன்பாக இருக்கலாம். எனக்கு மென்மை தெரியாமல் இருக்கலாம். ஆனாலும், நான் அவரை நேசிக்கிறேன். சொல்ல முடியாத ஒரு ஆழத்தில், வெளியில் யாராலும் புரிந்து கொள்ள முடியாத ஒரு ஆழத்தில், வெளியில் யாராலும் புரிந்து கொள்ள முடியாத விதத்தில்... ஏன் அவருக்கே கூடத் தெரியாத விதத்தில்... க்ருபா... க்ருபா... உங்களை என்னால் விட முடியாது. க்ருபா. யாருக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது. என் உயிர் இருக்கிறவரை... கைண்ட்லி பேர் வித் மி க்ருபா...'

புவனாவும் உள்ளுக்குள் அழுதபடி பேசாமல் அவள் எதிரில் உட்கார்ந்திருந்தாள். அப்படியே பத்து நிமிஷம் போனதும் சஸி மெல்ல மெல்ல அடங்கி, அந்த விம்மல்களும் கேவல்களும் ஓய்ந்து போய், மனசுக்குள்ளும் எதுவோ தணிந்து அணைய மெதுவாக முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். பின் கரகரத்த குரலில் புவனாவைப் பார்த்து, "ஐ யம் ஸாரி!" என்றாள்.

புவனாவால் அதைக் கூடச் சொல்ல முடியவில்லை. பேசினால் எங்கே தானும் அழுது விடுவோமோ என்று பயமாகக் கூட இருந்தது. அதனால் வாயைத் திறக்காமல்

கூடவே நடந்தாள். வீடு வருகிறவரை அந்த மௌனம் கலையவே இல்லை.



## 23

இரண்டு நாட்களாக யோசித்துத் திம்மப்பாவை வேலையை விட்டு நிறுத்தி விட முடிவு செய்தாள், புவனா. அந்த முடிவு அவளுக்கே கஷ்டமாக இருந்தது. திம்மப்பா இல்லாமல் அந்த வீட்டை நினைத்துப் பார்க்க முடியாமற் போயிற்று. பங்களூரில் அந்த வீட்டை விலைக்கு வாங்கினதிலிருந்து திம்மப்பாதான் அதற்குக் காவல். அப்பாதான் அவனை ஏற்பாடு பண்ணினார். அவனுக்குத் தெரியாமல் அந்த வீட்டிலிருந்து ஒரு புல் கூட வெளியில் போய் விட முடியாது. அதே மாதிரி காற்று அடித்ததென்று எந்த செத்தையும் உள்ளே வந்துவிட முடியாது.

திம்மப்பா நல்லவன், நம்பிக்கை யானவன். கொஞ்சம் வெகுளி. ஆனாலும், இந்த விஷயத்தில் அவனையும் கூட நம்ப முடியாது என்று நினைத்தாள். புவனா அவன் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லாமற் போனாலும் வாய் தவறி - வார்த்தை தவறி எதுவும் வெளியில் வரலாம். எல்லாமே ஒரு முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறபோது, இதுவும் இப்படித்தான் முடிய வேண்டும். வேறு வழி இல்லை.

அவள் மெதுவாகக் கீழே இறங்கி வந்து திம்மப் பாவைக் கூப்பிட்டாள். வாசல் செடிகளுக்கு ரப்பர் குழாயால் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த அவன் அதை அப்படியே போட்டு விட்டு வந்தான்.

“கூப்பிட்டீங்களாம்மா?”

அவனை நிமிர்ந்து ஒரு தரம் பார்த்தாள், புவனா. அந்த முகத்தைப் பார்த்ததும் சொல்ல மனசு வரவில்லை.



வார்த்தைகள் உள்ளுக்குள்ளேயே சிக்கிக் கொண்டன. எப்படிச் சொல்வது என்று தெரியாமல் அரை வினாடி தடுமாறிப் பின் மெதுவாகக் கேட்டாள்.

“என்ன செஞ்சுகிட்டிருந்தே?”

“செடிகளுக்கு தண்ணீர் ஊத்திக் கிட்டிருந்தேம்மா. சம்பங்கி நல்ல வந்துகிட்டிருக்கு. ஊட்டிலேருந்து அய்யா இப்போ வாங்கிக்கிட்டு வந்தாரே புது மாதிரி ரோஜாச் செடி அதுதாம்மா கொஞ்சம் வாடலாகத் தெரியுது. நாளைக்கு ஒரு வண்டி எரு வாங்கி எல்லாத்துக்கும் வைக்கலாம்னு பார்க்கிறேன்.”

‘நாளைக்கு நீ இங்கே இருக்கவே போறதில்லைடா பைத்தியக்காரா..’ என்று நினைத்துக் கொண்டாள், புவனா. அந்த நினைப்பில் தயங்கி மறுபடியும் அவன் முகத்தைப் பார்த்தாள்.

“என்னம்மா கூப்பிட்டீங்க?” என்று கேட்டான் அவன்.

“நான் ஒன்று சொல்லப் போறேன், திம்மப்பா. செய்வாயா?”

“என்ன அப்படிக் கேட்கிறீங்க. சொல்லுங்க. இப்படின்றதுக்குள்ள செஞ்சுடறேன்!” என்று சிட்டிகை போட்டுக் காண்பித்தான்.

“அப்படியானால் வேலையை விட்டு நின்னுடு திம்மப்பா.”

“சரிங்-என்ன சொன்னீங்க?” என்று அதிர்ச்சியாய்ப் பார்த்தான் அவன். புவனா அவன் முகத்தைப் பார்க்காமல் தரையைப் பார்த்தபடி பேசினாள்.

“உன்னை வேலையை விட்டு நிறுத்தப் போறேன்னு சொன்னேன்.”

“அப்படி நான்... நான் என்ன தப்பு செய்தேன் சொல்லுங்கம்மா.”

அந்தக் குரலின் நெகிழ்ச்சி அவளையும் நெகிழ வைத்தது.

"நீ ஒரு தப்பும் பண்ணலே திம்மப்பா. எனக்கும் உன்னை அனுப்பறதில் இஷ்டமில்லை. ஆனாலும் அனுப்பித்தான் ஆகணும். என்னுடைய சில சௌகரியங் களுக்காகத்தான் உன்னைப் போகச் சொல்கிறேனே தவிர வேறு எதற்கும் இல்லை. என்னை நீ புரிஞ்சுக்கணும் திம்மப்பா. தயவு செய்து காரணம் எதுவும் கேட்காதே. அதுவும் உன்னைத் தற்காலிகமாகத்தான் போகச் சொல்கிறேனே தவிர நிரந்தரமாக இல்லை. இன்னும் இரண்டு மாதத்தில் நானே திருப்பிக் கூப்பிடறேன். அதுவரை எல்லா மாதங்களுக்கும் சம்பளம் தரேன். லீவிற்குப் போய் இருக்கிற மாதிரி இருந்து விட்டு நான் கூப்பிடுகிறபோது வந்துவிடு. என்ன?"

அவன் ஒரு வார்த்தை பேசாமல் மௌனமாகத் தலையாட்டினான். உள்ளே போய் மனைவியிடம் சொல்லி தங்கள் சாமான்களை எடுத்துக் கொண்டான். சஸியிடமும், க்ருபாவிடமும் சொல்லிக் கொண்டு மீண்டும் புவனாவிடம் வந்தான். புவனா பணம் நிறைந்த கவர் ஒன்றை நீட்டினாள். அவன் ஒரு வார்த்தை பேசாமல் வாங்கிக் கொண்டான்.

"வரேம்மா. சின்னம்மாவிற்குக் குழந்தை பிறந்தால் சொல்லியனுப்புங்க!" என்றான்.

புவனா தலையாட்டினாள். அவன் போனதும் வாசல் கதவைப் போட்டு சோபாவில் சரிந்தாள். கண்களை மூடி சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். சொல்ல முடியாத பாரமாக மனதை எதுவோ அழுத்தியது. வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது. அன்று சஸி அழுத மாதிரி கைகளால் முகத்தை மூடிக் கொண்டு குமுறிக் குமுறி, உடம்பும், மனசும் ஓய்ந்து போகிறவரை அழ வேண்டும்.

ஆனால், அழுகை வரவில்லை உள்ளுக்குள்ளேயே அடைத்துக் கொண்டது. ஆழமான ஒரு பெருமூச்சோடு எழுந்தாள். ஃப்ரிஜிடரைத் திறந்து ஒரு டம்ளர் ஐஸ் வாட்டரை எடுத்துக் குடித்தாள். தூங்குவதற்காக ஒரு ட்ரினிகாம் மாத்திரையைப் போட்டுக் கொண்டாள்.



மாடிக்குப் போய்ப் படுத்துக் கொண்டபோது அத்தனை கஷ்டங்களுக்கும் தான் தான் காரணம் என்று தோன்றியது. தன்னுடைய கஷ்டம் மட்டுமில்லை. சஸி - க்ருபா எல்லார் கஷ்டங்களுக்கும் தான் தான் காரணம்.

'மாட்டேன். நமக்கு நாமே குழந்தையாக இருந்து கொள்ளலாம்' என்று க்ருபா சொன்ன போதெல்லாம் அழுது கோபப்பட்டு, உடம்போடு மனசையும் காயப் படுத்தி, ஒன்றுமே தெரியாத ஒரு அப்பாவிப் பெண்ணின் வாழ்க்கையையும்' கெடுத்து, வெறும் பணத்திற்குப் பணிய வைத்து...

இல்லை. சஸி பணத்திற்காக இதைச் செய்யவில்லை. அவளால் அப்படிச் செய்ய முடியாது; அப்படிச் செய்யக் கூடியவளும் இல்லை. ஷி இஸ் இன் லவ் வித் க்ருபா. அவனுக்காக - அவனுக்காக மட்டுமே செய்ய முன் வந்திருக் கிறாள். அவனைப் பார்க்கிறபோது அவள் பார்வையில் தெரிகிற பளபளப்பு, குளிர்ச்சி, அப்படியே சேர்த்து நெஞ்சோடு அணைத்துக் கொள்ளத் தவிக்கிற தாபம். அதே மாதிரி க்ருபாவின் பார்வையிலும்... எல்லாம் தன்னால்தான் தான் தான் இவ்வளவிற்கும் காரணம்.

புரண்டு தலையணையில் முகத்தைப் பதித்துக் கொண்டாள். கண்ணீர் கன்னத்தில் கோடாக இறங்கித் தலையணையை நனைத்தது. சிறிது நேரம் அதே மாதிரி அழுது பின் ஓய்ந்து போனவளாகத் தூங்கிப் போனாள்.

நிறைய நேரம் தூங்கியிருக்க வேண்டும். க்ருபா வந்து பரபரப்போடு எழுப்பினதும் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். ஒரு நிமிஷம் எதுவும் தெரியாமல் மருட்சி யாக இருந்தது. க்ருபா சொன்னது கூடக் காதில் விழாமற் போயிற்று.

"என்ன புவனா இப்படிப் பார்க்கிறாய்? இட்ஸ் சஸி ரொம்பவும் அன் ஈஸியாக ஃபீல் பண்ணுகிறாள். அவள் அறையிலிருந்து முனகல் சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தேன். ஐ திங்க், அவளுக்கு வலி எடுக்க ஆரம்பித்து விட்டது என்று நினைக்கிறேன்."

"சஸிட்..." என்று சடாரென்று கட்டிலை விட்டு இறங்கினாள் புவனா. புருவங்கள் லேசாகச் சுருங்கின. "இருக்காதே. டாக்டர் அடுத்த மாதம் முதல் வாரத்தில் தானே ஆகும் என்று சொன்னார். தேதிகூடக் கொடுத் திருக்காரே!" என்று சொல்லிக் கொண்டே பரபரவென்று கீழே இறங்கி சஸியின் அறைக்குள் போனாள்.

அவளைப் பார்த்ததும் சஸி கண்ணோரம் நீர் கோடாக வழிய அவள் கைகளைப் பற்றிக் கொண்டாள் பக்கத்தில் உட்கார்ந்த புவனா மெதுவாக அவள் தலையை வருடினாள்.

"வலி எடுத்திருக்கிறது சஸி. ஒன்றும் பயமில்லை. பயப்படாதே. இரு கொஞ்சம் ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டு வருகிறேன்!" என்று எழுந்தாள் சஸி அவள் கையை விடவில்லை.

"வேண்டாம். ப்ளீஸ் போகாதீர்கள். என் பக்கத்திலேயே இருங்கள். தனியாக இருக்க எனக்குப் பயமாக இருக்கிறது..."

"அவ்வளவுதானே... தனியாக இருக்கத்தானே பயமாக இருக்கிறது க்ருபாவைக் கூட இருக்கச் சொல்கிறேன். நான் போய் ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, நர்ஸிங் ஹோமில் அட்மிட் ஆகும்போது கொண்டு வரச் சொல்லி டாக்டர் எழுதிக் கொடுத்த சாமான்களை யெல்லாம் தயார்ப் பண்ணுகிறேன். அப்புறம் உனக்கும் எனக்கும் வேண்டிய துணிகள், ஃப்ளாஸ்க்கில் வெந்நீர், டெட்டால், ஸானிடரி பேட்ஸ், பெட்ஷீட், தலையணை என்று எடுத்துக் கொள்ள எவ்வளவு சாமான்கள் இல்லை...? வலி இன்னும் கொஞ்சம் அதிகமாகட்டும். கிளம்பி நர்ஸிங் ஹோம் போய் விடலாம். என்ன..."

சஸி சரி என்று தலையாட்டினதும் அவள் போய் க்ருபாவை அனுப்பினாள். அவன் மனசு பரபரக்க அவளைப் பார்த்தான். முகத்தில் சரிந்த கூந்தலை ஒதுக்கி விட்டான். கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான். அவள் கையை இறுகப் பற்றி குனிந்து முன் நெற்றியில் மென்மையாக முத்மிட்டான்.



"என்ன சஸிம்மா... ரொம்ப வலிக்கிறதா...?"

இல்லை என்று தலையாட்டினாள் அவள்.

"இல்லையா... ஒரு நிமிஷம் முன்பு நீதானே வலியால் அழுதாய்...?"

"இப்போது வலிக்கவில்லை. உங்களைப் பார்த்ததும் வலியெல்லாம் போய் விட்டது க்ருபா..." - அவள் அத்தனை கஷ்டத்திலும் புன்சிரிப்பாகச் சிரித்தாள். அவன் முகத்திற்கும் அதே புன்னகை வர அவள் தலையை லேசாக, வருடினான். ஒரு வினாடிக்குப் பின் அவள் மெதுவாகக் கேட்டாள்:

"நீங்களும் என்னோடு நர்ஸிங் ஹோமிற்கு வருவீர்களா க்ருபா..."

அவன் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் மௌனமாக இருந்தான்.

"என்ன க்ருபா பேசாமல் இருக்கிறீர்கள்? நீங்கள் வாருங்கள், க்ருபா. நீங்கள் இருக்கிறீர்கள் என்பதே எனக்குப் பெரிய நிம்மதியாக - அறுதலாக இருக்கும், க்ருபா. ஒ வேளை எனக்கு ஏதாவது ஆனாலும் கடைசியாக உங்க முகத்தைப் பார்த்துக்கொண்-"

சட்டென்று அவள் வாயைப் பொத்தினான் அவ

"டோன்ட் பி ஸில்லி, சஸி. உனக்கு எதுவும் ஆகா ஆகவும் நான் விட மாட்டேன், வீணான பயங்களை மனசி வளர்த்துக் கொள்ளாதே. எவ்ரி திங் ஈஸ் கோயிங் டு ஆல்ரைட்..."

"சரி, அப்படியே இருக்கட்டும். ஆனாலும், நீங்களு கூட வாங்களேன்..."

அவன் அரை வினாடி யோசித்தான். இப்போது தன்னை இந்த அளவிற்கு அனுமதித்த புவனா, அதற்கும் அனுமதிக்கலாம் என்று பட்டது. இரண்டு நாட்களாக புவனா பழையபடி இல்லை; திருடனைக் கண்காணிக்கிற போலீஸ்காரனாக இல்லை. குழந்தையைப் பார்த்துக்

கொள்கிற அம்மாவாகத் தான் இருந்தான். அம்மாவிடம் குழந்தை தலையைச் சாய்த்துக் கெஞ்சிக்கேட்டால் மறுக்க முடியாதுதான். புவனா மறுக்க மாட்டாள் என்று தோன்றவே, "சரி, வருகிறேன் சஸி" என்றான்.

அதற்குள் இரண்டு பிரம்புக் கூடைகள் நிறைய எல்லாவற்றையும் எடுத்து வைத்தான். புவனா பூஜை அறைக்குப் போய் விபூதியைக் கொண்டு வந்த சஸியின் நெற்றியில் இட்டாள். அதற்குள் வலி அதிகமாகிச் சஸி 'அம்மா, அம்மா' என்று அரற்ற ஆரம்பித்ததும், மெதுவாக கைத் தாங்கலாக அவளைப் பற்றி எழுப்பி உட்கார வைத்தாள். காலில் செருப்பைப் போட்டுக் கொள்ளச் சொன்னாள்.

"எழுந்திரு, சஸி..." என்று அவள் தோளில் கை போட்டு மெல்ல நடத்தி அழைத்துக் கொண்டு வந்தாள்.

"க்ருபா, நீங்கள் காரின் பின் பக்கம் இரண்டு தலையணைகளைக் கொண்டு போய் வைத்து நன்றாகத் திறங்கள்..." என்றாள்.

க்ருபா சஸி உட்காருவதற்கு செளகரியமாகத் தலையணைகளைச் சரித்து வைத்தான். காரின் ஏர் கண்டிஷனரை ஆன் பண்ணினான். பிரம்புக் கூடைகளை டிக்கியில் வைத்து மூடினான். சஸி ஏறிக் கொண்டதும் கொஞ்சம் தயங்கி -

"நானும் வரட்டுமா, புவனா..." என்று கேட்டான்.

"நீங்கள்தான் அழைத்துக் கொண்டு போகப் போகிறீர்கள், க்ருபா. ஜாக்கிரதை. காரை அலுங்காமல் ஓட்டுங்கள். ஏற்கெனவே நான் ஒரு ஏர்கண்டிஷன் அறை ரிசர்வ் பண்ணியிருக்கிறேன். போனதும் டாக்டர் லீலா ராஜரத்தினத்தைப் பாருங்கள். அதற்குள் நான் வீட்டிலுள்ள சாமான்களை யெல்லாம் எடுத்து வைத்து ஜன்னல்களைச் சாத்தி கதவைப் பூட்டிக் கொண்டு வருகிறேன்..."

"பு..வ..னா..." என்று பேச முடியாமல் அவனுடைய உதடு நடுங்கினதும் -



"ம்... கிளம்புங்கள். ஒரு வேளை போன உடனேயே குழந்தை பிறந்து விட்டால் டெலிபோன் பண்ணுங்கள், என்ன...?"

அவன் தலையாட்டி விட்டுக் காரைக் கிளப்பினான். சிறிது தூரம் போவதற்குள் அடிக்கடி திரும்பிப் பார்த்தான். 'எப்படி இருக்கு, சஸி. இதோ நர்ஸிங் ஹோம் வந்துவிடும், சஸி. கொஞ்சம் பொறுத்துக் கொள், சஸி...' என்று சொல்லிக் கொண்டே வந்தான்.

அவளும் கீழ் உதட்டை இறுகக் கடித்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

## 24



நர்ஸிங் ஹோம் வந்ததும் நர்ஸ்கள் அவளைக் கைத்தாங்கலாக அழைத்துப் போனார்கள். படுக்க வைத்துப் பரிசோதித்தார்கள். எனிமா கொடுத்தார்கள். இன்னும் இரண்டு மூன்று மணி நேரம் போகும் என்று முடிவு செய்து அவளுக்காகப் புவனா ரிஸர்வ் பண்ணியிருந்த ஏர் கண்டிஷன்ட் அறையில் படுக்க வைத்தார்கள். அங்கே அவளோடு இருக்க க்ருபா அனுமதிக்கபட்டான். அவன் பக்கத்தில் உட்கார்ந்து, மெத்தென்றிருக்கும் அந்தக் கையைப் பற்றி முகத்தைத் தடவித் தைரியப்படுத்துவதற்காக ஏதேதோ சொல்லி...

அவனுடைய அந்தப் பரிவு மனசைத் தொட மென்மையாகச் சிரித்தாள் அவள். "எனக்கு எந்த பயமும் இல்லை க்ருபா. நீங்கள் கவலைப்படாதீர்கள்..."

"அப்படியானால் ஓ.கே. பேபி! என்றான் அவன். அவள் வலியால் முகத்தை ஒரு தரம் சுளித்து உதட்டைக் கடித்துக் கொண்டு, "புவனா இன்னும் வரலையே..." என்று கேட்டாள்.

"வருவான். வேண்டுமென்றேதான் நேரம் கழித்து வருகிறான் என்று நினைக்கிறேன். திடீரென்று அவ ரொம்பவும் மாறிப் போயிருக்கிறான் சஷி. பழைய புவனாவாக இருந்தால் நான் உன்னுடன் வந்திருக்க முடியுமா...? இந்த மாதிரி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்க முடியுமா...?"

உண்மைதான் என்று நினைத்துக் கொண்டாள் சஷி. அதன் பின் சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டாள். உதட்டை இறுகக் கடித்துக் கொண்டாள். லேசான தூக்கமாகக் கண் இழுக்க பத்து நிமிடம் தூங்கியிருப்பாள். பின் பெரிதாகப் பளீரிட்ட வலியில் சட்டென்று விழித்துக் கொண்டு, அம்மா என்ற அலறலில் பயந்து போய் க்ருபா நர்ஸை அழைத்துக் கொண்டு வந்தான். உடனேயே அவள் லேபர் வார்டிற்குக் கொண்டு போகப்பட்டாள்.

நர்ஸிங் ஹோமின் பக்கத்திலேயே இருந்த டாக்டருக்குப் போன் பண்ணினார்கள். ஒரு நிமிடத்தில் கெல்லாம் டாக்டர் வந்து இன்ஜெக்ஷன் போட்டு க்ளவுஸை மாட்டிக் கொண்டு அவள் கால்களை மடக்கி வைத்துக் கொள்ளச் சொல்லி வயிற்றை மெதுவாக அழுத்தினான்.

"ம். நன்றாக அழுத்தி வெளிமூச்சு விடும்மா. கொஞ்சம் முக்குகிற மாதிரி... எஸ், அப்படித்தான். இன்னும் சற்று வேகமாய்... அழுத்தமாய்..." பேசிக் கொண்டே டாக்டர் வேலையில் கவனமாக இருந்தான்.

"என்ன குழந்தை வேணும் உனக்கு...? உம்... சொல்லு..." என்று அவளுடைய வேதனையைக் குறைக்கச் சிரித்து ஏதோ கேட்டான். அவள் கத்தி, அழுது, அமர்க்களம் பண்ணாமல், கண்ணோரத்தில் மட்டும் நீர்க் கோடு வழிய அத்தனை வேதனைகளையும் சமாளிப்பதைப் பார்த்தான்.

வயிற்றை மெல்லக் கீழ் நோக்கி அழுத்தி, "இன்னும் நன்றாக வெளி மூச்சு விடும்மா தொடர்ச்சியாக, பலமாக" சொல்லிக் கொண்டிருந்த போதே குழந்தையின் தலை



...ய டாக்டர் பரபரப்போடு ஏதோ சொல்ல வாயெடுத்த ...' சஷியின் 'அம்மா' என்ற அலறலில் குழந்தையின் ... சத்தமும் பெரிதாகக் கேட்டது. ஐந்து நிமிடத்திற்கு ...ய் அழுதது.

...தைச் சுத்தப்படுத்தி, நர்ஸ் எடை பார்ப்பதற்குள் ...டர் சஷிக்கு நாலைந்து தையல்கள் போட்டான். ...டின் கொடுத்தான். சஷி! என்ன குழந்தை என்பதைக் ... காதில் கேட்காதவனாக மயங்கிப் போனாள்.

குழந்தையின் எடையும், நேரமும் குறித்துக் கொண்டு ...ரியில் வந்த டாக்டர் க்ருபாவைப் பார்த்து சந்... ...மாகச் சிரித்தான்.

"உங்கள் ஸிஸ்டர் - இன் - லாவிற்கு ஆண் குழந்தை ...ருக்கிறது. ஏழு பவுண்டு. நைச் எ க்யூட் சைல்ட். யு... ... இன்ஃபார்ம் திஸ் டு ஹெர் ஹஸ்பண்ட்..."

...வனா அப்படித்தான் எல்லோரிடமும் சொல்லிக் ...டு வருகிறான் என்பது அவனுக்குத் தெரியும்.

"...மீட் மை ஸிஸ்டர் சஷி. இவளுடைய ஹஸ்பண்ட் ...ரானிலே இருக்கார். ஹி ஈஸ் எ சயண்டிஸ்ட். இவளும் ...து டெலிவரிக்காகத்தான் வந்திருக்கிறாள். குழந்தை ...ரெண்டு மூன்று மாதமானதும் போய்விடுவாள்."

"சஷிட்! அவ்வளவு சின்னக் குழந்தையை வைத்து ஒரு ...டு தனியாக அங்கே என்ன செய்வாள். உதவிக்காள்? ...ங இருக்கிறார்களா...?"

"...நோ டாக்டர். அதனால்தான் குழந்தை சற்று ...கிற வரை நானே வைத்துக் கொள்ளலாமா என்று ...றேன். இங்கே எனக்கு எந்த கஷ்டமும் இல்லை..."

"...ட்ஸ் பெட்டர்! ப்ரைவேட், உன் தங்கையும் இதற்கு ...கிற பட்சத்தில்..." என்று சிரித்தான் டாக்டர்.

"...நோ டாக்டர். ஷி வோண்ட் அப்ஜெக்ட்!" என்று ...ம் சிரித்தான்.

...வாவின் அந்தச் சாமர்த்தியத்தை நினைத்துக் ...டான் க்ருபா. டாக்டர் எதிரில் நிற்பது நினைவிற்கு

வர - "சஸி எப்படி இருக்கிறாள் டாக்டர்..." என் கேட்டான்.

"ஓ... ஷீ ஈஸ் ஃபைன். யு கேன் ஸீ ஹெர் நௌ. ப கொஞ்சம் ட்ரௌஸியாக இருப்பாள் என் நினைக்கிறேன். எங்கே உங்க மிஸஸ் வரவில்லை..."

"வருவாள் டாக்டர். இதோ நான் போன் பண்ண சொன்னதும் வந்து விடுவாள்."

"ஓ.கே. ஸீ யு லேட்டர்!" என்று டாக்டர் போன க்ருபா மனசு துடிக்க உள்ளே போனான். அதற்குள் ந குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து காட்டினாள்.

ரோஸ் நிறத்தில் சின்னக் கை கால்களும், இ மூடின நீளமான விரல்களும், தலை நிறைய முடியும், செ மாதிரி வாயும், குவிந்த முகவாயும், கரியால் கோ இழுத்தாற் போல் அடர்த்தியான இமைகளோடு கூ கண்களும்...

அவன்தான். அப்படியே அவன். அவனுடைய சிவ நிறம். அதே மாதிரி தலை முடி. அழகான முகம். கண்ணி ளின் நீளம்கூட அவன்தான்.

குழந்தையை வாங்கினபோது உடம்பு சிலிர்த் ப்படியே மார்போடு சேர்த்து அணைத்துக் கொ ண்டும் போல் இருந்தது. உச்சந்தலையிலிருந்து உள் ல்கள் வரை முத்தமிட்டு, அந்தக் குழந்தை வாசனை கர்ந்து முகர்ந்து, நிறைய ரோஜாப்பூக்களைக் கொத்தா கட்டின மாதிரி இருந்த அந்த உடம்பைத் தட கொடுத்து...

அதற்கு மேல் தாங்க முடியாதவனாக சட்டெ நர்ஸிடம் குழந்தையைத் திருப்பிக் கொடுத்தான். கலங் போன கண்களை மறைத்துக் கொள்ள சரேலெ சஸியின் பக்கம் திரும்பினான்.

அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். முகத்தில் சொ முடியாத ஒரு அமைதி தெரிகிறது. உதட்டோரத் புன்னகை படர்ந்து கிடப்பதாகக் கூடத் தோன்றிய



பெரிய தவத்தைச் செய்து முடித்த சந்தோஷமாய், நிம்மதியாய்...

'சஸி... சஸி..' என்று மெதுவாகத் தனக்குள் உருகிப் பார்வையால் அப்படியே ஒரு தரம் அணைத்துக் கொண்டான். அவளை நினைத்தபோது மனசுக்குள் பாரமாக அழுத்திற்று. சொல்ல முடியாத சோகமாக நெஞ்சைக் கவ்வியது. தனியாக எங்கேயாவது போய் உட்கார்ந்து உள்ளத்துப் பாரம் கரைகிறவரை அழவேண்டும் போல் இருந்தது.

ஆனால் அவனால் அழ முடியாது. எவ்வளவு கஷ்டமானாலும் உள்ளுக்குள்ளே இறக்கித்தான் பழக்கம், வார்த்தையாக கண்ணீராகக் கொட்டிப் பழக்கம் இல்லை. அவன் ஒரு பெருமூச்சில் தன்னை லேசாக்க முயற்சி பண்ணிக் கொண்டே புவனாவுக்கு போன் பண்ணினான்.

"புவன்..."

"குழந்தை பிறந்து விட்டதா க்ருபா...?"

"ம். இப்போதுதான் அரை மணி நேரத்திற்கு முன்பு."

"என்ன குழந்தை...?"

"ஆண் குழந்தை."

"ஸ்வீட்! ஓ...ஹௌ நைஸ்!" என்றவள் ஒரு வினாடிக்குப் பின் கேட்டாள். "சஸி எப்படி இருக்கிறாள்?"

"ஷி ஈஸ் ஆல்ரைட்..."

"குழந்தை எப்படி இருக்கிறது க்ருபா...?"

"ம்... வந்து பாரேன்."

அடுத்த பத்தாவது நிமிடம் புவனா வந்தாள். குழந்தையைக் கண்கொட்டாமல் அப்படியே பார்த்தாள். கண், காது, மூக்கு, கை, கால் என்று ஒவ்வொன்றாகப் பார்த்தாள். மூடிக்கொண்டிருந்த கை விரல்களைப் பிரித்ததும் -

"அப்பா...! நீளநீளமாக என்ன விரல்கள்! இது மட்டும் அப்படியே சஸி..." என்றாள். பின் பக்கத்தில் நர்ஸ் இல்லை

என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, "மீதி எல்லாம் நீங்கள் தான் க்ருபா. அப்படியே நீங்கள். உங்களுடைய நிறம், கண், மூக்கு, முகவாய், உதடு.. ஏன் க்ருபா, கண் இமைகள் கூட உங்களுடையதுதான்..." குரலில் சொல்ல முடியாத சந்தோஷமும், பெருமையும் தொனித்தது.

அவன் கேட்டுக்கொண்டு பேசாமல் நின்றான்.

ஒன்பதாவது நாள் நர்ஸிங் ஹோமை விட்டு சஸியையும், குழந்தையையும் அழைத்துப் போக ஏற்பாடு பண்ணினான் புவனா. அதற்குள் வீட்டையும் தயார் படுத்தினான். மாடியில் தங்கள் படுக்கை அறையிலேயே குழந்தைக்கும் அறையாக்கினாள். தங்கள் கட்டிலை ஒட்டின மாதிரி பேபி காட் வாங்கிப் போட்டான். நான்கு பக்கங்களிலும் டொனால் டக்கும், மிக்கி மவுஸும். மேலே சுழலுகிற வர்ணப் பூக்குடையும், கொசு வலையும், சின்ன டன்லப்பில்லோ படுக்கையும். மெலிசாகத் தலையணைகளும், ரப்பர் ஷீட்டும், குழந்தை துணியை நனைத்துக் கொண்டுவிட்டால் மாற்றுவதற்கு நாப்கின்களும், புதுசு புதுசாய் விதவிதமாய் உடைகளும்...

பிரமித்துப் போனான் க்ருபா.

யோசித்து யோசித்து இவள்தான் எப்படி வாங்குகிறாள் என்று ஆச்சரியப்பட்டான். அந்த அறையே மாறிப் போன விதத்தை நினைத்தான். சின்னதாகக் குழந்தைத் துணி வைக்க வார்ட்ரோப், ஜான்ஸன்ஸ் பேபி சோப், பேபி க்ரீம், பேபி ஆயில், பேபி ஷாம்பூ என்று எல்லாம் அடுக்கி வைத்து குழந்தை டிரஸ்ஸிங் டேபிள், அப்புறம் குழந்தையைக் குளிப்பாட்ட தனி பிளாஸ்டிக் தொட்டி, அழுக்கான துணிகளைப் போட தனி பிளாஸ்டிக் கூடை, குழந்தையைப் பார்த்துக் கொள்ள நடுத்தர வயதில் ஓர் ஆயா அவள் சுத்தமாக வியாதி ஒன்றுமில்லாமல் இருக்கிறாளா என்பதைத் தெரிந்து கொள்ள அவளுக்கு டாக்டர் செக்-அப்..

கடைசியாக நாலைந்து ஃபீடிங் பாட்டில்களும், அவைகளை ஸ்டெரிலைஸ் பண்ண நீளமான கைப்பிடி



போட்ட அலுமினியப் பாத்திரமும், ஐந்தாறு லாக்டோஜன் டின்களும்...

ஒரு நிமிஷம் மனசுக்குள் அதிர்ந்து போனான் க்ருபா. 'என்ன இது...? எதற்காக இப்போதே ஃபீடிங் பாட்டில்களும், லாக்டோஜன் டப்பிகளும்...?'

மெதுவாகப் புவனாவிடம் கேட்டபோது அவள் சட்டென்று அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். பார்வை அவன் கண்களுக்குள் பதிந்தது. பின் நிதானமாக ஆனால் திடமான குரலில் பேச ஆரம்பித்தாள்;

"எஸ் க்ருபா. இதெல்லாம் குழந்தைக்குத்தான். வீட்டிற்கு வந்ததும் கொடுக்க ஆரம்பிப்பதற்குத்தான். ஐயம் நாட் கோயிங் டு அலவ் ஹெர் டு ஃபீட் தி சைல்ட் எனி மோர்."

அதைக் கேட்டு அவன் இன்னும் அதிர்ச்சியாக அவளைப் பார்த்தான்.

"என்ன புவனா இது...? இத்தனை சின்னக் குழந்தையையா...! பத்து நாள் குழந்தையையா...?"

"எஸ் இதைப் பற்றி நான் டாக்டரிடம் கூடப் பேசியாகி விட்டது. சஸி இன்னும் ஒரு மாதத்திற்குள் சிகாகோ போகவேண்டும். குழந்தையை என்னிடம்தான் விட்டு விட்டுப் போகப் போகிறாள். அதனால் இதற்கு என்ன செய்வது என்று கேட்டேன். அப்படியானால் என்ன செய்ய முடியும் என்று டாக்டர்தான் லாக்டோஜன் ஸஜஸ்ட் பண்ணினார். மேலும் ஆரம்பத்திலேயே இந்தப் பழக்கம் நின்று போய்விடுவது நல்லது க்ருபா. அப்புறம் நிறுத்துவது கஷ்டம். அவள் கிளம்பிப் போய் விட்டால் குழந்தையை வைத்துக்கொண்டு நாம்தான் கஷ்டப்பட வேண்டும். ஸோ-லெட் அஸ் ப்ரி பிராக்டிகல்..."

அவனால் ஒன்றும் பேச முடியவில்லை. சட்டென்று அந்த இடத்தை விட்டு அகன்றான். கீழே ஹாலில், வராந்தாவில், தோட்டத்தில் என்று நிலையில்லாமல் சுற்றினான். 'அப்புறம் அவள் கிளம்பிப் போய் விட்டால்

குழந்தையை வைத்துக் கொண்டு நாம்தான் கஷ்டப்பட வேண்டும். ஸோ-லெட் அஸ் பீ பிராக்டிகல்...'

சஸி போய்விடப் போகிறாள். போய்த்தான் ஆக வேண்டும். வேறு வழி இல்லை. ஒரு நல்ல கவிதை பாதியில் முடிந்த மாதிரி, ஒரு இனிமையான பாடல் சட்டென்று நின்று போன மாதிரி...

'சஸி... சஸி...'

அவன் தோட்டத்துக் கோடியில் புல் தரையில் தனியாக உட்கார்ந்து வானத்தை வெறித்தான்.

அன்று மாலை சஸி நர்ஸிங் ஹோமிலிருந்து வருகிறவரை அப்படித்தான் இருந்தான். அவள் வந்ததும் உள்ளே எழுந்து போனான். குழந்தையோடு அவள் வீட்டிற்குள் நுழைந்த போது பளபளவென்று தனியான ஒரு அழகு தெரிவதைக் கவனித்தான். அவனைப் பார்த்ததும் மென்மையாகச் சிரித்தாள் அவள்.

'இவளா... இவளையா...?'

அவன் தாங்க முடியாமல் விருட்டென்று படியேறி மாடிக்குப் போனான். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் புவனாவும் குழந்தையோடு மாடிக்கு வந்தாள். குழந்தையை அவன் கையில் கொடுத்தாள். பக்கத்தில் உட்கார்ந்து கொஞ்சினாள். குழந்தை தூக்கத்தில் சிரித்தபோது அவளும் சிரித்தாள். பின் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்து,

"குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் க்ருபா...?" என்று கேட்டாள்.

"ம்...?"

"என்ன யோசனை? குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம்னு கேட்டேன்."

"நீயே சொல்லேன் புவனா..."

"ஷ்வரண்'னு வைக்கலாமா..."

"ஷ்வரண் - அது என்ன பெயர் புவனா?"



"குழந்தைக்கு சிரவண நட்சத்திரம். அதனால் ஷ்வரண் என்று வைக்கலாம்னு பார்க்கிறேன்."

"ஓ. எஸ். வைக்கலாமே..."

அன்று இரவும் மறுநாள் முழுதும் குழந்தை பசிக்கு அழுத போதெல்லாம் புவனா பவுடர் பால் கரைத்துக் கொடுத்தாள். முதலில் குழந்தை வாயில் பாட்டிலை வைத்த போதெல்லாம் ரப்பரைத் தள்ளி சாப்பிடப் பிடிக்காமல் அழுதது - தோளில் சாய்த்துத் தட்டித் தூங்கப் பண்ணி பாதித் தூக்கத்தில் மறுபடியும் வீரிட்டு அழுததும் புவனா திரும்பவும் பால் கரைக்க ஆரம்பித்தபோது தாங்க முடியாதவனாகக் கேட்டான் க்ருபா:

"என்ன புவனா இது...? சின்னக் குழந்தையை இப்படியா சங்கடப் படுத்தறது...? என்னால் தாங்க முடியலை புவனா. அதன் அழுகையும், பசியும் என்னை ரொம்பக் கஷ்டப்படுத்தறது. ப்ளீஸ் புவனா. கொண்டுபோய் சஸியிடம் விட்டுட்டு வா..."

அதைக் கேட்டதும் புவனா நின்று நிதானமாகத் திரும்பிப் பார்த்தாள்.

"என்னால் மட்டும் தாங்க முடிகிறதா க்ருபா...? இந்த அழுகையைப் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறதா...? ஆனாலும் வேறு வழி இல்லையே... இப்போது மறக்கடிக்க முடியாவிட்டால் எப்போதும் முடியாதே. ஏழெட்டு மாதம், ஒரு வருடம் என்றுகூட ஆகிவிடுமே... அப்போதும் இதே சங்கடம் தானே... அதைவிட இப்போதே பழக்கப்படுத்தி விடுவது நல்லதில்லையா...?"

அதே மாதிரி அழுதழுது இரண்டு நாட்களுக்குப் பின் குழந்தை ரப்பருக்குப் பழக்கப்பட்டுப் போயிற்று. இரண்டிரண்டு அவுன்ஸ் பாலாக மெதுவாகக் குடிக்க ஆரம்பித்தது. ஆனால் அந்த இரண்டு நாட்களுக்குள் சஸி தன்னைப் பழக்கப் படுத்திக் கொள்ள முடியாமல் - குழந்தை அழுகிறபோதெல்லாம் மனசுக்குள் தவியாகத் தவித்து - அதன் பசியைப் போக்க முடியாமல் அவஸ்தைப் பட்டுப் பின் அதுவே தன் உடம்பின் உபாதையாக மாறி வலியும்

வேதனையும் ஜுரமுமாகக் கஷ்டப்பட்டு - மெல்ல வாய்விட்டு அரற்ற ஆரம்பித்தபோது -

ஹாலில் உட்கார்ந்திருந்த க்ருபா சரேலென்று எழுந்து அவள் அறைக்குள் வந்தான். அந்த முகத்தையும் அதன் வேதனையையும் பார்த்துப் பதறிப் போனான்.

"என்ன சஸி, என்னம்மா உனக்கு..? வாட் ஈஸ் ராங் வித் யு..?" என்று பதட்டத்துடன் நெற்றியில் கை வைத்தான். அந்த சூட்டில் சட்டென்று கையை இழுத்துக் கொண்டான்.

"என்ன சஸி இது. உடம்பு இப்படி நெருப்பாகக் காய்கிறது, பேசாமல் இருந்திருக்கிறாயே. எத்தனை நாளா இப்படி இருக்கிறது..?

அவள் பதில் சொல்லாமல் மௌனமாக அவனைப் பார்த்தாள். கண் கலங்கி ஜுர வேகத்தில் சிவந்து கிடந்தது. அவன் நெகிழ்ந்து போய் அவள் பக்கத்தில் உட்கார்ந்து மெதுவாகத் தலையை வருடினான். மென்மையாகப் பார்த்தான்.

"இரு சஸி. டாக்டருக்குப் போன் பண்ணிவிட்டு வருகிறேன்!" என்று எழுந்தபோது அவள் சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"வேண்டாம் க்ருபா. டாக்டர் வந்து இதற்கு ஒன்றும் செய்யப் போவதில்லை..." என்றபோது கண்ணில் நீர் முட்டிக் கொண்டு நின்றது. அவன் முகம் தெரியாமல் பார்வையை மறைத்தது.

"டாக்டர் வந்து ஒன்றும் செய்யப் போவதில்லையா...? என்ன சொல்கிறாய் சஸி..?"

அவள் அதற்குப் பதில் சொல்லாமல் மெதுவாக எழுந்து உட்கார்ந்து அவன் கைகளைப் பற்றி அதில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள். அழுகைக் கிடையில் மெலிசான குரலில் வார்த்தைகள் தடுமாறப் பேசினாள்.

"க்ருபா... ப்ளீஸ் க்ருபா... ஒரு தரம், ஒரே ஒரு தரம் என் குழந்தையைக் கொண்டு வந்து கொடுங்கள் க்ருபா... ப்ளீஸ் அலவ் மீ டு ஸீ மை சைல்ட்... ப்ளீஸ்..."



அந்த அழுகையும், குமுறலும், அலவ் மீ டு ஸீ மை சைல்ட் என்ற கெஞ்சலும்... க்ருபா புரிந்துகொண்டு எதுவும் சொல்ல முடியாத கனமான மனசோடு பேசாமல் நின்றான்

அவளும் மேலே எதுவும் கேட்காமல் மௌனமாக அழுது கொண்டே இருந்தாள் -



# 25

சஸியின் உடம்பைப் பற்றித் தெரிந்து கொண்ட புவனா உடனே டாக்டரை வரவழைத்தாள். நிலைமையை அவருக்கு விளக்கிச் சொன்னாள். புரிந்து கொண்டு அவர் ஒரு நிமிடம் யோசித்தார். பின் ஒரு இன்ஜெக்ஷன் போட்டு மாத்திரை எழுதிக் கொடுத்தார்.

"இன்னும் நாலைந்து நாட்களில் சரியாகப் போய் விடும். ஏதாவது அவசரத் தேவையானால் போன் பண்ணுங்கள்..." என்று சொல்லிவிட்டுப் போனார்.

அதே மாதிரி சஸிக்கு உடம்பு சரியாக ஒரு வாரமாயிற்று. ஜுரமும், வலியும் குறைந்து எழுந்து நடமாடுகிற நிலைக்கு வந்தது. பலவீனமும், முகத்தின் அசதியும் தெளிய மேலும் ஒரு வாரமாயிற்று.

அதுவரை மௌனமாய்... பொறுமையாய் இருந்த புவனா அதற்கு மேல் தாங்க முடியாதவளாகக் கேட்டாள். "என்ன க்ருபா, பேசாமல் இருக்கிறீர்கள்...?"

அதற்கும் ஒன்றும் சொல்லாமல் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தான் அவன்.

"அப்படிப் பார்த்தால் என்ன அர்த்தம்? நாளைக்கே அவளிடம் பேசி மத்தியானம் பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்ஸில் டிக்கெட் வாங்கிக்கொடுத்து அனுப்பிவிடப் போகிறேன்."

அவனிடமிருந்து ஆழமான பெருமூச்சாக ஒன்று வெளிப்பட்டது. பேச முடியாமல் தொண்டை இறுகிற்று. அந்த மௌனத்தைத் தாங்க முடியாதவளாகக் குரலில் சுள்ளென்ற கோபம் எட்டிப் பார்க்க, மீண்டும் அழுத்தமாகக் கேட்டாள் புவனா:

"இப்படி எல்லாவற்றிற்கும் பேசாமல் இருந்தால் என்ன தான் நினைத்துக் கொள்வது.. ம்..?"

"உன்னிடம் ஒன்று கேட்கலாமா புவனா...?" - கடைசியில் மெதுவான குரலில் கேட்டான் அவன்.

"என்ன..?"

"சஸியை நாளைக்கு ஊருக்கு அனுப்ப வேண்டும். அவ்வளவுதானே...? அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு ப்ளீஸ்..."

அதைக் கேட்டு ஒரு வினாடி அவன் கண்களுக்குள் ஆழமாகப் பார்த்தாள் அவள், பின் -

"இதில் ஏமாற்று வேலை எதுவுமில்லையே...?" என்று கேட்டாள்.

"ஏமாற்று வேலையா..? வாட் டு யு மீன்..."

"இல்லை! அனுப்புகிறேன் என்று எங்கேயாவது அழைத்துப் போய் ரகசியமாகக் கல்யாணம் பண்ணிக் கொண்டு..."

சட்டென்று வருத்தமாய்ப் புன்னகை செய்தான் அவன். 'இவ்வளவுதானா நீ..?' என்று கேட்கிற மாதிரி பார்த்தான்.

"ஏன் புவனா, அப்படியெல்லாம் செய்வதானால் அதற்கு இவ்வளவு நாட்கள் காத்துக்கொண்டா இருந்திருக்க வேண்டும்? எப்போதோ செய்து கொண்டிருக்க முடியாது? ம்..?"

"-"

"இத்தனைக்கப்புறம் கல்யாணம்தான் எதற்கு... இனிமேல் எங்களுக்கு அதெல்லாம் அவசியமே இல்லை புவனா..."



அவனுடைய அந்தக் குரலும், முகத்தில் தெரிந்த வருத்தமும் வேதனையும் அவள் மனசைத் தொட்டிருக்க வேண்டும். அதனால் -

"ஓ.கே. ஐ லீவ் இட் டு யு!" என்ற ஒரே வார்த்தை பதிலில் சரேலென்று கதவைத் திறந்து கொண்டு போனாள். அதன் பின் சிறிது நேரம் மௌனமாக நெற்றியைத் தடவிக் கொண்டு உட்கார்ந்திருந்த அவன் சட்டென்று எழுந்து கீழே வந்தான். சஸியின் அறை வாசலில் சிறிது தயங்கி உள்ளே நுழைந்தபோது அவள் ஜன்னல் விளிம்பில் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து வானத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்.

"சஸி..." என்று மெதுவான குரலில் கூப்பிட்டதும் திடுக்கிட்ட மாதிரி திரும்பிப் பார்த்தாள்.

"அங்கே உட்கார்ந்து என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய் சஸி...?"

"ஒன்றுமில்லை..."

"என்னுடன் கொஞ்சம் வெளியில் வருகிறாயா சஸி..?"

அவள் தலையாட்டினாள். இரண்டே நிமிஷத்தில் காரில் அவனுடன் வந்து உட்கார்ந்தாள். க்ருபா ஒன்றும் பேசாமல் காரைக் கிளப்பினான். வெகுநேரம் மௌனமாக வந்து கப்பன் பார்க் ஓரமாக விளக்கு வெளிச்சமாக அடிக்காத இடமாகப் பார்த்து காரை நிறுத்தினான்.

பின் கதவின் மீது சரிந்து அவளிடம் பேசுவதற்கு வசதியாக உட்கார்ந்து கொண்டான். ஒரு வினாடி வார்த்தை எதுவும் வராமல் தவித்து பின் பேச ஆரம்பித்தபோது குரல் கரகரத்தது...

"உன்னை இங்கே ஏன் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா சஸி..?"

அவள் மெதுவாகத் தெரியும் என்று தலையாட்டினாள்.

"தெரியுமா...?" அவள் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். பார்வை அவன் கண்களுக்குள் ஆழமாகப் பதிந்தபோது அவன் சட்டென்று அவள் கையைப் பற்றி அதில் தன் முகத்தைப்

பதித்துக் கொண்டாள். ஈர இமைகள் உள்ளங் கையில் குறுகுறுத்தபோது அவன் அவளை இழுத்துத் தன் மீது சரித்துக் கொண்டான். மெதுவாகத் தலையை வருடினான். பின் அந்த முகத்தை நிமிர்த்தி பளபளக்கிற கண்களில் மென்மையாக முத்தமிட்டு, "சஸி... சஸி..." என்று தடுமாறின போது - சட்டென்று தன் விரல்களால் அவன் வாயைப் பொத்தினாள்.

"நோ க்ருபா. ப்ளீஸ் டோண்ட் ஸே எனிதிங். இப்போது நீங்கள் எதைச் சொன்னாலும் நான் உடைந்து போவேன் க்ருபா. ஒன்றுமே இல்லாமல் தூள் தூளாகப் போய்விடுவேன்..."

"ஏன் சஸி, இனிமேல்தான் நீ உடைந்து போகப் போகிறாயா... சஸி...?" என்று கேட்டுவிட்டு கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான் அவன்.

"ஆனால் இப்போது உடைய நான் பிரியப்பட வில்லை க்ருபா. ஒருவேளை இதுதான் நான் உங்களோடு இருக்கிற கடைசி சந்தர்ப்பமாக இருக்கலாம். அதனால் இதன் ஒவ்வொரு நிமிஷத்தையும் - உங்களையும் சந்தோஷப் படுத்தி -நானும் சந்தோஷப்பட்டு மறக்கவே முடியாத நிமிஷங்களாக மாற்ற வேண்டும் என்று நினைக்கிறேன் க்ருபா..."

அதைக் கேட்டு "சஸி... சஸி..." என்று உருகிப் போனான் அவன். அவள் தன்னை அணைத்த அணைப்பில் - அந்த உதடுகளின் ஈரத்தில் மிருதுவாக - மென்மையாகத் தன்னை அழுத்தின உடம்பின் ஸ்பரிஸத்தில்...

'க்ருபா...' என்று உள்ளுக்குள் குளிர்ந்து இதுதான் கடைசியாகத் தான் அனுபவிக்கிற குளிர்ச்சி என்ற நினைப்பில் அவனுக்குத் தெரியாமல் உடைந்து சிதறிப் போனாள் அவள்.

கடகடவென்று ட்ராலி தள்ளுகிற சத்தம். போர்ட்டர் என்ற யாரோ கூப்பிடுகிற குரல். டீ, காப்பி விற்கிற ஓசை. பழங்களும், பத்திரிகைகளும் தள்ளிக் கொண்டு போகிற வண்டியின் உருளல்...

பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்ஸின் ஜன்னல் ஓர ஸீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் சஸி. கீழே பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தான் க்ருபா. பேச்சே இல்லாத மௌனத்தில் நீண்ட நேரம் போயிற்று. பின் மெதுவாகத் திரும்பி அவள் முகத்தைப் பார்த்தபோது உதடுகள் லேசாக நடுங்கின. ஜன்னலின் கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்த அவள் கை மீது தன் கையை வைத்து அழுத்தினான். அந்த விரல்களின் இறுக்கத்தில் அவன் மனசைப் புரிந்து கொண்டாள் அவள்.



"நோ க்ருபா. ப்ளீஸ் நோ..." என்று குரல் நடுங்கச் சொன்னாள்.

"நான் நானாகத்தான் இருப்பேன் க்ருபா. இதே மாதிரி இதே சஸியாக - உங்களுடைய சஸியாக... அதை யாரால் தடுக்க முடியும் சொல்லுங்கள். மனசுக்குள் உங்களோடு இருப்பதை யார் பிரிக்க முடியும்?..."

"ஆனால் என்னால் முடியவில்லை சஸி... நீ இல்லாத அந்த வீட்டை -என் வாழ்க்கையை-" அதற்கு மேல் பேச முடியாமல் அவன் நிறுத்தியபோது அவள் அவனை மென்மையாகப் பார்த்தாள்.

"என்ன க்ருபா இது...? இத்தனை நேரம் காரில் ஸ்டேஷனுக்கு வரும் போதெல்லாம எனக்குத் தைரியம் சொல்லி விட்டு இப்போது நீங்களே இப்படி உடைந்து போகலாமா க்ருபா?..."

அவன் ஒரு ஆழமான பெருமூச்சோடு அவள் முகத்தையே சிறிது நேரம் பார்த்தான். பின்-

"மெட்றாஸில் எத்தனை நாட்கள் இருப்பாய் சஸி...? என்று கேட்டான்.

"நாலைந்து நாட்கள்..."

"அப்புறம்..."

"அப்புறம் என்ன, சொந்த ஊர்."

"அங்கே போன உடனே நான் சொன்ன மாதவன் நம்பியைப் போய்ப் பார் சஸி. அதற்குள் நானும் அவருக்குக் கடிதம் எழுதுகிறேன் அவருடைய கம்பெனியில் ஒரு நல்ல வேலையாகத் தரச் சொல்கிறேன். அந்த வேலையும் கிடைத்து நீ வேறு வீடு பார்த்துப் போனபின் என்னுடைய தொழிற் சாலைக்குக் கடிதம் போடு சஸி. சொன்ன மாதிரி

 3630405

நான் உன்னைப் பார்க்க மாதம் ஒரு தரமோ-இரண்டு மாதத்திற்கு ஒரு தரமோ வருவேன் சவி. வரும் போதெல்லாம் குழந்தையை நிறைய போட்டோ எடுத்துக் கொண்டு வருகிறேன். என்ன சவி..."

அவள் ஓ. கே. என்று தலையாட்டின ஒரு நிமிஷத்திற் கெல்லாம் ரயில் கிளம்பப் போவதற்கான அறிவிப்பு வந்தது.

பின் விஸில் ஊதி லேசாக நகர ஆரம்பித்தபோது க்ருபா ஜன்னலுக்கு வெளியில் நீண்ட அவள் வலது கையைப் பற்றிக் கொண்டு கூடவே சிறிது தூரம் ஓடினான். கண் கலங்கி பேச்சு வராமல் குரல் அடைத்துக் கொண்டது. கொஞ்சம் கொஞ்சமாக ரயிலின் வேகம் அதிகமானதும் அந்த வேகத்தோடு போட்டி போட முடியாமல் அவள் கையை விட்டு சட்டென்று நின்றான். ஜன்னலுக்கு வெளியே தண்டோடு கூடிய தாமரை மொட்டு மாதிரி சிறிது நேரம் ஆடின அவள் கை அவனை விட்டு விலகிக் கொண்டே போயிற்று. கடைசியில் ரயிலின் கடைசி சிவப்பு விளக்குகள் மறைந்தது. வழியனுப்ப வந்தவர்கள் எல்லாரும் திரும்பிப் போய் பிளாட்பாரம் வெறிச் சிட்டது

அதுவரை அந்த இடத்தில் அப்படியே அசையாமல் நின்று கொண்டிருந்து க்ருபா கடைசியில் தனியாக - மெதுவாக நடந்து வெளியில் வந்தான். காரில் உட்கார்ந்து இக்னிஷனை ஆன் பண்ணினபோது-

சட்சட்டென்று ஒவ்வொரு சவியாக மனசுக்குள் வந்து போனாள்.

முதல் முதலாக வேலைக்காக வராந்தாவில், வந்து நின்ற சவி...

ரெஸ்டாரெண்டின் அரை இருட்டில் உட்கார்ந்து பேசின சவி...

அப்புறம் தன்னோடு பங்களூர் வந்த சவி...

மைசூரில், ஊட்டியில், அந்த ராத்திரிகளில், நேற்று கடைசியாகக் காரில்...

'சவி... சவி... சவி...'

ஓர் ஆழமான பெருமூச்சோடு காரைக் கிளப்பி ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தான் அவன். ❋